திருவருள்துணை.

**1895-வருஷத்து F. A. பரீக்ஷைக்கு நியமிக்கப்பட்ட பாடம்.**

# நடுவேனிற்கனவு.

இஃது

இங்கிலிஷ்ப் பாஷையில் மகா கவியாகிய

## ஷேக்ஸ்பியர்

என்பவரால் இயற்றப்பட்ட

"மிட்ஸம்மர் நைட்ஸ் ட்ரீம்"

என்னும் பெயருள்ள நாடகத்திலிருந்து


கும்பகோணம் காலேஜ்

**S. நாராயணஸ்வாமி ஐயரால்**


தமிழில்

மொழிபெயர்த்தெழுதப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.


கும்பகோணம்

"லார்ட் ரிப்பன்" அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை ரூ 1.

1894.



[ *All Rights Reserved.* ]

TO

D. DUNCAN, Esq., M. A., D. Sc.,

*Director of Public Instruction, Madras,*

This Volume

**Is Dedicated**

With kind permission

BY HIS DEVOTED PUPIL.

# PREFACE.

When some months ago "MIDSUMMER NIGHT'S DREAM" was acted by some students of this College under the tuition and direction of their learned Principal, J. E. Stone Esq., M. A., I was desired by the same authority to compose in Tamil a short tale of the play, and recite it before the audience, for the benefit of those imperfectly acquainted with the original. The encouragement which my performance received from those whose opinion I value, has induced me to attempt a regular translation of the play, in a style, as I would fain hope it is, removed from learned pedantry on the one hand, and ignorant vulgarity on the other. In the humble language of Quince, my intent has been to give my countrymen some *delight.* I am fully alive to the imperfections of the translation: and if, in spite of them, my work should convey to the Dravidian public even a hundredth part of the charm of the original, I should deem myself amply rewarded for my labour.

I take this opportunity of conveying my thanks to Pundit Swaminadaiyer for his valuable suggestions in the course of my translation.

KUMBHAKONAM COLLEGE,
*January* 1893.

**S. NARAYANASWAMI AIYER.**

☞ இந்நாடகம் சென்னையில் மாஸந்தோறும் பிரசுரிக்கப்பட்டுவரும் "விவேகசிந்தாமணி" என்னும் பத்திரிகையில் பாகம் பாகமாக வெளிப்படுத்தப்பட்டதன்றித் தனிப் புத்தகமாக முதலில் சென்றவருஷம் (1893) பதிப்பித்து பிரஸித்தஞ் செய்யப்பட்டது.

கடவுள் துணை.

# முகவுரை.

இஃது, இங்கிலிஷ்ப் பாஷையில் மிகச்சிறந்த நாடக கவியாகிய 'ஷேக்ஸ்பியர்' என்பவரால் இயற்றப்பட்ட நாடகங்களுள் ஒன்றாகிய 'மிட்ஸம்மர் நைட்ஸ் ட்ரீம்' என்றதின் மொழிபெயர்ப்பு. சில நாளைக்கு முன்பு கும்பகோணம் காலேஜில் சில மாணாக்கர்கள் சேர்ந்து இங்கிலிஷில் இந்நாடகத்தை ஆடியபொழுது, இங்கிலிஷ் அறியாத தமிழர்கள் இந்நாடகத்தின் விவரத்தைத் தெரிந்துகொள்ளுதற்பொருட்டுச் சிறிய கதைரூபமாக இது முதலில் எழுதப்பட்டது. பின்பு சில நண்பர் இதை இங்கிலிஷிலுள்ளபடி நாடகரூபமாகவே மொழிபெயர்த்துப் பிரசுரஞ்செய்தால் நலமாயிருக்குமென்று அபிப்பிராயப்பட்டதால் அவ்வபிப்பிராயத்துக்கிணங்க இது மறுபடியும் மாற்றியெழுதப்பட்டது.

இம்மொழிபெயர்ப்பில் மூலத்தின் பொருள் செவ்வையாய் விளங்கவேண்டி ஆங்காங்குச் சில குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. சிற்சில விடங்களில், இங்கிலிஷ் அறியாதவர்களுக்கு நன்கு விளங்காதனவென்று தோற்றப்பட்டவற்றுள் சில சிறிது மாற்றப்பட்டும், இரண்டொன்று விடப்பட்டுமிருக்கின்றன. இந்நாடகத்தில் வரும் பாத்திரங்களுக்குப் பலகாரணங்களை உத்தேசித்து இங்கிலிஷ்ப் பெயர்களையே எழுதியிருக்கிறேன்; அர்த்தமுள்ள நான்கு இங்கிலிஷ்ப்பெயர்களுக்கு மாத்திரம் அவ்வர்த்தமமைந்த தமிழ்ப்பெயர்களை உபயோகிப்பது ஆவசியகமாகத் தோன்றினமையின் அவ்வாறு செய்தேன்.

இவ்விதமான நாடகம் தமிழில் இப்பொழுது வழங்காமையால், என் சிற்றறிவுக்கு எட்டியமட்டும் நூதனமாய் எழுதியிருக்கும் இந்நாடகத்தில் பலவிதக்குறைகள் இருக்கும். ஆயினும், இங்கிலிஷ் நாடகத்தை நேரிற்படிக்கக்கூடாதவர்க்கு ஒழிந்தகாலத்தில் இன்பமாய்ப் பொழுது போக்குவதற்கு இது ஸாதகமாக இருக்குமென்னின் யான் எண்ணியது நிறைவேறினதாகும்.

கும்பகோணம்
1892௵ டிசம்பர்௴ } **S. நாராயணசாமி ஐயர்.**



கடவுள்துணை.

இந்நாடகம் பரீக்ஷைக்குப் படிக்கும் மாணாக்கர்க ளுக்கு ஏற்றபடி ஆங்காங்குச் சிற்சில பொருள்விளக்கங்க ளோடு இரண்டாமுறை பதிப்பிக்கப்பட்டது.

## பெயர் விளக்கம்.

இது நடு வேனிற்காலத்தில் ஓரிரவில் நடந்த விஷ யத்தைப் பற்றியது. அன்றிரவில் நேர்ந்தவையெல்லாம் மறுநாட் காலையிற் கனவுபோற் காணப்பட்டனவாதலின், இந்நாடகத்திற்கு 'நடுவேனிற் கனவு' என்று பெயரிடப் பட்டது. பெரும்பான்மையும் 'கனவு' இராக்காலத்தில் உண்டாவதாகையால் காலக்குறிப்பில்லாமல் 'கனவு' என்று சொல்லும்பொழுதே 'இராக்கனவு' என்று எளிதிற் பொரு ள்படுமென்பதுபற்றி, இஃது, இங்கிலீஷிலுள்ளபடி 'நடுவேனில் இராக்கனவு' என்னுமல் 'நடுவேனிற் கனவு' என்று பெயர் வைக்கப்பட்டது.

## நாடகக் கதைச்சுருக்கம்.

ஆதென்ஸ் நகரத்து அரசனாகிய 'தீஸியுஸ்' என்பவன் 'அமேஜான்ஸ்' ( Amazons ) என்ற பெண்பாற் போர்வீரர் களின் தலைவியாகிய 'ஹிப்பாலிடா' என்பவளைக் கலியாணஞ் செய்ய நிச்சயித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கையில், அந்நகரத்தோனாகிய 'இஜீயஸ்' என் பவன், அங்கே வந்து தன்மகள் 'ஹெர்ம்யா' என்பவளைத் தான் 'டெமிட்ரியஸ்' என்பவனுக்கு மணஞ்செய்விக்க நிச் சயித்திருக்க 'லைஸாண்டர்' என்பவன் அவள் மனத்தைத் திருப்பித் தன்வசப்படுத்திக்கொண்டானென்று முறை யிட்டு, ஆதென்ஸ் நகரச்சட்டப்படி, தந்தை, தன்னிஷ்டம் போல் தன்மகளை விவாகஞ்செய்து கொடுக்கவும் அவள் அதற்கு இணங்காளாயின் அவளைக் கொலைபுரியவும் அதி காரமுடையனாதலின், அச்சட்டப்படி நடத்தத் தனக்கு அநுமதி தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதை க்கேட்ட அரசன், தந்தை நிச்சயித்த கணவனையே மகள்

கலியாணஞ்செய்துகொள்ளவேண்டும், அன்றெனின் இறக்கவோ புருஷர் முகம் பாராத நித்திய கன்னியாயிருக்கவோ உறுதி செய்துகொள்ளவேண்டுமென்று தீர்ப்புச்செய்தான். பின்னர் 'ஹெர்ம்யாவும்' 'லைஸாண்டரும்' இச்சட்டத்தின் கடுமையினின்றும் தப்புவதற்கு ஒருபாயம் கருதி, அன்றிரவில் ஊருக்கு அருகிலுள்ள காட்டில் யாருமறியாமற் சந்தித்து அங்கிருந்து இச்சட்டம் செல்லாத வேறோர் ஊருக்குப் போய் மணம்புரிந்துவாழ நிச்சயித்தார்கள். இந்த இரகசியத்தை 'ஹெர்ம்யா', தனது தோழியும் 'டெமிட்ரியஸ்ஸின்'மேல் நெடுநாளாக அன்புள்ளவளுமான 'ஹெலனா'வுக்குச் சொன்னாள். அவள் அதைத் தன் அன்பின்மிகுதியால் 'டெமிட்ரியஸ்ஸுக்கு' உரைத்தாள். அவன் 'ஹெர்ம்யாவை'த் தேடிக்கொண்டு காட்டுக்குச் சென்றான்; அவனைத் தொடர்ந்து 'ஹெலனாவும்' போனாள்.

அவர் போகும் அன்றிரவில் அக்காட்டில் 'ஆதென்ஸ்' நகரத்துக் கைத்தொழிலாளிகளிற் சிலர் அரசனது கலியாண நாளிரவில் அரசன்அரசிகள்முன் தாம் ஆட நிச்சயித்திருக்கும் வேஷக்கூத்தை ஒருமுறை ஆடிச் சரிபார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பின்னும் கந்தர்வர்கள் சஞ்சரிக்குமிடமாகிய அக்காட்டில் அன்றிரவில் கந்தர்வ அரசனாகிய 'ஓபரான்' தன்மனைவியாகிய 'டிடேனியா' என்பவளோடு ஒரு அழகுள்ள சிறுவன்பொருட்டுப் பிணக்குற்று, அச்சிறுவனைத் தான்வேண்டியும் அவள் கொடாமையால் அவளைத் தண்டிக்கக் கருதி, 'மனோரஞ்சிதம்' என்ற மலரைக் கொண்டுவரும்படி தன் தூதாகிய 'பக்' என்னும் விகடக்குட்டிப்பேயை அனுப்பினான். அப்புஷ்பத்தின் இரசத்தைத் தூங்குபவர் கண்ணிற் பிழிய அவர் தூக்கந்தெளிந்து யார்முகத்தில் விழிக்கிறார்களோ அவர்மேற் காமப்பித்துக்கொண்டவராவராதலின், அப்புஷ்பத்தால் என் மனைவியை யாதேனும் ஒரு இழிந்த பொருளின்மேல் ஆசைகொண்டலையச் செய்வேனென்று 'ஓபரான்' எண்ணிக்கொண்டிருக்கையில் அங்கே 'டெமிட்

ரியஸ்ஸும்' 'ஹெலனாவும்' வந்தார்கள். 'டெமிட்ரியஸ்', 'ஹெலனாவை' இரக்கமின்றிக் கடுஞ்சொல்லால் வெறுத்துப்பேசுவதையும், அவன் வெறுக்க வெறுக்க அவள் அவனிடத்து அதிக அன்புபாராட்டி மன்றாடுவதையும் ஒட்டுக்கேட்டு 'ஓபரான்', இவனை இவள்மேல் அன்புகொள்ளச் செய்யவேண்டுமென்று நிச்சயித்துப் புஷ்பத்தைக் கொண்டுவந்த பக்கினுக்குத் தன் கருத்தைச்சொல்லி, அப்புஷ்பத்திற் சிலவற்றை வாங்கிக்கொண்டு தன்மனைவியின் கண்ணை மயக்கச்செல்ல, 'பக்', அரசன் கட்டளைப்படி, 'டெமிட்ரியஸ்ஸின்' கண்ணில் அப்புஷ்பரசத்தைப் பிழியப்போயிற்று. அவ்வாறுபோய 'பக்' வேறு ஊருக்கு ஓடிப்போகவந்து அக்காட்டில் களைப்பாற் கிடந்து உறங்கும் 'லைஸாண்டரையும்' 'ஹெர்மியாவையும்' கண்டு, தன் அரசன் சொல்லியவர் இவர்தாமென்று மாறாக எண்ணி 'லைஸாண்டரின்' கண்ணில் இரசத்தைப் பிழிந்து சென்றது. சிறிது நேரம் கழிந்தபின் அங்கே 'ஹெலனா' வர, 'லைஸாண்டர்' அவள் முகத்தில் விழித்துத் தனக்கு அவளிடத்துப் புதிதாய் உண்டான ஆசையால் 'ஹெர்மியாவை' மறந்து அவளைத் தொடர்ந்து போனான். இது நிற்க.

ஆதென்ஸ் நகரத்துக் கைத்தொழிலாளிகள் தாம் முன் நிச்சயித்தபடி, அக்காட்டில் அன்றிரவில் தம்முடைய கூத்தை ஆடிச் சரிபார்த்துக்கொள்ளத் தொடங்க, அவர்களுள் பிரதானவேஷக்காரனான 'பாட்டம்' என்பவனுக்குக் கழுதைத்தலை வரும்படியாகப் 'பக்' செய்து விட்டது. அப்பொழுது அருகிற் படுத்து உறங்கிக்கொண்டிருந்த கந்தர்வ அரசியாகிய 'டிடேனியா' அக்கழுதைத்தலையோன் முகத்தில் விழித்து அவன்மேற் காதல் கொண்டவளானாள். பின்னர், தன்காதலனாகிய 'லைஸாண்டரால்' இரவிற் காட்டில் தனியே விடப்பட்ட 'ஹெர்மியா', 'டெமிட்ரியஸ்ஸை'க் கண்டு, அவன் பொறாமையால் 'லைஸாண்டரை'க் கொன்றுவிட்டானென்று எண்ணி அவனைக் கடிந்துபேசிப்போக, அதைப்பார்த்திருந்த ஓபரான், 'பக்' புஷ்பரசத்தைத் தவ

றிப் பிழிந்துவிட்டதென்று அறிந்து, ஹெலனுவை அங்கே விரைவில் அழைத்துவரும்படி பக்குக்குக் கட்டளையிட்டு, அவள் வந்தவுடன் அவளைக்கண்டு ஆசைகொள்ளுவதற்கு உறங்கும் 'டெமிரியஸ்ஸின்' கண்ணில் நேசரசத்தைப் பிழிந்தான். உடனே 'ஹெலனுவும்' அவளைத் தொடர்ந்து 'லைஸாண்டரும்' அவ்விடத்திற்கு வர, 'டெமிட்ரியஸ்' 'ஹெலனுவின்' முகத்தில் விழித்து அவளிடத்து அன்பு பூண்டவனுனன்; பின்னர் 'ஹெர்மியாவும்' அங்கேவந்து சேர்ந்தாள். அப்பொழுது 'ஹெலனு', சற்றுமுன்வரையில் தன்னை வெறுத்துத்தள்ளிய 'டெமிட்ரியஸ்', தன்மேல் பேரன்பு பாராட்டுவதையும், 'ஹெர்மியாவின்' மேல் மாரு அன்புள்ள 'லைஸாண்டர்' அவள்முன்பிலேயே அவளை வெறுத்துத் தன்னிடத்து ஆசை வளர்ந்தவனுய்க் காட்டுவதையுங் கண்டு, இம்மூவரும் ஒன்றுசேர்ந்து தன்னைப் பழிக்கிருர்களென்று மிக மனம்வருந்தினுள். இதை முதலில் பரிகாஸமென்று எண்ணியிருந்த 'ஹெர்மியா' தனது காதலனது அன்பை உண்மையாகவே 'ஹெலனு' கொள்ளை கொண்டாளென்று வருத்தமுற, அவ்விரண்டு தோழிகளுக்குள்ளும் கலகமுண்டாயிற்று. பின்னர் 'லைஸாண்டரும்' 'டெமிட்ரியஸ்ஸும்' 'ஹெலனுவிடத்து' என்னுசை அதிகமோ, உன்னுசை அதிகமோ என்பதைத் தனிப்போரால் தெளிவோமென்று அதற்குரிய இடத்தைநாடிச் சென்றுர்கள். இதையறிந்த 'ஒபரான்', இப்போரில் இவருக்குக் கேடொன்றும் நேரிடாதபடி இருண்ட மூடுபனியையுண்டாக்கி, ஒருவரையொருவர் காணுமற்செய்து, 'லைஸாண்டரிடத்து' 'டெமிட்ரியஸ்ஸின்' குரலைக்காட்டியும் 'டெமிட்ரியஸ்ஸினிடத்தில்' 'லைஸாண்டரின்' குரலைக்காட்டியும் அவரை வெவ்வேறு பக்கங்களில் அலைக்கழித்து, அவர்களைப்பால் உறங்கிய பின்னர், 'லைஸாண்டருக்கு'ப் புதிதாயுண்டான மயக்கம் நீங்கும்பொருட்டு அவன் கண்ணில் இம்மாற்று ரசத்தைப் பிழியவேண்டுமென்று 'பக்குக்கு' உத்தரவுசெய்தான். அவ்வுத்தரவுப்படியே பக், 'லைஸாண்டர்' 'டெமிட்ரியஸ்' 'ஹெர்மியா' 'ஹெலனு' இந்நால்வரும்

அவ்விடத்திற்குவந்து களைப்பால் உறங்கியபின்னர், 'லைஸா ண்டரின்' கண்ணில் மாற்று ரசத்தைப் பிழிந்து போயிற்று. 'ஓபரான்' தான்வேண்டிய சிறுவனை 'டிடேனியா' விடத்தி னின்றும் பெற்று அவளுக்குக் கழுதைத்தலையோனாகிய 'பாட்டத்தின்' மேல் உண்டாய மயக்கத்தைத் தெளிவித் தான்.

பின்னர்க் காலையில் 'தீஸியுஸ்' என்னும் அரசன் தனது மனைமகளாகிய 'ஹிப்பாலிடாவோடும்' 'ஹெர்ம்யா வின்' தந்தையாகிய 'இஜீயஸ்ஸோடும்' அக்காட்டில் வேட் டைக்குவர, வேடடைக்காரர் ஊதிய கொம்பின் ஓசையால் உறங்கிக்கொண்டிருந்த 'லைஸாண்டர்' முதலிய நால் வரும் திடுக்கிட்டெழுந்து அரசனைப் பணிந்து நின்றார்கள். அப்பொழுது 'டெமிட்ரியஸ்', தனக்கு இரவில் நேர்ந்த வற்றையெல்லாம அரசனுக்கு அறிவித்து, நான் ஹெர்ம் யாவை விட்டுவிட்டேன், எனது முந்திய காதலியாகிய 'ஹெலனாவிடத்தே' அன்புடையேன் என்றான். தன்மகள் இவ்வாறு ஓடிவந்ததைப்பற்றிக் கோபங்கொண்ட 'இஜீயஸ்', சட்டப்படி அவளைத் தண்டனைக்குள்ளாக்கவேண்டு மென்று அரசனை வேண்டிக்கொண்டான். அரசன் அதற் குச் செவிகொடாது அனபர்களின் கருத்துக்கு ஒத்தபடி 'ஹெலனாவை' டெமிட்ரியஸ்ஸும', 'ஹெர்ம்யாவை' 'லை ஸாண்டரும' மணங்கொள்ளக் கடவரென்றும் தன்விவாகத் தோடு இவ்விரண்டு விவாகமும் நடக்கவென்றும் சொல்லி ஊருக்குச்சென்றான். அப்படியே இம்மூன்று விவாகங் களும் நகரத்துக் கோயிலில் நடந்தன. அன்றிரவில் மூன்று தம்பதிகளும் ஆதென்ஸ் நகரத்துக் கைதொழிலாளிகள் ஆடிய அஸம்பந்தம் நிறையப்பெற்ற வேடிக்கைக் கூத்தைக் கண்டுகளித்துத் தத்தம் பள்ளியறையை அடைந்தார்கள்.

பின்பு கந்தர்வ அரசன் அரசிகளாகிய 'ஓபரானும்' 'டிடேனியாவும்' 'தீஸியுஸ்ஸின்' அரண்மனைக்கு வந்து மூன்று தம்பதிகளும் நன்மக்களைப்பெற்றுச் சிரஞ்சீவி களாய் இன்புற்றிருப்பாரென்று வாழ்த்திச் சென்றனர்.

# நாடகபாத்திரங்கள்.

| | |
|---|---|
| "தீஸியுஸ்" | ... "ஆதென்ஸ்" நகரத்தரசன். |
| "இஜீயஸ்" | ... "ஹெர்மியா" என்பவளின் தந்தை. |
| "லைஸாண்டர்" "டெமிட்ரியஸ்" | ... "ஹெர்மியாவின்" மேல் நேசங்கொண்டவர்கள். |
| "பிலாஸ்ட்ரேட்" | ... (Philostrate) "தீஸியுஸ்" அரசனது ... கூத்துவிருந்துகளின் விசாரிப்புக்காரன். |
| "க்வின்ஸ்" | ... (=ஓர்வகை இலந்தை) தச்சன். |
| "ஸ்நக்" | ... (Snug=நெருக்கம்) பூட்டுவேலைக்காரன். |
| "பாட்டம்" | ... (Bottom=நூலுருண்டை) சேணியன். |
| "ப்ளூட்" | ... (Flute=குழல்) துருத்திதிருத்துவோன். |
| "ஸ்நௌட்" | ... (=நீண்டமூக்கு) பழைய பாத்திரங்களைப் புதுப்பிப்போன். |
| "ஸ்டார்வெலிங்" | ... (=பசியால் மெலிதல்) தையற்காரன். |
| "ஹிப்பாலிடா" | ... "அமேஜான்ஸ்" (Amazons) என்ற பெண்பாற் போர்வீரரின் அரசி; 'தீஸியுஸ்ஸோடு' போர்புரிந்து தோல்வியுற்றபின் அவனை மணஞ்செய்ய இருப்பவள். |
| "ஹெர்மியா" | ... "இஜீயஸ்ஸினுடைய" மகள்; "லைஸாண்டரின்" மேல் ஆசை கொண்டவள். |
| "ஹெலனா" | ... "டெமிட்ரியஸ்ஸின்" மேல் ஆசை கொண்டவள். |
| "ஓபரான்" | ... கந்தர்வ அரசன். |
| "டிடேனியா" | ... கந்தர்வ அரசி. |
| "பக்" | ... விகடக்குட்டிப்பேய். |

| | | |
|---|---|---|
| பயற்றம்பூ | ...(=பீஸ்ப்ளாஸம்—Peaseblossom) | கந்தர்வப் பெண்கள். |
| சிலம்பிக்கூடு | ...(=காப்வெப்—Cobweb) | |
| பாச்சை | ...(=மாத்—Moth) | |
| கடுகுவிதை | ...(=மஸ்டர்ட்ஸீட்—Mustardseed) | |

| | |
|---|---|
| மற்றைக்கந்தர்வர்கள் | ... கந்தர்வ அரசன் அரசிகளோடு வருபவர்கள். |
| பரிவாரங்கள் | ... தீஸியுஸ், ஹிப்பாலிடாக்களோடு வருபவர்கள். |

**இந்நாடகத்துக்குரிய இடங்கள்: ஆதென்ஸ் நகரமும், அதற்குச் சமீபத்துள்ள காடும்.**

# நடுவேனிற்கனவு.

## 1-வது அங்கம்.

### 1-வது இடம்: ஆதென்ஸ் நகரத்தில் தீஸியுஸ்ஸினுடைய அரண்மனை.

[*தீஸியுஸ், ஹிப்பாலிடா, பிலாஸ்ட்ரோட், பரிவாரங்கள் வருதல்.]

தீஸியுஸ்:—சீருள்ள ஹிப்பாலிடாவே, நாம் மணம்புரிந்து மகிழ்வுறுங்காலம் நெருங்குகின்றது. அமாவாஸ்யைக்குப்பின் புதிய பிறை தோன்றுதற்கு இன்னும் நான்கே நாள் செல்லவேண்டும். ஐயோ! இப்பழையபிறை மிக மெல்லத் தேய்கிறதுபோற் காணப்படுகின்றதே! அதனால் நமது ஆசை நிறைவேறுநாளும் தங்கித்தங்கி மெல்ல வருகின்றது.

ஹிப்பாலிடா:—நான்கு பகலும் அவற்றினது இரவில் விரைவில் அழுந்திவிடும்; நான்கு இரவும் கனவில் விரைவிற் கழிந்துவிடும். பின்னர் வானத்துப் புதிதாகவளைத்த வெள்ளிவிற்போன்று விளங்கும் பிறை நாம் மணம்புரிந்து மகிழ்வுற்றிருக்கும் இரவைக் காணும். 12

---

*" 'ஆதென்ஸ்' நகரத்து இராசகுமாரனாகிய 'தீஸியுஸ்' என்னும் யுத்தவீரன் 'அமேஜான்ஸ்' என்ற பெண்போர்வீரருடன் போர்புரிந்து அவர்களுடைய அரசியைச் சிறைகொண்டான். இதற்குப் பிரதி செய்ய அப்பெண் போர்வீரர் 'ஹிப்பாலிடா' என்பவளைத் தங்களுக்குத் தலைவியாக ஏற்படுத்திக்கொண்டு 'ஆட்டிகா' என்ற ஊரின் மேற் படையெடுத்து வந்தார்கள்; அப்பொழுது தீஸியுஸ் அவர்களை முறிய அடித்து 'ஹிப்பாலிடாவை'க் கலியாணஞ் செய்து கொண்டான்." என்பது கிரேக்கர்களுக்குளுள்ள ஒருபழைய கதை

தீஸியுஸ்:—பிலாஸ்ட்ரேட், நீ போய் இவ்வாதென்ஸ் நகரத்து இளைஞரைக் களித்துக்கொண்டாட எழுப்பிவிடு. மனச்சோர்வைத் துக்கமுள்ளவிடத்துத் துரத்தி ஊரெங்கும் சந்தோஷம் நிறைந்திருக்கச்செய். (பிலாஸ்ட்ரேட்-போதல்.) ஹிப்பாலிடா, உன்னை என் வாளால் வசீகரித்தேன்; உனக்குத் தவறிழைத்து உன் அன்பைக்கொண்டேன்; இப்பொழுது உன்னை மணம்புரியும் வழியோ இத்தன்மைத்தானதன்று: ஆரவார வேடிக்கையுடனும் ஆநந்தக்களிப்புடனும் உன்னைக் கைப்பிடித்து எனது மணமகளாக்குவேன்.

[இஜீயஸ், ஹெர்ம்யா, லைஸாண்டர், டெமிட்ரியஸ் வருதல்.]

இஜீயஸ்:—நம் புகழ்பெற்ற இறைவனாகிய தீஸியுஸ் இனிது வாழ்க.

தீஸியுஸ்:—உத்தம இஜீயஸ்ஸே, நிரம்பச் சந்தோஷம்; உனக்கு ஸம்பவித்தது என்ன?

இஜீயஸ்:—என்னாண்டவனே, துயரம் நிறைந்து, என் மகள் ஹெர்ம்யாவென்பவள்மேற் குறைகூற வருகிறேன். அழகும் செல்வமுமுள்ள உயர் குலத்தோனாகிய டெமிட்ரியஸ்ஸென்னும் இவ்விளைஞன் அவளை மணம்புரிய என் அநுமதி பெற்றவன். என் தண்ணளித்தலைவ, இங்கு நிற்கும் லைஸாண்டரோ, அவள் உள்ளத்தை மயக்கினான்.—லைஸாண்டரே, அடா துஷ்டா! நீ என் குழந்தையிடத்து நேச அடையாளங்களைக் கொடுத்து நேச அடையாளங்களைப் பெற்றுக்கொண்டாய்; பொய்ந்நேசம் காட்டும் பாடல்களை மாறுகுரலில் நிலவில் அவளுடைய சாளரத்தருகிற் பாடி மோதிரம், விளையாட்டுடைமை, சிறுபண்டம், பூச்செண்டு, சுவைப்பண்டம் முதலியவற்றால் உன் உருவத்தை அவள் மனத்தில் யாருமறியாமற் பதித்தாய்; கபடமாய் அவள் உள்ளத்தைக் கவர்ந்தாய்; எனக்குரிய அவளது பணிவை இணங்காத வன்கண்மையாக மாற்றினாய்.—

17. வாளால் வசீகரித்ததை முன்னுள்ள குறிப்பிற் காண்க.

என் தண்ணளித்தலைவ, உன் முன்பில், அவள் டெமிட்ரியஸ்ஸை மணம்புரிய உடன்படாளாயின், ஆதென்ஸ் நகரத்துப் பண்டை வழக்கப்படி நடக்க அனுமதி தந்தருள வேண்டுகின்றேன்; அவள் என்னுடைமையாதலின், அவளை இக்குலமகனுக்கு அளிப்பேன்; அன்றெனின், நம்மூர்ச் சட்டத்தின் உறுதியான திட்டப்படி கொலைக்களம்படுப் பேன். 48

தீஸியுஸ்:—ஹெர்ம்யா, நீ என்ன சொல்லுகிறாய்? சீருள்ள கன்னியே, நான் சொல்லும் புத்தியைக்கேள்; உன் தந்தை, உனக்கு ஓர் தெய்வம்போன்றவன்; உனக்கு உருவம் தந்தவன் அவன்; அழகு அமைத்தவன் அவன். அவன் ஏற்படுத்திய கணவனாகிய டெமிட்ரியஸ்ஸோ ஸத் பாத்திரமான குலமகன்.

ஹெர்ம்யா:—லைஸாண்டரும் அப்படியே.

தீஸியுஸ்:—அவனுக்குள் அவன் அப்படிப்பட்டவனே. ஆனால் இக்காரியத்தில் அவனுக்கு உன்தந்தையின் அனுமதியின்மையின் மற்றவனே மிகத் தக்கவனென எண்ணல் வேண்டும்.

ஹெர்ம்யா:—என் தந்தை என்கண்களாற் பார்க்கிறாரில்லையே! 61

தீஸியுஸ்:—உன் கண்கள் உன் தந்தையின் விவேகத்தோடு பார்த்தல் வேண்டும்.

ஹெர்ம்யா:—என்னாண்டவனே, என் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுகின்றேன். எவ்வன்மையினால் எனக்கு இவ்வளவு துணிவோ, இங்கு இச்சந்நிதானத்து, என் உட்கருத்தை வெளியிட்டு வழக்காடல் என் பெண்குணத்திற்கு எம்மட்டில் முறையோ, அறியேன்; டெமிட்ரி

---

47–48. "தாய் தந்தையர்கள் தம்மக்களை உயிரோவைக்கவோ கொல்லவோ ஸர்வசுதந்திரமுடையோர்" என்பது ஆதென்ஸ் நகரத்துப் பூர்வீகச்சட்டம்.

யன்னை மணம்புரிய மறுப்பேனாயின், எனக்கு வரக்கூடிய பெருந்தீங்கு இன்னதென்று யானுணருமாறு அருளிச் செய்ய வேண்டுகின்றேன். 71

**தீஸியுஸ்:—** இறக்கவேண்டும்; அன்றெனின், மனிதர் சேர்க்கையையே முற்றும் துறக்கவேண்டும். சீருள்ள ஹெர்ம்யாவே உன்னாசையை வினவு; உன் யௌவனத்தன்மையைக் கேட்டறி; உன் இரத்தப்பெருக்கைப் பரிசோதித்துப்பார்; உன் தந்தையின் விருப்பத்திற்கிணங்காது தவப் பெண் கோலம் பூணவும், இருளடைந்த கன்னிமடத்திலடைபட்டுக் கன்னித்தன்மையழியாக் குளிர் திங்கட்கு உருக்கமாக ஞான கீதம்பாடித் துதித்துக்கொண்டு வாழ்நாள் முழுவதும் மலட்டுத் தவப்பெண்ணாயிருக்கவும் சகிப்பாயோ? தம் இரத்தக்கொதிப்பை இவ்வாறு அடக்கி 81 ஆண்டு நித்திய கன்னிவிரதம் பூண்டொழுகுவோர் நிரம்ப அருள் பெற்றவரே யாவர். ஆயினும், இவ்வுலக வாழ்க்கையில், வேறுவிதமாகப் பயன்படுத்தப்படாது முள்ளிலேயே வாடிக்கொண்டு தனியே வளர்ந்திருந்திறக்கும் 'ரோஜா' மலரினும் பறித்துப் பனிநீராக இறக்கப்படும் 'ரோஜா' அதிபாக்கியம் பெற்றுள்ளதென்றுணர்வாய்.

**ஹெர்ம்யா:—** என்னாண்டவனே, அப்படியே வளர்ந்து பாழ்ந்து இறப்பேனேயன்றி யாருடைய நுகத்துக்குத் தலை

---

74. உன்னாசையை வினவு, உனது ஆசையை முன்னிலைப் படுத்திக்கேள்.

77–79. சந்திரனை 'டையானா' என்னும் கற்புள்ள கன்னித் தேவதையாகக் கூறுவது 'கிரேக்கர்' வழக்கம். கன்னிமடத்திலுள்ள தவப்பெண்கள் சந்திரனைப்பற்றித் தோத்திரகீதம்பாடிக் காலம் கழிப்பதுண்டு. கன்னிமடம் என்பது உலகத்தைத் துறந்து தவக் கோலங்கொண்டு கற்புவிரதம்பூண்ட மாதர்கள் இருக்கும் இரகசியமான இடம். கிறிஸ்தவர்களில் 'ரோமன் காதலிக்' என்னும் வகுப்பாருள் இம்மடங்கள் உண்டு.

89. நுகத்துக்குத் தலைவணங்கல், ஆளுகைக்கு உள்ளாதல்.

வணங்க என்மனம் ஒவ்வாதோ, அப்படிப்பட்டவனுடைய ஆளுகையில் என் கன்னித்தன்மைக்கடுத்த இன்பத்தையும் சுவாதீனத்தையும் ஆக்குவேனல்லேன். 92

தீஸியுஸ்:— பொறுத்து யோசிக்கக் காலமிருக்கிறது. அடுத்துப் புதிய பிறை தோன்றுநாளில், என் காதலிக்கும் எனக்கும் என்றும் பிரியா நேச பந்தத்திற்கு முத்திரை பதிக்கும தினத்தில், உன் தந்தையின் மனம்போல் நடவாத தற்காக இறக்கவோ, அவன் விருப்பப்படி டெமிட்ரியஸ்ஸை மணம்புரியவோ, 'டையானு' தேவதையின் பீடத்தின்முன் நித்திய கன்னி விரதம் பூணவோ ஸித்தமாயிரு.

டெமிட்ரியஸ்:—இனிய ஹெர்ம்யாவே இனியேனும் என்மேற் சற்றிரங்கு. லைஸாண்டரே, என் ஐயமில்லாப் பொருளுக்கு நீ ஏன் உரிமை பாராட்டுகின்றாய்? விட்டுவிடு. 103

லைஸாண்டர்:—டெமிட்ரியஸ்ஸே, நீ அவள் தந்தையின் நேசமுடையாய்; நான் அவளுடைய நேசமுடையேன்; என்னோடு வழக்குக்கு வாராதே. நீ அவனைக் கலியாணஞ் செய்துகொள்.

இஜீயஸ்:— நிந்தைநிறைந்த லைஸாண்டரே, அவன் என் நேசமுடையானென்பது மெய்யே; என் நேசம் அவனுக்கு என்னுடைமையைக் கொடாதோ? அவள் என்னுடைமை யாதலின் அவளைப்பற்றிய என் எல்லா உரிமையையும் டெமிட்ரியஸ்ஸுக்கு இதோ அளிக்கின்றேன். 112

லைஸாண்டர்:—என்னாண்டவனே, குலத்தாலும் பொருளாலும் யான் அவனுக்குக் குறைந்தவனல்லன்; என் நேசமோ அவனதிலும் மிக அதிகம்; என் பாக்கியமோ, அவனுடைய பாக்கியத்திற்கு ஒருகால் மேலானதன்றெனப்படி.

---

95. நேசபந்தத்திற்கு முத்திரைப்பதித்தலாவது விவாகஞ் செய்து கொள்ளல்.

106. அவன் என்றது ஹெர்ம்யாவின் தந்தையை; இது பரிகாஸ வார்த்தை.

னும், அதற்கு இணையாயிருக்குமென்பது நிச்சயம். இவ்வெல்லாப் பெருமையிலும் மேலாக, நான் அதிசுந்தரியாகிய ஹெர்மியாவால் நேசிக்கப்பட்டவனென்னும் பெரும் பெருமையும் உடையேன். ஆதலின், யான் ஏன் என்னுரிமையைப் பாராட்டவொண்ணாது? டெமிட்ரியஸோ,—அவன் முகத்துக்குநேர் உறுதியாய்ச் சொல்வேன்—நெடாரின் புதல்வியாகிய ஹெலனவை நேசித்து அவள் உள்ளத்தைத் தன்வசங்கொண்டான். அவ்வினிய மாதோ, உறுதியற்ற இப்புரட்டன்மேல் மிக்க காதல் பூண்டாள்; பக்தி பாராட்டுகின்றாள்; இவனைத் தெய்வமென ஆராதிக்கின்றாள்.

**தீஸியுஸ்:—** ஸ்வயகாரியமே என் மனத்து நிரம்பித் ததும்புதலால் நீங்கள் சொல்லியதில் ஒன்றும் அதில் தங்கவில்லை. ஆயினும், நன்று; சீருள்ள ஹெர்மியா, நான் முன் சொல்லியவண்ணம் உன் தந்தையின் கருத்துக்கு இசைந்து நடப்பாயாக; அன்றெனின், இப்பிறைக்கு நான்காம் நாளில் ஆதென்ஸ் நகரச்சட்டப்படி—அச்சட்டத்திற் சொல்லியதில் ஒன்றுங்குறையேன்—மரணதண்டனைக்குட்படவோ, அல்லது நித்திய கன்னிவிரதம் பூணவோ சித்தமாயிரு. ஹிப்பாலிடா, என் காதலியே, என்புற்றிருக்கிறாயோ? நாம் இனிப்போவோம். இஜீயஸ், டெமிட்ரியஸ், நீங்களும் என்னுடன் வாருங்கள்; உங்களை என் கலியாண காரியத்தில் ஏவுவேன்; அன்றியும், உங்கள் காரியத்தைக் குறித்தும் உங்களிடத்துத் தனித்துப் பேசவேண்டியதுண்டு.

**இஜீயஸ்:—** எம் கடமையைச் செலுத்த ஆவலோடு வருகிறோம், என்னாண்டவனே.

(தீஸியுஸ், ஹிப்பாலிடா, இஜீயஸ், டெமிட்ரியஸ் பரிவாரங்கள்-போதல்)

---

128. ஸ்வயகாரியம், கலியாணம்.

136. ஹிப்பாலிடா அருகிருத்தலையே உணராதவன்போல் தானிதுவரையில் வேறுகாரியமாயிருந்ததுபற்றித் தீஸியுஸ் அவளை நோக்கி இவ்வுபசாரவார்த்தைகள் சொல்லுகிறான்.

**லைஸாண்டர்:**—*என் அன்பே, சுகமோ? முகம்வெளுத்தாயே; கன்னச்செம்மலர் வாடியதே. ஆ! கஷ்டம்! மெய்யன்பிற்குப் பலவிதத்திலும் இடையூறுகள் உண்டாகின்றன; சிலவேளை குலத்தின் வேறுபாட்டால் இடையூறு; சிலவேளை பிராயத்தின் தாரதம்மியத்தால் இடையூறு; சிலவேளை இருவர் கருத்தும் ஒவ்வாமையால் இடையூறு. இவ்வெல்லா விதத்திலும் எப்பொழுதேனும் பொருத்தம் அமைந்து மெய்யன்பு உண்டாயினும், அம்மெய்யன்புக்குப் போரும், பிணியும், பொல்லாமரணமும் இடையூறாகி, அதை ஒலியைப்போல் நொடிப்பொழுதினதாயும், நிழலைப்போல் நிலையற்றதாயும், கனவைப்போற் குறுகினதாயும், மின்னலைப்போல் தோன்றிமறைகின்றதாயும் செய்கின்றன. அம்மின்னல் பளீர் என்று ஒரு கீற்று வடிவாகப் பூமியையும் வானத்தையும் ஒருங்கு காட்ட, ஒருவன் 'பார்' என்று சொல்லுமுன் அவை இருட்பிழம்பின் வாயிலகப்பட்டு மறைவதுபோற் பிரகாசித்து விளங்கும்பொருள்களும் விரைவில் மாய்கின்றன.*

**ஹெர்மியா:**— *இவ்விடையூறுகளெல்லாம் மெய்யன்பிற்கு ஊழின்படி வருவனவாம். சிந்தனையும், கனவும், பெருமூச்சும், அவாவும், கண்ணீரும் காதலுள்ளவிடத்துக் காணப்படுவனபோல் இவ்விடையூறுகளும் காதலருக்கு வழக்கமாயுள்ளன; ஆதலின், நாம் இவற்றை அநுபவிப்பதில், மிக்க பொறுமையோடிருக்கக் கற்கவேண்டும்.*

**லைஸாண்டர்:**— *ஆ! இது நல்ல கோட்பாடுதான். ஆகையால், ஹெர்மியா, நான் சொல்வதைச் சற்றுச் செவி*

---

147-152. *நாயகன் நாயகிகள் மேற்குலத்தவரும் கீழ்க்குலத்தவருமாயிருந்தாலும், பிராயத்தில் ஏற்றக்குறைவுள்ளவர்களாயிருந்தாலும், மனம் ஒவ்வாதவராயிருந்தாலும் அவர்களுள் சிலவேளை மெய்யன்பு உண்டாகிறதில்லை. அது, எப்பொழுதேனும் உண்டாயினும், போர் பிணி முதலிய காரணங்களால் நீடித்து நில்லாமற் போகின்றது.*

168. ஆகையால் &c., *பொறுமையோடு சகித்துக்கொண்டிருக்க வேண்டுமென்ற ஹெர்மியாவின் கோட்பாட்டை ஒப்புக்கொண்டவன்போற் காட்டி லைஸாண்டர், அக்கோட்பாட்டுக்கு விரோதமான உபாயத்தைச் சொல்லுகிறான்.*

கொடுத்துக்கேள். இவ்வூருக்கு இரண்டு காதத்துக்கப்பால் எனக்கு ஒரு கைம்மையத்தை இருக்கிறாள்; மிக்க பணக்காரி; குழந்தையில்லாதவள்; என்னை அவளுடைய ஒரே குழந்தைபோல எண்ணுபவள்; அவளிடத்தில் இவ்வூர்ச் சட்டம் செல்லாது; நாம அங்கு மணமபுரிந்து இனிது வாழலாம. உனக்கு என்னிடதது நேசமுளளது மெய்யானால், நாளை இரவில், உன் தகப்பனுடைய வீட்டிலிருந்து யாருமறியாமற் புறப்பட்டு இவ்வூருக்கு மூன்று நாழிகைவழித் தூரத்திற்கு அப்பாலிருக்கும காட்டுக்கு வநதுசேர். முன்னொருகாலத்து, நீயும் ஹெலனாவும வஸந்தவிழாக்கொண்டாடும்பொழுது நான் உங்களைச் சந்தித்தவிடத்தில உனக்காகக் காத்திருப்பேன்.

**ஹெர்மியா**:—என் லைஸாண்டரே, இந்நன்றிமறவேன்; மதனன் வில்லாணை, அவன அம்பாணை, நீ குறித்தவிடத்தில் நான் உன்னை நிச்சயமாய்ச் சந்திப்பேன்.

**லைஸாண்டர்**:—என் நேசமே, பொறு பொறு; ஹெலனா இதோ வருகிறாள் பார்.

---

179. வஸந்தவிழா, இங்கிலாண்டில் இவ்விழாவை முன்னவ்வளவு வைபவத்தோடு இக்காலத்தில் கொண்டாடுவதில்லை. வஸந்த கால ஆரம்பத்தில் இளையவர் இராத்திரி மூன்றாம் ஜாமத்தில் எழுந்து கொம்பு ஊதிக்கொண்டு கீதவாத்தியங்களுடன் ஊருக்கருகிலுள்ள காட்டுக்கு நடந்து சென்று மரக்கொம்புகளையொடித்து அவற்றைப் பூச்செண்டுகளாலும் புஷ்பமாலைகளாலும் அலங்கரித்துச் சூரியோதயமானவுடன் வீடுசேர்ந்து அவ்வலங்கரிக்கப்பட்ட கொம்புகளை வீட்டின் கதவுகளிலும் பலகணிகளிலும வைப்பது வழக்கம். பின்னும் பண்டைக்காலத்தில் இங்கிலாண்டில் ஒவ்வொரு கிராமத்திலும் இவ்விழாவில் 40-அடி உயரமும் 15-அங்குல கனமுமுள்ள தேவதாருக் கம்பத்தை வஸந்தக்காலாக நாட்டி அதைப் பூமாலைகளாலும் கொடிச்சீலைகளாலும் அலங்கரித்துக் காலைமுதல் இரவுவரையில் ஊரார் அதைச்சுற்றிவந்து ஆடிப்பாடுவது வழக்கம. அப்படி நாட்டப்பட்ட வஸந்தக்கால்களிற் சில இப்பொழுதும் அங்கங்கே காணப்படுகின்றன.

[ஹெலனு வருதல்.]

ஹெர்மியா:—என் அழகுள்ள ஹெலனுவின் காரியம் இனிது முடிக. எங்கே போகின்றாய்? 187

ஹெலனு:—என்னை அழகுள்ளவள் என்றாயே, அப்பெயரை மாற்றியழை; உன்னழகே டெமிட்ரியஸ் விரும்பும் அழகு; உன் கண்கள் அவனுக்குத் துருவமீன்; உன் குரல் அவனுக்கு இனியகீதம். வியாதி தொட்டோரைத் தொடர்கின்றதே; ஐயோ! நான் உன்னைவிட்டுப் போவதற்குள் அழகும் அப்படித் தொடராதோ? அவனை வசப்படுத்தும் உபாயத்தை எனக்கு நீ கற்பிப்பாயோ?

ஹெர்மியா:—அவனைச் சினந்து பார்க்கின்றேன்; அவன் என்னை நேசிக்கின்றான்.

ஹெலனு:—ஐயோ! உன் சினம், அவனை வசப்படுத்தும் உபாயத்தை என் புன்சிரிப்புக்குக் கற்பியாதோ? 198

ஹெர்மியா:—யான் நிட்டைப் பொழிகின்றேன்; அவன் நேசத்தைப் பொழிகின்றான்.

ஹெலனு:—ஐயோ! என் துதிக்கு அவ்வன்மையில் லையே!

ஹெர்மியா:—நான் அவனை வெறுக்க வெறுக்க, அவன் என்னைத் தொடர்ந்து தொடர்ந்து வருகின்றான்.

ஹெலனு:—நான் அவனை நேசிக்க நேசிக்க, அவன் என்னை வெறுக்கின்றானே.

ஹெர்மியா:—இந்து அவனுடைய அறிவின்மையேயன்றி, ஹெலனு, எனது குற்றமன்று. 208

---

190. துருவமீன், துருவநக்ஷத்திரம்; அது, தன்னிலை மாறாது நிற்றலால், பிரயாணிகளுக்கு வழிகாட்டும் நக்ஷத்திரமாக உபயோகப்படுகிறது. உன்கண்கள் அவனுக்குத் துருவமீன் என்பதற்கு அவன் உன் கண்களின் குறிப்பை அனுசரித்து நடப்பவன் என்பது பொருள்.

**ஹெலனா:**—இதற்குக் காரணம் உன்னழகேயன்றி வேறொன்றன்று; இதுதான் உனது குற்றம். ஐயோ! இந்தக் குற்றம் எனக்கில்லையே!

**ஹெர்மியா:**—இனி உனக்கு மனத்தளர்ச்சி வேண்டுவதில்லை. அவன் என் முகத்தை இனிமேற் பாரான்; நானும் என் லைஸாண்டரும் இவ்விடம்விட்டுப் போகின்றோம். காட்டில் நாம் வழக்கமாகக் கூடிக்கலந்துபேசி நம்முடைய அந்தரங்கங்களைச் சொல்லிக்கொள்ளும் இடமாகிய பூங்காவனத்து நாங்களிருவரும் நாளை இரவிற் சந்தித்து வேறிடம் போகக் கருதியிருக்கின்றோம். என் இனிய விளையாட்டுத் தோழியே, நீ உன் டெமிடிரியஸ்ஸை மணம்புரிந்து இனிது வாழ்வாயாக. லைஸாண்டரே, சொன்ன சொற்படி நடக்க வேண்டும்.

**லைஸாண்டர்:**—அப்படியே நடப்பேன், ஹெர்மியாவே. (ஹெர்மியா போதல்.) ஹெலனா, நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன்; உனக்கு டெமிட்ரியஸ்ஸின்மேலுள்ளதுபோல அவனுக்கும் உன்மேல் ஆசைபிறந்து வளர்வதாக.

(லைஸாண்டர் போதல்.)

**ஹெலனா:**—நான் அவளுக்கு அழகிற் குறைந்தவளோ? ஊரில் எல்லோர்க்கும் தோன்றும் அழகு டெமிட்ரியஸ்ஸுக்குத் தோன்றவில்லையே! இழிந்ததைக் காமம் உயர்ந்ததாகக் காண்கின்றது; காமம் கண்ணாற் பார்ப்பதில்லை; மனத்தாற் பார்க்கின்றது; அங்கும் விவேகங்கிடையாது; அஃது ஓரிடத்துத் தரித்து நிற்கிறதுமில்லை. அதனாலன்றோ காமனைச் சிறகுள்ள பொட்டையனாகச் சித்திரத்திற் காட்டுகிறார்கள். ஹெர்மியாவைக் காணுமுன் டெமிட்ரியஸ் நானே தஞ்சமென்று இருந்தானே; அவளைக் கண்டவுடன் சூரியனைக்கண்ட பனிபோல் அவனது அவ்வளவு அன்பும் உருகியோடிவிட்டதே! நன்று; ஹெர்மியா காட்டுக்கு ஓடிப்

---

228-229. **இழிந்ததை—காண்கின்றது,** அழகில்லாத பொருள் காமிகள் கண்ணுக்கு மிகவும் அழகுள்ளதாகத் தோன்றுமென்பது பொருள்.

போவதைப்பற்றி அவனுக்கு உரைப்பேன். அவ்வுரைக்குப் பிரதியாக அவன் என்னிடத்து ஓரன்புமொழி கூறுவானாயின், அவ்வன்புமொழி அப்பொழுதுண்டாகும் என் மனநோவிற்கு ஈடாவதன்று. ஆயினும், அம்மனநோவை, அவன் அவளைத்தொடர்ந்து காட்டுக்குச் செல்லுகையில் அவன் முகத்தைப் பார்த்தலால், ஒருவாறு மாற்றிக்கொள்வேன்.
242

(ஹெலனு போதல்.)

## 2-ம் இடம்-ஆதேன்ஸ் நகரத்தில் க்வின்ஸ் என்பவன் வீட்டில் ஓரறை.

[க்வின்ஸ், ஸ்நக், பாட்டம், ப்ளூட், ஸ்நௌட், ஸ்டார்வெலிங்-வருதல்.]

**க்வின்ஸ்:**—நம்முடைய கூட்டத்தார் எல்லோரும் வந்திருக்கிறார்களா?

**பாட்டம்:**—அட்டவணைப்படி பெயர் பெயராகக் கூப்பிடுவது நலம்.

**க்வின்ஸ்:**—பெயர் அட்டவணையோலை இங்கிருக்கின்றது. அரசனது கலியாணநாளிரவில் அரசன்முன் நம்முடைய கூத்தை ஆடுவதற்கு, இந்நகரத்தில் இன்னார் இன்னார் தக்கவர்கள் என்று இதில் எழுதப்பட்டிருக்கிறது.

**பாட்டம்:**—க்வின்ஸ், வளர்க்க வேண்டாம்; குறியானதைப் பேசு. நமது கூத்தின் பெயரைச்சொல்; அதில் ஆடுபவர்களின் பெயர்களை வாசி. 11

---

237-240. தனது மாற்றாளாகிய ஹெர்மியாவிடத்தினின்றும் டெமிட்ரியஸ்ஸைப் பிரிக்கக் கருதுபவளாகிய ஹெலனு, அவன் அவளைத் தொடர்ந்துசேரும்படி, தானே அவனுக்கு வழி சொல்லும்பொழுது அவளுக்குண்டாகும் மனவருத்தம் அவளாற் சகிக்கக் கூடியதன்று. இவ்வழிசொல்லியதற்குப் பிரதியாக டெமிட்ரியஸ், ஹெலனுவிடத்து ஓரன்புமொழியும் கூறான். அவ்வாறு கூறினும், அவ்வன்புமொழி அவள் அப்பொழுது படும் மனவருத்தத்திற்கு ஈடாகாது.

க்வின்ஸ்:—கூத்தின் பெயர் "மிகவும் துக்ககரமான களிக்கூத்தும் பிரமஸ் தீஸ்பி இவர்களுடைய குரூரமான மரணமும்."

பாட்டம்:—நல்ல கூத்தென்றே தோன்றுகிறது. க்வின்ஸ், ஆடுபவர்களை முறையே கூப்பிடு. தலைவர்களே, தனித்தனியே பிரிந்து நில்லுங்கள்.

க்வின்ஸ்:—சேணியப் பாட்டம்.

பாட்டம்:—சித்தமாயிருக்கிறேன்; எனக்கு வேஷம் யாது?

க்வின்ஸ்:—உன்னைப் பிரமஸ் வேஷத்திற்கு நிச்சயித்திருக்கிறோம்.

பாட்டம்:—பிரமஸ் என்பவன் யார்? காமுகனே? கொடியவனே?

க்வின்ஸ்:—காமுகன்; காமத்தின்நிமித்தம் தற்கொலை செய்துகொள்ளும் பெருந்தீரன்.

பாட்டம்:—ஆட்டத்தில், காண்போர் கண்ணீர் விடும்படியான காரியமிது. நன்று; நான் இவ்வேஷம்போட்டு ஆடுவேனாயின், காண்போர்கள் தங்கள் கண்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கடவர்; அவர்கள் கண்களை நீராகவடித்துவிடுவேன்; அவர்களைக் கதறி அலறச் செய்வேன். ஆயினும், எனக்குக் கொடியவன் வேஷந்தான் நல்ல பொருத்தமுள்ளது; ஹெர்க்யுலிஸ்ஸைப்போல், பூனையின் குடலைக் கிழிப்பேன்; கதவை உடைப்பேன்; பூட்டை முறிப்பேன்;

12-14. இந்நாடக கவி, அக்காலத்துச் சில கவிகள் தம்முடைய நாடகங்களுக்குப் பொருத்தமில்லாத நீண்டபெயர் வைப்பதைப் பற்றிப் பரிகாசம் செய்கிறார்.

33-35. ஹெர்க்யுலிஸ்-வீமசேனனைப்போல் அதிக பலவான். பூனையின் குடலைக் கிழிப்பது முதலியவற்றை அப்பலவான்போன்றவனின் ஸாகஸச்செய்கைகளாகக் கூறுவது பரிகாசம்.

இவைபோன்ற எத்தனையோ ஸாகஸச் செய்கைகள் செய்வேன். நன்று; மற்றை ஆட்டக்காரர்களின் பெயர்களைச் சொல். 37

க்வின்ஸ்:—நருத்திகிருத்தும் ப்ளூட், நீ திஸ்பிவேஷம் போட்டுக்கொள்ளவேண்டும்.

ப்ளூட்:—திஸ்பி என்பவன் யார்? எங்கும் போராடி அலைந்து திரியும் ஆயுதபாணியோ?

க்வின்ஸ்:—பிரமஸ்ஸால் நேசிக்கப்படும் குலமகள்.

ப்ளூட்:—எனக்குப் பெண்வேஷம் வேண்டுவதில்லை. இப்பொழுதுதான் எனக்குத் தாடிமுளைத்துவருகிறது.

க்வின்ஸ்:—எல்லாம் ஒன்றே; குற்றமில்லை; பொய்ம் முகம்வைத்து ஆடப்போகிறாய். உன் குரலைமாத்திரம் சற்று மெல்லிதாக்கிக்கொள்.

பாட்டம்:—முகத்தை மறைத்துக்கொண்டு ஆடலாமென்றால், நானே திஸ்பிவேஷமும் போட்டுக்கொள்வேன்; நான் பெருஞ்சிறுகுரலாற் பேசுவேன். "திஸ்னி, திஸ்னி" என்று கீச்சுக்குரலிற் சொல்வேன். 51

க்வின்ஸ்:—கூடாது, கூடாது. நீ பிரமஸ் வேஷமே போட்டுக்கொள்ளவேண்டும். ப்ளூட், உனக்குத் திஸ்பி வேஷமே.

பாட்டம்:—நன்று; இதற்குமேல் வருவதைக் கேட்போம்.

---

40-41. எங்கும்—ஆயுதபாணியோ, எங்கே யுத்தமுண்டாகும், எங்கே தம்முடைய வீரத்தைக்காட்டச் சமயம் கிடைக்குமென்று சுற்றித் திரியும் போர்வீரர், ஐரோப்பாவில் முற்காலத்துண்டு.

43. 'இரண்டாம் சார்லஸ்' அரசன் காலத்திற்குமுன்வரையில் இங்கிலாண்டிற் பெண்கள் நாடகத்தில் வேஷம்போட்டுக்கொள்ளுவதில்லை.

50. பெருஞ்சிறுகுரல், இதுபோன்ற அசம்பந்தமான சொற்றொடர் எத்தனையோ பாட்டத்தின்பேச்சிற் காணலாம்.

**க்வின்ஸ்:**—ஸ்டார்வெலிங், உனக்குத் திஸ்பியினுடைய தாய்வேஷம். பழையபாத்திரம் புதுப்பிக்கும் ஸ்நௌட், உனக்குப் பிரமஸ்ஸினுடைய தந்தை வேஷம். எனக்குத் திஸ்பியினுடைய தந்தை வேஷம். மூட்டுவேலைக்கார ஸ்நக், உனக்குச் சிங்கவேஷம். இப்பொழுது எல்லாம் சரியாக அமைந்து விட்டனவென்று எண்ணுகிறேன். 62

**ஸ்நக்:**—சிங்கவேஷக்காரன் சொல்லவேண்டியது இன்னதென்று எழுதப்பட்டிருக்குமானால், அதை இப்பொழுதே என்னிடத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்; நான் பாடம்பண்ணுவதிற் சற்று மந்தன்.

**க்வின்ஸ்:**—சிங்கம் செய்யவேண்டிய காரியத்தை ஒரு யோசனையுமின்றி நினைத்தமாத்திரத்திற் செய்யலாம்; கர்ஜிப்பதைத் தவிர வேறொன்றுமில்லை. 69

**பாட்டம்:**—சிங்கவேஷமும் நானே போட்டுக்கொள்ளுவேன். எல்லோருடைய மனமும் மிகக் களிப்புறும்படி கர்ஜிப்பேன். "இன்னுமொருமுறை கர்ஜிக்க, இன்னுமொருமுறை கர்ஜிக்க" என்று அரசன் சொல்லும்படி கர்ஜிப்பேன்.

**க்வின்ஸ்:**—நீ பயங்கரமாகக் கர்ஜித்தால் அரசி முதலிய உயர்குலமாதர் நடுநடுங்கிக் கதறுவார்கள்; அப்பொழுது நம்மெல்லோரையும் தூக்கிவிடுவார்கள்.

**எல்லோரும்:**—நம்மொருவரையும் விடாது எல்லோரையும் தூக்கிவிடுவார்கள். 79

**பாட்டம்:**—தோழர்களே, நீங்கள் சொல்வது மெய்யே. புத்தி தடுமாறிப்போகும்படி மாதர்களைப் பயமுறுத்தினால் நம்மைத் தூக்கிற்போடுவதன்றி வேறொன்றும் அவருக்குத் தோன்றாது. அப்படியானால், யான் என்குரலை உயர்

---

57-60. திஸ்பியினுடைய தாய்வேஷமுதலியமூன்றும் பின்பு கூத்தில் வருவதில்லை.

த்திப் புறாக்குஞ்சைப்போல் மெதுவாகக் கர்ஜிப்பேன்; இராப்பாடிக்குருவியென எண்ணும்படி கர்ஜிப்பேன்.

க்வின்ஸ்:— பிரமஸ் வேஷமொழிந்த மற்றொன்றும் உனக்குத் தகுந்ததன்று. பிரமஸ் இனிய முகத்தான்; பிறர் காணவிரும்பும் அழகுள்ள குலமகன்போன்றவன். ஆதலின், அவசியமாக நீயே அவ்வேஷம் தரித்துக்கொள்ளல் வேண்டும். 90

பாட்டம்:—நிராதகாரியமாகஇருத்தலால், அப்படியே செய்வேன். ஆனால், வேஷத்தில் என் தாடிக்கு இன்ன சாயம் போட்டுக்கொண்டு வரவேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை.

க்வின்ஸ்:—உன்னிஷ்டம்போற் செய்யலாம்.

பாட்டம்:—தந்தமஞ்சள் நிறமோ, செம்மஞ்சள் நிறமோ, சிவப்பு நிறமோ எனக்குப்பிடித்த யாதேனும் ஒரு நிறத்தையேற்றிக்கொண்டு வருவேன். 98

க்வின்ஸ்:—தோழர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் பாடம்பண்ணிக்கொள்ளவேண்டியவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவற்றைச் செவ்வையாக நாளை இரவிற்குள் பாடஞ்செய்துகொண்டு, பட்டணத்துக்கு ஒருநாழிகை வழித்தூரத்துக்கு அப்பாலிலிருக்கும்அரண்மனைக்காட்டுக்கு வந்துசேரும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்விடத்தில் நம்முடையகூத்தை ஆடிச் சரிபார்த்துக் கொள்ளலாம். பட்டணத்துள் ஓரிடத்துச் சந்தித்தால், அங்கே ஜனங்கள் கூடுவார்கள்; நம்முடைய ஏற்பாடு இன்னதென்றும் பிறருக்குந் தெரிந்துவிடும். எல்லோரையும் இன்னுமொருமுறை கேட்டுக்கொள்ளுகிறேன், நான் சொல்லியபடி தவறாமற் சந்திக்கவேண்டும். 110

பாட்டம்:—அப்படியே நாம் சந்திப்போம்; அவ்விடத்தில் யாருமறியாமலும் தைரியமாயும் நம்முடைய சம்பாஷணைகளைச்சொல்லிச் சரிபார்த்துக்கொள்ளலாம். பிரயா

ஸப்பட்டு எல்லாவற்றையும் செவ்வையாக ஒழுங்குபடுத்திக்கொண்டு எல்லோரும் வரவேண்டும்.

**க்வின்ஸ்:**—அரசனது கருவாலி மரத்தருகிற் சந்திப்போம்.

**பாட்டம்:**—போதும்; ஆறு நூறுனூலும், நூறு ஆறுனூலும் சந்திப்போம். 119

(எல்லோரும் போதல்.)

முதலாவது அங்கம் முற்றிற்று.

## 2-ம் அங்கம்.

### 1-வது இடம்: ஆதேன்ஸ் அருகிலுள்ள காடு.

[எதிரெதிரே ஒருபுறத்திலிருந்து *கந்தர்வப்பெண்ணும் ஒருபுறத்திலிருந்து †பக் என்னும் விகடக்குட்டிப்பேயும் வருதல்.]

**பக்:**—ஏ, மாயாரூபியே! எங்கே சுற்றித்திரிகின்றாய்?

**கந்தர்வப்பெண்:**—குன்றிலும், பள்ளத்திலும், முள்ளிலும், செடியிலும், சிங்காரவனத்திலும், முற்றவெளியிலும், நீரிலும், நெருப்பிலும், எங்குந்திரிந்து சந்திரனிலும் வேகமாய்ச் சுழன்று வருகிறேன்; என் கந்தர்வ அரசிக்குப்

118-119. எது எப்படியிருந்தாலும் சந்திக்கத் தவறேமென்பது பொருள்.

*இங்கிலிஷில் பெயரீஸ்(Fairies)என்று சொல்லப்படுகிறவர்கள், ஆங்கிலேயரின் கட்டுக்கதைக் கொள்கைப்படி, மானிடருக்கு மேலானவர்கள்; மாயாசக்தியை யுடையவர்கள்; மானிடர்க்குப் பெரும்பான்மையும் நன்மை செய்வதன்றித் தீமைபுரிவது அவருடைய குணமன்று. அவர்கள் சிறகுள்ளவர்கள்; கானநாட்டியங்களிற் பிரியமுடையோர். ஹிந்துக்களின் கந்தர்வர்களும் பெரும்பான்மையும் இக்குணமுடையோராதலின், இவ்வொற்றுமைபற்றிப் பெயரீஸ் என்பவர்களைக் கந்தர்வர்கள் என்று இவ்விடத்தில் வியவகரித்திருக்கிறேம்.

†கிராமத்துப் பெண்களைப் பயமுறுத்துவது முதலிய சிறுதீமை செய்வதும், அவர், பாத்திரங்களில் தன்முன் வைக்கும் பாலையுண்டு அவருக்கு உபகாரமாகத் திரிகைதிரித்தல் முதலிய சிறுவேலை செய்துகொடுப்பதும் 'ராபின்' என்ற மறுபெயருள்ள 'பக்' என்னும் விகடக்குட்டிப்பேயின் குணமென்பதும் ஆங்கிலேயரின் கட்டுக்கதைக் கொள்கை.

பணிசெய்து அவள் வட்டமாக நடனமிடும் பசும்புல் நிலத்தைப் பனியால் நனைத்துவருகிறேன். இப்பொழுது நான் பனிநீர்த்துளிகளைத் தேடி, அவற்றைப் புஷ்பஇதழ்களின் நுனியில் நன்முத்துக் குழையென ஊசலாடச்செய்யப் போகவேண்டும். நான் போகின்றேன், ஜடப்பேயே; நம்மரசி தன்பரிவாரங்களுடன் இங்கே விரைவில் வரப்போகிறாள். 11

**பக்:**—நம்மரசர் இங்கு இன்றிரவில் தம் களிக்கூத்தாட வருகிறார். அரசி அவர் கண்ணிற்படாமலிருந்தால் நலமாயிருக்கும்; ஒபரான் அவள்மேற் கோபமுண்டிருக்கிறார். இந்துதேசத்தரசனிடத்திருந்து யாருமறியாமற் கொண்டு வரப்பட்டு இப்பொழுது அவளுடைய பணிவிடையிலிருக்கும் அழகுள்ள சிறுவனை நமது அரசன் தன்பரிவாரத்துள் ஒருவனாகச்செய்துகொள்ளக் கேட்க, அவள் கொடுக்கவில்லை. ஆதலின், இப்பொழுது அவர்கள் சந்தித்தால் அவர்களுக்குள் சண்டையுண்டாகும். 20

**கந்தர்வப்பெண்:**—உன்னுடையாளம் எனக்குச் செவ்வையாகத் தெரியவில்லை. 'நற்றோழன் ராபின்' என்று சொல்லப்பட்ட புரளித்தனமுள்ள குள்ளப்பேய் நீதானோ? கிராமத்துப் பெண்களைப் பயமுறுத்துவதும், அவர் கடையும் தயிரினின்றும் ஆடையை விழுங்குவதும், இராவழிச் செல்வோரை வழிதப்பச்செய்து அவர் படும் சங்கடத்தைக் கண்டு நகைப்பதும் உன்னுடைய தொழிலன்றோ? 27

**பக்:**—நீ சொல்வது மெய்யே; இரவில் அப்படி உற்சாகமாகத் திரிபவன் நானே. ஒபரானிடத்து ஹாஸ்யகாரன் போல் இருந்துவருகிறேன். சிலவேளை பெண்குதிரைபோற் கனைப்பேன்; அப்பொழுது கொள்ளுத்தின்று கொழுத்திருக்கும் அவருடைய குதிரை அக்குரலைக் கேட்டு மயங்கி நாற்புறத்தும் பார்க்கும்; அவர் கண்டு மனங்கொள்ளாது நகைப்பார். ஊர்களிற் சிலவேளை, பிராயஞ்சென்ற கிழவிமார் மிக இரஸமாகக் கதைசொல்லிக்கொண்டிருக்கையில், என்னை முக்காலியென்றெண்ணி அதில் இருக்கத் தொடங்குவார்;

உடனே அம்மம்மவென்று அலறித் திடுமென்று விழுந்து இருமுவார்; அப்பொழுது அங்கிருப்பவர் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாவார். கந்தர்வப்பெண்ணே, தூரத்துப்போ; ஓபரான் இங்கு வருகிறார்.

**கந்தர்வப்பெண்:**—என் தலைவியும் இங்கு வருகிறாள்; ஐயோ! அவள் அரசன்கண்ணிற் படாதிருக்கவேண்டுமே.

[ஒருபுறத்தினின்று ஓபரான் தன்பரிவாரத்தோடும், மற்றைப்புறத்தினின்று டிடேனியா தன்பரிவாரத்தோடும் வருதல்.]

**ஓபரான்:**—செருக்குள்ள டிடேனியா, நாம் இந்நிலவில் எதிர்ப்படல் நன்றன்று.

**டிடேனியா:**—ஆ! அது யார்? பொறாமைநிறைந்த ஓபரானோ? கந்தர்வபெண்காள், இவ்விடம்விட்டுப் போவோம். இவன்கூட்டத்திலேயே இருப்பதில்லையென்று யான் பிரதிக்கினை செய்திருக்கிறேன்.

**ஓபரான்:**—ஓ! நெறியற்றவளே, சற்றுநில். நான் உன் நாயகனன்றோ?

**டிடேனியா:**—அங்ஙனமாயின், யான் உன் நாயகியாக இருக்கவேண்டுமே. நீ, கந்தர்வலோகத்தைவிட்டு, திருட்டுத்தனமாய்க் 'காரின்' என்ற இடையன் வடிவெடுத்து, மகா காமுகியாகிய 'பில்லிடா' என்னும் இடைச்சியைத் தொடர்ந்து அவளுக்கு வைக்கோற் குழலால் பகல்முழுவதும் இனியகீதம் வாசித்துக்கொண்டிருந்ததை யானறியேனோ? நெடுந்தூரத்துள்ள இந்து தேசத்திலிருந்து இங்கெங்கு வந்தாய்? உன் காதலியாகிய 'ஹிப்பாலிடா' என்னும் வன்போர்வீரத் தலைவி 'தீஸியுஸ்ஸோடு' மணம்புரிவதைக் கண்டு களிக்க வந்தாயோ?

---

53-54. 'காரின்' (Corin) 'பில்லிடா' (Phillida) என்பன 'க்ரீக்' 'லத்தீன்' பாஷைகளிலுள்ள பழைய காவியங்களில் இடையன் இடைச்சிகளுக்குச் சாதாரணமாக வழங்கப்படும் பெயர்கள்.

58-64. 'ஓபரான்' 'ஹிப்பாலிடா' வின்மேற் காதல்கொண்டவனென்று டிடேனியாவும், 'டிடேனியா' 'தீஸியுஸ்ஸின்' மேற் காதல்கொண்டவளென்று ஓபரானும் ஒருவர்மேலொருவர் குற்றஞ்சொல்லுகிறார்கள்.

ஒபரான்:—வெட்கமில்லையோ, டிடேனியா? உனக்குத்
'திஸியுஸ்ஸின்' மேலுள்ள காதலை யான் அறியாதவனென்
றெண்ணி 'ஹிப்பாலிடாவுக்கு' என்னிடத்துள்ள மதிப்
பைப்பற்றி இவ்வாறு பேசுவது என்ன துணிவு! 64

டிடேனியா:—பொறாமையால் பொய்க்குற்றமேற்று
கிறாய். சென்ற வஸந்தகாலம் முதல் நாம் சந்திக்குமிடமெ
ல்லாம் என்னோடு கலகஞ்செய்துவருகிறாய்; நமது பாடல்
ஆடல்களில் சந்தோஷத்தைக் குறைத்து விரஸமுண்டாக்
குகிறாய். இப்போராட்டத்தினால், காற்று ஒலிப்பதற்குத்
தக்கபடி நாம் வட்டமாக ஆடிப்பாடுவது இப்பொழுது ஒழி
ந்தது. இதற்குப் பிரதிசெய்யவேண்டி, அக்காற்று கடலி
னின்றும் நஞ்சுள்ள பனிப்படலத்தையுண்டு தரையிற்
பெய்ய, அங்குள்ள ஆறுகளெல்லாம் அகந்தைமிகுந்து
கரைபுரண்டோடி, ஊரை வெள்ளக்காடாக்கின. அதனால்;
எருது நுகத்தை இழுத்தது வீணாயிற்று; உழவர் உழைத்
தது பலியாதுபோயிற்று; பசும்பயிர் கதிர்வாங்காது 76
அழுகிற்று;வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் புலங்களிலுள்ள
ஆடுமாடுகளின் பட்டிகளெல்லாம் வெறும்பட்டிகளாய்
நிற்கின்றன; கோமாரியால் இறந்தவற்றின் பிணவிருந்
துண்டு காக்கைகள் கொழுத்தன; பசும்புற்றரையில் இளை
ஞரின் விளையாட்டுக்கள் ஒழிந்தன; இப்பொழுது மானுஷ
அதிதியர்களுக்குக் காலபேதமேயில்லாது எந்நாளும்
மாரிக்காலம்போல் ஆய்விட்டன. இரவில் பாட்டும் கீதங்
களும் ஒழிந்தன. இன்னும், நம் இப்பிணக்கின்நிமித்தம்,
கடலின் ஏற்றஇறக்கங்களுக்கு அதிகாரியாகிய சந்திரன்,
கோபத்தால் வெளுத்துச் சலதோஷம் இருமல் முதலிய
நோயால் வாயுவை நனைத்து நிறைக்கின்றது. பருவங்கள்
தாறுமாறாக அவ்வவற்றின் இயற்கைகள் மாறிவருகின்றன.
உலகத்தார் இன்னது இன்னபருவமென்று அறியாமல்
திகைக்கிறார்கள். இத்தனை கெடுதிகளும் நம்முடைய பிணக்
கால் விளைந்தன; அவற்றிற்குப் பிறப்பிடம் நாமே. 91

---

65-91. கந்தர்வ அரசன் அரசிகளுக்குள் உண்டான பிணக்கால் கால வ்யபரீதங்கள் முதலியன நேர்ந்தனவென்று சொல்லியிருப்பது வேடிக்கைச் சாதுரியம்.

**ஓபரான்:**—இக்கெடுதிகளை மாற்ற எண்ணங்கொண்டிருப்பாயாயின் அதற்கு மருந்து உன்னிடத்திலேயே உள்ளது. டிடேனியா ஓபரானோடு ஏன் எதிர்த்து நிற்கிறாள்? நான் உன்னிடத்து வேண்டுவது 'குழந்தைக்குக் குழந்தையாக மாற்றிக் கொண்டுவரப்பட்டிருக்கிற சிறுவனை என் வசம் விட்டுவிடு' என்பதுதானே.

**டிடேனியா:**—அதைப்பற்றிய கவலையை ஒழித்துவிடு. இக்கந்தர்வலோகத்தையே கொடுத்தாலும் அக்குழந்தையைக் கொடேன். என்னை ஆராதித்துவந்த அவன்தாய் அவனைப்பெற்று இறந்ததால், அவளுக்காக நான் அவனை வளர்த்து வருகிறேன்; அவள் பொருட்டேனும் யான் ஒரு நாளும் அவனைவிட்டுப் பிரியேன். 103

**ஓபரான்:**—நீ இன்னும் எதுவரையில் இக்காட்டிலிருப்பாய்?

**டிடேனியா:**—ஒருவேளை திஸியுஸ்ஸின் கலியாணம் முடியும் வரையில். இந்நிலவில் என்னோடு ஆடிக்களிக்க விருப்பமிருக்குமாயின் என்னுடன் வரலாம்; அன்றெனின், என்னை விலக்கிவிடு; நீ இருக்குமிடத்தை இனி ஒருபொழுதும் நண்ணேன்.

**ஓபரான்.**—அச்சிறுவனைக் கொடு, உன்னோடு வருவேன்.

**டிடேனியா:**—உன் கந்தர்வ இராஜ்யத்தைக் கொடுத்தாலுமில்லை. கந்தர்வப்பெண்காள், இவ்விடம்விட்டுப் போவோம். நான் இங்கு இனி நொடிப்பொழுதிருப்பினும் எங்களுக்குள் போருண்டாம். 116

(டிடேனியா பரிவாரங்களோடு போதல்.)

---

94. முன்னிலையும் தன்மையும் படர்க்கையாகக் கூறப்பட்டன.

95-96. நல்ல அழகுள்ள குழந்தைகளைத் திருடிக்கொண்டு அழகில்லாதனவும் அங்கஹீனமுள்ளனவுமான குழந்தைகளை அவற்றிற்குப் பிரதியாக வைத்துப்போவது இக்கந்தர்வர்களுக்கு வழக்கம்.

**ஓபரான்:**—நல்லது, போ; இவ்விணங்காமைக்கு நீ இச்சோலையை விட்டுப் போகுமுன் உன்னைத் தண்டியாநிரேன். என் சாதுப் பக்கே, இங்குவா; ஒருகாலத்து, நான் கடலையடுத்த ஓர் கோடிக்கரையில் இருக்கும்பொழுது, அங்கு ஒரு நீராமகள் பாடிய இன்னிசைக்குக் கடலும் மரியாதை காட்டித் தன்னோசையடங்கியதும், அவ்விசை கேட்க, சில நக்ஷத்திரங்கள் வானத்தினின்றும் உதிர்ந்து தலைவிரிகோலமாய் ஓடிவந்ததும் உன் ஞாபகத்திருக்குமே.

**பக்:**—ஆம், என் ஞாபகத்திருக்கின்றன.

**ஓபரான்:**— அதேகாலத்தில்—நீ பார்த்திருக்கமாட்டாய்—பூமிக்கும் சந்திரனுக்குமிடையே ஆகாயமார்க்கத்தில் மன்மதன் ஆயுதபாணியாய்ப் பறந்துசென்றதைக் கண்டேன். அவன், குடதிசையில் அரசாட்சிசெய்து வரும் அழகுள்ள ஒரு கன்னியை இலக்குவைத்து, எத்தனையோ ஆயிரம் பேர்களின் இருதயத்தைத் துளைப்பதாகிய ஒரு நேசச்சுடுகணையைத் தன்வில்லினின்றும் விடுத்தான். அவ்வரசி கற்பினுக்குமரசியாதலின், அக்கணை அவளிடத்துச் செல்லவலியின்றி வேறோரிடத்து விழுந்தது. அவளும் தூயமனத்தினளாய்த் தன்கன்னித்தன்மை கலங்குறாது நின்றாள். அப்பொழுது அக்கணை விழுந்தவிடத்தைக் குறிப்பாய்ப் பார்த்தேன்; மேற்றிசையிலுள்ள ஒரு சிறு புஷ்பத்தின்மீது வீழ்ந்தது; பால்போல் வெளுத்திருந்த அப்புஷ்பம் புண்பட்டுச் செந்நிறமாயிற்று; கன்னியர்கள் அதனை 'மனோரஞ்சிதமலர்' என்பார்கள். அதை நான்

---

121. நீராமகள் தன்இனிய கீதத்தால் மனிதர்களை மயக்கி நாசமுறச்செய்தல் வழக்கமென்பது ஆங்கிலேயருள் சாதாரணஜனங்களின் கொள்கையென்பார் சிலர்.

129-135. இவ்வாக்கியம், இந்நாடக கவியின் காலத்து இங்கிலாண்டில் அரசுசெலுத்திவந்த 'எலிஜபெத்' (Elizebeth) என்னும் கன்னிப் பெண்ணரசியின் கற்பைப் புகழ்ந்து உரைத்ததென்றுணர்க.

140. 'மனோரஞ்சிதம்' என்ற பெயரால் இந்நாட்டில் விளங்கும் புஷ்பம் மஞ்சள் நிறமுடையது; பலவித வாஸனையுமுடையது.

உனக்கு ஒருகாலத்துக் காட்டியிருக்கிறேன். அதின் இரசத்தை உறங்குபவர்கள் கண்ணில் தடவ, அவர் உறக்கம் நீங்கி எந்தப் பிராணியின்முகத்தில் விழிக்கிறார்களோ, அந்தப்பிராணியின்மேல் காமப்பித்துக்கொண்டவராவர். இப்புஷ்பத்தை விரைவிற் கொண்டுவா. திமிங்கிலம் கடலில் மூன்று நாழிகை வழித்தூரம் நீந்துவதற்குள் வரவேண்டும். 147

பக்:—நான் இரண்டு நாழிகையில் பூமியை ஓர் பிரதக்ஷிணஞ்செய்து வருவேன். (பக்-போதல்.)

ஓபரான்:—இந்த இரசத்தைப் பெற்று, டிடேனியா உறங்கும் சமயம் பார்த்து அவள் கண்களிற் பிழிவேன். அவள் உறக்கமுணர்ந்து காணும் பொருள் சிங்கமோ, கரடியோ, ஓநாயோ, ரிஷபமோ, குரங்கோ, வாலில்லாவானரமோ எதுவாயிருப்பினும் அவள் அதன்மேல் ஆசைகொண்டலையக்கடவள். அவளிடத்துள்ள சிறுவனை என் வசப்படுத்தினலன்றி இதற்கு மாற்றை உபயோகியேன். இங்கு யாரோ வருகிறார்கள், யான் அரூபியாயிருந்து அவர்கள் பேசுவதைக் கேட்பேன். 158

[டெமிட்ரியஸ்ஸும் அவனைத்தொடர்ந்து ஹெலனவும் வருதல்.]

டெமிட்ரியஸ்:—நான் உன்னை நேசிக்கவில்லை, நீ என்னைத் தொடராதே. சிருள்ள ஹெர்மியா எங்கே? லைஸாண்டர் எங்கே? அவள் என்னைக் கொல்லுகிறாள்; நான் அவனைக் கொல்வேன். அவர்கள் இக்காட்டுக்கு ஓடிவந்தார்கள் என்றாயே; இங்கு என் ஹெர்மியாவைக் காணமல் பைத்தியங்கொண்டேனே! நீ என்னைவிட்டுத் தொலைந்துபோவாயாக. இனி என்னருகில் வாராதே.

ஹெலனா:— ஏ, வன்னெஞ்சுள்ள காந்தக்கல்லே, நீ இரும்பை இழுக்கவில்லை; ஏனெனின் என் மனம் உருக்

161. ஹெர்மியா, தன்னிடத்து அன்பைச்செலுத்தாமையால் 'கொல்லுகிறாள்' என்றான்.

167-168. நீ என் மனத்தை இழுக்கின்றாயெனினும், அது இரும்பைப்போற் கடுமையுள்ளதன்று, உருக்கைப்போல் உன்னிடத்தே உறுதியோடிருப்பதென்பது பொருள்.

கைப்போல் உறுதியையுடையது. நீ இழுக்கும் வன்மையை ஒழிவாயாயின், யான் உன்னைத் தொடரும் வன்மையை ஒழிவேன். 170

**டெமிட்ரியஸ்:**—உன்னை வசப்படுத்த முயலுகிறேனோ? உன்னை இனியவள் என்கின்றேனோ? உன்மேல் மனமில்லையென்றும், உன்னை நேசிக்க என்னாலாகாதென்றும் உன்னிடத்து யான் வெளிப்படையாகச் சொல்லவில்லையோ?

**ஹெலனா:**—அதற்காகவே உன்னை நான் அதிகமாக நேசிக்கின்றேன். டெமிட்ரியஸ், நான் உன்னுடைய நாய்; அடிக்க அடிக்க அதிக நேசம் பாராட்டுவேன். என்னை நீ உன் நாய்க்குட்டிபோல் நடத்து, இட்டு, அடி, அசட்டை பண்ணு, துரத்து; உன்னைத் தொடர்ந்துவரும்படி மாத்திரம் எனக்கு அநுமதிகொடு; அதுபோதும். நாயினும் கடையான பதவி உன்பால் எனக்குண்டெனின் அதுவும் எனக்குப் பெரும் பதவியேயாம். 182

**டெமிட்ரியஸ்:**—ஏன் என் எரிச்சலை மூட்டுகிறாய்? உன்னைப் பார்க்கும்பொழுது எனக்கு நோயுண்டாகிறது.

**ஹெலனா:**—உன்னைப் பாராதபொழுது எனக்கு நோயுண்டாகிறது.

**டெமிட்ரியஸ்:**—உன் அடக்கத்திற்கு இது பெருங்குறைவன்றோ? ஊரைவிட்டு, இருட்டுவேளையில், தனியிடத்தில், தன்மேல் நேசமில்லாதவனை நம்பிக் கற்புள்ள கன்னியர் வரலாமோ? 190

**ஹெலனா:**—உன் நற்குணமே எனக்குப் பெருங்காப்பு; உன் முகத்தைப் பார்க்கும்பொழுது எனக்கு இருட்டுண்டோ? நீயே எனக்கு எல்லாப் பொருளாயுமிருக்கும்பொழுது இக்காட்டில் உலகமெல்லாம் என்னுடன் உளவன்றோ? உலகுளோர் யாவரும் இங்கிருந்து என்னைப் பார்க்கையில் என்னைத் தனியேயிருப்பவள் என்னலாமோ?

**டெமிட்ரியஸ்:—** உன்னைத் துஷ்டமிருகங்களுடைய வசமாக்கி நான் ஓடிக் காட்டில் மறைந்துவிடுவேன். 198

**ஹெலனு:—** கொடியமிருகத்துக்கும் உன்னவ்வளவு நெஞ்சழுத்தமிராது. நீ அப்படி ஓடுவாயானல், பண்டை வழக்கம் தலைகீழாகக் கொடியபுலியைப் பிடிக்கச் சாதுப் பெண்மான் அதன்பின் செல்வது போலாம். மனவலியுள்ள ஓராண்மகன் ஓட அவனைத்தொடர்ந்து ஒரு பேதைப் பெண்மகள் ஓடும் ஓட்டம் வீணோட்டமன்றோ?

**டெமிட்ரியஸ்:—** உன் பேச்சைக் கேட்டுக்கொண்டு இங்கு நில்லேன். நான் போகிறேன்; என்பின் தொடர்வை யாயின் இக்காட்டில் உனக்கு நான் தீங்கொன்றுஞ் செய் யேனென்றெண்ணுதே. 208

**ஹெலனு:—** ஊருக்கு உள்ளிலும், வெளியிலும், சோ யிலிலும், எங்குமே நீ எனக்குத் தீங்கிழைக்கின்றாய். நீ என்னிடத்துக் கொடுமை காட்டிப் பெண்பாலாரெல்லோர் க்கும் தீங்கு செய்கின்றாய். (டெமிட்ரியஸ் போதல்.) உன்னைத் தொடர்ந்து செல்வேன். நான் நேசிக்கும் உன் கரங்களிற் கிடந்து என்னுயிரை விடுவதால் என் நரகானு பவத்தைச் சுவர்க்கானுபவமாக்கிக்கொள்வேன். 215

(ஹெலனு போதல்.)

**ஓபரான்:—** ஏ, வனதேவதையே, உனக்கு நன்மையு ண்டாவதாக. அவன் இச்சோலையைவிட்டுப் போகுமுன் நீ ஓட்டங்காட்டவும் அவன் உன் நேசத்தை நாடி உன்பின் அலையவுஞ்செய்வேன்.

[பக் திரும்பிவருதல்.]

ஏ, ஓடித்திரிவோனே, உன்வரவு நல்வரவாக; புஷ்பத்தைக் கொண்டுவந்தாயோ?

**பக்:—** கொண்டுவந்தேன்; இதோ இருக்கிறது.

**ஓபரான்:—** என்னிடத்திற் கொடு. சோலையின் இடை யேயுள்ள புஷ்பவிதானம் பெற்ற மேடையொன்றறிவேன். அதன்மேல் புஷ்பசயனத்தில் டிடேனியா இரவிற் 225

சிலவேளை, பரிவாரங்கள் ஆடிப்பாடித்தாலாட்டப்பெற்று உறங்குவாள்; அப்பொழுது அவள் கண்களில் இப்புஷ்பரசத்தைத் தடவி எண்ணுதனவெல்லாம் எண்ணும்படி அவளை மயக்கங்கொள்ளச் செய்வேன். மற்றும் ஒன்று உளது: ஆதென்ஸ் நகரத்தாளாகிய ஒரு குலமாது தன்னைவெறுக்கும் ஓர் இளைஞன்மேல் ஆசைகொண்டிருக்கிறாள். ஆதலின், நீ இவற்றிற் சில புஷ்பங்களைக் கொண்டுபோய் இக்காட்டில் அவர்களைத் தேடி, அவ்விளைஞனைக் கண்டு, அவன் கண்களில் இப்புஷ்பரசத்தைப் பிழிந்து, அவன் உறக்கமுணர்கையில் அவள் முகத்தில் விழிக்கும்படிக்கும், அப்படி விழிக்கும்பொழுது அவளுக்கு அவன்மேலுள்ள காதலைக்காட்டிலும் அவனுக்கு அவள்மேல் அதிக விருப்பம் உண்டாகும்படிக்கும் செய்யவேண்டும். உடையால், அவ்வாதென்ஸ் நகரத்தோனை நீ அடையாளங்கண்டுகொள்வாய். இதைச் செய்து, முதற்கோழி கூவுமுன் இவ்விடம் வந்து சேர்.

பக்:—யோசிக்கவேண்டுவதில்லை, என்னாண்டவனே; இவ்விடத்து ஊழியன் அப்படியே செய்துவருவேன். 243

(ஓபரானும் பக்கும் போதல்.)

௩-ம் இடம். காட்டின் வேறொருபாகம்.

[டிடேனியா தன்பரிவாரத்தோடு வருதல்.]

டிடேனியா:—வாருங்கள், கந்தர்வப்பெண்காள்; வளைந்து குதித்துப்பாடுங்கள். சிலர் கஸ்தூரி 'ரோஜா' அரும்பிலுள்ள புழுவைப் போக்குங்கள்; சிலர் வௌவாலை ஓட்டுங்கள்; சிலர் கத்தும் ஆந்தையைத் துரத்துங்கள். எனக்கு உறக்கம் வரும்படி இனிய கானஞ்செய்யுங்கள். நான் படுத்துக்கொள்ளுகிறேன்; நீங்கள் உங்கள் காரியத்தைப் பார்க்கலாம். 7

### கந்தர்விகள் பாடுகிறார்கள்.

1. புள்ளிகளும் நாப்பிளவும் பொருந்துமரவே நீண்ட
முள்ளிசையும் பன்றியே மூலையிலே மறையீரோ.

2. பல்லியே விரியனே பாதகங்கள் செய்யாமல்
மெல்லியலெம் மரசிபால் மேவாது போவீரே.

3. இரவுபா டெங்குருகே யின்பாகப் பண்பாடிச்
சரசமாய்த் தாலேலோ தாலேலோ வென்றாயோ.

4. மந்திரமும் தந்திரமும் வசியமுந்நீங் கும்புரியா
தெந்தலைவி குணவதிமுன் னேகாது போவீரே.

5. நூனூற்குஞ் சிலம்பியே நூலிங்கு நூலாதே
நீநீள முறுகாலை நீட்டியினி நடப்பாயே. 17

6. பாடவரும் வண்டேயிப் பாலெங்குஞ் சாராதே
கீடமே நத்தினமே கேடொன்றுஞ் செய்யாதீர்.

7. பாலேவந் திசையிரவிற் பாடுமொரு குருகேநீ
தாலேலோ தாலேலோ தாலேலோ வென்றிசையே.

**ஒரு கந்தர்வப் பெண்:**—இப்பொழுது எல்லாம் ஒழுங் காயின; இனிப் போகலாம். ஒருத்திமாத்திரம் தூரத்துக் காவலாயிருத்தல் வேண்டும். (கந்தர்வப்பெண்கள் போதல்; டிடேனியா உறங்குதல்.) 24

[ஓபரான் வந்து புஷ்பத்தின் இரசத்தை டிடேனியாவின் கண்ணிமையிற் பிழிதல்.]

**ஓபரான்:**—நீ உறக்கமுணர்ந்து காணுவதை உன் மெய்க்காதலனெனக் கருதி மேன்மேலுண்டாகுமாசையால் மெலிந்து தவிப்பாயாக. சிறுத்தையோ, காட்டுப்பூனையோ, கரடியோ, சிவிங்கியோ, முள்ளம்பன்றியோ, நீ உறக்கம் விழித்துக் காணும் பொருள் எதுவோ அது உன்னாசைக் குரிய பொருளாகுக. ஏதேனும் இழிவானதொன்று உன் னருகிருக்கும்பொழுது நீ விழிப்பாயாக. (ஓபரான் போதல்.)

[லைஸாண்டரும் ஹெர்மியாவும் வருதல்.]

**லைஸாண்டர்:**—என் நேசமே, இக்காட்டில் அலைந்து தளர்ந்தாய்; யானும் வழிமறந்தேன். நீ நன்றெனக் கருது

வையாயின் விடியும்வரையில் இங்கிருந்து இளைப்பாறுவோம். 35

ஹெர்மியா:—அப்படியே செய்வோம், லைஸாண்டரே; நீ உறங்குவதற்கு ஓரிடம் பார்த்துக்கொள். நான் இம் மேடையில் தலைவைத்துப் படுப்பேன்.

லைஸாண்டர்:—நாம் இரண்டு உடம்பினராயினும் ஒரு மனப்பட்டவரன்றோ?

ஹெர்மியா:—உண்மையே; ஆயினும், என்னை வேண்டி வேறிடந்தேடித் தூரத்தே படுத்துறங்குவாயாக. அதுவே உலக மரியாதை; கன்னியரின் கற்புக்கும், கலியாணமாகாத ஆடவரின் நியமத்துக்கும் அதுவே தக்கது. என் இனிய தோழனே, உனக்கு என்மேலுள்ள அன்பு உன் இன்னுயிருள்ள அளவும் மாறாத அன்பாவதாக. 46

லைஸாண்டர்:—அப்படியே ஆகுக. என் அன்பு மாறுநாள் என் வாழ்நாள் முடியுநாளே. இதோ இருக்கின்றது என் படுக்கை. உறக்கம் உனக்கு எல்லா ஆறுதலையுங் கொடுப்பதாக.

ஹெர்மியா:— அவ்வாறன்று; எனக்குப் பாதி ஆறுதல் உன்னிடத்திருந்து. (அவர்கள் உறங்குதல்.) 52

[பக்-வருதல்]

பக்:—இக்காட்டில் எங்கும் அலைந்துதேடியும் ஆதென்ஸ் நகரத்தோனைக் காணேனே. அவன் கண்ணில் இப்புஷ்ப ரசத்தைப் பிழிந்து அவனை நேசங்கொள்ளச்செய்யவேண்டுமே. இதுவோ அரவமடங்கிய இரவாயிருக்கின்றது. இங்கிருப்பவன் யார்? இவ்வுடை ஆதென்ஸ் நகரத்தோன் உடையே; ஒரு மாதின்மேல் வெறுப்புடையனென என்னிறைவன் கூறியவன் இவனே. இவன் நேசமின்றி வெறுத்தலால் இவனருகிருக்கத் துணியாது, அம்மாது, ஐயோ, பாவம்! இதோ தூரத்துக் கசுமலமான ஈரத்தரையில் அயர்ந்து உறங்குகின்றாள். ஏ ஏ, மரியாதையற்றவனே, இப்

புஷ்பரசத்தால் உன் கண்ணை மயக்குவேன். நீ விழித்து ஆசைநிறைந்து உறக்கமொழிந்தவனாகவே ஆவாய். நான் இவ்விடம்விட்டகன்றபின் விழிப்பாயாக. (பக் போதல்.) 65

[டெமிட்ரியஸ்ஸும் ஹெலனாவும் வருதல்.]

**ஹெலனா:**—நீ என்னைக் கொல்லினும் கொல்லுக; இனிய டெமிட்ரியஸ்ஸே, சற்று நில்.

**டெமிட்ரியஸ்:**—என்னை நீ இவ்வாறு பேய்போல் தொடராதே.

**ஹெலனா:**—என்னை நீ இவ்விருளில் விட்டு ஏகுவையோ? அப்படிச் செய்யாதே.

**டெமிட்ரியஸ்:**—எடுத்து அடி வைப்பாயாயின் செத்தாய். நான் தனியே போகின்றேன். (டெமிட்ரியஸ் போதல்.) 73

**ஹெலனா:**—இவ்விவேகமில்லா ஓட்டத்தில் எனக்கு மூச்சு முட்டிப்போகின்றது. யான் துதிக்கத்துதிக்க அவனுக்கு என்னிடத்து அன்பு குறைகின்றது. ஹெர்மியாவே பாக்கியவதி; அவளே ரூபவதி; அவள் கண்களே ஆகர்ஷிக்குங்கண்கள்; நான் கரடிபோற் குரூபி; என்னைக் கண்டு மிருகங்களும் வெருண்டோடுகின்றன. ஆதலின், டெமிட்ரியஸ்ஸுக்கு என்னைக் காணப் பிடிக்காதது ஆச்சரியமன்று. என் பொல்லாக்கண்ணாடி, யானும் ஹெர்மியாவைப்போல் திவ்விய நேத்திரமுள்ளவளென்று எண்ணும்படி செய்ததே. இங்குப் படுத்திருப்பவன் யார்? ஆ! லைஸாண்டர்! தரையிற் கிடக்கிறான்! இறந்தவனோ? உறங்குபவனோ? புண்ணில்லை; இரத்தத்தையும் காணேன். என் ஐய, லைஸாண்டரே, உயிரோடிருப்பீராயின் எழுந்திரும். 86

---

81-82. கண்ணாடியில் தன்னுருவத்தைக் கண்டபொழுது தானும் ஹெர்மியாவைப்போல் அழகுள்ளவளென்று எண்ணியிருந்த ஹெலனா, டெமிட்ரியஸ் அவளை விரும்பித் தன்னைவெறுத்தலால் தன் கண்ணாடி தன்னை அழகுள்ளவளாகக்காட்டி வஞ்சித்ததென்று அதை வெறுத்துக் கூறினாள்.

லைஸாண்டர்:— (கண்விழித்து) ஹெலனு, உன் இன்னுருவத்திற்காகத் தீயிலேனும் குதிப்பேன். டெமிட்ரியஸ் எங்கே? அத்துஷ்டனை என்கத்திக்கு இரையாக்குவேன்.

ஹெலனு:—அப்படிச்சொல்லற்க; லைஸாண்டரோ, அப்படிச்சொல்லற்க. அவன் உம்முடைய ஹெர்ம்யாவை நேசித்தால் என்ன? ஹெர்ம்யாவுக்கு உம்மிடத்துப் பூரண அன்புள்ளவரையில் நீர் திருப்தியாயிருமே. 93

லைஸாண்டர்:— ஹெர்ம்யாவைக்கொண்டு திருப்தியடையவோ? அவளோடு வீண்காலம் போக்கினதற்கு மனம் வருந்துகின்றேன். என் நேசத்திற்கு உரியவள் ஹெலனுவே; ஹெர்ம்யா அல்லள்; அண்டங்காக்கைக்குப் பிரதியாகக் கபோதத்தைப் பெற உடன்படாதவனுமுண்டோ? ஒருவனது விருப்பம் அவன் விவேகத்தால் ஆளப்படல் வேண்டும்; நீயே தக்கமாதென்று என் விவேகம் சொல்லுகின்றது. எதுவும் பருவத்தாலன்றிப் பழுக்குமோ? யான் இதுவரையில் இளைஞனயிருந்து இப்பொழுதுதான் அறிவுள்ளவனானேன். உன் அழகான கண்களில் அன்பு திரண்டு நிற்பதைக் காண்கிறேன். 104

ஹெலனு:—இப்பழிப்புக்கோ யான் பாவி பிறந்தேன்; நீ இவ்வாறு இகழ்வதற்கு யான் பாத்திரமானது எப்பொழுதோ? டெமிட்ரியஸ்ஸின் அன்புகூர்ந்த பார்வைக்கு உரியளல்லாதிருத்தல் போதாதோ? என் அழகின்மையைக் கண்டு நீயும் பழிக்கவேண்டுமோ? இங்ஙனம் பழிப்பாக நேசங்காட்டிப் பெருந்தவறிழைக்கின்றாய். உன்னை நான் நன்னெறியுள்ள குலமகனென்று எண்ணியிருந்தேன். ஆ! தெய்வமே! ஒருவன் உதாசீனஞ்செய்ததற்காக மற்றொருவன் ஒரு குலமகளைப் பழிப்பதும் ஆண்மையோ? 113

(ஹெலனு-போதல்.)

லைஸாண்டர்:—அவள் ஹெர்ம்யாவைக் காணவில்லையென்றெண்ணுகிறேன். ஹெர்ம்யா, நீ அவ்விடத்துறங்கு. இனி லைஸாண்டர் அருகில் வரமாட்டாய். மிகத் தித்தி

க்கும் பண்டம் தெவிட்டிக் குமட்டுவதுபோல் நீ எனக்கு மிக்க வெறுப்புள்ளவளானாய். என் எல்லா வன்மையையும் இனி ஹெலனாவை உபசரித்து அவட்கு ஊழியஞ்செய்வதிற் செலுத்துவேன். (லைஸாண்டர் போதல்.) 120

**ஹெர்மியா:**—(கண்விழித்து) லைஸாண்டர், உன் தஞ்சம்; உன் தஞ்சம்; உன்னாலியன்றதைச் செய்ய ஓடிவா. இவ்வூரும்பாம்பை என்மார்பினின்றும் பிடுங்கியெறி. ஆ! ஆ! ஐயோ! என்னகனவு! லைஸாண்டரே, பயத்தால் என் உடம்பு நடுநடுங்குவதைப்பார். ஒரு பாம்பு என் மார்பைக் கடித்துத் தின்னவும், அக்கொடுமையை நீ புன்சிரிப்போடு பார்த்துக்கொண்டிருக்கவும் கனவுகண்டேன். லைஸாண்டர்! என்ன? போய்விட்டானே? லைஸாண்டர்! என்நாதா! கேட்காததூரத்து ஏகினானே? சத்தமில்லையே; வார்த்தையில்லையே! ஐயோ! எங்கேயிருக்கின்றாய்? கேட்பாயாயின் பேசு. பயத்தால் மூர்ச்சையடைகின்றேன். நீ அருகிலில்லையென்றெண்ணுகிறேன். உன்னை இப்பொழுதே தேடிக்காண்பேன்; அன்றெனின் இறப்பேன். (ஹெர்மியா போதல்.) 133

**இரண்டாம் அங்கம் முற்றிற்று.**

## 3-ம் அங்கம்.

**1-வது இடம்:—காடு; டிடேனியா உறங்கிக்கொண்டிருக்குமிடம்.**

[க்வின்ஸ், ஸ்நக், பாட்டம், ப்ளூட், ஸ்னௌட், ஸ்டார்வெலிங் வருதல்.]

**பாட்டம்:**—எல்லோரும் வந்துசேர்ந்தார்களா?

**க்வின்ஸ்:**—சரியாக வந்துவிட்டார்கள். நாம் சரிபார்த்துக்கொள்ளுதற்கு மிகவும் ஸௌகரியமான இடம் இங்கு இருக்கின்றது. இப்பசும்புற்றரைதான் நமது அரங்கம்; இச்செடிக்கூட்டம் நமது அணியறை; அரசன்முன் ஆடுவதுபோல், நாம் அபிநயத்துடன் ஒருமுறை ஆடிப்பார்த்துக் கொள்வோம்.

**பாட்டம்:**—க்வின்ஸ்,—

க்வின்ஸ்:—வாயாடி, பாட்டம், என்ன சொல்லுகிறாய்?

பாட்டம்:—இந்தப் பிரமஸ்திஸ்பி கூத்தில் இரஸியாத பாகங்கள் சில உள்ளன: முதலாவது, பிரமஸ் தன்வாளை உருவித் தற்கொலைசெய்துகொள்ளவேண்டுமே. அது பார்க்கும் குலமாதர்க்கு இனியாதே. இதற்கு என்ன பரிகாரம் சொல்லுகிறாய்?

ஸ்நௌட்:—சத்தியமாகச் சொல்லுகிறேன்; இது மிகவும் பயங்கரமானதுதான்.

ஸ்டார்வெலிங்:—எல்லாம் ஆனபின்பு இந்தக் கொலைப் பாகத்தைமாத்திரம் விட்டுவிடல்வேண்டுமென்பது எனது அபிப்பிராயம். 19

பாட்டம்:—சிறிதும் கூடாது; எல்லாவற்றையும் ஸரிப்படுத்தும் உபாயமிருக்கின்றது. இதற்காக ஒரு முன்னுரையெழுதி, நாம் வாளால் ஒரு தீங்கும் செய்வதில்லையென்றும், பிரமஸ்ஸாகிய நான் சேணியப் பாட்டமேயன்றிப் பிரமஸ் அல்லேனென்றும் அதன்முகமாகத் தெரிவித்தால் அவர்களுக்குப் பயம் தீர்ந்துபோம்.

க்வின்ஸ்:—அப்படியே அதை எண்சீரும் அறுசீரும் கலந்த பாடல்களால் எழுதிவிடுவோம்.

பாட்டம்:—அது வேண்டுவதில்லை; இன்னும் இரண்டு சீரையும் சேர்த்துக்கொண்டு எண்சீர் எண்சீராகவே எழுதிவிடவேண்டும். 30

ஸ்நௌட்:—மாதர்கள் சிங்கத்தைக் கண்டு பயப்படார்களோ?

---

21. கூத்துத் தொடங்குமுன் அவையடக்கமாக அரங்கத்துள்ளோரை நோக்கிச் சொல்லப்படுவது முன்னுரை; கூத்தின் முடிவில், அக்கூத்திலுண்டான குறைகளைப் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டுகோளாகச் சொல்லப்படுவது பின்னுரை. (ஐந்தாம் அங்கத்தில் இவற்றைக் காண்க.)

**ஸ்டார்வேலிங்:—** பயப்படுவார்களென்றே எனக்குத் தோன்றுகிறது.

**பாட்டம்:—** தலைவர்களே, மாதர்கள்முன்னிலையில் சிங்கத்தைக் கொண்டுவருவதைப்பற்றி நீங்கள் செவ்வையாக யோசிக்கவேண்டும்; அது மிகவும் பயங்கரமானது. சிங்கத்தைப்போற் பயங்கரமான காட்டுப்பக்ஷியே இல்லை. ஆதலால் நாம் அதற்குத் தக்க ஜாக்கிரதை செய்யவேண்டும்.

**ஸ்நௌட்:—** இன்னுமொரு முன்னுரையெழுதி, அதில் அவன் சிங்கமல்லனென்று சொல்லிவிடவேண்டும். 41

**பாட்டம்:—** அஃதன்றி அவன் பெயரையும் சொல்லவேண்டும். அவனுடைய பாதிமுகம் சிங்கத்தின் கழுத்தின் வழியாக வெளியில் தெரியவேண்டும்; அவன் அதின்வழியாக அடியில் வருமாறு பேசவும் வேண்டும்: "மாதர்களே" அல்லது "சிறுள்ள மாதர்களே, நான் விரும்புகிறேன்", அல்லது "நான் வேண்டுகிறேன்" அல்லது "நான் பிரார்த்திக்கிறேன்; நீங்கள் பயப்படவேண்டுவதில்லை; நடுங்கவேண்டுவதில்லை; உங்களுக்காக என் உயிரைக்கொடுப்பேன். என்னைச் சிங்கமென நினைப்பிராயின் அது எனக்குப் பெருந்துக்கமாயிருக்கும். நான் சிங்கமல்லேன்; மற்றவரைப்போல் யானும் ஒரு மனிதனே." அவ்விடத்தில் அவன் தன்பெயரையும் சொல்லிக்கொள்ளவேண்டும். தான் மூட்டுவேலைக்கார ஸ்நக் என்று அவர்களுக்கு வெளிப்படையாக அறிவிக்கவும்வேண்டும். 55

---

38. பாட்டம், சிங்கம் இன்னதென்று அறியாமலோ, அதை அறிந்து அதற்குத் தக்கசொல் இன்னதென்று தெரியாமலோ, சிங்கத்தைக் காட்டுப்பக்ஷியென்கிறான்.

43. 'எலிஜபெத்' என்னும் அரசிமுன் ஆடப்பட்ட ஒரு நாடகத்தில் பெருங்குரலுடைய ஒரு வேஷக்காரன் தனக்கு அவ்வேஷத்துக்குரிய இனிய குரலில்லாமையால் அவ்வேஷத்தைக்கலைத்துக்கொண்டு தன்னுருவத்தைக் காட்டித் தன்னை மன்னிக்கவேண்டுமென்றான். அதைக்கண்டு அரசி,எல்லாம் ஒழுங்காக நடந்தால் எவ்வளவு சந்தோஷத்தை அடைவாளோ அதிலும் அதிக சந்தோஷத்தை அடைந்தாள். இதை மனத்திலெண்ணிக்கொண்டு இக்கவி அடியில் வருமாறு எழுதினார்போலும்.

க்வின்ஸ்:—நன்று; அப்படியே செய்வோம். இன்னும் இரண்டு கஷ்டமான காரியங்கள் உள்ளன: நாம் ஆடும் அறைக்குள் நிலவைக் கொண்டுவரவேண்டுமே; பிரமஸ்ஸும் திஸ்பியும் நிலவிலன்றோ சந்திக்கிறார்கள்.

ஸ்நௌட்:—நமது கூத்து நடக்கும் இரவில் நிலவுண்டோ?

பாட்டம்:—பஞ்சாங்கம், பஞ்சாங்கம்! அன்று நிலவுண்டோ? பஞ்சாங்கத்தைப்பார்.

க்வின்ஸ்:—ஆம் உண்டு.

பாட்டம்:—அப்படியானால், நாம் கூத்தாடும் அறையினது சாளரத்தின் ஓர் கதவைத் திறந்துவைப்போம்; அதன் வழியே நிலவு வரும்.

க்வின்ஸ்:—அப்படிச்செய்யலாம்; அன்றெனின், ஒருவன் ஒரு கட்டுச்சுள்ளியுங் கையுமாய் ஒரு 'லாந்தரை'ப் பிடித்துக்கொண்டு 'நான்தான் சந்திரன்' என்று சொல்லிக்கொண்டு வரவேண்டும். வேறொன்று இருக்கிறது. நாம் ஆடும் அறைக்குள் ஒரு சுவர் வேண்டுமே. அதிலுள்ள துவாரத்தின் வழியாகவன்றோ பிரமஸ்ஸும் திஸ்பியும் பேசிக்கொள்ளுகிறார்களென்று கதையிற் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்நௌட்:—சுவரைக் கொண்டுவரமுடியாது. பாட்டம், என்ன சொல்லுகிறாய்?

பாட்டம்:—யாரேனுமொருவன் சுவர்வேஷம் போட்டுக்கொள்ளவேண்டும்; சுண்ணாம்பையோ, மண்ணும் மணலுங் கலந்த சாந்தையோ மேலேபூசிக்கொண்டு சுவராக வரவேண்டும்; அதிலுள்ள துவாரத்திற்காகத் தன்விரல்களை இவ்வாறு காட்டிக்கொண்டும் வரல் வேண்டும். அத்துவாரத்

69. சந்திரனில் மானோ முயலோ இருப்பதாக இவ்விடங்களில் வியவகாரமுள்ளதுபோல், தேசாந்தரங்களில், சந்திரனில் ஒரு கட்டுச்சுள்ளியுங்கையுமாய் ஒருமனிதன் தன்நாயோடு இருப்பதாக வியவகாரம் உள்ளது.

தின் வழியாகவே பிரமஸ்ஸும் திஸ்பியும் பேசிக்கொள்வார்கள்.

**க்வின்ஸ்:**—அப்படியானால், எல்லாம் ஸரியாக அமைந்துவிட்டன. இப்பொழுது எல்லோரும் இருங்கள்; அவரவர்க்குரிய சம்பாஷணைகளைச் சொல்லிச் சரிபார்த்துக்கொள்ளுங்கள். பிரமஸ், நீ தொடங்கு; சம்பாஷணை முடிந்த பின்பு இச்செடிமறைவிற் போ; அப்படியே ஒவ்வொருவரும் தத்தம் இறுதிச்சொற்குறிப்பை அநுசரித்துச் சொல்லுவதைச் சொல்லவேண்டும். 91

[பக் மறைவில் வருதல்.]

**பக்:**—நமது கந்தர்வ அரசி தூங்குமஞ்சத்தின் அருகில் இரையும் நாட்டுப்புறத்தோர் யார்? என்ன! கூத்து நடக்கப் போகின்றதோ! நான் அதைக் காண்பேன். காரணங்காணின் நானும் ஆட்டக்காரரில் ஒருவனாகச் சேர்ந்துகொள்வேன்.

**க்வின்ஸ்:**—பிரமஸ், நீ பேசு; திஸ்பி, நீ முன்னிற்க.

**பாட்டம்:**—திஸ்பி, புஷ்பங்களின் வாசனை இனிமையாயிருப்பதுபோல், என் இனிய திஸ்பியே, உன்குரலும் இனிமையாயிருக்கின்றது. ஒருசத்தம் கேட்கின்றது. இங்குச் சற்றுநில்; நான் உடனே அதை இன்னதென்று அறிந்து வருவேன். (போதல்) 102

**பக்:**—ஆம் வருவாய்; விநோதமான பிரமஸாகத் திரும்பிவருவாய். (போதல்.)

**ப்ளூட்:**—இப்பொழுது நான் பேசவேண்டுமோ?

**க்வின்ஸ்:**—ஆம் பேசவேண்டும்; அவன் தான்கேட்ட சத்தத்தைப் பார்க்கப்போயிருக்கிறான். பின்னும் வருவான்.

---

**90. இறுதிச்சொற்குறிப்பு,** நாடகத்தில் ஒவ்வொருவனும் முந்திப்பேசுபவன் பேச்சின் இறுதிச்சொல்லைத் தான்பேசத்தொடங்குவதற்கு ஒரு குறிப்பாக ஞாபகத்தில் வைத்துக்கொள்வது வழக்கம்.

**103-104** வேறுபாடான வடிவத்தோடு திரும்புவாயென்பது கருத்து.

ப்ளூட்:—பிரகாசித்துவிளங்கும் பிரமஸ்ஸே, வெண்டாமரைபோல் விளர்த்தமேனியனே, 'ரோஜாமலரை' ப்போற் சிவந்த கன்னமுடையவனே, சுறுசுறுப்புள்ள இளைஞனே, ஒருநாளும் தளராத உறுதியுள்ள குதிரைபோல் உண்மையாயிருப்பவனே, உன்னை நான் நைனஸ்ஸின் சமாதியருகிற் சந்திப்பேன். 113

க்வின்ஸ்:—அதை நீ இப்பொழுது சொல்லக்கூடாது; பிரமஸ் சொல்வதற்கு மறுமொழியாகச் சொல்லவேண்டும். நீ பேசவேண்டியவற்றையெல்லாம் ஒரே முறையிற் பேசிவிடுகிறாயே. பிரமஸ், நீ வா; உன் இறுதிச்சொற்குறிப்புத் தாண்டிவிட்டது. 'உண்மையாயிருப்பவனே' என்பது உன் இறுதிச்சொற்குறிப்பு.

ப்ளூட்:—ஓ! அப்படியோ! ஒருநாளும் தளராத உறுதியான குதிரைபோல் உண்மையாயிருப்பவனே.

[பக்கும், கழுதைத்தலையோடு பாட்டமும் திரும்பிவருதல்.]

பாட்டம்:—நீ என்னை அப்படி அழகுள்ளவனென எண்ணுவாயானால், நான் என் வாழ்நாள் முழுவதையும் உனக்குத் தொண்டுசெய்து கழிப்பேன். 124

க்வின்ஸ்:—ஓ! இதென்ன விபரீதம்! இதென்ன விருபம்! இது பேய்கள் சஞ்சரிக்குமிடம்போல் தோன்றுகிறது. தலைவர்களே, இவ்விடம்விட்டு ஓடுவோம்! ஓடுவோம்!

(க்வின்ஸ், ஸ்நக், ப்ளூட், ஸ்னௌட், ஸ்டார்வெலிங், போதல்.)

பக்:—நானும் உங்களோடு வருவேன்; உங்களை முள்ளிலும் செடியிலும் சேற்றிலும் சுற்றித் திண்டாட அடிப்பேன்; சிலவேளை குதிரைபோல் நின்று கனைப்பேன்; சிலவேளை நாய்போற் குரைப்பேன்; சிலவேளை பன்றிபோல் உறுமுவேன்; சிலவேளை தலையில்லாக் கரடிபோல் நின்று கர்ஜிப்பேன்; சிலவேளை நெருப்புப்போல் எழுந்துவிட்டெரிவேன்.

**பாட்டம்:**—அவர்கள் ஏன் ஓடுகிறார்கள்? இஃது என்னைப் பயமுறுத்துவதற்காக அவர்கள் செய்யும் புரளியென்று தோற்றுகிறது.

[ஸ்நௌட் திரும்பி வருதல்.]

**ஸ்நௌட்:**—ஓ! பாட்டம், நீ மாறினாயே; உன்னிடத்தில் தோன்றுவது என்ன?

**பாட்டம்:**—தோன்றுவது என்ன? உன் கழுதைத்தலையைக் காண்கிறாயோ? (ஸ்நௌட் போதல்.) 142

[க்வின்ஸ் திரும்பிவருதல்.]

**க்வின்ஸ்:**—பாட்டத்துக்கு நன்மையுண்டாகுக. பாட்டம், உருமாறினாயே. (க்வின்ஸ் போதல்.)

**பாட்டம்:**—அவர்கள் புரளித்தனத்தை அறிவேன். அவர்கள் இயன்றவரையில் என்னைக் கழுதையாக்கப் பார்க்கிறார்கள். அவர்கள் என்ன செய்யினும் நான் இவ்விடம் விட்டுப் போகேன். நான் உலாவிக்கொண்டு அவர்கள் காதுகேட்கப் பாடுவேன்; அதனால், நான் பயந்தவனல்லனென்று அவர்கள் அறிவார்கள். 150

[பாடுதல்.]

மஞ்சணிற மூக்கின்கண் வாய்ந்த கருங்குருவி
செஞ்செவே யினியவிசை சீரிசையப் பாடிச்
சஞ்சரிக்குஞ் சாரிகையே சார்ந்த களஞ்சிறுத்து
வன்சினைய மென்குழைய மரமேறுங் குருவியே.

**டிடேனியா:**—(விழித்து):—எந்த அழகன் என்னை என் புஷ்பசயனத்தினின்றும் எழுப்புகிறான்?

**பாட்டம்:**—[பாடுதல்]

1\. ...ரியமூக் குள்ளவிசைக் குருவியூர்க் குருவியே
...சீரியலு மிசைபாடித் திரிவானம் பாடியே. 158

---

141\. கழுதைத்தலை என்பதற்கு மூடத்தன்மையென்பது பொருள்.

2. குக்கூவென் றிடுகுயிலே குயிலிசைகேட் போரதன்பால்
மிக்கூறும் வசைக்கெதிரா விளம்புமொழி யுளதேயோ.

டிடேனியா:—குணமுள்ள மானிடனே, நான் பிரார்த்திக்கின்றேன்; இன்னும் ஒருமுறை பாடுக. உன்கீதம் என் காதுக்கு மிகவும் இனிமையாக இருக்கின்றது. உன் இன்னுருவம் என் கண்ணை மயக்குகின்றது. உன் அழகின் வன்மையால் உன்னைக் கண்ணுற்றபொழுதே யான் உன்வசமாயினேன். 166

பாட்டம்:—என் அம்மையே, அவ்வாறுவதற்கு நியாயமில்லையெனத் தோற்றுகிறதே. ஆயினும், இக்காலத்தில் ஆசையும் விவேகமும் ஒன்றுசேரா. அவற்றை ஒன்றுசேர்க்க நல்லோர் எத்தனிக்கிறதுமில்லை. இவ்வாறு பொருள் நிறைந்த வார்த்தைகளைப் பேசுவதன்றிச் சமயம்வந்தால் வேடிக்கையான சித்திரப்பேச்சும் பேசுவேன்.

டிடேனியா:—நீர் அழகுநிறைந்தவர் என்பதன்றி ஞானமும் நிறைந்தவரென்று அறிகிறேன்.

பாட்டம்:—இப்பொழுது இக்காட்டைவிட்டு வெளிப்புறப்படுதற்கு வேண்டிய ஞானமிருக்குமானால் அது எனக்குப் பேருபகாரமாகவிருக்குமே. 177

டிடேனியா:—இக்காட்டைவிட்டு நீர் போக விரும்பவொண்ணாது. உம்மை இவ்விடத்திலேயே இருக்கச்செய்வேன். நான் சாதாரண கந்தர்வி அல்லேன்; என் அடிமை

---

159-160. குக்கூ என்னும்மொழி, இங்கிலிஷில் வேசைநாயகன் என்று அர்த்தமுள்ள 'கக்கோல்ட்' (cuckold) என்னும் மொழிக்குச் சம்பந்தமுள்ளதென்பதும், குக்கூவென்று கூறும்பொழுதெல்லாம் அஃது அப்படிப்பட்ட மனிதனைக் குறிக்கின்றது என்பதும் பண்டைக்காலத்து அபிப்பிராயம்.

170-172. தான் எல்லாவற்றிலும் வல்லவனென்பது பாட்டத்தின் அபிப்பிராயம். இதை, 1-வது அங்கம் 2-ம் இடத்திலும், இவ்வங்கத்தின் ஆரம்பத்திலும், பின்னும் பலவிடங்களிலும் காணலாம். இவ்வாறு தாம் ஸர்வக்ஞரென்ற அபிப்பிராயத்தோடு நடப்போர் உலகத்திற் பலருளர் என்பதைக் கவி இப் பாட்டத்தின்மூலமாகத் தெரிவிக்கின்றாரென்றுணர்க.

யர்க வஸந்தகாலம் எப்பொழுதும் என்னைத் தொடர்ந்து வரப் பெற்றுள்ளேன். உம்மை நான் நேசிக்கின்றேன்; என்னுடன் வாரும்; கந்தர்விகளை உம் பணிவிடைக்காரராக்குவேன்; அவர்கள் உமக்குக் கடலினின்றும் நவரத்தினங்களையும் கொண்டுவந்துகொடுப்பார்கள். நீர் காம்பரிந்த மலர்ச்சயனத்திலுறங்க அவர்கள் இனிய கீதம் பாடுவார்கள். உமக்கு இம்மானிட வடிவத்தை மாற்றிக் கந்தர்வ வடிவமமைப்பேன். பயற்றம்பூவே! சிலம்பிக்கூடே! பாச்சையே! கடுகுவிரையே!

[பயற்றம்பூ, சிலம்பிக்கூடு, பாச்சை, கடுகுவிரை, வருதல்.]

**பயற்றம்பூ:**—இதோ ஸித்தமாயிருக்கிறேன். 190

**சிலம்பிக்கூடு:**—நானும் அப்படியே.

**பாச்சை:**—நானும் அப்படியே.

**கடுகுவிரை:**—நானும் அப்படியே.

**எல்லோரும்:**— கட்டளைப்படி நடக்கக் காத்திருக்கிறோம்.

**டிடேனியா:**—நீங்கள் இவ்வுத்தமனை உபசரிக்க வேண்டும். அவர் கண்டுகளிக்க அவர்முன் நடனஞ்செய்யுங்கள். அவருக்குத் தேன்கலந்த இனிய கனிவர்க்கங்களால் அமுதூட்டுங்கள். அவர் உறங்குகையில் அவர் கண்ணிமையிற் சந்திரகிரணம் படாது வண்ணாத்திப்பூச்சிச் சிறகால் வீசுங்கள். அவருக்கு எப்பொழுதும் தலைவணங்கி மரியாதை செய்யுங்கள். 202

**பயற்றம்பூ:**—மானிடோத்தமரே, வாழ்க.

**சிலம்பிக்கூடு:**—வாழ்க.

**பாச்சை:**—வாழ்க.

**கடுகுவிரை:**—வாழ்க.

**பாட்டம்:**—நான் துணிந்துகேட்பதற்கு மன்னிக்கவேண்டும்; நிரம்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்; உமது பெயரென்ன? 209

**சிலம்பிக்கூடு:**—*சிலம்பிக்கூடு.*

**பாட்டம்:**—*சிலம்பிக்கூடே, உமது நேசத்தை யான் வரவரப் பெருக்கிக்கொள்வேன். என் விரல் வெட்டுண்டபொழுது உமது உதவியை நாடுவேன். பெருமையுள்ளவரே, உமது பெயரென்ன?*

**பயற்றம்பூ:**—*பயற்றம்பூ.*

**பாட்டம்:**—*உமது தாயாகிய காய்க்கும் தந்தையாகிய நெற்றுக்கும் நான் க்ஷேமம்விசாரித்ததாகச் சொல்லவேண்டும். பயற்றம்பூவே, உமது பழக்கமும் எனக்கு இனி அதிகமாகவேண்டும். உமது பெயர் யாதோ?*

**கடுகுவிதை:**—*கடுகுவிதை.*

**பாட்டம்:**—*உமது பெரும் பொறுமையை யான் நன்றாக அறிவேன்; இராக்ஷதன்போன்ற மாட்டிறைச்சி உம்மவரில் அநேகரை விழுங்கியிருக்கிறது; உம்மவருக்காக நான் எத்தனைமுறையோ கண்ணீர்விட்டிருக்கிறேன்.*

**டிடேனியா:**—*வாருங்கள்; கந்தர்விகாள், அவனை எனது மரமடர்ந்த சோலைக்குப் பைய அழைத்துவாருங்கள்.*

(*போதல்.*)

### 2-ம் இடம்:—காட்டில் வேறொருபாகம்.

[*ஓபரான் வருதல்.*]

**ஓபரான்:**—*டிடேனியா விழித்தாளோ! விழித்து யாரைப்பார்த்து ஆசைகொண்டலைகின்றாளோ!*

[*பக் வருதல்.*]

*இதோ வருகிறான் என் தூதன். ஓ! பித்துப்பிடித்தபேயே, நாமிருக்கும் இச்சோலையில் இன்றிரவில் ஏதேனும் விசேஷம் நடந்ததுண்டெனிற் கூறுக.*

---

212-213. சிறு புண்ணினின்றும் இரத்தம் வருவதை நிறுத்துவதற்குச் சிலந்திப்பூச்சிக்கூட்டை எடுத்துவைப்பதுண்டு.

222-224. சுவைக்காக மாட்டிறைச்சியிற் கடுகைச்சேர்ப்பது வழக்கம். மாட்டிறைச்சியிலுள்ள கடுகின் காரத்தால் தான்கண்ணீர்விட்டிருப்பதை மாட்டிறைச்சியாற் கடுகுக்கு நேர்ந்த துன்பத்திற்காகத் தான் கண்ணீர்விட்டதாகக் கூறுகிறான்.

**பக்:**—என் அரசி ஒரு மகா விரூபிமேல் ஆசைகொண்டிருக்கிறுள். அவள் உறங்குகையில், அவளிருக்கும் பூஞ்சோலைக்கருகில் ஆதென்ஸ்நகரத்துப் பணிக்களத்தில் வேலைசெய்து பிழைக்கும் சில கைத்தொழிலாளிகள் வந்து, அரசனது கலியாணநாளிரவில் தாம் அவன்முன் ஆட நிச்சயித்திருக்கும் களிக்கூத்தை ஒருமுறை ஆடிச் சரிபார்த்துக்கொள்ளத் தொடங்கினுர்கள். அப்பொழுது அவ்வாட்டத்தில் பிரமஸ்வேஷம்போடுபவன் தான்சொல்வதைச் சொல்லிவிட்டு அவர் கூட்டத்தினின்றும் சோலைக்குள் வர, நான் அச் சமயம்பார்த்து அவனுக்குக் கழுதைமுகம் உண்டாகும்படி செய்தேன். அவன் திரும்பி அவர்கூட்டத்துள் போகவே, அக்கோர ரூபத்தைக்கண்டு எல்லோரும் பயந்து நடுங்கி ஒருவர்மேலொருவர் விழுந்து தடுமாறிக் காட்டில் கல்லிலும் முள்ளிலும்போய்த் தங்கள் உடை முதலியவற்றைக் கிழித்துக்கொண்டு ஓடினுர்கள். இவ்வாரவாரத்தில் டிடேனியா உறக்கமுணர்ந்து அக்கழுதைத்தலையோன் முகத்தில் விழித்தாள். விழித்ததுமுதல் அவன்மேல் ஆசைமிகுந்திருக்கிறுள். 23

**ஓபரான்:**—நான் நினைத்ததிலும் இஃது இன்னும் மிக நன்ருக முடிந்தது. நான் சொல்லியவண்ணம் ஆதென்ஸ் நகரத்தோன் கண்களில் நேசரசத்தைப் பிழிந்தாயோ?

**பக்:**—அதுவும் ஆயிற்று. அவன் உறங்கினுன்; அம்மாதும் அவனருகில் உறங்கினுள்; அவன் உணர்ந்து அவள் முகத்திலேயே விழித்திருப்பான்.

[ஹெர்ம்யாவும் டெமிட்ரியஸ்ஸும் வருதல்.]

**ஓபரான்:**—மறைந்துநில். இவன்தான் நான் சொல்லிய அவ்வாதென்ஸ்நகரத்தோன்.

**பக்:**—நான் கண்டமாது இவளே; மனிதன் இவனல்லன்.

**டெமிட்ரியஸ்:**—உன்னை நேசிப்பவனை நீ ஏன் இவ்வாறு கடிந்து பேசுகிறுய்; இஃது உன் பகைவரிடத்துச் சொல்லவேண்டிய சொல்லன்றோ? 36

ஹெர்மியா:—உன்னை இப்பொழுது கடிந்துபேசினேன்; உனக்கு இன்னும் செய்யத்தக்கது வேறுளது; நாசமுற உன்னைச் சபித்தற்குக் காரணமுண்டு. என் லைஸாண்டரைக் கொன்றதுண்டெனின், என்னையுங்கொன்று நீ மேற்கொண்ட கொலைத்தொழிலை முற்றும் நிறைவேற்று. அவன் என்னிடத்து உறுதியான உண்மையுடையோன்; பகலினிடத்துப் பகலவனுக்கும் அவ்வளவு உறுதியில்லை; யான் உறங்குகையில் என்னைவிட்டு நீங்கான்; ஆதலின், நீ அவனைக் கொன்றாயென்றே எண்ணுகிறேன். உன் பார்வை கொலைக்காரன் பார்வைபோல் உற்சாகமிழந்து பயங்கரமாய்க் காணப்படுகின்றது. 47

டெமிட்ரியஸ்:—உன் கொடுமையாற் கொலையுண்டவன் பார்வையையுடையேன். என்னைக் கொலைசெய்தவளாகிய நீ அதோ தோன்றும் வெள்ளிபோல் நிர்மலமாய் ஒளிவீசுகின்றாய்.

ஹெர்மியா:—இம்மொழியால் என் லைஸாண்டரின் செய்தி என்ன விளங்குகின்றது? அவன் எங்கே? நற்குணமுள்ள டெமிட்ரியஸ்ஸே, அவனை நீ எனக்கு நல்குவையோ?

டெமிட்ரியஸ்:—அவன் பிணத்தை நாய்க்கெறிவேன். 55

ஹெர்மியா:—அடா நாயே, என்னைப் பெண்பாலார்க்குரிய வரம்புகடந்து போகச்செய்கின்றாய். அவனைக் கொன்றாயோ? பாவி! அவன் உயிருள்ளோர் கூட்டத்தில் இல்லாதவனானானோ! உண்மை கூறு; என் பொருட்டாயினும் ஒருமுறை உண்மை கூறு; அவன் உறக்கமுணர்ந்து எழுந்தபின் அவன் முகத்தை ஏறிட்டுப்பார்க்கத் துணிந்தாயோ? அவன் உறங்குகையிற் கொன்றாயோ? ஆ, என்ன வீரம்! இதை ஒரு புழுவும் செய்யாதோ? மானிடப்பாம்பே,

---

61. "அவன் முகத்தை ஏறிட்டுப்பார்க்கத் துணிந்தாயோ" என்பது லைஸாண்டரின் வீரத்தன்மையைப் புலப்படுத்துகின்றது.

இரட்டை நாவுடைய இழிந்த பாம்பும் செய்யாத காரிய மடா பாவி இது!

**டெமிட்ரியஸ்:**—உன் கோபத்தை இடமறியாமல் ஏன் என்மேல் தாக்குகிறாய்? லைஸாண்டர் வழிக்கு நான் போன வனல்லன்; அவன் இறந்தவனல்லனென்றும் அறிகிறேன்.

**ஹெர்மியா:**—ஆனால் அவன் சுகமாயிருக்கிறானோ? இரந்து கேட்கிறேன்; சொல்லுக.

**டெமிட்ரியஸ்:**—அதைச் சொல்லுவதற்கு எனக்கு நீ உதவும் கைம்மாறு. யாதோ?

**ஹெர்மியா:**—நீ என் முகத்தில் விழியாதொழிவதே இதற்குக் கைம்மாறு. துரோகி, உன்முன் நிற்காமல் இதோ போகின்றேன். (போதல்.)

**டெமிட்ரியஸ்:**—அவளுடைய இக்கோபவெறியில் உட ன்செல்லல் உசிதமன்று. இவ்விடத்திற் சற்றிருந்து இளைப் பாறுவேன். துக்கத்தின் கடுமையை ஒருவாறு தணிக்கும் உறக்கம் வருகின்றது. (கீழே படுத்து உறங்குதல்.)

**ஓபரான்:**—பக்கே, நீ என்னகாரியஞ்செய்தாய்? தவறி ப்போய்ப் பிழிந்தமையின், நேசமில்லாவிடத்து நேசத்தை உண்டாக்காமற்போனதன்றி உள்ள நேசத்தையும் கெடுத் தாயாயினாய்.

**பக்:**—உலகத்தில், தான்செய்த பிரதிக்கினைக்குத்தக்க படி நடப்பவன் ஒருவன்; செய்த பிரதிக்கினையை மீறி ஒன்றின்பின் ஒன்றாகப் பொய்ப்பிரதிக்கினை செய்துகொண் டே இருப்பவர் பத்துலக்ஷம் பேர்கள்; இதுவே விதியின் சங்கற்பமெனத் தோன்றுகின்றது.

---

64. 'இரட்டை நா' என்பது இங்குப் பாம்பின் பிளப்புள்ள நாவையும் குறிப்பாக 'டெமிட்ரியஸ்வின்' பிளவுபட்ட மனத்தையும் தெரிவிக்கின்றது.

87-88. 'பக்' தன் அஜாக்கிரதையால் நேர்ந்த தப்பை விதியின் மேல் ஆரோபிக்கின்றது.

**ஒபரான்:**—நன்று; நீ இப்பொழுது இக்காட்டில் காற்றினும் அதிவேகமாய்ச் சென்று, காமநோயால் முகம்வெளுத்துப் பெருமூச்செறிந்து இரத்தம் குறைந்து வருந்துகின்ற ஹெலனாவென்னும் ஆதென்ஸ் மாதைத் தேடி எவ்வுபாயத்தாலேனும் அவளை இவ்விடத்திற் கொண்டுவந்து சேர்ப்பிப்பாயாயின், நான் இவன் கண்களை நேசரசத்தால் மயக்கி, அவளைக்கண்டு காதல்கொள்ளச்செய்வேன்.

**பக்:**—இதோ போவேன். அம்பிலும் வேகமாய் நான் அரை நொடியிற் போவதைப் பாரும். (பக்-போதல்.) 97

[டெமிட்ரியஸ்ஸின் கண்ணில் ஒபரான்
புஷ்பரஸத்தைப் பிழிதல்.]

**ஒபரான்:**—இச்செம்மலரின் இரசத்தை உன் கண்ணிற் பிழிவேன். நீ உறக்கமுணர்ந்து அவள் முகத்தில் விழிக்கையில், அவள் உனக்கு வானத்துவெள்ளிபோற் பெருஞ்சோதியாய் விளங்க, நீ மாரன் வாளியாற் புண்பட்டு அப்புண்ணையாற்றும் மருந்தை அவளிடத்து இரப்பாயாக.

[பக் பின்னும் வருதல்]

**பக்:**—என் கந்தர்வத்தலைவ, ஹெலனா இதோ வருகிறாள்; நான் தவறி இரசம்பிழிந்த இளைஞனும், தான் அவள் மேற் கொண்டிருக்கும் காதலுக்குக் கூலியாக அவள் ஒரு முத்தந் தாராளோவென்று அவளை இரந்து வருகின்றான். இவ்விநோதக் காட்சியைக் காண்போமோ? ஆ! மானிடர்கள் என்ன மூடர்கள். 108

**ஒபரான்:**—விலகி நில்; அவர்கள் செய்யும் அரவம் டெமிட்ரியஸ்ஸை எழுப்பிவிடும்.

**பக்:**—அப்பொழுது இருவரும் ஒருத்திமேல் நேசங் கொண்டவராவர். அதுவும் ஒருவேடிக்கையே? இவ்வாறு தாறுமாறாக நேருவதில் எனக்கு நிரம்பச் சந்தோஷம். 113

[லைஸாண்டரும் ஹெலனுவும் வருதல்.]

**லைஸாண்டர்:**—உன்னைப் பழிப்பாக நேசிக்கிறேனென்று ஏன் எண்ணுகிறாய்? கண்ணீர் விட்டுக் கதறுகையில் அதைப் பழிப்பு என்னலாமோ? நான் நேசப்பிரதிக்கினை செய்யும்பொழுது கண்ணீர்விடுவதைக் காண்கின்றாயே; இவ்வாறு கண்ணீரோடு பிறக்கும் பிரதிக்கினை உண்மையானதன்றிப் பிறிதொன்றாமோ? உண்மையான நேசத்துக்குரிய அடையாளங்களைக் காணும்பொழுதும் அவை என்னிடத்திற் பொய்யென்றும், என் நேசம் பொய்ந்நேசமென்றும் நீ என்ன காரணத்தால் எண்ணுகிறாயோ? 122

**ஹெலனு:**—வரவர உன் கபடம் அதிகரிக்கின்றது. முன்னுக்குப்பின் விரோதமாகப் பிரதிக்கினை செய்கிறாய். ஹெர்ம்யாவுக்குச் செய்துகொடுத்த பிரதிக்கினை யாதாயிற்று? அவளை விட்டுவிட்டாயோ? நீ நிலையற்றவன். அவளிடத்தும் பிரதிக்கினை என்னிடத்தும் பிரதிக்கினையா? ஒன்றோடொன்று தூக்கிப்பார்; எது அதிக கனமுடையது? உனக்கு எல்லாம் வெறுங் கட்டுக்கதையைப்போற் கனமில்லாதனவேயாம்.

**லைஸாண்டர்:**—அவளுக்குப் பிரதிக்கினைசெய்துகொடுத்தபொழுது எனக்கு விவேகமில்லை.

**ஹெலனு:**—இப்பொழுது அவளை விடுவதில் விவேகமுடையாயென்றும் நான் எண்ணவில்லை.

**லைஸாண்டர்:**—டெமிட்ரியஸ் அவளை நேசிக்கின்றான்; உன்னை நேசிக்கவில்லை. 136

**டெமிட்ரியஸ்:**—(விழித்து) ஓ! ஹெலன்! ஓ! தேவி! வனதேவதையே! உத்தமோத்தமீ! என் காதலியே, உன் நிர்மலமான கண்களுக்கு ஒப்பாவது யாது? பளிங்கும் கலக்கமுள்ளதே. உன் இரண்டு உதடுகளும் காண்போர் காதலிக்கும்படி பழுத்த கோவைப்பழம்போற் சிவந்து தோன்

120. அவை, அவ்வடையாளங்கள்.

றுகின்றன. 'டாரொஸ்' மலையுச்சியில் உறைந்து கீழ்காற்றால் அசுத்தம் நீங்கப்பெற்று வெள்ளென வெளுத்திருக்கும் பனிக்கட்டியும் நீ கையை நீட்டுகையில் காக்கைபோற் கறுத்துத் தோன்றுகின்றது. இக்கையை, வெண்மைக் கரசை, என்னன்பிற்கு உறுதி நல்கும் இவ்வின்பமுத்திரையை முத்தமிடுகின்றேன். 147

ஹெலனு:—ஓ! இஃதென்ன துன்பம்! நீங்கள் இருவரும் என்னைப் பழித்து மகிழ்வுறக் கருதினீர். மரியாதையுடையீராயின் நீங்கள் எனக்கு இத்தீங்கிழையீர். நீ என்னை வெறுப்பதை யான் அறிவேன்; அப்படியே வெறுத்திராமல் என்னைப் பழிப்பவரோடு சேர்ந்துகொள்ளல் வேண்டுமோ? புறத்தோற்றத்திற்கு மனிதரைப்போற் காணப்படுகின்றீரோ! உண்மையாக அவ்வாறு இருப்பீராயின், ஸாதுவான குலமாதை இவ்வாறு பழித்தல் உங்களுக்கு அடுக்காது. என்னை நீ மனப்பூர்வமாக வெறுக்கிறுயென்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். இந்தனை பிரதிக்கினையும், பிரமாணமும், என்னைப்பற்றி அளவில்லாப் புகழ்ச்சியும் செய்வது எதற்காக? நீங்கள் ஒருவருக்கொருவர் எதிரிகளாயிருந்து ஹெர்ம்யாவை நேசிப்பதுபோல், என்னைப்பழிப்பதிலும் அவ்வாறே எதிரிகளானீர்களோ? என்ன தீரமான காரியம்! பேதைப்பெண்ணை பழித்துக் கண்ணீர்விடச்செய்யும் ஆண்பிள்ளையின் வீரம் என்ன வீரம்! 163

---

142. 'டாரொஸ்' என்பதற்கு உன்னதமான மலை என்பது பொருள். இப்பெயருடைய மலைத்தொடர்ச்சி 'ஏஷ்யா' கண்டத்திற்குக் குறுக்கே கிழக்குமேற்காக மத்திய ஏஷ்யாவிலுள்ள உன்னதமான ஸமவெளிக்குத் தென்னெல்லையாக ஓடுகின்றது.

145. அவளுடைய கை நிகரற்ற வெண்மையையுடைமையால் வெண்மைக்கரசென்றும், அதைப்பெற்றுத் தன்இன்பத்திற்கு உறுதி பெறவேண்டுமாதலின் அதை இன்பமுத்திரையென்றும் கூறுகிறுன்.

150. நீ (&c.), இருவரையும் நோக்கிப் பேசுகிறவள் இடையிடையே டெமிட்ரியஸ்ஸைமாத்திரம்நோக்கிச் சிலவார்த்தைகள் சொல்லுகிறுள்.

**லைஸாண்டர்:**—டெமிட்ரியஸ், நீ இரக்கமற்றவன்; ஹெர்ம்யாவை நேசிக்கின்றாய்; அஃது எனக்குத் தெரியுமென்பதை நீ அறிவாய். இப்பொழுது எனக்கு ஹெர்ம்யாவின்மேலுள்ள நேசத்தை உனக்கு மனப்பூர்வமாக விட்டுவிடுவேன்; அப்படியே நீ, உனக்கு ஹெலனாவின் மேலுள்ள நேசத்தை எனக்கு விட்டுவிடு. அவள்மேல் எனக்குள்ள ஆசை என் உயிர் உள்ள அளவும் விடாது. 170

**டெமிட்ரியஸ்:**—உன் ஹெர்ம்யாவை நீயே வைத்துக்கொள்; நான் வேண்டேன். அவளை முன்பு நான் நேசித்ததுண்டு; அந்நேசம் இப்பொழுது போய்விட்டது. இருப்பிடம்விட்டு அலையும் வழிப்போக்கனைப்போல் என்நேசம் சிறிதுகாலம் அவளிடத்திற் சஞ்சரித்து இப்பொழுது ஹெலனாவென்னும் இருப்பிடத்தையடைந்து நிலைபெற்று நிற்கின்றது.

**லைஸாண்டர்:**—ஹெலனா, இஃது உண்மையன்று.

**டெமிட்ரியஸ்:**—என் நேசத்தை நீ அறிவாயோ? அறியாததைப்பற்றி நீ ஏன் இழிவாகப்பேசுகிறாய்? இனி அப்படிப் பேசுவாயாயின் நான் சும்மா இரேன். நீ நேசிப்பவள் அதோ வருகிறாள் பார். 182

[ஹெர்ம்யா பின்னும் வருதல்]

**ஹெர்ம்யா:**—கண்ணின் காட்சியைக் குறைக்கும் இவ்விருண்ட இரவானது காதிற்கு அதிகசக்தியை உண்டுபண்ணுகின்றது. கண்ணின் பார்வை குறையுமிடத்து அதற்கீடாகக் காதின் கேள்வி இரண்டு மடங்காகின்றது. லைஸாண்டரோ, உன்னை நான் கண்ணிற் காணுவிடினும் உன் குரலைக் காதாற் கேட்டு உன்னிடத்து வருகிறேன். என்னை ஏன் இரக்கமின்றி அப்படி விட்டகன்றாய்?

**லைஸாண்டர்:**—ஆசை துரத்தும்பொழுது அவன் அங்கு நிற்பானோ?

**ஹெர்ம்யா:**—என்னருகினின்றும் லைஸாண்டரைத் துரத்தும் வன்மையுள்ள ஆசையுமுளதோ? 193

**லைஸாண்டர்:**—அழகிய ஹெலனுவின்மேலுள்ள ஆசை அவனைத் துரத்தியது; அவளோ வானத்து மீனிலும் அதிக ஒளியை உடையாள். நீ ஏன் என்னைத்தேடுகிறுய்? உன் மேலுள்ள வெறுப்பே என்னை உன்னைவிட்டு நீங்கும்படி செய்ததென்று இதனுல் அறியாயோ?

**ஹெர்ம்யா:**—அஃது ஒருநாளுமிராது. நீ நினைக்கிறது போற் பேசவில்லை. 200

**ஹெலனு:**—இவளும் இக்கூட்டத்திற் சேர்ந்தவளே! என்னைப் பரிகாஸஞ்செய்வதற்கு மூவரும் சேர்ந்துகொண்டார்கள். நிந்திக்கும் ஹெர்ம்யாவே, ஓ! நன்றியற்றவளே, நீயும் இவர்களோடு சேர்ந்து என்னைப் பழிப்பாயோ? நாம் மனமொத்த தோழிகளாய்க் காலங்கழித்ததை மறந்து விட்டாயோ? நம் பள்ளிக்கூடத்துறவும் பிள்ளைப்பிராயத்துக்குரிய மாசற்றமனமும் போயினவோ? நாமிருவரும் ஓராஸனத்திருந்து ஒரு துணியில் நம்மூசியால் ஒரே பூவேலை செய்துகொண்டும், அப்படிச்செய்யும்பொழுது நம் கையும் விலாப்புறமும் குரலும் மனமும் ஒன்றுபட்டுள்ளன போல் ஒரு சுரத்தில் ஒரேபாட்டைப் பாடிக்கொண்டும், பார்வைக்குப் பிரிந்தும் பிரிக்குங்காற் சேர்ந்துமிருக்கும் இரட்டைக் கனிபோல் யாக்கை இரண்டும் ஆவி ஒன்றுமாகக் கூடிவளர்ந்தோமே. நம்முடைய இப்பண்டை நட்பைக் குலைத்து இப்பொழுது உன் ஏழைத்தோழியை இகழ்வதில் இப்புருஷரோடு சேர்வாயோ? இது நட்புக்கு நன்றன்று; கன்னிக்கு அடுக்காது; இதனுல் வரும் துன்பத்தை அடைபவள் யான் ஒருத்தியாயிருப்பினும், இதற்காக உன்னைக் கடிந்து பேசும் பெண்பாலோர் பலராவர்.

**ஹெர்ம்யா:**—உன் உக்கிரமொழியைக்கேட்டு அதிசயிக்கின்றேன்; நான் உன்னைப் பழிக்கவில்லை; நீதான் என்னைப் பழிப்பவள்போற் பேசுகிறுய். 222

**ஹெலனு:**—என் கண்ணையும் முகத்தையும் வியந்து பழித்து, என்னைத்தொடரும்படி லைஸாண்டரை ஏவியவள்

நீயன்றோ? சற்றுமுன்வரையில் என்னைக் காலால் உதைத்துத் தள்ளிய உனது மற்றொரு நேசனாகிய டெமிட்ரியஸ் என்னைத் தேவதையென்றும், திவ்யரூபியென்றும், அருமை பொருளென்றும் கூறும்படி செய்தவளும் நீயன்றோ? அவன் தான்வெறுப்பவளை ஏன் இவ்வாறு புகழ்ந்து பேசுகிறான்? லைஸாண்டரின் மனம் உன் அன்பால் நிறைந்திருக்க, உன் அனுமதியாலும் தூண்டுதலாலுமன்றி, அவன் அவ்வன்பை மறுத்து என்னிடத்து அன்பு பாராட்டுவானோ? உன்னைப்போல் எனக்கு அழகு இல்லையாயின் என்ன? உன்னைப்போற் காதலரைப் பெறும் அதிட்டமிலேன்; அன்பில்லார்மேல் அன்புபாராட்டி இழிவாக அலைகின்றேனென்னினும் என்ன? இதற்கு என்னை நீ இகழ்வது முறையோ? நீ காட்டவேண்டியது இரக்கமன்றோ? 237

**ஹெர்மியா:**—நீ சொல்லியதின் பொருள் எனக்கு விளங்கவில்லை.

**ஹெலனா:**—நன்று; என்னைப் பழிப்பதை நிறுத்தவேண்டுவதில்லை; என்னிடத்து இரக்கமுள்ளவர்கள்போலே அபிநயஞ்செய்யுங்கள், என் புறத்து முகங்காட்டி நகையுங்கள்; ஒருவருக்கொருவர் கண்ஸம்ஜ்ஞை செய்யுங்கள். எவ்விதத்திலாவது உங்கள் பரிகாஸத்தை நிலைபெறச் செய்யுங்கள். சிறிதேனும் இரக்கமோ, மரியாதையோ, பெருந்தன்மையோ உடையீராயின் என்னை இப்பழிப்புக்கு ஆளாக்குவீரோ? நன்று சுகமாயிருங்கள். இஃது என் குற்றமே; இதை மாற்றுவதற்கு இறப்பேன்; அன்றெனின் இவ்விடம்விட்டுப் போவேன். 249

**லைஸாண்டர்:**—என் குணமுள்ள ஹெலனாவே, நிற்க; நிற்க; நான் சொல்லுவதைச் சற்றுக் கேள். என் நேசமே, என்னுயிரே!

**ஹெலனா:**—ஓ! திவ்வியம்! திவ்வியம்!

**ஹெர்மியா:**—என் மதுரமே, அவளை அப்படிப் பழியாதே. 255

**டெமிட்ரியஸ்:**—ஹெர்மியாவின் பிரார்த்தனைக்கு அவன் இணங்கானாயின், அவனை என் வன்மைக்கு இணங்கச் செய்வேன்.

**லைஸாண்டர்:**—அவளுடைய பிரார்த்தனையிலும் உனது ஆற்றல் என்னிடத்து அதிக வலியுளதோ? ஹெலனா, உன்னை நேசிக்கின்றேன்; என் இன்னுயிரானை! உன்னை நேசிக்கின்றேன். எனக்கு உன்னிடத்து நேசமில்லையென்பவன் பொய்ம்மொழியனென்று அவ்வின்னுயிரைக் கொடுத்தாவது மெய்ப்பிப்பேன்.

**டெமிட்ரியஸ்:**—அவனிலும் நான் உன்னை அதிகமாக நேசிக்கின்றேன்.

**லைஸாண்டர்:**—அப்படியானால் வா; அந்நேசத்தைத் தனிப்போரால் மெய்ப்பி.

**டெமிட்ரியஸ்:**—சீக்கிரம் வா.

**ஹெர்மியா:**—லைஸாண்டர், இது எவ்வாறு முடியுமோ?

**லைஸாண்டர்:**—நீ போ; கருங்குறத்தி!

**டெமிட்ரியஸ்:**—என்ன பேஷஜம் செய்கிறாய்! அவளை வெறுத்துவிட்டவன்போற் காட்டுகிறாய்; ஆவேசமாகப் போருக்கு வருபவன்போல் வேஷம் போடுகிறாய்; வரவுமாட்டாய். போடா, வெட்கங்கெட்டவனே.

**லைஸாண்டர்:**—ஏ ஏ! பூனையே! உன் கைக்கட்டை விடு; என்னை ஏன் ஒட்டிபோல் ஒட்டிக்கொள்ளுகிறாய்? என்னை விட்டுவிடு; அன்றெனின், பாம்பை உதறுவதுபோல் உன்னை உதறித் தள்ளுவேன்.

---

257. இணங்கானாயின், உடன்பட்டு ஹெலனாவைப் பழியா தொழியானாயின்.

279-280. டெமிட்ரியஸ்ஸைத் தொடர்ந்து செல்லாதபடி தன்னை ஹெர்மியா கட்டிப்பிடித்தமையால் இவ்வாறு கூறினன்.

**ஹெர்மியா:**—என் இனிய அன்பே, இஃதென்ன மூர்க்கம்! என்ன மாறுதல் உண்டாய்விட்டது!

**லைஸாண்டர்:**—உன் அன்பா! இங்கு நில்லாதே போ. கறுத்த குரூபியே, இவ்விடம்விட்டுப் போ. குமட்டும் மருந்தே, வெறுப்பான விஷமே, அகன்றுபோ.

**ஹெர்மியா:**—பரிகாஸமாகப் பேசுகிறாயோ?

**ஹெலனா:**—ஆம்; நீயும் அப்படியே பேசுகிறாய்.

**லைஸாண்டர்:**—டெமிட்ரியஸ், நான் உன்னிடத்திற் சொல்லியசொல் தவறேன். 289

**டெமிட்ரியஸ்:**—நான் உன் வெறும்பேச்சை நம்பேன்; நீ உறுதிசீட்டு எழுதித்தரல் வேண்டும். ஒரு பெண்பிள்ளை கட்டின கட்டை மீறி வருவதற்கு ஆற்றாதவன் நீ.

**லைஸாண்டர்:**—என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்? அவளை நான் அடிக்கவோ, புண்படுத்தவோ, கொல்லவோ? நான் அவளை வெறுக்கின்றேனெனினும், அவளுக்கு இவ்வாறு தீங்குசெய்யேன். 296

**ஹெர்மியா:**—வெறுப்பதிலும எனக்கு நீ செய்யக்கூடிய பெருந்தீங்கு வேறுண்டோ? என்னை வெறுக்கிறாய்; ஏன்? ஆ! கஷ்டம்! என்காதலனே, யாது நிகழ்ந்தது? நான் ஹெர்மியாவன்றோ? நீ லைஸாண்டர் அல்லையோ? எப்பொழுதுமுள்ள அழகை யான் இப்பொழுதும் உடையேன். இவ்விரவு தொடங்கிய பின்னரும் என்னிடத்து அன்பு நிறைந்திருந்தாயே. அதன்பின்பு என்னைவிட்டு ஏன் அகன்றாய்? உண்மையாகவே அகன்றாயென்று யான் எண்ணவோ? 305

---

294. 'அவளை' என்பதற்குமுன் 'அவள் என்னைப் பற்றிக்கொள்ளாதபடி' என்பதை வருவித்துப் பொருள்கொள்க.

லைஸாண்டர்:—ஆம்; என்னாணை! அப்படியே. உன்னை இனிப் பார்க்கும் விருப்பமொழிந்தேன். உன் வீணாசையை ஒழித்துவிடு; இதற்கு இனி ஐயம் வேண்டுவதில்லை. உண்மை கூறினேன். உன்னை வெறுத்து ஹெலனாவை நேசிப்பது பரிகாஸமன்று. 310

ஹெர்ம்யா:—ஆ! கொடுமை! அடி மாயாவி! பூவரிக்கும் புழுவே, நேசக்கள்ளி, இரவில் வந்து என் காதலனது நேசத்தைக் கொள்ளைகொண்டாயோ?

ஹெலனா:—இது மிக நன்று; உனக்கு அடக்கமில்லையோ? நாணம் இழந்தாயோ? கூச்சமற்றாயோ? சிச்சீ! பாவையே, என் நல்வாயிலிருந்து துடுக்கு வார்த்தைகளை ஏன் பறிக்கிறாய்? 317

ஹெர்ம்யா:—பாவையா? ஏனோ? ஆ! அவள் சூதை யறிந்தேன். வளர்ச்சியில் தன்னையும் என்னையும் ஆராய்ந்து தான் உயரமும் கட்டழகுமுள்ளவளென்று அவனுக்கு உபதேசித்திருக்கிறாள்போலும். நான் இவ்வளவு குறியவளாயிருத்தலால் நீ அவன் மதிப்பில் அவ்வளவு உயர்ந்தாயோ? ஏ! ஏ! வர்ணமூட்டிய வஸந்தக்காலே, நான் எவ்வளவு குறியவள் என்பதை அறிவாயானாற் சொல். நான் உயரத்தில் எவ்வளவு குறைந்தவளாயிருப்பினும், என் கைந்நகங்களுக்கு உன் கண்கள் எட்டும். 326

---

316. **பாவை,** பிறரால் ஆட்டப்படுவது. அதுபோல் இவள் அவ்விருவருடைய முயற்சியால் தன்னை இகழுகின்றாளென்று எண்ணி இப்படிக் கூறினாள்.

318. **பாவையா?,** உருவத்திற் சிறியவளை வெறுப்பால் பாவையென்று அழைப்பதுண்டு.

323. 'வர்ணமூட்டிய' என்றது, ஹெலனாவின் நிறம் இயல்பாக உள்ளதன்றென்று குறிப்பித்தபடி. வஸந்தக்காலின் விவரத்தை 1-வது அங்கம், 1-வது இடம், 179-ம் வரியின் விளக்கத்திற்காண்க.

326. 'என்...எட்டும்' என்பதற்கு, உன் கண்ணை என் நகத்தால் தோண்டிவிடுவேனென்பது பொருள்.

**ஹெலனா:**—குலமக்களே, நீங்கள் என்னைப் பழிப்பவராயினும், இவள் எனக்குத் தீங்குசெய்யாது காக்க உங்களை வேண்டுகிறேன். நான் சூதுவாது ஒன்றுமறியேன்; கன்னிக்குள்ள கோழைத்தனமெல்லாம் உடையேன். அவள் என்னிலும் உயரக்குறைவுள்ளவளாகையால் நான் அவளோடு சரியாக எதிர்த்துநிற்பேனென்று நீங்கள் ஒருவேளை எண்ணுவீர்கள்.

**ஹெர்மியா**—உயரக்குறைவுள்ளவள்! கேட்டாயோ! மறுபடியும்.

**ஹெலனா:**—நற்குணமுள்ள ஹெர்மியாவே, என்னிடத்து ஏன் இவ்வளவு கசப்புற்றிருக்கிறாய்? நான் உன்னிடத்து எப்பொழுதும் அன்புடையேனன்றோ? உன் அந்தரங்கங்களை ஒருவரிடத்தும் சொன்னதில்லையே; உனக்கு ஒரு தீங்கும் செய்ததில்லையே. ஆனால், டெமிட்ரியஸ்ஸின்மேலுள்ள நேசத்தால் நீ இக்காட்டுக்கு ஓடிவந்ததை அவனுக்கு உரைத்தேன். அவன் உன்னைத்தேடி வந்தான்; நான் நேசத்தால் அவனைத்தொடர்ந்து வந்தேன். அவன் என்னை அதட்டினான்; இகழ்ந்தான்; அடிக்கவந்தான்; கொல்லவும் வந்தான். இப்பொழுது என்னை நீ ஒன்றும் செய்யாதிருப்பாயானால் நான் என் அறிவின்மையை நினைத்துக்கொண்டு வந்தவழியே ஊருக்குத் திரும்பிப்போவேன். உன்வழியில் இனி ஒருபொழுதும் வாரேன். நான் போகிறேன். நான் எவ்வளவு அறியாதவள், மதிகெட்டவளென்பதை நீயே பார்க்கின்றாய்.

**ஹெர்மியா:**—போவதற்கென்ன? உன்னைத் தடைசெய்வது யாது?

**ஹெலனா:**—யான் விட்டுப்போகும் விவேகமில்லா நேசம்.

**ஹெர்மியா:**—லைஸாண்டரின்மேலுள்ள நேசமோ?

**ஹெலனா:**—டெமிட்ரியஸ்ஸின்மேலுள்ள நேசம்.

**லைஸாண்டர்:**—ஹெலனு, பயப்படாதே; அவள் உனக்கு ஒரு தீங்குஞ் செய்யாது நான் பாதுகாப்பேன்.

**டெமிட்ரியஸ்:**—ஐயா, லைஸாண்டரோ, நீயும் அவளுக்குத் துணையாகவரினும், அவள் ஒருதீங்குஞ் செய்யாது நான் காப்பேன்.

**ஹெலனு:**—அவள் கோபகாலத்தில் மிக்க கூர்மையும் கொடுமையுமுள்ளவள்; பள்ளிக்கூடத்திற் படிக்குங்காலத்திலேயே மகாதுஷ்டக்குணி; அவள் உருவத்திற் சிறியவளாயிருப்பினும் கோபத்தில் மிகப் பெரியவள். 365

**ஹெர்மியா**—சிறியவள் திரும்பவும்! சிறியவள், குறியவள், இவையொழிய வேறு வார்த்தையில்லை. அவள் என்னை இப்படிப் பரிகாஸம்பண்ணுவதை நீயேன் பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? நானிதோ அவளருகிற் செல்வேன்.

**லைஸாண்டர்:**—சிச்சி! தூரத்துப் போ. குறுமணியே! சிறு விரையே! 372

**டெமிட்ரியஸ்:**—நீயாக என் முன்னிட்டுக்கொண்டு என் ஹெலனுவுக்குப் பரிந்து செல்லுகிறாய்? உன் உபசாரத்தை அவள் வேண்டவில்லை; வெறுக்கிறாள். அவள் வழிக்குப் போகாதே; அவளைப்பற்றியும் பேசாதே; அவளுக்கு நீ பரிந்துசெல்லவும் வேண்டுவதில்லை. அவளிடத்து இனிச் சிறிதேனும் நேசம்பாராட்டுவாயாயின், அதற்குப்பெருந் துன்பம் அனுபவிப்பாய். 379

**லைஸாண்டர்:**—இப்பொழுது என்னை ஹெர்மியா கட்டிப் பிடிக்கவில்லை; உனக்கு ஆண்மையுண்டெனின் என்பின் இப்பொழுது வா; யாருக்கு ஹெலனுவிடத்தில் அதிக உரிமையுள்ளது என்பதைத் தனிப்போரால் தெளிவோம்.

---

368. நீ என்றது, லைஸாண்டரை.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

**டெமிட்ரியஸ்:**—வா! இதோ உன்பின் வருகிறேன். தாளையும் கன்னமும்போல் தொடர்ந்து செல்வோம்.
('லைஸாண்டரும் டெமிட்ரியஸ்ஸும் போதல்.')

**ஹெர்மியா:**—என்னம்மா! இவ்வளவு துன்பமும் உன்னாலே. திரும்பிப்போகாதே; நில். 387

**ஹெலனா:**—நான் உன்னை நம்பேன்; வெறுப்பான உன்னிடத்தில் இனி நில்லேன். சண்டைக்கு உன் கைகள் வேகமுள்ளனவாயினும், ஓட்டத்துக்கு என்கால்கள் நீளமுள்ளன. (போதல்.)

**ஹெர்மியா:**—நான் திகைக்கிறேன்; சொல்வதற்கு எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. (போதல்) 393

**ஓபரான்:**—இத்தனையும் உன் அசட்டையால் நேர்ந்தன. தவறித்தான் போனாயோ; அல்லது வேண்டுமென்றே இப்புரளி செய்தாயோ!

**பக்:**—அசரீரிகளின் அரசே, நான் தவறியே போனேன்; இதை நம்பலாம். உடையால் ஆதென்ஸ் நகரத்தோனை அடையாளங்கண்டுகொள்ளும்படி எனக்குச் சொல்லவில்லையோ? நான் ஆதென்ஸ் நகரத்தோன் கண்களிலேயே நேசரசத்தைப்பிழிந்தேன்; அம்மட்டில் நான் செய்தது சரியே; என்மேற் குற்றமில்லை. அஃது இவ்வாறு அமைந்ததும் எனக்கு ஒருவிதத்திற் சந்தோஷமே; அவருடைய சண்டை எனக்கு வேடிக்கையாகவே இருந்தது. 404

**ஓபரான்:**—ஆதென்ஸ் நகரத்து இளைஞர் இருவரும் தனிப்போருக்கு இடந்தேடிச் செல்வதைப் பார்த்தாயோ? நீ போய் இவ்வொளி முற்றும் மறையும்படி இருண்ட மூடுபனியை உண்டாக்கி, ஒருவரையொருவர் நெருங்காமற் செய்து, லைஸாண்டரிடத்து டெமிட்ரியஸ்ஸின் குரலைக்காட்

397. 'அசரீரிகள்', இங்கே கந்தர்வர்கள். இதனை 5-ம் அங்கத்தின் இறுதியிலுங் காண்க.

டித் திட்டியும், டெமிட்ரியஸ்ஸினிடத்தில் லைஸாண்டரின் குரலைக்காட்டி நிந்தித்தும், அவரை வெவ்வேறுபக்கங்களில் பலவாறு அலைக்கழித்துக் களைப்பால் உறங்கச்செய்த பின்னர், லைஸாண்டரின் கண்ணில் இம்மாற்றுரசத்தைப் பிழி. அப்பொழுது முன்னுண்டான மயக்கம்நீங்கக் கண்ணுக்கு இயல்பாகவுள்ள பார்வையுண்டாகும். உறங்கி விழித்த பின் நடந்தனவெல்லாம் அவருக்கு வீண்தோற்றம்போலவும் கனவுபோலவும் காணப்படும். பின்னர் அக்காதலர்கள் தம்முள் என்றும் விடாநேசம்பெற்று ஆதென்ஸ் நகரம் போய்ச் சேர்வார்கள். நீ இக்காரியமாகவிருக்கும்பொழுது, நானும் என்மனைவியிடந்துப்போய் இந்துதேசச்சிறுவனைப் பெற்று, அவளுக்குக் கழுதைமுகத்தோன்மேலுண்டாய காதலைத் தெளிவிப்பேன்; அப்பொழுது எங்கும் ஸமாதானம் உண்டாகும். 423

பக்:—என் கந்தர்வத்தலைவ, இதை விரைவில் நடத்த வேண்டும். இரவு அதிவேகமாய்ச் செல்லுகின்றது. அதோ கிழக்கு வெளுக்கின்றது. அங்குமிங்கும் அலையும் பேய்கள் கூட்டங்கூட்டமாகத் தம் இருப்பிடமாகிய மயானத்தை அடைகின்றன. துர்மரணமடைந்தோரின் ஆவிகளாகிய பேய்கள் தம் யாக்கை இருக்குமிடத்தை நாடிச்செல்லுகின்றன. இரவின்பாற் பிரியாநட்புள்ள இப்பேய்கள் தம் தீச்செயல்களைப் பகல் காணுதபடி, பிரகாசத்தினின்றும் தாமே ஓடியொளிக்கின்றன. 432

ஒபரான்:—நாம் அவ்வகைப்பேய்கள் அல்லேம். நான் எத்தனையோமுறை அருணோதயமானபின்பும் வேட்டையாடிக்கொண்டிருந்திருக்கிறேன். கீழ்த்திசையிற் கதிரவன் தோன்றித் தன்னொளிமயமாகிய செம்மண்டலத்தினின்றும் அழகிய கிரணங்களை வீசி, பச்சைநிறமுள்ள கடலின் உவர் நீரைப் பொன்னிறமாக்குந்துணையும் நான் இச்சோலையில் உலாவி நடப்பதுண்டு. ஆயினும், தாமதியாமல் நம் காரியத்தை விடியுமுன்னரே நிறைவேற்றுவோம். 440

(ஒபரான் போதல்).

பக்:—மேலும் கீழும், கீழும் மேலும், ஊருக்கு உள்ளிலும் வெளியிலும், எங்கும் அவரை ஓடியலையச்செய்வேன். இதோ ஒருவன் வருகிறான்.

[ லைஸாண்டர் மறுபடியும் வருதல் ]

லைஸாண்டர்:—செருக்குள்ள டெமிட்ரியஸ், எங்கே இருக்கின்றாய்? பேசு.

பக்:—அடே துஷ்டா, உருவின கத்தியுங்கையுமாய் இதோ இருக்கிறேன். நீ எங்கே இருக்கிறாய்?

லைஸாண்டர்:—இதோ நேரே உன்னிடத்து வருகிறேன்.

பக்:—அப்படியானால் என்பின் ஓடிவா; செடிகளில்லா வெளியான இடத்துக்குப் போவோம். (லைஸாண்டர், கேட்குங்குரலைத் தொடர்ந்து போதல்.)

[ டெமிட்ரியஸ் பின்னும் வருதல். ]

டெமிட்ரியஸ்:—லைஸாண்டர், ஏ ஏ, ஓட்டம் பிடிப்பவனே, ஆண்மையற்றவனே, ஓடிப்போனாயோ? நிற்பாயானாற் பேசு. 453

பக்:—ஏ ஏ, பயங்கொள்ளி, நட்சத்திரங்களிடத்து உன் பெருமொழி கூறுகிறாயோ? சண்டைக்குச் சந்நத்தமாயிருப்பதாகச் செடிகளுக்குச் சொல்லுகிறாயோ? வெளியிற் புறப்படாய்போலும். வீரமற்றவனே, வெளியில் வா. அடே குழந்தாய், வா. உன்னைப் பிரம்பாலடித்துச் சிக்ஷிப்பேன்; குழந்தைபோன்ற உன்மேற் கத்தியெடுப்பது தருமமன்று. 460

டெமிட்ரியஸ்:—எங்கே நிற்கிறாயோ?

பக்:—என் குரலைத்தொடர்ந்து வா; நாம் இங்குச் செய்வது வீரபரீக்ஷையன்று. (பக்கும் டெமிட்ரியஸும் போதல்.)

---

364. முன்பு டெமிட்ரியஸைக் குழந்தையென்று அழைத்ததற்குப் பொருந்த 'வீரபரீக்ஷையன்று' என்கின்றது.

[ லைஸாண்டர் மறுபடியும் வருதல். ]

லைஸாண்டர்:—அவன் என்முன்னிற் போய்க்கொண்டேயிருக்கிறான்; என்னோடு வீரமும் பேசுகிறான். அவன் கூப்பிடுமிடத்திற் சென்றால், அவ்விடம்விட்டு அகல்கிறான். அந்தத்துஷ்டன் என்னிலும் கால்வேகமுள்ளவன். நான் துரிதமாய்ப் போகப்போக அவன் என்னிலும் துரிதமாய்ப் பறக்கிறான். இவ்விருட்டில் மேடுபள்ளத்திலகப்பட்டு மிக வருந்தினேன். நான் இங்கிருந்து சற்று இளைப்பாறுவேன். (படுத்துக்கொண்டு) ஓ! நற்பகலே, நீ விரைவில் வந்து நிலந்தெரிய ஒளிவீசத்தொடங்கும்பொழுதே நான் டெமிட்ரியஸ்ஸைக் கண்டு இப்பழிக்குத் தக்க பிரதிசெய்வேன். (உறங்குதல்.) 474

[பக்கும் டெமிட்ரியஸ்ஸும் மறுபடியும் வருதல்.]

பக்:—ஓ! ஓ! பயங்கொள்ளி! ஏன் வாராமற் பின்வாங்குகிறாய்?

டெமிட்ரியஸ்:—தைரியமுண்டானால் நான் வருமளவும் நில். நான் தொடர்ந்துவரவர நீ எதையும் தாண்டி ஓடிக்கொண்டேயிருக்கிறாய்; நிற்கத் துணியாய்; என்முகத்தைப் பார்க்கத் தைரியமில்லாய். இப்பொழுது எங்கேயிருக்கின்றாய்?

பக்:—இதோ இருக்கின்றேன்; வா. 482

டெமிட்ரியஸ்:—என்னைப் பரிகாஸம் செய்கின்றாய்; நன்று; நீ இப்பொழுது போ. விடிந்தபின் நான் உனக்கு இதற்குத் தக்க வழி செய்வேன். களைப்பால் இங்குச் சற்றுக் கால்நீட்டிப் படுத்து உறங்குவேன். (படுத்து உறங்குதல்.)

[ ஹெலனு மறுபடியும் வருதல். ]

ஹெலனு:—ஓ! செல்லா இரவே! சிறுகா இருளே! கீழ்த்திசையினின்றும் என் ஆறுதலாகிய ஒளி விரைவில் வாராதோ? நான் இவ்வெறுக்குங் கூட்டத்தினின்றும் எனதூருக்குத் திரும்பிப் போகேனோ? துக்கந்தணிக்கும் உறக்கமே, என்னைச் சற்று மெய்ம்மறந்திருக்கச்செய்வாயாக.

(படுத்து உறங்குதல்.)

**பக்:**—மூவர் வந்தார்கள். இன்னும் ஒருவர் வரவேண்டும். அப்பொழுது நால்வருஞ்சேர்ந்து இரண்டு தம்பதிகளாவார்கள். துயரத்தால் வாடியமுகத்தினளாய் இதோ அவள் வருகிறாள். காமன் மிகத்துஷ்டன்; பெண்பாலோரை இவ்வாறு வருத்துகின்றானே! 496

[ஹெர்ம்யா பின்னும் வருதல்.]

**ஹெர்ம்யா:**—இதுவரையிலும் இவ்வளவு தளர்ச்சியில்லை; இவ்வளவு துயரமில்லை. பனியால் நனைந்து முள்ளாற்கீறுண்டு எடுத்தடிவைக்க வன்மையற்றவளாயினேன். இரண்டு காலும் விழுந்துபோகின்றன. விடியுமளவும் இங்கிருந்து இளைப்பாறுவேன். தெய்வமே, அவருக்குள் போரெனின், லைஸாண்டரைக் காப்பாற்று. (படுத்து உறங்குதல்.) 502

**பக்:**—இத்தரையில் அயர்ந்து உறங்கு; நற்காதலனே, உன் கண்ணில் இம் மாற்று இரசத்தைப் பிழிவேன். (லைஸாண்டருடைய கண்ணில் இரசத்தைப் பிழிந்து) நீ விழித்து உன் முந்தின காதலியின் கண்ணைக்கண்டு களிப்புறுவாயாக. இதனால், அவனவனுக்கு உள்ளது குறையாது என்பதும், சாத்தன் சாத்தியை அடைவான் என்பதும், ஒன்றும் தப்பாது என்பதும், எல்லாம் நன் முடிவைப் பெறுமென்பதும உலகிற்கு நன்கு விளங்குவனவாக. 510

மூன்றாம் அங்கம் முற்றிற்று.

---

## 4-ம் அங்கம்.

**1-வது இடம் :காட்டில் முற்கூறிய இடமே. லைஸாண்டர், டெமிட்ரியஸ், ஹெலனா, ஹெர்ம்யா உறங்கிக்கொண்டிருக்குமிடம்.**

[டிடேனியாவும் பாட்டமும் பயற்றம்பூ, சிலம்பிக்கூடு, பாச்சை, கடுகுவிதை முதலிய கந்தர்விகளோடு வருதல். ஓபரான் பின்னால் மறைந்து நிற்றல்.]

**டிடேனியா:**—வாரும்; இப்புஷ்பசயனத்தில் இரும். உமது

---

507. பண்டைக்காலத்தில் 'சாத்தன்' 'சாத்தி' என்பன ஸர்வஸாதாரணமான பெயர்கள்.

இனிய கன்னங்களைத் தடவிக்கொடுப்பேன். பருத்துச் சமமாயிருக்கும் உமது முடியில் கஸ்தூரி ரோஜா மலரைச் சூட்டுவேன். என் இன்பமே, உமது அழகிய நீண்டகாதில் முத்தமிடுவேன்.

**பாட்டம்:**—பயற்றம்பூ எங்கே?

**பயற்றம்பூ:**—இதோ இருக்கின்றேன்.

**பாட்டம்:**—பயற்றம்பூவே, என் தலையைச் சற்றுச் சொறியும். சிலம்பிக்கூடர் எங்கே?

**சிலம்பிக்கூடு:**—இதோ இருக்கிறேன்.

**பாட்டம்:**—நீர் உமது ஆயுதங்களைக் கைக்கொண்டு எனக்காக நெருஞ்சிமேலிருக்கும் செங்கால் தேனீயைக் கொன்று தேன்கூட்டைக் கொண்டுவாரும். அது செய்வதில் அதிகக் களைப்புண்டாகும்படி கஷ்டப்படவேண்டுவதில்லை. தேன் ஒழுகி வழிந்தோடி உம்மை மூழ்க அடிக்காதபடி, தேன்கூட்டை உடையாமற் சாக்கிரதையாகக் கொண்டுவரல் வேண்டும். கடுகுவிதையார் எங்கே?

**கடுகுவிதை:**—இதோ இருக்கிறேன்.

**பாட்டம்:**—கடுகு விதையாரே, கை கொடும். எனக்கு இவ்வுபசாரங்கள் ஒன்றும்வேண்டுவதில்லை; விட்டுவிடும்.

**கடுகுவிதை:**—உம்முடைய விருப்பம் யாது?

**பாட்டம்:**—குதிரைவீரச சிலம்பிக்கூடர் சொறிகிறார்; அவருக்கு உதவியாக நீரும் சற்றுச்சொறியும். எனக்கு நாவிதனிடத்துப் போகவேண்டும்; முகத்தில் நிரம்ப மயிர்

---

15-16. உம்மை மூழ்க அடிக்காதபடி என்றதனால், கந்தர்வர்கள் உருவத்தில் மிகச் சிறுவரொன்றுணர்க.

19-20. எனக்கு ...... வேண்டுவதில்லை, பாட்டத்தை உயர்ந்தவனாகப் பாவித்துக் கடுகுவிதை கை கொடுக்க யோசித்தபொழுது அவன் சொல்லிய வார்த்தையிது.

22. சொறியும்படி பயற்றம்பூவுக்குக் கட்டளையிட்டதை மறந்து, சிலம்பிக்கூடு சொறிவதாகப் பாட்டம் நினைத்துப்பேசுகிறான்.

வளர்ந்திருக்கிறது. நான் மிக மென்மையான கழுதை யாகையால் மயிர் குறுகுறென்னும்பொழுது சொறிய வேண்டுகிறேன். 27

**டிடேனியா:**—என் இனிய அன்பே, உமக்குக் கானம் கேட்கவேண்டுமோ?

**பாட்டம்:**—பாட்டைக்கேட்டு இரசிக்கும் காதையுடையேன்; பேரொலியுள்ள வாத்தியம கேட்க விரும்புகிறேன்.

**டிடேனியா:**—என் அன்பே. நீர் உண்ணவிரும்புவது யாதோ? 33

**பாட்டம்:**— ஒருபடி உலர்ந்த தீனி ஏதேனும் வேண்டும்; உலர்ந்த புற்கட்டுக்கு ஆசையாயிருக்கிறது. அவ்வுலர்ந்த புலலினது இனிப்பு வேறொன்றுக்கும் வாராது; இரண்டொரு கையளவு காய்ந்த பயறு கிடைக்குமாயின் எனக்கு நிரம்பச் சந்தோஷம். இப்பொழுது எனக்குத் தூக்கம் வருகிறது; உன் பணிப்பெண்கள் என் தூக்கத்தைக் கெடுக்காதிருப்பார்களாக. 40

**டிடேனியா:**—நீர் கண்வளரும்; மரத்தைக் கொடி சுற்றிக்கொள்வதுபோல், உம்மை நான் என் கைகளால் அணைத்துக்கொள்வேன். உம்மிடத்து எனக்கு ஆசை அதிகரிக்கின்றது; காதல் மீறுகின்றது. (அவர்கள் உறங்குதல்.) 44

[பக் வருதல்.]

**ஓபரான்:**—(மறைவினின்றும முன்வந்து) 'ராபின்' வரவு நல்வரவாக; இவ்வினிய காட்சியைக் கண்டாயோ? அவள் சீராட்டு எனக்கு மிக்க பரிதாபத்தை உண்டாக்குகின்றது; அவளுக்கு இரங்குகிறேன். சற்றுமுன்பு அவள் புதிய நறுமலர்க்கோவையை அவனது கன்னத்துச் சுருண்டமயிரிற் சுற்றியதையும், மொட்டினுள்கப்பட்டு அவை

---

25. **நான்......கழுதை,** பாட்டம், தான் கழுதை முகமடைந்ததை உணராமலே தன்னைக் கழுதையென்று இழிவாகச் சொல்லிக் கொள்ளுகிறானென்று பொருள்கொள்ளலாம்.

34-38. **ஒருபடி ......... சந்தோஷம்,** இதுவரையில் மனித உணர்ச்சியோடு பேசிக்கொண்டிருந்தவனுக்குக் கழுதைத்தலையின் சம்பந்தத்தால் கழுதை உணர்ச்சி வந்துவிட்டது.

மலர்ந்தபின் பருத்து நன்முத்து மணியைப்போல் உருண்டுதோன்றும் பனித்துளிகள், அம்மலரின் கண்களில், தமக்குண்டாய இச்சிறுமைக்கு வருந்தி அம்மலர்கள் சிந்திய கண்ணீர்போல் நின்றதையும் கண்டேன். அதற்கு அவளை இகழ்ந்து பரிகாஸஞ்செய்தேன். அவள் என்னைப் பொறுத்தருள வேண்டிக்கொண்டாள். மாற்றுகக் கொண்டுவந்த குழந்தையை என்வசம் விடுவென்றேன்; அக்கணமே 57
அவள் தன்கந்தர்விகளைக்கொண்டு அக்குழந்தையைக் கந்தர்வலோகத்தில் என் பூங்காவனம் சேர்ப்பித்தாள். ஆதலின், அவள் கண்ணிலுள்ள இக்கோரமான மயக்கத்தை மாற்றுவேன். நீ இவ்வாதென்ஸ் நகரத்தோன் தலையிலிருந்து அவ்விரூபத்தைக் களைந்துவிடு. அவனும் இவற்றைக் கனவிற்பட்ட துன்பமெனவெண்ணி, மற்றவரைப்போல் ஊர்போய்ச் சேருவான். இப்பொழுது முதலில் எனது நாயகியை விடுவிப்பேன். (மாற்றுமருந்தால் அவள் கண்ணைத் தொட்டு) நீ எப்பொழுதும்போல் ஆவாயாக. உன் கண்ணுக்கு எப்பொழுதும் இயல்பாயுள்ள பார்வையுண்டாவதாக. மாரன் பூவின் மயக்கத்தை இப்பத்தினிப்பூ மாற்றும் வன்மையையுடையது. என் டிடேனியாவே, என் இனிய அரசியே எழுந்திரு. 70

டிடேனியா:—என் ஒபரானே, என்ன கனவு கண்டேன்! கழுதைமேற் காதல்கொண்டதுபோற் கண்டேனே!

ஒபரான்:—உன் நேசன் அதோ படுத்திருக்கிறன்.

டிடேனியா:—இந்து எவ்வாறு நேர்ந்தது? இப்பொழுது அக்கோரரூபத்தைக் காணக் கண்கூசுகின்றதே.

ஒபரான்:—சற்றுப்பொறு. 'ராபின்', அவன் கழுதைத் தலையை நீக்கிவிடு. டிடேனியா, உன் கந்தர்விகளைக் கானஞ்செய்யச்சொல்; அக்கானத்தால் இங்கு உறங்கும் ஐவரும்

53. சிறுமையென்றது, கழுதையோடு சம்பந்தமுற்றதை.
68. பத்தினிப்பூ, பெண்களைக் கற்போடிருக்கச்செய்யும் வன்மையையுடையதாதலின் இதனைப் பத்தினிப்பூ என்பர்.

இறந்தவர்களிலும் அதிகமாக அயர்ந்து நித்திரை செய்யக்கடவர். 80

**டிடேனியா:**—கானம்; கந்தர்விகாள், நித்திரையையுண்டாக்கும் கானம். (நயமாகக் கானஞ்செய்தல்.)

**பக்:**— நீ உறக்கமுணர்ந்து உனக்குள்ள பேதைக் கண்ணாற் பார்ப்பாயாக.

**ஓபரான்:**—வா; என்னரசியே, கைகோத்தாடவர். இவர் நித்திரைசெய்யுமிடத்தைத் தொட்டிலென ஆட்டுவோம். நம்முள் இருந்த பிணக்கைந் தீர்த்துப் புதிய அன்பு முன்னிலும் அதிகமாக உண்டாகியதால், நாம் நாளை நடுநிசியில், தீஸியுஸ்ஸின் அரண்மனையில், அவன் மணமனைவியோடு தழைத்தோங்கவேண்டி, நம் நற்கூத்தாடுவோம். அப்பொழுது அங்கு மணம்புரிந்திருக்கும் மற்றைக் காதலரும் தம்முள் பிரியா அன்புண்டாகப்பெற்று எல்லா நன்மையையும் அடைவார்களாக. 93

**பக்:**—என்னிறைவ, கேளும்! இதோ, காலைக்குருவி கத்துகின்றது.

**ஓபரான்:**—என்னரசியே, நாமும் இவ்விரவைத்தொடர்ந்து அது செல்லுமிடத்துக்கு ஆடிச்செல்வோம். நாம் சந்திரனிலும் வேகமாய்ச சுழன்று வருவேமலலேமோ? 98

**டிடேனியா:**—என் தலைவ, நாம் ஓடும்பொழுது, எனக்கு இவ்விரவில் இம்மானிடரிடையிற் கிடந்துறங்கும்படி நேர்ந்தது இன்னவாறென்று சொல்ல வேண்டுகின்றேன்.

(போதல். உள்ளில் கொம்பு ஊதல்.)

[தீஸியுஸ், ஹிப்பாலிடா, இஜீயஸ், பரிவாரங்கள் வருதல்.]

**தீஸியுஸ்:**—உங்களில் ஒருவன் போய்க் காடுகாப்போனை அழைத்து வருக. நமது வஸந்தவிழாக்கொண்டாடல்

---

83-84. பக், பாட்டத்தின் கழுதைததலையை நீக்கும்பொழுது சொல்லும் வார்த்தை.

103. 'வஸந்தவிழாக்கொண்டாடல்', இதை 1-வது அங்கம், 1-வது இடம், 179-ம் வரியின் பொருள்விளக்கத்திற் காண்க.

கழிந்தது. இனி என் அன்பே, இப்பொழுது அதிகாலை யாகையால் என் வேட்டைநாயின் கானம் கேட்பாயாக. நாய்கள் தனித்தனியே ஓடியாடித்திரிய அவற்றின் பிணை யலைத் தெறித்துவிடு. காடுகாப்போனெங்கே? பார். (ஒரு வேலைக்காரன் போதல்.) என் இனிய அரசியே, நாம் இம்மலை யின் உச்சியிற்போய் அங்கிருந்து நாய்களின் குரைப்பும் அக்குரைப்பின் எதிரொலியும் ஒன்றுசேர்ந்த இனிய முழக் கத்தைக் கேட்போம். 111

ஹிப்பாலிடா:—நான் ஏத்தனையோ சூரர்கள் கடும்வே ட்டையாடுமிடங்களில் அவருடனிருந்திருக்கிறேன்; எங் கும் இந்த வைபவம் கண்டதில்லை. சோலையில் மாத்திரமோ, ஆகாசத்திலும் ஊற்றங்கரைகளிலும் அருகிலுள்ள எல்லா விடங்களிலும் ஒரே சத்தமாயிருக்கின்றது. இவ்வளவு இனி ய முழக்கமும் இன்னிசைக் குழப்பமும் எங்கும் கேட்ட தில்லை. 118

தீஸியுஸ்:—என் வேட்டைநாய்கள் 'ஸ்பார்டன்' ஜாதி யைச்சார்ந்தவை. அவற்றைப்போல் திறந்தவாயையும் செம்மயிரையும், தொங்கும் தலையையும், தரையிற்புரளும் நீண்ட காதையும் வளைந்தமுழந்தாளையும், 'தெஸ்ஸலியின்' காளைகள்போல் அலைதாடியையும் உடையன. வேட்டை யாடுவதில் விரைவுள்ளனவல்ல. ஆயினும், ஒன்றின்கீழ் ஒன்றாக மணிகளின் நாதம்போல் சங்கீதக் கிரமம் பெற்று ள்ள பலவித ஸ்வரத்தையும் உடையன. 'ஸ்பார்டா' 'தெஸ்ஸலி' முதலிய இடங்களிலிருக்கும் வேட்டுவர் இங் ஙனம் இன்னிசையோடு கூடிய நாய்களைக்கொண்டு வேட் டையாடியறியார். அவ்விசையைக் கேட்கும்பொழுது நீயே தெளிவாய்! ஆ! நில்! இங்கிருக்கும் இத்தேவதைகள் யார்? 131

---

117. இன்னிசைக்குழப்பம் என்பதற்கு, பல ஓசையின் ஒற்றுமை யில்லாச் சத்தமே இன்னிசையாயிருக்கின்றதென்பது பொருள்.

126-127. 'ஸ்பார்டா' 'தெஸ்ஸலி' முதலியன வேட்டைக்குப் பெயர் போன இடங்கள்.

**இஜியஸ்:**—என்னுண்டவனே, இங்கு உறங்குபவள், என்புதல்வி; இங்குப் படுத்திருப்பவன், லைஸாண்டர்; இவன் டெமிட்ரியஸ்; இவள், நெடாரின் புதல்வியாகிய ஹெலனு. இவர்கள் எல்லோரும் இங்கு ஒருமித்திருப்பது எனக்கு அதிசயகரமாயிருக்கின்றது.

**தீஸியுஸ்:**—இவர்கள் வஸந்தவிழாக் கொண்டாடுதற்கு அதிகாலையில் எழுந்தார்போலும்; நாம் விழாக்கொண்டாட வரும் குறிப்பை அறிந்து நம்முடனிருந்து உபசரிக்க இங்கு வந்தாரென்று எண்ணுகிறேன். இஜியஸ், தன் விருப்பம் இன்னதென்று ஹெர்மியா அறிவிப்பதற்குக் குறிப்பிட்ட நாள் இன்றன்றோ?

**இஜியஸ்:**—ஆம், என்னுண்டவனே.

**தீஸியுஸ்:**—கொம்பை ஊதி அவர்களை எழுப்பும்படி வேட்டைக்காரர்களுக்குக் கட்டளையிடு. (உள்ளில் கொம்பும், கூச்சலும். லைஸா., டெமி., ஹெர்., ஹெல., திடுக்கிட்டெழுதல்.) நண்பர்களே, ஸுதினம்; 'ஸெண்ட் வாலெண்டைன்' நாள் சென்றுவிட்டதே. இப்பொழுதுதான் இக்காட்டுப்பட்சிகள் தத்தம் துணைகளைத் தெரிகின்றனவோ?

**லைஸாண்டர்:**—என்னை மன்னித்தருளவேண்டுகின்றேன்; என்னுண்டவனே.

**தீஸியுஸ்:**—நீங்கள் எழுந்து நின்று உறக்கமுணருங்கள். நீங்கள் இருவரும் எதிரிகளான பகைஞரல்லீர்? பகையும் பகையும் மனக்கொதிப்பும் பயமுமின்றி இவ்வாறு ஓரிடத்து உறங்கும் இவ்வைக்கியம் இவ்வுலகில் எங்கிருந்து வந்தது?

---

145. ஸெண்ட் வாலெண்டைன் நாள், பிப்பரவரிமீ 14-ம் தேதி. அன்றைத்தினம், வருஷத்துக்கு ஒருமுறை பட்சிகள் தத்தம் துணையைத் தெரிவதாக வியவகாரம். அன்று காலையில் கன்னிகளும் கலியாணமாகாத ஆடவர்களும் ஸந்திப்பார்களாயின், அவர்களுக்கும் கலியாணமாகுமென்பது பண்டைக்காலத்து அபிப்பிராயம். தீஸியுஸ் இவர்களைக் காட்டில் ஒருமித்துக் கண்டதைப்பற்றி இச்சல்லாப வார்த்தை நிகழ்ந்தது.

லைஸாண்டர்:—என்னாண்டவனே, தூக்கக்கலக்கத்தில் தடுமாறிச்சொல்லுகிறேன். நான் இங்கு இன்னவிதமாக வந்தேனென்று எனக்கு உண்மையாகவே தெரியவில்லை; உறுதியாகச் சொல்வேன். எனக்கு இப்பொழுது ஞாபகத்துள்ளதை உள்ளவாறுரைப்பேன். நான் ஹெர்மியாவோடு இங்கு வந்தேன். எங்களுடைய கருத்து, ஆதென்ஸ் நகரைவிட்டு வேறிடம்போய், அங்கு ஆதென்ஸ் நகரச் சட்டத்தின் துன்பமின்றி.............. 163

இஜீயஸ்:—போதும்; போதும். என் ஆண்டவனே, நீர் கேட்டதே போதும். இவனைச் சட்டத்திற்கு உட்படுத்த வேண்டுகின்றேன். அவர்கள் திருட்டுத்தனமாய்ப் போய், என்னையும், டெமிட்ரியஸ், உன்னையும் மோசஞ்செய்ய எத்தனித்தார்கள். 168

டெமிட்ரியஸ்:—என்னாண்டவனே, அவர்கள் யாருமறியாமல் இக்காட்டுக்கு ஓடிவந்தார்களென்றும், அவர்களுடைய கருத்து இன்னதென்றும் எனக்குச் சீருள்ள ஹெலனா உரைத்தாள். நான் ஆவேசத்தோடு அவர்களைத்தொடர்ந்து இங்கு வந்தேன்; என்மேலுள்ள காதலால் ஹெலனாவும் என்பின் வந்தாள். ஆனால், நலமிக்க என்னாண்டவனே, என்ன மாயமோ அறியேன்—அது மாயையின் வன்மையே—எனக்கு ஹெர்மியாவின்மேலுள்ள நேசம் 176 பனியைப்போல் உருகியோடிவிட்டது; பிள்ளைப்பிராயத்தில் பயனற்ற பொருளின்மேற் பாராட்டிய நேசம்போல் தோற்றுகிறது. இப்பொழுது எனக்கு எல்லாவிசுவாஸமும், மனத்தினன்பும், கண்ணினின்பமும் ஹெலனாவே. என்னாண்டவனே, நான் ஹெர்மியாவைக் காணுமுன் எனக்கும் ஹெலனாவுக்கும் மணம் நிச்சயமாயிருந்தது. பிணியிற் சுவையுணர்ச்சி கெட்டு உணவைவெறுத்தோன் பின்னர்ப் பிணிநீங்கிச் சுவைதோன்ற, அவ்வுணவை ஆவலுடன் வேண்டுவதுபோல், நான் இப்பொழுது ஹெலனாவை

---

165. நீர் என்பதற்குமுன் 'அவர்கள் குற்றமுடையரென்பதற்கு' என்பதை வருவித்துப் பொருள்கொள்க.

வேண்டுகின்றேன்; நேசிக்கின்றேன். இனி என்னாசை அவனிடத்தே நீங்காது நிலைபெற்று நிற்கும். 187

**தீஸியுஸ்:**—இனிய காதலர்களே, உங்களை இங்குச் சந்தித்தது நன்றாயிற்று; உங்கள் கதையைப் பின்பு விவரமாகக் கேட்போம். இஜீயஸ், உன் வேண்டுகோளை நிறைவேற்றேன்; அதற்கு விரோதமாக உத்தரவுசெய்வேன். சீக்கிரத்தில் எமது கலியாணத்தோடு இவருடைய இரண்டு கலியாணங்களையும் நமது தேவாலயத்தில் நடத்துவதாக நிச்சயித்திருக்கிறேன். காலைப்பொழுது கழிந்ததால் நாம் கருதிய வேட்டையை நிறுத்துவோம். எம்மோடு நீங்களும் ஆதென்ஸுக்குத் திரும்பிவாருங்கள். நாம் மூவரும் நம் காதலிகளொடு மணவிழாக்கொண்டாடுவோம். ஹிப்பாலிடா, நாம் போவோம் வா. (தீஸியுஸ், ஹிப்பாலிடா, இஜீயஸ் பரிவாரங்கள் போதல்.)

**டெமிட்ரியஸ்:**—வெகு தூரத்துள்ள மலைகள் மேகமென மாறித் தோன்றுவதுபோல, எனக்கு இரவில் நேர்ந்தனவெல்லாம் சிறுத்து விவரமின்றிக் கலந்து காணப்படுகின்றன. 202

**ஹெர்மியா:**—மாறுகண் பார்வைபோல் ஒவ்வொரு பொருளும் எனக்கு இரட்டை இரட்டையாகத் தோற்றுகின்றது.

**ஹெலனா:**—எனக்கும் அப்படியே. ஒரு இரத்தினத்தைக் கண்டெடுத்ததுபோல் டெமிட்ரியஸைப் பெற்றிருக்கிறேன்; இப்பொழுது என்னுடைமையே; என்னுடைமையென்ற நிச்சயமுமில்லை. 209

**டெமிட்ரியஸ்:**—நாம் உறக்கமுணர்ந்திருக்கிறோமென்பது உனக்கு நிச்சயந்தானா? இன்னும் உறங்கிக்கொண்டு கனவு காண்கிறோமென்று எனக்குத் தோற்றுகிறது.

---

208-209. இப்பொழுது.........நிச்சயமுமில்லை, ஒரு பொருளைக் கண்டெடுத்தவன், ஒருமுறை அதைத் தன்னதென்றும், ஒருமுறை அதற்குரியவன் வருங்கால் கொடுத்துவிடவேண்டுமென்றும் ஐயமுறுவதுபோல் ஐயமுறுகின்றாள்.

இராஜா இங்கு வந்து நம்மைத் தமக்குப்பின் வரும்படி கட்டளையிட்டாரென்று உனக்குத் தோன்றுகிறதோ?

ஹெர்மியா:—ஆம், இராஜா வந்திருந்தார்; என் தந்தையும் வந்திருந்தார்.

ஹெலனா:—ஹிப்பாலிடாவும் வந்திருந்தாள்.

லைஸாண்டர்:—அவர் நம்மை ஆலயத்துக்கு வரும்படி கட்டளையிட்டுப் போனார்.

டெமிட்ரியஸ்:—அப்படியானால் இப்பொழுது நமக்குள்ளது விழிப்பேதான். நாம் அவரைத் தொடர்ந்து போவோம். போகும்வழியிற் கனவைச் சொல்லிக்கொள்வோம்.

(டெமி., லைஸா., ஹெர்ம்., ஹெல., போதல்.)

பாட்டம்:—(கண்விழித்து) என் இறுதிச்சொற்குறிப்பு வந்தவுடன் என்னைக் கூப்பிடு, வருகிறேன். நான் மேற்சொல்லவேண்டியது 'மிகவும் அழகுள்ள பிரமஸ்ஸே' என்றே? ஓ! க்வின்ஸ்! துருத்தி திருத்தும் ப்ளூட்! பழைய பாத்திரம் புதுப்பிக்கும் ஸ்நௌட்! ஸ்டார்வெலிங்! என்னைத் தூக்கத்தில்விட்டு ஓசைப்படாமற் சென்றார்களோ! நான் வெகு விநோதமான ஓர் கனவு கண்டேன்; அஃது ஒருவர் புத்திக்கும் எட்டாத கனவு! இக்கனவை வெளியில் விவரித்துச்சொல்லத் தொடங்குபவன் கழுதையேயாம். எனக்குத் தோற்றுகிறது, நானொரு—அஃது ஒருவனும் சொல்லமுடியாது. நான் நினைக்கிறேன், எனக்கொரு—எனக்கு இன்னது நேர்ந்ததென்று சொல்லத் துணிபவன் பரம மூடன்; சந்தேகமில்லை. நான் கண்ட கனவு மனிதன் கண்ணாற்கேளாதது; காதாற் பாராதது; கையால் உருசிக்காதது; நாவால் ஊகியாதது; மனத்தாற் சொல்லாதது. இக்கனவைப்பற்றி ஒரு பாடற்செய்ய

---

223. இறுதிச்சொற்குறிப்பு, 3-ம் அங்கம் 1-வது இடம் 90-ம் வரியின் விளக்கத்திற் காண்க.

236-238. கண்ணால்.........சொல்லாதது, மிகச் சாதுரியமாகப் பேசுபவன்போற் பாவித்துத் தாறுமாறாக உளறுகிறானென்பது இதனால் எளிதில் விளங்கும்.

க்வின்ஸ்ஸினிடத்தில் ஏற்பாடுசெய்வேன். அதற்குப் 'பாட்டத்தின் கனவு' என்று பெயர்வழங்குக. அப்பாடலை அரசன்முன் கூத்தின் முடிவில் நானே பாடுவேன். ஒருவேளை அவள் (திஸ்பி) இறந்தபின் பாடுவது அதிக உசிதமாக இருக்குமென்றெண்ணுகிறேன். (போதல்)

2-ம் இடம். ஆதேன்ஸ் நகரம்; க்வின்ஸ்ஸினது வீடு.

[ க்வின்ஸ், ப்ளூட், ஸ்நௌட், ஸ்டார்வெலிங் வருதல். ]

க்வின்ஸ்:—பாட்டத்தின் வீட்டுக்கு ஆளனுப்பினீர்களோ? வீடுவந்து சேர்ந்தானோ?

ஸ்டார்வெலிங்:—அவனைப்பற்றி ஒன்றுந் தெரியவில்லை. சந்தேகமில்லை, அவனை யாரோ கொண்டுபோய்விட்டார்களென்றே எண்ணுகிறேன்.

ப்ளூட்:—அவன் வாராவிட்டாற் கூத்துக்கெட்டுப்போம்; ஸரியாக நிறைவேறாது. நிறைவேறுமோ?

க்வின்ஸ்:—ஸாத்தியமிலலை. இவ்வாதென்ஸ் நகரத்தில் அவனைப்போற் பிரமஸ்வேஷம் போடததக்கவன் ஒருவனுமில்லை.

ப்ளூட்:—உண்மையாகவே இல்லை. இவ்வாதென்ஸ் நகரத்தில் கைத்தொழிலாளிகளுள் நலல விவேகமுள்ளவன் அவனே.

க்வின்ஸ்:—ஆம, உருவத்திலும் சிறந்தவன்; உத்தமமான இனிய குரலையுமுடையவன்.

[ஸ்நக் வருதல்]

ஸ்நக்:— ஆலயத்திலிருந்து கலியாணக்கோலத்தோடு நமது இராஜா வருகிறார். அவருடன் வேறு இரண்டு குல மக்களும் தம் மனைவிமார்களோடு விவாகஞ்செய்து கொண்டு வருகிறார்கள். இப்பொழுது நம் கூத்து நடக்குமாயின் நமக்கு நல்ல வருவாய்க்கு வழியுண்டாம்.

ப்ளூட்:—ஓ! வாயாடி, பாட்டம்! ஒருநாளைக்கு இரண்டு பணம் விழுக்காடு உயிருள்ளவளவும் கிடைக்கக்கூடிய உப

காரச்சம்பளத்தை இழந்துவிட்டானே. அவன் பிரமஸ்வேஷம்போட்டு ஆடுந்திறமைக்கு இராஜா நாளொன்றுக்கு இரண்டு பணம் விழுக்காடு சம்பளம் போட்டுக்கொடாமவிரார். அப்படிக் கொடாராயின் நீங்கள் என்னைக் கொல்வது எனக்குச் சம்மதம்.

[பாட்டம் வருதல்.]

பாட்டம்:—இச்சிறுவர்கள் எங்கே?

க்வின்ஸ்:—ஓ! பாட்டம்! ஆ! என்ன நல்லகாலம்!

பாட்டம்:—நான் சொல்லக்கூடிய அதிசயம் நிரம்பவுண்டு. என்னவென்று என்னைக் கேட்கவேண்டுவதில்லை. சொல்வேனானால், நான் ஆதென்ஸ்நகரத்தேனல்லன். ஒவ்வொன்றையும் உங்களுக்கு நடந்தபடி நானே சொல்வேன்.

க்வின்ஸ்;—இனிய பாட்டமே சொல்; கேட்போம்.

பாட்டம்:—ஒரு வார்த்தைகூடச் சொல்லேன். உங்களுக்கு இப்பொழுது நான் இவ்வளவுதான் சொல்வேன்: அரசன் அமுதுசெய்தாயிற்று. உங்கள் உடைகளை ஸித்தப்படுத்திக்கொள்ளுங்கள்; தாடியை நல்ல கயிற்றாற் கட்டிக்கொள்ளுங்கள்; உங்கள் தோற்செருப்புக்குப் புதிய நாடா வேண்டும். விரைவில் அரண்மனை வந்துசேருங்கள். ஒவ்வொருவரும் தாம்செய்யவேண்டியவற்றைச் செவ்வையாக ஞாபகப்படுத்திக்கொண்டு வரவேண்டும். வளர்க்காமல் முடிவான செய்தியைச் சொல்லிவிடுகிறேன். நமது கூத்து அரசனது அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எவ்வாறாலும் திஸ்பிக்குச் செவ்வையான சணல்நூற்புடவை வேண்டும். சிங்கவேஷம் போடுபவன் தன் நகம்

26-27. அப்படிச்......சம்மதம், 'எலிஜபெத்' என்னும் அரசி தன்முன் செவ்வையாக ஆடிய ஒருவனுக்கு வருஷத்துக்கு 20-பவுன் உபகாரச்சம்பளம் நியமித்ததையெண்ணிக் கவி இவ்வாறு கூறினார்போலும்.

38. தாடியை......கட்டிக்கொள்ளுங்கள், அப்படிச் செய்யாவிடில், அரசன்முன்பு ஆடும்பொழுது பொய்த்தாடி சமயத்தில் நழுவிவிடுமென்பது கருத்து.

கலையக்கூடாது. ஒவ்வொருவரும் ஈர உள்ளியோ, வெள்ளுள்ளியோ தின்றுவரவும் கூடாது; நாம் விடும் சுவாஸம் நன்மணமுள்ளதாயிருக்கவேண்டும். நமது கூத்தை இனிய கூத்தென்று ஒப்புக்கொள்வார்களென்பதிற் சந்தேகமேயில்லை. இனி அதிக வார்த்தை வேண்டுவதில்லை; ஓடுங்கள்; சீக்கிரப்படுத்துங்கள். (யாவரும் போதல்.) 52

நான்காம் அங்கம் முற்றிற்று.

## 5-ம் அங்கம்

### 1-வது இடம். ஆதென்ஸ் நகரம், தீஸியுஸ்ஸினது அரண்மனை.

*[தீஸியுஸ், ஹிப்பாலிடா, பிலாஸ்ட்ரேட், பிரபுக்கள், பரிவாரங்கள் வருதல்.]*

**ஹிப்பாலிடா**:—என் தீஸியுஸ்ஸே, அக்காதலர்கள் சொல்வது மிகவும் ஆச்சரியகரமாயிருக்கிறது.

**தீஸியுஸ்**:—அவர்கள் சொல்வதில் உண்மையைக்காட்டிலும் ஆச்சரியமே அதிகம். இங்ஙனமுள்ள அற்புதக் கட்டுக்கதைகளையும், காதலர்களைப்பற்றிய புத்தியில்லாப் பிதற்றல்களையும் நான் ஒருநாளும் நம்பேன். காமுகர்களும் பித்தர்களும் கொதிக்கும் மூளையையுடையவர்கள்; மனத்து உருவமமைக்கும் கற்பிதசக்தியை உடையவர்கள்; ஆதலின், அமைந்த விவேகத்துக்கு அகப்படாதனவெல்லாம் அவர்கள் மூளைக்குச் சிக்கும் பிடிபடுகின்றன. பித்தனும், காமுகனும், கவியும் முற்றும் கற்பிதசக்தியினாலேயே அமைந்தவர்கள். ஒருவன் பரந்த நரகத்துள்ள பேய்களினும் அதிகப் பேய்களைக் காண்கிறான்; அவன்தான் பித்தன். காமுகனோ, பித்தன்போன்றே ஹெலனின் (இரதியின்) 14

---

3-4 உண்மையைக் . அதிகம், ஆச்சரியப்படத்தக்கவை அதிகமும் உண்மையாக நிகழ்ந்தவை அற்பமுமாக இருக்கின்றன என்பது பொருள்.

14-15. ஹெலன், க்ரீஸ் தேசத்து ஓர் ராஜஸ்திரி; இரதியைப் போல் பேரழகுடையவள். ஜிப்ஸிகள், நாடோடிகளாகத் திரியும் ஜாதியர்; குறச்சாதியைப்போல் கறுத்த மேனியர்; குறிசொல்லல் முதலியவற்றாற் பிழைப்பவர்.

அழகை ஜிப்ஸியின் (குறத்தியின்) உருவத்திற் காண்கிறான். கவியின் கண்ணோ, மிக்க உன்மத்தத்திற் சுழன்று வான முதற் பூமிவரையிலும் பூமிமுதல் வானம்வரையிலுமுள்ள வற்றைக் காண்கின்றது. யாருமறியாப் பொருள்களைக் கவி தன் மனத்தாற் கற்பிக்க, அவன் எழுதுகோல் அவற்றிற்கு உருவங்கொடுத்து அம்மாயாச் சூனியத்திற்கு இருப்பிடமும் பெயரும் நல்குகின்றது. இப்படிப்பட்ட குணமுடையோர் மிக்க கற்பிதசக்தியை யுடையோராதலின், மனத்தாற் கிரகிக்கத்தக்க மகிழ்ச்சியைக் காணுமிடத்து அம்மகிழ்ச்சியின் பிறப்புக்குக் காரணமானவற்றையும் கற்பித்துக் கொள்ளுகின்றார்கள். இரவில் மனத்துத்தோன்றும் பயத்தாற் செடியானது கரடியாக எளிதில் எண்ணப்படுகிறது. 26

**ஹிப்பாலிடா:**—அவர் தங்களுக்கு இரவில் நேர்ந்தனவென்று சொல்லியவையெல்லாம் ஒரு தொடர்ச்சியான கதையாதலையும், அவர்களுக்கு அப்பொழுதுண்டான மனவேறுபாடுகளையும் யோசிக்குமிடத்து அவை முற்றும் அவருடைய மனத்தோற்றத்தால் விளைந்தவையல்லவென்றே நாம் எண்ணவேண்டும். அம்மாற்றின் பயனாக நிலையான மாறுதல் டெமிட்ரியஸ்ஸினிடத்தில் இப்பொழுதும் காணப்படுகின்றது. ஆயினும் அவை நாம் வியக்கத்தக்க அதிசயமே.

**தீஸியுஸ்:**—இதோ, அக்காதலர்கள் இன்புற்று உவகையோடு வருகிறார்கள். 37

[லைஸாண்டர், டெமிட்ரியஸ், ஹெர்மியா, ஹெலனா, வருதல்.]

நண்பர்களுக்கு நாளுக்குநாள் மனத்து அன்பு வளர்க; மேன்மேலும் இன்பம் பெருகுக.

**லைஸாண்டர்:**—எம்முடையவற்றிலும் அதிகமான அன்பும் ஆநந்தமும் உமக்கு நடக்குமிடத்தும் உண்ணுமிடத்தும் உறங்குமிடத்தும் மற்ற எங்கும் உண்டாகுக. 42

---

33. மாறுதலாவது, டெமிட்ரியஸ்ஸினுடைய காதல் ஹெர்மியாவிடத்தினின்றும் முற்றுநீங்கி ஹெலனாவினிடத்தில் நிலைபெற்றிருத்தல்.

**தீஸியுஸ்:**— வாருங்கள்; நம் சிற்றுண்டிக்கும் நாம் உறங்கும் நிசிவேளைக்கும் இடையில் ஒரு ஜாமகாலம் செல்லவேண்டுமே. அக்காலம் சுகமாகக் கழிவதற்கு என்ன வேஷக்கூத்து வேண்டும்; என்ன நாட்டியம் வேண்டும்? நம்முடைய உல்லாஸ விஷயங்களுக்குக் காரியக்காரனாயிருப்பவன் எங்கே? என்னவிதமான வேடிக்கைகள் கையிருப்பில் இருக்கின்றன? நமக்கு ஒருவேலையுமில்லா நீண்டகாலத்தின் துன்பத்தைத் தணிப்பதற்கு நாடகம் ஒன்றுமில்லையோ? பிலாஸ்ட்ரோட்டைக் கூப்பிடு.

**பிலாஸ்ட்ரோட்:**—பராக்கிரமமுள்ள தீஸியுஸ்ஸே, இதோ இருக்கிறேன். 53

**தீஸியுஸ்:**—பொழுதுபோக்கிற்கு என்ன நாடகம் கைவசத்தில் வைத்திருக்கிறாய்? வேஷக்கூத்தோ, பாட்டோ? இப்படிப்பட்டது ஒன்றுமில்லாவிடில் நாம் பொழுதுபோக்குவது எப்படி?

**பிலாஸ்ட்ரோட்:**—இன்ன இன்ன வேடிக்கைகள் ஸித்தமாயிருக்கின்றனவென்பது இச்சுருக்கத்திற் குறிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் முதலிற் காணவிரும்புவது இன்னதென்று அருளிச்செய்ய வேண்டுகின்றேன். (சுருக்கத்தை கொடுத்தல்.)

**தீஸியுஸ்:**—(படித்தல்) "ஸென்டார்ஸ்ஸோடு ஹெர்க்யுலிஸ் செய்த போரைப்பற்றிய பாட்டை ஆதென்ஸ் நபும்ஸகன் ஒருவன் சுரமண்டலத்தில் வாசித்தல்." இது வேண்டுவதில்லை; என் இனத்தானாகிய ஹெர்க்யுலிஸ்ஸின் இவ்வெற்றிப்பாட்டை என் காதலிக்குச் சொல்லியிருக்கிறேன். 67

---

62. ஸென்டார்ஸ்-என்பவர்கள் மலைநாடர்; குதிரையேற்றத்தில் வல்லவர். ஹெர்க்யுலிஸ்.—பீமஸேனனைப்போல் அதிபலவான். (1-வது அங்கம் 2-ம் இடம் 33-ம் வரியிற் காண்க.) இவனும் தீஸியுஸ்ஸும் தாய்வழிச்சகோதரரென்று சொல்லப்படுவார்.

64. சுரமண்டலம், ஓர்வகை வாத்தியம்.

(படித்தல்) "குடிகாரப்பெண்கள் தம் குடிவெறிக்கலகத்தில் த்ரேஷ்ய தேசத்து ஸங்கீதவித்வானுடைய குடலைக் கிழித்தல்.'' இது பழைய ஆட்டம்; நான் 'தீப்ஸ்' நகரத்தினின்றும் வெற்றிபெற்று வரும்பொழுது ஒருமுறை ஆடப்பட்டது. (படித்தல்) "ஒரு பெரிய கவி வறுமையால் இறந்ததற்காக ஒன்பது கலைமகளும் புலம்பல்.'' இது கடுமையான வசைப்பாட்டு; நமது விவாககாலத்துக்கு ஒத்ததன்று. (படித்தல்) "பிரமஸ்ஸையும் அவன் நேசிக்கும் திஸ்பியையும்பற்றியதான நீண்ட சிறுகாட்சி, துக்க மகிழ்ச்சி.'' மகிழ்ச்சி, அது துக்ககரமானது! நீண்டதும் குறுகியதும்! சூடுள்ள பனிக்கட்டி என்பதுபோலிருக்கிறது. இவ்வொவ்வாதனவற்றுள் நாம் பொருத்தங்காண்பதெப்படி? 79

பிலாஸ்ட்ரேட்:—என்னாண்டவனே, இஃது ஒரு கூத்தின்பெயர்; பெயரே வெகு நீளம்! இரசமில்லாத கூத்திது. கூத்து முழுவதிலும் சொற்பொருத்தம் ஒன்றேனுமில்லை. அது துக்ககரமானதுதான்; ஏனெனின், பிரமஸ் தற்கொலை செய்துகொள்ளுகிறான்; இதை அவர் 'ஒத்திகை' பார்க்கும்பொழுது கண்டேன். அப்பொழுது நான் சிரித்தசிரிப்பால் எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது. 86

தீஸியுஸ்:—இதை ஆடுபவர்கள் யார்?

பிலாஸ்ட்ரேட்:—வேலைசெய்துசெய்து கை உரங்கொண்ட இந்நகரத்துக் கைத்தொழிலாளிகள். அவர்கள் இதுவரையில் மனத்தால் வேலைசெய்தே அறியார். உம்முடைய

---

68-70. **குடிகாரப்பெண்கள் ............ கிழித்தல்,** த்ரேஷ்ய தேசத்தோனாகிய ஸங்கீத ஸாஹித்திய வித்வானாகிய 'ஆர்பியஸ்' என்பவன், கல் மரம் முதலியனவும் உருகும்படி பாடுந்திறமையை யுடையவன்; தன் மனைவியை இழந்தபின், பெண்பாலோர் கூட்டத்தையே துறந்திருந்ததற்காக இவ்வகை மரணமடைந்தான்.

73. கலைமகள் ஒன்பதின்மர் என்று வியவகாரம்.

83-86. இக்கூத்து ஒரேமுறை அரைகுறையாக 'ஒத்திகை' பார்க்கப்பட்டிருக்க, அவர் அதை ஒத்திகைபார்க்கையில் தான் கண்டபொழுது தனக்குண்டான சிரிப்பால் கண்ணீர்வந்துவிட்டதென்று பிலாஸ்ட்ரேட் கூறுவது பொருத்தமுடையதன்று.

கலியாணத்தன்றிரவில் இக்கூத்தை ஆடவேண்டுமென்று தமக்குப் பழக்கமில்லாத காரியத்திலிறங்கி அதில் மிகவும் வருந்தி உழைத்திருக்கிறார்கள்.

**தீஸியுஸ்:**—நாம் அதைக் காண்போம். 94

**பிலாஸ்ட்ரோட்:**—வேண்டுவதில்லை, என் உயர்குலத்தலைவ. இது நீர் காணத்தகுந்ததன்று. நான் முழுவதுங்கேட்டேன். அதில் ஒன்றுமில்லை. ஆனால், உமக்குத் தங்களாலியன்ற உபசாரம் செய்யவேண்டுமென்று மனப்பூர்வமாகவெண்ணி எத்தனையோ படாத பாடெல்லாம் பட்டு அவர்கள் அக்கூத்தைப் பாடஞ்செய்திருக்கிறார்கள். இதை நினைத்து ஒருவேளை நீர் அவர்கள் கூத்தைப் பார்க்க விரும்பலாமேயன்றி மற்றைப்படி அக்கூத்தில் ஒன்றுமில்லை. 102

**தீஸியுஸ்:**—அக்கூத்தை நான் அவசியம் காண்பேன். கபடமற்றுத் தம் கடமையைச் செலுத்துவோர் செய்வதொன்றும் தப்பாகாது. ஆதலின், நீ அவர்களை இங்கு அழைத்துவா. மாதர்களே, நீங்கள் உங்களிடத்திலிருங்கள்.

(பிலாஸ்ட்ரோட் போதல்.)

**ஹிப்பாலிடா:**—மனப்பூர்வமாகத் தம் கடமையைச் செலுத்தவெண்ணும் பேதை ஜனங்கள் தங்கள் வன்மைக்கு எட்டாத காரியத்தைத் தொடங்கி அதிற் கஷ்டப்பட்டுத் தப்பிப் போவதைப் பார்க்க எனக்கு விருப்பமில்லை. 110

**தீஸியுஸ்:**—என் மதுரமே, அப்படி ஒன்றுமிராது.

**ஹிப்பாலிடா:**—ஆட்டத்தில் அவர்களுக்கு ஒன்றுந் தெரியாதென்று அவன் சொன்னானே.

**தீஸியுஸ்:**—அவர்கள் ஒன்றுஞ்செய்யாதபொழுது அவர்களுக்குப் பிரியவசனம் சொல்வதுதான் நமது அதிக அன்புடைமையைக் காட்டுவது. அவர் செய்யும் தப்புக்களை அறி

---

**96. நான் முழுவதும் கேட்டேன்,** அவ்வாறு கேட்டது இன்ன பொழுதென்று நாடகத்திற் சொல்லப்படவில்லை. முந்தியுள்ள **88-96-ம் வரிகளின் விளக்கத்திற் காண்க.**

ந்து நாம் சந்தோஷிக்கவேண்டும். மனப்பூர்வமாகக் கட
மைசெலுத்துவோன், திறமைக்குறைவால், செவ்வையாகச்
செய்துமுடிக்காத காரியத்தை மேன்மக்கள் அக்காரியத்
தின் முடிவுக்குத் தக்கபடி மதிக்காமல் அதைச் செய்தோ
னுடைய அளவுக்குத் தக்கபடி மதிப்பார்கள். நான் 121
போய்க்காணுமிடங்களிலெல்லாம் கற்றறிந்த பெரியோர் அ
நேகர், எனக்கு நல்வரவுகூறி உபசாரவார்த்தைகள் சொல்
வதற்கெண்ணி இன்னது சொல்வதென்று முன்பே யோ
சித்து நிச்சயஞ்செய்துவைத்துக்கொள்ளுவதுண்டு. அவ்
வாறு நிச்சயஞ்செய்துக்கொண்டதை என்முன் சொல்லிய
பொழுது அவர் முகமவெளுத்து விடவிடென நடுங்கியதை
யும், வாக்கியத்தினிடையில் தாறுமாறாக நிறுத்தியதையும்,
பயத்தால் வழக்கமாயுள்ள உச்சரிப்பையிழந்து வார்த்தை
எழும்பாமல் தொண்டையடைபட்டு முடிவில் நல்வரவு
கூறுமலே ஊமைபோல் நின்றதையும், எத்தனையோமுறை
கண்டிருக்கிறேன். என் இன்பமே, இச்சமயங்களில் அவர்
மௌனமே எனக்கு நல்வரவுகூறி எல்லா உபசாரமும் 133
செய்ததாக நான் எண்ணுதல் வழக்கம். பயந்து தம் கடமை
யைச் செலுத்துவோரின் மௌனமானது, தழுதழுப்பின்
றித் தைரியத்தோடுவரும் சொல்வன்மையுள்ள மொழி
யால் தெரிவிப்பதுபோல் என்னிடத்து அவருக்குள்ள பக்
தியையும் அன்பையும் செவ்வையாகத் தெரிவிக்கும். ஆத
லின், என் அன்பே, பேசமாட்டாத நிஷ்கபடியின் ஸ்வற்
பப் பேச்சில் அதிகப்பேச்சின் பொருளிருக்கின்றதென்
பது எனது கொள்கை.

---

118-121. திறமைக் குறைவால்.........மதிப்பார்கள், செய்யும் திறமையில்லாத இவர்கள் இவ்வளவு செய்தார்களேயென்று மேன் மக்கள் சந்தோஷிப்பார்களேயன்றி, காரியம் மேன்மையாக முடிய வில்லையென்று எண்ணார்கள் என்பது பொருள்.

[பிலாஸ்ட்ரேட் பின்னும் வருதல்.]

**பிலாஸ்ட்ரேட்:—** என்னாண்டவனே, கூத்தின் முன்னுரை ஸித்தமாயிருக்கிறது; உத்தரவானால் தொடங்கச் சொல்லுவேன். 144

**தீஸியுஸ்:—**முன்னுரை ஆரம்பிக்கப்படுக. (உள்ளில் காளம் முதலிய வாத்தியம் கோஷித்தல்.)

[முன்னுரைகூற க்வின்ஸ் வருதல்.]

**முன்னுரை:—** நாங்கள் செய்வது அபசாரமென்னின், நாங்கள் வருவது அவ்வெண்ணத்தோடன்றே? எங்களுக்குள்ள அற்பத் திறமையைக்காட்ட உண்மையான ஆவலோடு வருகின்றோம. எங்கள் உத்தேசமதுவே; யோசியுங்கள்; வருகிறோம், கெட்ட எண்ணத்தோடு. வரவில்லை நாங்கள் உங்களைத் திருப்திபடுத்தக்கருதி. உங்கள் சந்தோஷத்தை நாடினவர்கள் இங்கு வரவில்லை. உங்களை வருத்துவதற்கு ஆட்டக்காரர்கள் இதோ இருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்டத்திலிருந்து நீங்கள் அறியக்கூடியவற்றை அறிந்துகொள்ளலாம. 155

**தீஸியுஸ்:—**இவன் நிறுத்தவேண்டியவிடத்து நிறுத்தாமல் தாறுமாறாகச் சொல்லுகிறான்.

---

142. முன்னுரை, 3-ம் அங்கம் 1-வது இடம் 21-ம் வரியின் விளக்கத்திற்காண்க.

146-155. க்வின்ஸ், தான்கருதியதற்கு நேர் விரோதமான பொருள் தோன்றும்படி, முன்னுரையைப் பதங்களினிடையே தாறுமாறாக நிறுத்திக் கூறுகிறான். அவன் கருதியது இது:—நாங்கள் செய்வது அபசாரமென்னின், நாங்கள் வருவது அவ்வெண்ணத்தோடன்றே. எங்களுக்குள்ள அற்பத் திறமையைக்காட்ட ஆவலோடு வருகின்றோம். எங்கள் உத்தேசம் அதுவே. யோசியுங்கள்; வருகிறோம். கெட்டவெண்ணத்தோடு வரவில்லை. நாங்கள் உங்களைத் திருப்திப்படுத்தக்கருதி உங்கள் சந்தோஷத்தை நாடினவர்கள்; இங்கு வரவில்லை உங்களை வருத்துவதற்கு. ஆட்டக்காரர்கள் இதோ இருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்டத்திலிருந்து நீங்கள் அறியக்கூடியவற்றை அறிந்துகொள்ளலாம்.

147. அவ்வெண்ணத்தோடன்றே?, அவ்வெண்ணத்தோடன்றோ? அதாவது அவ்வெண்ணத்தோடேயே என்றபடி.

லைஸாண்டர்:—முரட்டுக் குதிரைக்குட்டியை நடத்துவதுபோல் அவன் இம்முன்னுரையை நடத்தினான்; நிறுத்தும் முறையே அறியான். இதிலிருந்து ஒரு நீதி விளங்குகின்றது: பேசுவது மாத்திரம் போதாது; சரியாயும் பேசவேண்டுமென்பது.

ஹிப்பாலிடா:—அவன் முன்னுரையை வாசித்தது குழந்தை புல்லாங்குழல் வாசிப்பதுபோலிருந்தது; ஒழுங்குபடுத்தப்படாத வெறுஞ்சத்தமே.

தீஸியுஸ்:—அவன் பேச்சு ஒரு பின்னற்சங்கிலிபோலிருந்தது. எங்கும் பழுதில்லை; ஆனால் எல்லாம் தாறுமாறு. அடுத்தவன் யார்? 168

[பிரமஸ், திஸ்பி, சுவர், நிலவு, சிங்கம் வருதல்.]

விவரஞ்சொல்வோன்:—குலமக்களே, இக்காட்சியைக் கண்டு நீங்கள் ஒருவேளை அதிசயிப்பீர்கள். எல்லாம் வெளியாகும்வரையில் உங்களுக்கு அதிசயமாகவேயிருக்கும். நீங்கள் அறியவிரும்புவீர்களாயின், இம்மனிதன்தான் பிரமஸ் ; இவ்வழகுள்ள மாது திஸ்பி; சுண்ணாம்பும், மண்ணும் மணலுஞ்சேர்ந்த சாந்தும் பூசிக்கொண்டிருக்கும் இவன் தான் சுவர். இத்துஷ்டச் சுவர்தான் குறுக்கேநின்று காதலர்களைப் பிரித்துவைத்திருந்தது. இச்சுவரின் துவாரத்தின்வழியாக ஐயோ! பாவம்! தங்கள் இரகசியங்களை ஒருவர் காதுக்குள் ஒருவர் ஓதித் திருப்தியடைந்திருந்தார்கள். இலாந்தரும், நாயும், ஒருகட்டுச்சுள்ளியும் கொண்டிருக்கும் இவன் நிலவு; நிலவில் இக்காதலர்கள் நைனஸ்ஸின் ஸமாதியருகில் யாதொரு குற்றமுமின்றிச் சந்தித்துத் தம்நேசத்தைப்பாராட்ட நிச்சயித்துக்கொண்டார்கள். 182 சிங்கமென்று சொல்லப்படும் இப்பயங்கரமான மிருகமானது இரவில் முதலில்வந்த உண்மையுள்ள திஸ்பியை வெருட்டித்துரத்தியது. அவள் ஓடுகையில் தன் மேற்றுணியைக் கீழே நழுவவிட, அத்துணியைச் சிங்கம் தன் உதிரம்நிறைந்த வாயாற்கவ்விக் கறையாக்கிற்று. உடனே தைரியமுள்ள இனிய பாலியனான பிரமஸ் அங்கு வந்து

தன் அன்புள்ள திஸ்பியின் மேற்றுணியைக்கண்டு அவள் இறந்தாளென்று நிச்சயித்து உடைவாளையுருவித் தன் மார்பைப்பிளந்து கொதிக்கும் இரத்தத்தை வெளியாக்கி னன். பின்னர் முசுக்கட்டைச்செடி மறைவில் நின்ற திஸ்பி அப்பால் வந்து அவனைக்கண்டு அவன் மார்பினின்றும் வாளைப்பிடுங்கித் தன்னுயிரை மாய்த்துக்கொண்டாள். இனி மற்றைவைகளைப்பற்றிச் சிங்கமும், நிலவும், சுவ ரும், இரண்டு காதலர்களும் உங்கள்முன் வந்து எல்லா விவரமும் சொல்லுவார்கள். 197

(விவரஞ்சொல்லுபவன், திஸ்பி, சிங்கம், நிலவு போதல்.)

**தீஸியுஸ்:**—சிங்கமும் பேசுகிறதானல் அதிசயகரமா யிருக்கும்.

**டெமிட்ரியஸ்:**—அதிசயம் ஒன்றுமில்லை, என்னுண்ட வனே. கழுதையில் அநேகம் பேசுமானல் சிங்கத்தில் ஒன்றுபேசாதோ? 202

**சுவர்:**—இக்கூத்தில், ஸ்நௌட் என்று பெயருள்ள என்னுடைய பங்குக்குச் சுவர்வேஷம் வாய்த்தது. நான் துவாரமுள்ள சுவரொன்றும் அத்துவாரத்தின்வழியாகப் பிர மஸஹும் திஸ்பியும் தங்கள் அந்தரங்கங்களைப் பேசிக் கொண்டுவந்தார்களென்றும் பாவித்துக்கொள்ளும்படி உங் களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இச்சுண்ணும்பும், கல்லும் மண்ணும் மணலுஞ் சேர்ந்தசாந்தும், நான் சுவரென்பதைச் செவ்வையாகக் காட்டுகின்றன. இத்துவாரத்தின் இருபுற மும் பாருங்கள். இதன்வழியாகத்தான் பயந்த அக்காதலர் கள் தம்இரகசியங்களைப் பேசிக்கொண்டுவந்தார்கள். 212

**தீஸியுஸ்:**—சுண்ணும்பும் மயிரும இதிலும செவ்வை யாகப் பேசுமோ?

**டெமிட்ரியஸ்:**—இது வெகு விசித்திரமான சுவர். இப் படிச் சுவர் பேசக் கேட்டதேயில்லை.

---

201. கழுதை, கழுதைபோன்ற மூடர்.

தீஸியுஸ்:—பிரமஸ் சுவரினருகில் வருகிறான்; பேசாதிருங்கள். 218

பிரமஸ்:—ஓ, பயங்கரமான இரவே, ஓ! மைபோல் இருண்ட இரவே, பகலில்லாத காலத்துத் தோன்றுமிரவே! ஓ! இரவே, எனது திஸ்பி தான்சொன்னதை மறந்துவிட்டாள்போல் தோற்றுகிறதே. ஓ! சுவரோ, அவள் தந்தையின் நிலத்திற்கும் என்னிலத்திற்கும் இடையேயுள்ள இனிய சுவரோ, காண்போர் காதலிக்குஞ் சுவரோ, உன் துவாரத்தைக் காட்டு, நான் எட்டிப்பார்க்கிறேன். (சுவர் இரண்டு விரல்களை உயர்த்தித் துவாரம்போற் காட்டல்.) மரியாதையுள்ள சுவரோ, இந்நன்றியை மறவேன். இதற்கு உன்னை வருணபகவான் காப்பாற்றுவாராக. ஆ! நான் பார்ப்பது என்ன? என் திஸ்பியைக் காணேனே. ஓ, துஷ்டசுவரோ, உன்வழியாக என் இன்பத்தைக்காணேன். என்னை இவ்வாறு வஞ்சித்ததற்கு உன் கல் நாசமுறுவதாக. 231

தீஸியுஸ்:—இச்சுவர் அறிவுள்ளதாகையால் திருப்பித் திட்டுமென்று தோற்றுகிறது.

பிரமஸ்:—ஐயா, அப்படித் திட்டாது. "வஞ்சித்ததற்கு உன் கல் நாசமுறுவதாக" என்பது திஸ்பியின் இறுதிச்சொற்குறிப்பு. இப்பொழுது அவள் வருவாள்; நான் சுவரின்வழியாக அவளைப் பார்ப்பேன். எல்லாம் நான் சொல்லியபடியே நேரும்; பாருங்கள். அதோ அவள் வருகிறாள். 239

திஸ்பி:—ஓ, சுவரே, என்னழகுள்ள பிரமஸையும் என்னையும் இவ்வாறு பிரித்திருப்பதற்கு என்னழுகையை எத்தனையோ முறை கேட்டிருக்கிறாய். மயிராலும் சுண்ணம்பாலும் சேர்க்கப்பட்ட உன்னுடைய கற்களை என்னுடைய சிவந்த உதடுகள் எத்தனையோ முறை முத்தமிட்டிருக்கின்றன.

---

236. இறுதிச்சொற்குறிப்பு, 3-ம் அங்கம் 1-வது இடம் 90-வரியின் விளக்கத்திற் காண்க.

**பிரமஸ்:**—ஒரு சத்தத்தைப் பார்க்கிறேன். நான் இப்பொழுது துவாரத்தின் அருகிற்போய்த் திஸ்பியின் முகத்தைக் கேட்கக்கூடுமோவென்று அறிகிறேன்.

**திஸ்பி:**— நீ என் காதலனோ? காதலன்தானென்று எண்ணுகிறேன். 250

**பிரமஸ்:**—நீ எவ்வாறு எண்ணினும நான் உன்னழகுள்ள காதலனே. லிமாண்டரைப்போல் உறுதியுள்ள காதலன்.

**திஸ்பி:**—நானும் ஹெலனைப்போல் உண்மையான அன்புள்ளவள்.

**திஸ்பி:**—இவ்விழிந்த சுவரின் துவாரத்தின் வழியாக எனக்கு ஒரு முத்தங்கொடு.

**திஸ்பி:**—நான் சுவரின் துவாரத்தை முத்தமிடுகிறேன்; உன் உதட்டில் முத்தங்கொடுக்கவில்லை.

**பிரமஸ்:**—நீ இப்பொழுது என்னை நைனஸ்ஸின் ஸமாதியருகிற் சந்திப்பாயா? 261

**திஸ்பி:**—உயிர் இருக்குமோ போகுமோ, எவ்விதத்திலும் நான் உடனே வருவேன். (பிரமஸ்ஸும் திஸ்பியும் போதல்.)

**சுவர்:**—சுவராகிய என் காரியம் ஆய்விட்டது. ஆதலால் சுவர் போகிறேன். (போதல்.)

**தீஸியுஸ்:**—அடுத்திருந்தவர்களைப் பிரித்திருந்த சுவர் இடிந்துபோயிற்று.

---

**246-248.** நான்காம் அங்கத்தின் இறுதியிற் கூறியதுபோல் இங்கும் தாறுமாறாகக் கூறுகிறான்.

**252-255.** லிமாண்டர்..............ஹெலன், பிரமஸ்ஸும் திஸ்பியும் லியாண்டர், ஹீரோ என்ற பெயர்களைத் தப்பாக லிமாண்டர் ஹெலன் என்று கூறுகிறார்கள். லியாண்டர் என்பவன் தன்காதலியாகிய ஹீரோவைக் காணவேண்டி இரவுதோறும் சமுத்திரக்கால்வாயை நீந்திச்செல்வது வழக்கமாயிருந்தது. அவ்வாறு நீந்துகையில் ஒருநாளிரவில் நீரில் மூழ்கி இறந்துவிட்டான். அதையறிந்து ஹீரோவும் கடலில் குதித்துவிட்டாள்.

டெமிட்ரியஸ்:—சுவர் இப்படி ஒற்றுக்கேட்குமானால் அதை இடிக்காமல் தீருமோ என்னாண்டவனே.

ஹிப்பாலிடா:—இத்தனை பைத்தியமுள்ளதை நான் எங்குங் கேட்டதில்லை. 271

தீஸியுஸ்:—நாடகங்களில் மிகச் சிறந்தவேடமும் உண்மையின்போலிதானே. மிக இழிந்ததும், கற்பிதசக்தியால் தன் குறை நீங்கப்பெறுமாயின, அப்போலியிலும் இழிந்ததாக ஆகுமோ?

ஹிப்பாலிடா:—உம்முடைய கற்பிதசக்தியால் அப்படியாகவேண்டுமேயன்றி அவர்களுடைய கற்பிதசக்தியாலன்று. 278

தீஸியுஸ்:—தம்மைப்பற்றி அவர்கள் எண்ணுவதிலும் இழிவாக நாம் அவரைப்பற்றி எண்ணாதபடி, நம் கற்பிதசக்தியை அவரிடத்து உபயோகப்படுத்தினாலே போதும். அப்பொழுது அவர்கள் சிறந்தவர்களாகவே காணப்படுவார்கள். மனித உருவத்திலும் சிங்க உருவத்திலும் இதோ இரண்டு சிறந்த மிருகங்கள் வருகின்றன. 284

[சிங்கமும் நிலவும் வருதல்.]

சிங்கம்:—தரையில் ஊரும் மிகச்சிறிய சுண்டெலியைக் கண்டும் பயப்படும்படியான மெல்லிய குலமாதர்காள், சிங்கம் கோபத்தோடு கர்ஜிக்கும்பொழுது ஒருவேளை மிக நடுங்குவீர்கள். அப்பொழுது மூட்டுவேலைக்காரனாகிய நான்தான் அக்கொடிய சிங்கவடிவங்கொண்டு வந்திருக்கிறேனென்றும், உண்மையான சிங்கமன்றென்றும் நினைத்துக்

---

268. 'சுவர்க்கும் காதுண்டு' என்பது இங்கிலீஷிலுள்ள பழமொழி; அதாவது, சுவரின் மறைவிலிருந்து ஒற்றுக்கேட்பவர் உளராயின், அவ்விடத்து இரகசியம் பேசுவது சரியன்று என்றபடி. ஒற்றுக்கேட்பவனைச் சுவர்க்கோழியென்று கூறுவது தமிழர் வழக்கம். ஒற்றுக்கேட்டல் என்பது இக்காலத்து ஒட்டுக்கேட்டல் என்றுகூறப்படும்.

273-275. குறைவுற்றதும் கற்பிதசக்தியால் குறைவற்றதாகப் பாவிக்கப்படலாமாதலின், அவர்களுடைய ஆட்டத்தில் என்ன குறையிருப்பினும் அவ்வாட்டம், கற்பிதசக்தியால், குறைவற்ற நல்ல ஆட்டமாகவே காணப்படுமென்பது கருத்து.

கொள்ளுங்கள். என்னைச் சிங்கமென்று நினைப்பீராயின் அதைவிட எனக்கு வேறு துக்கமில்லை. 292

**தீஸியுஸ்:**—வெகு சாதுவான மிருகம்; நல்ல பகுத்தறிவுடையது.

**டெமிட்ரியஸ்:**—நான் கண்டவற்றுள் இவ்வளவு நல்ல மிருகம் எங்குமில்லை.

**லைஸாண்டர்:**—இச்சிங்கம் சௌரியத்தில் பிரத்தியக்ஷ நரி.

**தீஸியுஸ்;**—உண்மையே; விவேகத்திலோ, சாட்சாத் வாத்து. நன்று; சந்திரன் சொல்வதைக் கேட்போம்.

**சந்திரன்:**—இந்த 'லாந்தர்' கோடுடையபிறை. 300

**டெமிட்ரியஸ்:**—அப்படியாயின், அவன் தன் தலையிற் கொம்பைத் தரிக்கவேண்டும்.

**தீஸியுஸ்:**—அவன் இளம்பிறையல்லன்; பூரணசந்திரனாதலின், அவன் கொம்புகள் மண்டலத்துள் மறைந்திருக்கின்றன.

**சந்திரன்:**—இந்த 'லாந்தரை'க் கோடுடைய சந்திரனாகவும், என்னை அச்சந்திரனிலுள்ள மனிதனாகவும் கொள்ளல வேண்டும்.

**தீஸியுஸ்:**—எல்லாவற்றிலும் முதிர்ந்த பைத்தியமிது. இந்த 'லாந்தருள்' இம்மனிதனை அடைக்கவேண்டும். அஃதில்லையாயின், இவன் சந்திரனிலுள்ள மனிதனாவதெப்படி? 312

**டெமிட்ரியஸ்:**—மெழுகுதிரிக்குப் பயந்து அவன் 'லாந்தருள்' நுழையத் துணியவில்லை; ஏனெனின், அது எரிந்து கறுப்புற்றிருப்பதைக் காண்கிறாயே.

---

297. நரி, இது மிக்க தந்திரமுள்ளது; சௌரியமேயில்லாதது.

299. வாத்து, இது மௌட்டியத்திற் பெயர்போனது.

301-302. தலையிற் கொம்பைத் தரித்தல், கற்பழிந்த மனைவியையுடையவனைத் தலையிற் கொம்புடையனென்று சொல்வதுண்டு.

313-315. இது பரிகாஸம்.

ஹிப்பாலிடா:—இந்தச்சந்திரனைக் கண்டது போதும்; வெறுப்புற்றேன். வேஷம் மாறினால் நலமாயிருக்குமே.

தீஸியுஸ்:—அவனுடைய அற்ப அறிவுடைமையைக் காணுங்கால் அவன் தேய்பிறைபோல் விரைவில தேய்ந்து மறைவானென்று தோற்றுகிறது. ஆயினும் மரியாதைக்குக் குறித்தகாலம் வரும்வரையிற் பொறுப்போம்.

லைஸாண்டர்:—சந்திரனே, மேற்சொல்லுவதைச் சொல்லலாம். 323

சந்திரன்:—நான் சொல்வது இதுவே: இந்த 'லாந்தர்' சந்திரன்; நான் அதிலுள்ள மனிதன்; அச்சுள்ளிக்கட்டு என்னுடைய சுள்ளிக்கட்டே; இந்நாய் எனது நாயே.

டெமிட்ரியஸ்:—இவையெல்லாம் சந்திரனுள் இருப்பனவாதலால், லாந்தரினுள் இருக்கவேண்டுமே. சும்மா இருங்கள்! இதோ திஸ்பி வருகிறாள்.

திஸ்பி.—இதுதான் நைனஸ்ஸின் ஸமாதி. என் காதலன் எங்கே? 331

சிங்கம்:—(கர்ஜித்தல்.) ஓ— (திஸ்பி ஓடுதல்.)

டெமிட்ரியஸ்:—சிங்கம், நல்ல கர்ஜனை.

தீஸியுஸ்:—திஸ்பி, நல்ல ஓட்டம்.

ஹிப்பாலிடா:— சந்திரனே, நல்ல பிரகாசம். சந்திரன் மிகவும் அழகாய்ப் பிரகாசிக்கின்றது. (சிங்கம் திஸ்பியின் மேற்றுணியை வாயாற் கவ்வி உதறியெறிந்து ஓடுதல்.)

தீஸியுஸ்:—சிங்கம, எலியை உதறுவதுபோல் நல்ல உதறல்.

லைஸாண்டர்:—சிங்கம் போய்விட்டது.

டெமிட்ரியஸ்:—இதோ பிரமஸ் வந்தான். 340

[பிரமஸ் பின்னும் வருதல்.]

பிரமஸ்:—இனிய சந்திரனே, உனது வெயிலைக்கண்டு

341. 'சந்திரனுடைய வெயில்' என்பது அஸம்பந்தம்.

நிரம்பச் சந்தோஷிக்கிறேன்; அழகு நிறைந்து பொன்னிறமாய் ஒளிவீசும் உனது சோபையே என்னுண்மையுள்ள திஸ்பியின் உருவத்தைக் காட்டுகின்றது. நில்; ஆ! கொடுமை! அடா, ஏழை ஆயுதபாணியே, இப்பெருந்துக்கத்தை உற்றுப்பார். ஐயோ! கண்களே, நீர் பார்க்கின்றீரோ? இது எவ்விதமாக இருக்கக்கூடும்? ஆ! மென்மையான அரிய தாராவே, ஓ! என்னருமைப் பாவையே. இது உனது மேலாடையன்றோ? என்ன! இரத்தக்கறைபட்டிருக்கிறதே. ஓ! பயங்கரமான உக்கிரமூர்த்திகாள், வாருங்கள்; காலர்காள், வாருங்கள்; என்னுயிரை வாங்குங்கள்; நசுக்குங்கள்; நாசமாக்குங்கள்; எல்லாவற்றையும் முடித்து ஒய்வுற்றிருக்கச் செய்யுங்கள். 353

**தீஸியுஸ்:**—ஒருவனுக்கு அருமைத்தோழன் இறந்திருந்தால்மட்டுமே, இவன் காட்டும் வருத்தப்பாவனை ஒருவேளை அவனுக்குத் துக்கத்தையுண்டாக்கலாம்.

**ஹிப்பாலிடா:**—எனக்கு அவனைக்காண்பதிற் பரிதாபமுண்டாகின்றது. 358

**பிரமஸ்:**—ஓ கடவுளே, சிங்கத்தை ஏன் படைத்தாய்? அவ்விழிந்த மிருகம் எனது அரிய நறுமலரைக் கொய்துவிட்டதே. விருப்பமும் அன்பும் முகமலர்ச்சியுள்ள மாதருள் அவள் பேரழகுடையவளாய் வாழுகின்றவள்—இல்லை, இல்லை—வாழ்ந்தவள். நான் கண்ணீர்ப்பெருகி இறவேனோ? ஓ! வாளே, இரத்தாசயம் துள்ளிக்குதிக்கும் பிரமஸின் இடமார்பைப் பிளப்பாயாக. (தன்னைத்தான் குத்திப்பிளந்து கொள்ளல்.) நானிதோ சாகிறேன்; இறந்தேன்; பறந்துபோய்விட்டேன்; என் ஆத்மா இப்பொழுது ஆகாயத்திலிருக்

---

364-356. இவன் காட்டும் வருத்தப்பாவனையைக்காண்பதால் மாத்திரம் ஒருவருக்கும் துக்கம் வாராது. இவனுடைய இப்பாவனையைப் பார்க்கும்பொழுது அவருக்கு அருமைத்தோழரிறந்திருந்தால் துக்கம் உண்டாகலாமென்பது பொருள்.

கின்றது. நாவே, உன் ஒளியை இழப்பாயாக. சந்திரனே, நீ ஓட்டம்பிடிப்பாயாக. (சந்திரன் போதல்.) நான் சாகிறேன், சாகிறேன், சாகிறேன். (சாதல்.)

தீஸியுஸ்:—இரணவைத்தியன் உதவியால் அவன் இப்பொழுதும் பிழைக்கக்கூடும்.

ஹிப்பாலிடா—திஸ்பி திரும்பிவந்து தன் காதலனைத் தேடிப்பார்க்குமுன் சந்திரன் மறைந்துவிட்டதே.

தீஸியுஸ்:—அவள் அவனை நட்சத்திரப்பிரகாசத்தால் கண்டுகொள்வாள். இதோ அவள் வருகிறாள்; அவளுடைய துக்கத்தோடு கூத்து முடியும்.

[திஸ்பி பின்னுமொருமுறை வருதல்.]

ஹிப்பாலிடா.—இந்தப் பிரமஸ்ஸின்பொருட்டுத் தன் பிரலாபத்தை அதிகமாக நீட்டாமற் குறுக்குவாளென்றெண்ணுகிறேன்.

டெமிட்ரியஸ்:—இருவரும் தராசுமுனையாக நிற்பார்கள். ஒருவருக்கொருவர் தாழார். அவனைப் புருஷனாகவும் இவளைப் பெண்ணாகவும் நாம் நினைப்பதற்குக் கடவுள்தான் நம்மைக் காப்பாற்றவேண்டும்.

லைஸாண்டர்:—அவள் தன் இனிய கண்களால் அவனைக் கண்டுகொண்டாள்.

டெமிட்ரியஸ்:—இதோ அவள் பிரலாபிக்கத் தொடங்குகிறாள்:—

திஸ்பி:—என் நேசமே, உறங்குகிறாயோ? என் கபோதமே, இறந்தாயோ? ஓ! பிரமஸ்ஸே, எழுந்திரு. பேசு; பேசு; முற்றும் ஊமையானாயோ? இறந்தாயோ? உன் இனிய கண்களை மூடுவதற்கு ஒரு சமாதி சமைக்கவேண்

---

354-356. 'நாவே' என்றிருப்பதற்குச் 'சூரியனே' என்பது வேறுருபாடம். இவன் பேச்சு அஸம்பந்தமாயிருக்கவேண்டுமென்பதே கவியின் கருத்து. அவ்வாறன்றெனின் 'சந்திரனே, உன் ஒளியை இழப்பாயாக; சுவாஸமே, நீ ஓட்டம் பிடிப்பாயாக' என்று அவன் சொல்லியிருப்பானென்பர் சிலர்.

வெள் உன் வெள்ளுதடும், செம்மூக்கும், மஞ்சட்கன்னமும் போயினவே. அன்பர்காள், கதறுங்கள். ஆ! ஆ! அவன் கண்கள் வெண்காயம்போல் பைந்நிறமாயிருந்தனவே காலத்தெய்வங்களே, அவன் சீட்டைக்கிழித்தீரோ? என்னருகில் வாரும்; பால்போலும் வெளுத்த உமது கையை என்னுதிரத்தில் நனையும். ஓ! நாவே, நீ பேசாதே. உறுதியுள்ள கத்தியே, நீ வா; என் மார்பை இரத்தமாக்கு. (தன்னைத்தான் குத்திக்கொள்ளல்) திஸ்பி முடிகிறாள்; போகின்றேன். நண்பர்களே, நன்மையுண்டாவதாக. (இறத்தல்.) 401

**தீஸியுஸ்:**—சந்திரனும் சிங்கமும் இறந்தவர்களை அடக்கஞ்செய்ய இருக்கின்றன.

**டெமிட்ரியஸ்:**—ஆம்; சுவரும் அதற்காகவே இருக்கிறது.

**பாட்டம்.**—(எழுந்து நின்று) இல்லை, இல்லை. அவருடைய நிலங்களுக்குக் குறுக்கேநின்ற சுவர் அப்பொழுதே போய்விட்டது. எங்கள் கூத்தின் பின்னுரையைப் பார்க்கவேணும், எங்களுள் இருவர் சேர்ந்தாடும் குறக்கூத்தைக் கேட்கவேணும் விருப்பமிருக்குமோ? 409

**தீஸியுஸ்:**—உங்கள் கூத்துக்குப் பின்னுரையே வேண்டுவதில்லை. அதிலுள்ள குறைகளைப்பற்றி உபசாரஞ்சொல்ல ஆவசியமில்லை. ஆட்டக்காரர் எல்லோரும் இறந்தபின்

---

393. இது மிக்க அஸம்பந்தமான வர்ணனை.

396. காலத்தேய்வங்கள், இவர்கள் மூன்று சகோதரிகளென்பதும், ஒருத்தி சீவனுகிய நூலை நூற்கிறாளென்பதும், ஒருத்தி அதை நூலாழியிற் சுற்றுகிறாளென்பதும் மற்றொருத்தி அதை அறுக்கிறாளென்பதும் 'கிரேக்கர்' 'உரோமர்' இவர்களுடைய புராணக் கொள்கை.

405-409. எல்லாவற்றையும் சீர்ப்படுத்த முயன்றுவந்த பாட்டம் இறந்தவனாகக் கீழேகிடக்கவேண்டிய காலத்தும் தன் விசேஷ ஞானத்தைப் புலப்படுத்துவதற்கு வாய்த்த சமயத்தை வீணாக்க மனமில்லாதவனாய் எழுந்துநின்று பேசுகிறான்.

407. பின்னுரை, 3-ம் அங்கம், 1-வது இடம், 21-ம் வரியின் விளக்கத்திற் காண்க. பின்னுரையைப் பார்த்தலும், கூத்தைக் கேட்டலும் பாட்டத்தின் அசம்பந்த வார்த்தைகள்.

யார்மேற் குற்றஞ்சொல்லுகிறது? இக்கூத்தையெழுதினேன் பிரமஸ்வேஷம் போட்டுத் திஸ்பியின் முழுந்தாட்கச்சால் தன்னைத் தூக்கிக்கொண்டு இறந்திருந்தால் இது நல்ல துக்கக்கூத்தாக முடிந்திருக்கும். உங்கள் பின்னுரை வேண்டுவதில்லை; குறக்கூத்தாட்டம் காண்போம். (ஆடுதல்.) அர்த்த ஜாமமணி அடித்தாயிற்று; காதலர்கள் தத்தம் பள்ளியறையையடையலாம். இது கந்தர்வர்களின் சஞ்சாரகாலம். இரவில் இதுவரையில் நாம் விழித்ததினால் விடிந்தபின்பு நெடுநேரம்வரையில் உறங்குவோமென்று எண்ணுகிறேன். இவ்வஸம்பந்தக்கூத்து நமக்கு இரவில் இதுவரையில் நல்ல பொழுதுபோக்காயிருந்தது. இனிய தோழர்களே, படுத்துக்கொள்ளுங்கள். இப்படியே நாம் இப்பக்ஷமுழுவதும் விருந்தும் கூத்துமாகக் காலம்போக்குவோம். (போதல்.)

[பக்-வருதல்]

பக்:—இப்பொழுது பசியால் வருந்தும் சிங்கம் கர்ஜிக்கின்றது. சந்திரனை நோக்கி ஓநாய் ஊளையிடுகின்றது. உடல் கனத்த உழவனே, கடிய வேலைசெய்து களைத்துஉறங்கிக் குறட்டைவிடுகின்றான். எரிந்த கணப்புக்கட்டைகள் கனலுந்தழல்களாயிருக்கின்றன. சாகுருவியோ, உரக்கக் கத்தி நோயால் வருந்துபவனுக்கு இங்கு முகவாஸத்தை நினைப்பூட்டுகின்றது. கல்லறைகள் வாய்திறக்க அவற்றினின்றும் பேய்கள் புறப்பட்டு மயானத்து மெல்ல நடக்கும் சமயமிது. சூரியன்முன் நில்லாமல் கனவைப்போல் இருட்டைத்தொடர்ந்து சந்திரனுடைய இரதத்தோடு ஓடிச் செல்லும் கந்தர்வர்களாகிய நாமோ, இப்பொழுது களிகூர்ந்திருக்கிறோம். இப்பரிசுத்தமான இடத்தில் சுண்டெலிகூட இனி உலாவுதல் கூடாது. குப்பையைக் கதவின் மூலையினின்றும் கூட்டிஒதுக்கி இவ்விடத்தைச் சுத்தியாக்க

---

429. **கணப்புக்கட்டை**, குளிருக்காகக் கணப்புக்கட்டைகளை எரிப்பது வழக்கம்.

431. **முகவாஸம்**, என்பது முகவாசை என்றும் முகத்திரை என்றும் வழங்கப்படுகின்றது; இது பிரேதத்தின்மேற் போடப்படும் துணி. முகவாஸத்தை நினைப்பூட்டுதல், மரணத்தை நினைப்பூட்டுதல்.

என்னை இங்கு முன்னுற அனுப்பியிருக்கிறார்கள்.

[ஓபரானும், டிடேனியாவும், பரிவாரங்களுடன் வருதல்.]

**ஓபரன்:**—இங்குத் தழலாயிருக்கும நெருப்பை எரிய விட்டு வீடெங்கும் பிரகாசமுண்டாக்குக. செடியினின்றும் பறவை தத்திவருவதுபோற் கந்தர்வர்காள், நீங்களும் இங்குத் துள்ளிவிளையாடுங்கள். நான் பாடும இப்பாட்டை என்னுடன் பாடிக் குதித்தாடுங்கள்.

**டிடேனியா:**—ஒவ்வொரு பதத்திற்குமுரிய ஸ்வரத்தோடு உமது பாட்டுக்களை ஒருமுறை முதலில் பாடிக்காட்டும்; நாங்களும் அதன்படி பாடுவோம; கைகோத்தாடுவோம்; எங்கள் காந்தர்வ சிங்காரநடனத்தால் இவ்விடத்தைப் புனிதமாக்குவோம். (பாட்டும், ஆட்டமும்.)

**ஓபரான்:**—பொழுதுபுலருமளவும் கந்தர்வர்கள் யாவரும் இவ்வரண்மனையிடத்தே உலவித் திரியவேண்டும். நாமிருவரும் அரசன் பள்ளியறையை அடைந்து அரசனரசிகளை வாழ்த்துவோம். அவர் பெறும நன்மக்கள் குறையாச் செல்வத்து வாழ்வாராக. அவ்வாறே மூன்றுதம்பதிகளும தம்முள் ஒருநாளும் பிரியாது மனமொத்திருப்பாராக. அவரது நன்மக்களும உருவத்து வடுவில்லாமல் அவக்குறிகளுளொன்றுமின்றி மகிழ்வுறுக. இப்பனித்துளியின் புரோக்ஷணையாற் கந்தர்வர் யாவரும் பரிசுத்தராய்ச்சென்று இவ்வரண்மனையின் ஒவ்வொரு மாடமண்டபத்துக்கும் சாந்தி செய்து வருவாராக. இவ்வரண்மனையாளுவோன் தெய்வ அருள் பெற்று இனிது வாழ்வானுக. இனி நிற்கவேண்டுவதில்லை; யாவரும் போகலாம். விடியற்காலையில எல்லோரும் என்னை வந்து காணுங்கள்.

(ஓபரான், டிடேனியா, பரிவாரங்கள் போதல்.)

**பக்:**—அசரீரிகளாகிய நாங்கள் உங்களுக்குத் தவறிழைத்தோமாயின், நீங்கள் இதுவரையில் இங்கு உறங்கினீர்களென்றும், இங்குக் கண்டனவெல்லாம் அவ்வுறக்கத்

---

465. அசரீரிகள், இங்குக் கந்தர்வர்கள். 3-ம் அங்கம், 2-ம் இடம், 397-ம் வரியின் விளக்கத்திற் காண்க.

தில் உங்களுக்குண்டாய தோற்றமென்றும் கருதுக; அப்பொழுது தவறிழைத்தோமென்ற வருத்தம் மாறிவிடும். குலமக்காள், நாங்களியற்றிய இச்சிறு காரியம் கனவைப் போற் பயனிலதென்றெண்ணி எங்களிடத்துக் கடுமை பாராட்டாது இம்முறை பொறுத்தருள்வீராயின், நாங்கள் இனிச் செய்வனவற்றைத் திருந்தச்செய்து உங்களை மகிழ் விக்க முயல்வோம். நான் உண்மையுள்ள பேய் என்பது மெய்யானால், நீங்கள் இப்பொழுது எங்களைச் சீறுதொழிவதற்கு நாங்கள், விரைவில் உங்களுக்குத் தக்க கைம்மாறு உதவுவோம். உங்கள்முன் இன்னுமொருமுறை தோன்றிச் செவ்விதாக ஆடி உங்களை மனமகிழ்விப்போம். இது தவறுமாயின் பக்கைப் பொய்யனென்று அழையுங்கள். நன்று; எல்லோர்க்கும் வந்தனம்; நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். எம்மிடத்து வெறுப்பின்றி விருப்பமுடையீராயின் அதை மெய்ப்பிக்க இப்பொழுது என் முன் கைகொட்டிக்களியுங்கள். 'ராபின்' இந்நன்றி மறவாது தக்க கைம்மாறு உதவுவான். (பக் போதல்.) 484

ஐந்தாம் அங்கம் முற்றிற்று.

குறிப்பு:— இந்நாடகக் கதையின் காலவரையறையை மூலத்தால் நிர்ணயிக்கலாம். அதை ஒருவர் அடியில் வருமாறு வகுத்துக் கூறினர்:—

| | |
|---|---|
| 1-வது நாள். | 1-வது அங்கம். |
| 2-ம் நாள். | 2-ம் 3-ம் அங்கங்களும், 4-ம் அங்கம் 1-வது இடத்தின் ஓர்பாகமும். |
| 3-ம் நாள். | 4-ம் அங்கம் 1-வது இடத்தின் மற்றைப் பாகமும், ஷை அங்கம் 2-ம் இடமும், 5-ம் அங்கமும். |

# கலையும் ரஸிகனும்

கி. சந்திரசேகரன்



மணி வெளியீடு

40

பதிப்பாசிரியர்

பி. ஸ்ரீ

-/12

[illegible]

# தினமணி வெளியீடு

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | மகாத்மா காந்தி—நினைவு மாலை [2-ம் பதிப்பு] ... | 0 | 12 |
| 2. | ரவீந்திரநாத டாகுர் ... | 0 | 8 |
| 3. | கைலாஸம்-மானஸஸரோவர் (பிரதிகள் கைவசமில்லை) | 0 | 8 |
| 4. | போலந்து—பின்லந்து ( ,, ) | 0 | 12 |
| 5. | சிறு கதை மஞ்சரி ... | 1 | 0 |
| 6. | ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள் ... | 2 | 0 |
| 7. | தில்லைக் கோவிந்தன ... | 1 | 0 |
| 8. | அன்னை கஸ்தூரிபா ... | 0 | 12 |
| 9. | முன்னிலா ... | 0 | 12 |
| 10. | தளவாய்த் தாத்தா (அரியநாயக முதலியார்) ... | 0 | 12 |
| 11. | மௌலானா ஆஜாத் ... | 1 | 0 |
| 12. | கதை வனம ... | 1 | 0 |
| 13. | நவ ரஸங்கள ... | 0 | 12 |
| 14. | வீர ரஷியா (பாகம் I) ... | 0 | 12 |
| 15. | காந்தீயத் திட்டம ... | 1 | 8 |
| 16. | தற்கால போர்க் கருவிகள் ... | 1 | 0 |
| 17. | கதா நாடக மஞ்சரி ... | 0 | 8 |
| 18. | வீர ரஷியா (பாகம II) ... | 0 | 8 |
| 19. | கபீர்தாஸர் ... | 0 | 8 |
| 20. | ஐசுவரிய அமெரிக்கா ... | 0 | 8 |
| 21. | தஞ்சை நாயக்கர் ... | 0 | 8 |
| 22. | ஜீவ கலை ... | 0 | 8 |
| 23. | அமிர்த சந்திரன் ... | 1 | 0 |
| 24. | சீனு ... | 0 | 8 |
| 25. | உத்தம வாழ்க்கை (பிரதிகள் கைவசமில்லை) | 0 | 8 |

தினமணி வெளியீடு 40 பதிப்பாசிரியர் டி. ஸ்ரீ.

# கலையும் ரஸிகனும்

கி. சந்திரசேகரன்

4980
XVI D.35



டா. உ. வே. சாமி... நூல் நிலையம்
சென்னை - 60...

“இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை”

தினமணி காரியாலயம்
100, மவுண்ட் ரோடு
சென்னை
1946

காபிரைட்] [விலை அணா 12

# பொருள் அடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | ... 3 |
| 2. | குறிப்பு | ... 6 |
| 3. | கலைவிளக்கம் | ... 9 |
| 4. | கலையும் வாழ்க்கையும் | ... 19 |
| 5. | கலையும் சம்பிரதாயமும் | ... 27 |
| 6. | சிற்ப சித்திரங்களின் உறுப்புகள் | ... 37 |
| 7. | வாழ்க்கைச் சரித்திரம் | ... 48 |
| 8. | பண்பட்ட உள்ளம் | ... 55 |
| 9. | பாராட்டு | ... 63 |
| 10. | ஸத் ஸங்கம | ... 69 |
| 11. | நாகரிகமும் நாமும் | ... 76 |
| 12. | நாணொடு உடன் பிறந்தவள் | ... 85 |

ஸஹிருதயர்களுக்கு
அன்பளிப்பு

# பதிப்புரை

இக்கட்டுரைத் தொகுதியின் ஆசிரியர் பண்பட்ட உள்ளம் வாய்ந்த பரம ரஸிகர்களில் ஒருவர். இன்றைய ஆசிரியர்களோடு பழகுவதுடன், இவர் கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் பழைய பேராசிரியர்களின் ஸத்ஸங்கத்திலும் பழகி வருகிறவர். இவருடைய கருத்துக்கள், கலைக்கடலில் ஆழ்ந்து மூழ்கி முத்துக் குளிப்பவர்களுக்கு ஓர் அருங்கவசமாக அமையும்.

கலையைக் குறித்தும், கலைச் சம்பிரதாயங்களைக் குறித்தும், கலைக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பைக் குறித்தும் பலவேறு அபிப்பிராயங்கள் உலாவிக் கொண்டிருக்கும் இன்றைய தமிழ் நாட்டிலே, அறியாமையிருளுக்கும் விபரீத அறிவு என்ற இருளுக்கும் இடையே ஒருவாறு ஒளிகாட்டி நெறி காட்டுவதற்கு இச்சிறு புஸ்தகம் ஒரு கைவிளக்காக உதவும்.

பி. ஸ்ரீ.

பதிப்பாசிரியர்.

# குறிப்பு

வாசகர்களுக்குத் தோன்றக் கூடிய ஒரு சிறு சந்தேகத்தைத் தெளிய வைப்பதே எனது முதற்கடமையாகும். இங்கு தொகுத்துள்ள கட்டுரைகளுக்கும், முகப்பில் கொடுத்திருக்கும் தலைப்புக்கும் அதிக சம்பந்தமிருப்பதாய் நினையாதிருக்கக் காரணமுண்டு. ஏனெனில், முதல் நான்கு கட்டுரைகளில் கலையை ஒட்டிய கருத்துக்களையே தந்திருப்பதால், இதர கட்டுரைகளில் ரஸிகனுடைய இயல்புகளைப்பற்றிய விஷயங்களையே எதிர்பார்க்கத் தோன்றும். ஆனால் அவ்விதமின்றி, அவை வாழ்க்கை, இலக்கியம், முதலிய துறைகளில் காணப்படும் பலவேறு அபிப்பிராயங்களை ஆராய்வதால், நேரில் ரஸிகனுடைய தன்மையை விவரிப்பதாகமாட்டா. எதுவாயினும், அவை ரஸிகன் ஒருவன் நுகர்ந்து வெளியிடக்கூடியவையாகவும் இருப்பதால் பலருக்கு இன்பமூட்டலாம் என்ற நம்பிக்கையே, தலைப்பில் 'ரஸிகனும்' என்று இட்ட பிற்பகுதிக்குக் காரணம். கொடுத்துள்ள காரணம் பொருத்தமாய் இல்லாவிடினும் பாதகமில்லை. நேயர்கள் இங்குள்ள எல்லாக் கட்டுரைகளின் ஊடே உற்று நோக்கின் விளங்கக் கூடிய ரஸிக இதயத்தையாவது அங்கீகரித்தால் போதும்.

இதில் சேர்ந்த மூன்று கட்டுரைகளுக்காக அகில இந்திய ரேடியோ நிலயத்தாருக்கு எனது நன்றி உரியது. வாழ்க்கையும் கலையும், கலையும் சம்பிரதாயமும், பண்பட்ட உள்ளம்—இம்மூன்றும் அவர்கள் அனுமதியின் பேரில் வெளிவந்தவை. அடுத்ததாக, குமரிமலர் ஆசிரியருக்கு எனது வந்தனம் செலுத்தப்படவேண்டியது. கலை விளக்கம், நாமும் நாகரிகமும், வாழ்க்கைச் சரித்திரம் —இம்மூன்றும் அவர்கள் பத்திரிகையில் வெளியானவை. கலைமகளில் ஏற்கெனவே வெளிவந்தவை, 'சிற்ப சித்திர உறுப்புக்கள்', 'பாராட்டு' என்னும்

இரண்டு வியாசங்கள். பாரதமணியில் 'ஸத்ஸங்கம்' என்னும் கட்டுரையும், சக்தியில் 'நாஞேடு உடன் பிறந்தவள்' என்னும் விமர்சனமும் பிரசுரமானவை. எனக்கு அனுமதி தந்த எல்லாப் பத்திரிகைக்காரர்களுக்கும் மனமார்ந்த நன்றியைச் செலுத்த நான் கடப்பாடுடையேன்.

அட்டைப் படத்தைப் பற்றியும் ஒரு வார்த்தை. உயர்ந்த சிற்பங்களை இன்னும் நமது நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் காண முடிவதற்கு இது ஒரு அத்தாட்சி. ரிஷ்யசிருங்கருடைய (கலைக்கோட்டு முனிவருடைய) வடிவமாய்ச் சிற்பியிஞல் நிர்மாணிக்கப்பட்டிருப்பதாய் இதனைப்பற்றி ஒரு ஊகம். முகத்தில் பால் வடியும் சிறுவனின் களை அப்படியே சொட்டுகிறது. இது வரையும் பாராத பெண்ணைக் கண்டதிஞல் விநோதமும், வெட்கமும் கலந்தே அம்முகத்தில் அரியதொரு பாவத்தை விளக்குகின்றன. சிலை என்பதையே மறக்கடிக்கும் அற்புதங்களிலொன்று இது. மதுராபுரி என்னும் வடநாட்டு நகரத்தில் பொருட்காட்சியில் இப்பொழுது இதன் அசலைக் காணலாம்.

'ஆச்ரமம்',
மயிலை,
21—6—'46

கி. ச.

# படித்துப் பாருங்கள்

## காந்தீயம்

மகாத்மா காந்தி —
நினைவு மாலை

அன்னை கஸ்தூரிபா

காந்தியத்திட்டம்

நிர்மாணத் திட்டம்

## வாழ்க்கைச் சித்திரங்கள்

ரவீந்திரநாத டாகுர்

தளவாய்த் தாத்தா

மௌலானா ஆஜாத்

கபீர்தாஸர்

என் தந்தையார்

## கதைகள்

சிறுகதை மஞ்சரி

ஹாஸ்ய நாடகங்கள்,
கட்டுரைகள்

தில்லைக் கோவிந்தன்

முன்னிலா

கதை வனம்

கதா நாடக மஞ்சரி

ஜீவகலை

அமிர்த சந்திரன்

புரட்சி முரசு

கோயிற் பூனைகள்

ஹாஸ்யக் காட்சிகள்

கன்னியர் வீரம்

விலை நிர்ணயங்கள் கவரின் உள்பக்கம் பார்க்க.

# கலையும், ரஸிகனும்

## கலை விளக்கம்

வயதானவர் ஒருவரும், அவருடன் பன்னிரண்டு வயதுள்ள சிறுவனும், சித்திரக் காட்சியொன்றில் படங்களைப் பார்த்த வண்ணம் இருந்தார்கள். ஒரு சித்திரத்தில், சீர் வரிசைகளை மேளதாளங்களுடன் மாப்பிள்ளை வீட்டிற்குப் பெண்கள் எடுத்துச் செல்லும் காட்சி வரையப்பட்டிருந்தது. முன்னால் நாகஸ்வரக் கோஷ்டியையும், அதன் பின்னே தட்டுக்களில் பழங்கள், சர்க்கரை முதலியவைகளை வைத்துக்கொண்டு பெண்மணிகள் பல நிற ஆடைகளணிந்து செல்வதையும் சித்திரம் காட்டியது. பெரியவர் அப்படத்தைக் கண்டும் கவனியாமல், அடுத்ததைப் பார்க்கத் தாண்டிச் சென்றார். ஆனால் சிறுவன் மட்டும் அப்படத்தையே கவனித்து விட்டு, 'அப்பா, இந்தப் படத்தைப் பார்க்காமே போறயே! நடக்கிறவர்களின் கால்களைப் பாரு, அப்பா! பாட்டுக்குச் சரியாத் தாளம் போட்டுண்டு, குதிச்சுண்டு போறாப்பலே இருக்கு; நன்னா இருக்கு, இல்லையா?' என்றான். மேலும், தகப்பனாருடைய கையையும் பற்றி அதன் சமீபம் இழுத்தான். ஆனால், பையனுக்குத் தோன்றியதொன்றும் அவருக்குப் புலப்படவில்லை. தமக்கு அது தோன்றாததைக் குறித்து அவர் கவலைகொள்ளவுமில்லை. உணர்ச்சி வேண்டாமா, அதற்கெல்லாம்? பையன் பையனாக இருந்ததால், உணர்ச்சியை இழக்கவில்லை; அவ்வளவுதான்.

அந்தச் சித்திரத்தில் முக்கியமானது பாவ வெளியீடே. ஓவிய மணியின் கருத்தும் சிறுவனுடையது போலவேதான் இருந்திருக்கவேண்டும். ஆனால், பையனுக்கும் பெரியவருக்

40—1

கும் படத்தின் விஷயம் ஒரே அளவில் திருப்தி அளிக்காத தன் காரணம் என்ன? ஒருகால், கல்யாண ஊர்வலம் முதலியவைகளைக் கண்டாலே சந்தோஷிக்கும் மனப்பாங்கு பெரியவரிடம் சூன்யமாயிருந்திருக்கலாம். சாதாரணமாய் நம்மில் பெண்களைப்போல் ஆண்களுக்குக் கல்யாண ஊர்வலம் முதலியவைகளை அனுபவிக்கத் தெரிவதில்லை. சில சமயம், ஏதோ அவை பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டும் உத்ஸாகம் தரும் காரியங்களென்றுகூட நினைப்பு உண்டு அவர்களிடம்.

கவனித்தால், நம்நாட்டுக் கல்யாண விமர்சைகள் ஒரு பெருங் கலை - உத்ஸவமென்றுகூட எண்ணத் தோன்றும். அதிலும், மணமகள் மணமகன் இவர்களின் ஜோடி சரியாயிருப்பதைக் கவனிக்கும் முயற்சியில் பெண்கள் தங்கள் கலையுணர்ச்சி அவ்வளவையும் காட்டிவிடுவார்கள். தெருவில் கிராமப் பிரதக்ஷிணம் வரும்பொழுது, அவர்கள் எட்டி எட்டிப் பார்ப்பதும், தங்களைச் சிங்காரித்துக் கொண்டு வீட்டுக்கு வீடு வாசல்களில் கோலமிட்டு ஆரத்தியெடுப்பதும், அதைப்பற்றி ஒருவரோடொருவர் கலந்து பேசி யனுபவிப்பதும், கலையுள்ளங்களுக்கு உண்மையாகவே உவப்பளிக்கும். கல்யாண காலங்களில் பெண் மாப்பிள்ளை ஜோடியிலே கண்கள் ஈடுபடுவதும் நியாயமாகவே தோன்றும். ஆடவர்களின் கலையுணர்ச்சியின் குறைவுதான், பெண்களைப்போல இவைகளிலெல்லாம் அவர்கள் கவனம் செல்லாததற்குக் காரணம் என்று ஊகிக்கலாம். மற்றப்படி, கல்யாணச் சடங்குகள் அவ்வளவுமே நம்நாட்டில் கலை யம்சங்கள் நிறையப்பெற்றுள்ளன என்பதும், ஊன்றிப் பார்த்தவர்களுக்குத் தெரியும்.

பாவ வெளியீடு ஒன்றுமட்டும் மற்றெல்லா அம்சங்களையும்விட முக்கியமென்று அறிந்த பிறகும், நம்முடைய சந்தேகங்களுக்கு ஓய்வு ஏற்படுவதில்லை. அடுத்ததாக ஒரு கேள்வி : ஒரே சித்திரமானது இரண்டு இதயங்களை ஏன் ஒரே அளவில் ஆட்கொள்வதில்லை? ஆம்: ஒருவர் ஒரு படத்தைச் சற்றும் கவனியாதபோது, மற்றொருவர் அதையே உற்று உற்றுப் பார்த்து மகிழ்வதென்றால், கேள்

விக்கு இடம் ஏற்படாமல் இருக்குமா? கவனித்துப் பார்த்தால், கலைகளெல்லாம் இவ்விதமே பலரிடம் பல விதங்களில்தான் உணர்ச்சிகளை எழுப்புகின்றன என்பது ஏற்படும். அதாவது, இன்பம் விளைவிக்கின்ற வகையில் ஒவ்வொருவரிடமும், அவரவர் யோக்கியதைக்குத் தக்க படியே கலை யம்சங்கள் பயன்படுகின்றன என்பது திண்ணம்.

மனித இயல்பிலும், மற்ற நடை உடை பாவனைகளிலும் வித்தியாசங்கள் இருக்கையில், ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட உணர்ச்சி-வேகம் தெரிவது ஆச்சரியமில்லை. ஆனால், ஏனோ கலைச் சிருஷ்டிகளைச் செய்பவனுக்கும்,கலைச் சிருஷ்டிகளைக் காண வருபவர்களுக்கும் வித்தியாசமிருக்கலாகாது? எப்போது நம்முடைய நோக்கங்களும் உணர்ச்சி-வேகங்களும் எல்லோரிடமும் ஒரே அளவில் இருக்க மாட்டா என்று அறிகிறோமோ, அப்போதே சிற்பியும் ஓவியனும் இன்னும் மற்றக் கலைஞர்களும் நம்மெல்லோருக்கும் ஓரளவில் ஆனந்தத்தைக் கொடுக்கும் வகையில் தான் தங்கள் சிருஷ்டிகளை உலகின்கண் காட்டவேண்டும் என்னும் கட்டாயமும் சிறிது குறைவுபடும் அல்லவா? இக்காரணம் கொண்டு நம் கண்களுக்குச் சட்டென்று விளங்காத கலைச் சிருஷ்டிகளைக் கண்டு நாம் ஏமாற்றம் அடைவதும் சரியல்லவென்பது முதலில் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம். மேலும் கலையைச் சிருஷ்டி செய்பவன் வேறு, நாம் வேறுதான். இதையும் மறத்தலாகாது.

சாதாரணமாய், சித்திரக் காட்சி முதலிய இடங்களில், பலர் கூடிக் கலைகளை அனுபவிக்க எண்ணும்போது நம்முடைய செவிகளில் அவர்களுடைய மொழிகள் பின் வருமாறு அடிக்கடி விழுந்து கொண்டே இருக்கலாம். 'சமுத்திரத்தின் வர்ணம் இப்படிக்கூட இருக்குமா?' என்று ஒரு படத்திலுள்ள காட்சியைப் பார்த்து ஒருவர் பிரமிப்பார். மற்றொருவர் தம்முடன் வந்தவர்களிடம், 'இதோ பார், அவளைப்போல் அப்படியேதான் இருக்

இறது படம்!' என்று முகச் சாடைகளின் ஒற்றுமையை மற்றொரு படத்தில்கண்டு சந்தோஷத்துடன் வாய்விட்டுச் சொல்லுவார். ஆனால், கலையின் மர்மங்களை உணர்ந்தவனுக்கு, முதலில் சொன்ன ஏமாற்றத்தின் அறிகுறியோ அல்லது பிற்பாடு கேட்ட சந்தோஷத்தின் ஆரவாரமோ, சற்றேனும் கவனத்தை இழுக்காது. ஏனென்றால், சித்திரகாரனுடைய கண்களில் புலப்படும் காட்சியே வேறு, பார்க்க வருகின்றவர்களுடைய சாமானியப் பார்வையில் தோன்றும் விஷயங்களே வித்தியாசமானவை.

'நம்முடைய கண்கள் என்ன வெறும் கண்ணுடிகளா? அவைகளுக்கு ஒன்றுமே விளங்காவிட்டால், பின் எதற்காகச் சித்திரக் காட்சிகளைத் திறந்து காட்டவேண்டும்?' என்ற உண்மையான சந்தேகமும் ஏற்படலாம். பதில் சொல்வது சிரமமில்லாவிட்டாலும் திருப்தி பெறக்கூடிய படி எல்லோரையும் செயவது சாத்தியமில்லை. உண்மையில் நம்மில் பெரும்பாலோர் கலைகளை அனுபவிக்க முயலுகிறார்கள். சங்கீதம் முதலியவைகளினால் முடிந்த அளவில் சந்தோஷமும் பெறுகிறார்கள் ஆனால்,அதுமட்டும் போதாது. கலையின் நுண்ணிய கருத்துக்களில் ஈடுபடும் ஆற்றலை அடைவதினாலேயே அவர்கள் கலையில் அறிவுடையவர்கள் ஆவார்கள். நம்முடைய பார்வையில் உண்டாகும் சிறு பொறி, மேல் எழும்பாமல் புகையாகமட்டும் மாறி மறைந்து விடுகிறது. ஆனால் திறமை வாய்ந்த ஓவியனிடம் அக்கனலின் நுட்பமான அணுக்கூட, சீக்கிரம் ஜ்வாலையிட்டுக் கிளம்பி எதிர்ப்பட்ட தவ்வளவையும் சுடர் மயமாக்கி, வானத்தையும் அளாவி விடுகிறது. ஆம், சாமானியக் கண்ணுக்கும் அறிவுக் கண்ணுக்கும் உள்ள வேறுபாடும் இதுவே. இதை அறிந்த பிற்பாடு ஒரு கலையை நாமும் ஊன்றிக் கவனித்தோமானால், அப்போது முன்பு வெளியாகாத தத்துவங்களும் சிறிது சிறிதாக நம் கண்முன் உருக்கொள்ளும்.

மற்றொரு சந்தேகமும் எழுகின்றது. ஓவியன் இயற்கையின் அழகைப் படத்தில் அப்படியே வரையும்போது

எதனால் இரண்டிற்கும் உள்ள தோற்றம் மாறுபட்டு, அனுபவிக்கின்றவர்கள் உள்ளங்களும் வித்தியாசமாகவே அவைகளைப் பார்க்கின்றன? உண்மையில், ஓவியன் இயற்கை விநோதங்களை அப்படியேதான் வரைகிறானா என்ற கேள்வியை நாமாகவே நம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டும். இயற்கையைத்தான் ஓவியன் பார்க்கிறான். ஆனால் அவனுடைய அறிவுக்கண்ணால் நுகரும்பொழுது அவன் பெறும் அனுபவம் முற்றிலும் தனியாக இருக்கின்றது. இந்த உடம்பு, அதோ காணும் மரம், அதன் மேலுள்ள இலைகள், இவை அல்ல அப்போது அவன் கண்கள் நாடுவன. புறத்தில் காண்கின்ற வஸ்துக்களைத் தள்ளி, அகக் கண்ணில் தென்படும் காட்சியை அல்லவா வர்ணத்திலும் கல்லிலும் அவன் வருணிக்கின்றான்? தியானத்தில் அவனுடைய முழு மனமும் ஆழ்ந்து தோய்ந்திருப்பதினாலேயே அவன் உருவாக்கும் படமும் சிற்பமும் அவனுக்குச் சொந்தமாகிவிடுகின்றன.

தியானம் அவனிடம் வளர வளர ஓவியனும் சிற்பியும், மற்றுமுள்ள ஒவ்வொரு கலையின் அடிப்படையான தத்துவங்களை அறிந்தவனும், உலக சம்பந்தமான கட்டுக்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்கிறார்கள். இயற்கை வலையினின்றும் கூடத் தம் புலன்களை மீட்டுத் தம்வசமாக்குகிறார்கள். வேண்டுமென்றுகூடத் தாம் வரையும் படத்திலோ, செதுக்கும் கல்லிலோ, இயற்கைக்கு மாறாகச் சிருஷ்டிகளைச் செய்கிறார்கள். அவ்வாறு செய்வதன் நோக்கம், கேவலம் பிடிவாதமல்ல. ஓரளவு தம் மனக்கண்ணில் எழும் பாவத்தைப் பிறரிடமும் விளக்கவே இவ்வித மாறுபாட்டையும் முறையாகக் கையாளுகிறார்கள். சாமானியனொருவன் கல்யாண ஊர்வலம் என்றதும், புகைப்படம் எடுத்த மாதிரிச் சித்திரத்திலும் அதைக் காட்டிவிடுவான். ஆனால், அறிவுக்கண் படைத்தவன், கல்யாண ஊர்வலம் எவ்வித உணர்ச்சியை நமக்குப் பார்த்ததும் ஊட்டவேண்டும் என்னும் கருத்தை வைத்து, நடந்து செல்லுகின்றவர்களின் கால்களில் ஒரு தனி லயத்தைச் சேர்த்துச் சிருஷ்டிக்கின்றான். அவ்

வளவுதான்; நாமும் மேலே கூறிய சிறுவனைப்போல உள்ளம் மகிழ்ந்து படத்தைப் பார்க்கும் எண்ணத்தைவிட்டு ஊர்வலத்தில் சேர்ந்து குதித்துக்கொண்டே செல்ல ஆரம்பிக்கிறோம். நம்மை மெய் மறக்கவொட்டாமல் செய்யும் படம் ஒன்று இருந்தும் பயனில்லை. ஏனென்றால், முன் கூறிய பெரியவரைப் போலத்தான் நாமும் உணர்ச்சி-வெள்ளத்தில் மிதக்காமல் கரை ஏறிவிடுவோம்!

எங்கும் நம்முடைய பெரியவர்-ரகத்தில் சேர்ந்த அறிவாளிகளையே நாம் சந்திக்கிறோம். இன்றும் அவர்களில் சிலர் அப்படத்திலுள்ள குற்றங் குறைகளையும் எடுத்துச் சொல்லக் கிளம்பி விடுவார்கள். படத்திலுள்ள பெண்கள் குதித்துக் கொண்டு சென்றால், கைகளில் ஏந்திய தட்டுக்கள் கீழே விழாமல் இருக்க முடியுமா? இது ஒரு பலத்த கேள்வி. அடுத்தது, 'நம்முடைய ஊர்வலங்களில் இம்மாதிரியாகத் தாளமிட்டுச் செல்லும் நடையை நாம் எங்கும் இதுவரையில் கண்டதில்லையே? ஓவியன்மட்டும் எதை ஆதாரமாகக்கொண்டு இப் படத்தை நமக்களித்தான்?' என்பதே. இம்மாதிரிக் கேள்விக்குமேல் கேள்வி கேட்கும் அறிவாளிக்குச் சரியான விடை கொடுப்பதும் முடியாது. ஏனென்றால், கலைகளின் நோக்கங்கள் யாவை என்பதை உணராததே அக் கேள்விகளுக்கு ஆதாரம்.

ஒவ்வொரு கலையினாலும் நாம் அடையவேண்டிய உபகாரம் என்ன என்பதை அறிய விரும்ப வேண்டும். உதாரணமாக, சிறு படக்காட்சியைப் பார்க்கையிலேயே பெரியதோர் உணர்ச்சி - உலகில் நுழைவதற்குத் தகுந்த கற்பனைசக்தி நம் உள்ளத்தில் ஏற்பட வேண்டும். கற்பனையின் இன்பத்தில் மூழ்குவதற்கு வேண்டிய ஊற்றுக்கால்கள் அப்படத்தின் கலை யம்சங்களில் நிறைந்திருக்க வேண்டும். அதாவது, படமானது படமாக மட்டும் தோன்றாமல் உயிரோட்டமுள்ளதாக வரையப்பட்டால், அழியாத காட்சியில் நாமும் கலந்து என்றைக்கும் புதிய ஜன்மம் பெற்றவர்களாவோம்.

சதைப்பற்று சரியாக இருப்பதாலும், உடல் அளவுகள் கோணுமல் அமைவதாலும் அல்ல, படத்திலுள்ள மனித உருவம் உயிர் பெறுவது; அதிலுள்ள தனிப்பட்ட பாவ வெளியீடு ஒன்றுதான் அதை உயிர் பெறச்செய்து, கண் திறக்க வைக்கின்றது. மற்ற இயற்கை அம்சங்களின் ஒற்றுமைகள் சேர்ந்திருந்துங்கூட, பாவமில்லாவிட்டால் அதை உயிரில்லாத உடலாகவே செய்துவிடும்.

இந்தியச் சித்திரம் என்று வழங்கும் கலை, தான் பிறந்த இந்த நாட்டிலேயே குன்றிவிட்டது. மேலே சொன்ன லக்ஷ்யம் இந்தியக் கலைகள் ஒவ்வொன்றிலும் உள்ளது. முக்கியமாக ஓவியம், சிற்பம் இவைகளில் இதற்கே முதன்மை ஸ்தானம் கொடுத்திருப்பதைக் கலைச் சம்பிரதாயங்களை உணர்ந்தவர்கள் அனுபவித்துக் கூறுவார்கள். நம்முடைய பாரத நாட்டின் வேதாந்த விளக்கங்களிலுல் நாம் உணரும் தத்துவங்களையே கலைகளின் அடிப்படையான கருத்துக்களிலும் காணலாம். என்று நாம நம்முடைய கண்களைச் செலுத்தி உள்ளே நோக்கத் தொடங்குகின்ருேமோ, அன்றுதான் நம்முடைய கலையம்சங்களின் உயர்வும் நமக்கு நன்கு புலப்படும். அது வரையிலும், சித்திரக் காட்சியில் திண்டாடிய பெரிய வருடைய கதிதான் நமக்கும்.

இந்தியக் கலைகளின் அறிவு முற்ற முற்ற, இந்த நாட்டின் சிறப்பான கலைச் சம்பிரதாயங்களிலும் பெருமை நமக்கு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. சிற்பியின் குலாசாரங்களையும், ஓவியர்களின் கட்டுப்பாடுகளையும் தள்ளுவது சுலபமல்ல என்றும் ஏற்படும். மூர்த்தங்களைச் செய்யும் ஸ்தபதியின் சடங்குகளில் தியானத்தை முதன்மையாக வற்புறுத்திய நாடு இதுதான். ஸ்நானம் முதலியவைகளை எவ்வளவு தினசரி காரியமாக நாம் கொள்கின்ருேமோ, அவ்வளவு, ஒழுக்கத்திற்கு இன்றியமையாததாகத் தியானம் முதலிய அனுஷ்டானங்களை ஸ்தபதியினிடம் வற்புறுத்தி யிருப்பதை நாம் காணலாம். தெய்விகமான ரூபங்களைக் கல்லிலும் உலோகங்களிலும்

உண்டாக்கும் சிற்பி சாமான்யமானவனல்ல என்பதை விக்கிரகங்களின் ஒளி மிக்க முகங்களையும், வெறும் மனிதப் பிறவியில் காணாத உருவ அழகையும் கண்டவர்கள் ஒப்புக் கொள்வார்கள் உதாரணமாக, சீமைப் பொருட் காட்சியிலுள்ள நம் நாட்டு மூர்த்தம் ஒன்று பெரும் புகழடைந்திருப்பதை நினைவிற்குக் கொண்டுவர வேண்டும். கோதண்ட ராமனுடைய அதிசயமான விக்கிரகம் ஒன்று அங்கே இருக்கிறது மூன்று பங்கங்களுடன் நின்றுகொண்டு, இடக்கையில் வில்லைப் பிடித்து நிமிர்ந்த முகத்துடன் கூடிய உருவம் அது. நடராஜ மூர்த்தத்தின் சமீபம் வரக்கூடிய வனப்பு வாயந்ததென்று அதன் உருவப் பிரதியைப் பார்த்தாலே நமக்கு விளங்கும்.

ராமனுடைய வில்லும் மூன்று வளைவுகள் பெற்றுள்ளதாக இங்கு விளக்கப்பட்டிருக்கிறது. ராமபிரானையும் அவரது வில்லின் வலிமையும் நினைக்கும் ரஸிகர்களுக்குத் திரிபங்கங்கள் இரண்டு உருவங்களிலும் சிற்பியினால் காண்பிக்கப்பட்டதன் உட்கருத்து ஒரு பெருந் தத்துவத்தையே உணர்த்துவதாகத் தோன்றும். நிமிர்ந்த தலையின்கீழ் அகன்ற மார்பு, சிறுத்த இடையின் கீழ்ச் சற்றுச் சாயந்து நிற்கும் கால்கள்—இவையே மூர்த்தத்தில் உள்ள விசேஷங்கள். ஆனால், இடது தோளின் மேலிருந்து கிளம்பும் புயம் எவ்வளவு கம்பீரமாய வில்லை ஏந்தி நிற்கிறது என்பதைக் கலையுணர்ச்சி உள்ளவர்களே அறிவார்கள். குற்றம் சொல்லப் புகுந்தால், எத்தனையோ அந்த உருவத்தில் காணலாம். ஒரு சிறந்த வீரனுடைய புயத்தில் இருக்கவேண்டிய தசை நரம்புகள் அதில் இல்லை. அதில் காணும் உடற் கூற்றையும் அழகிய மனிதனுடைய சரீரத்தினுடன் ஒப்பிட முடியாது. பின் ஏன் உயர்ந்த உருவமாக நம்மை ஆட்கொள்ளுகிறது அந்த மூர்த்தம்? அதுதான், நம் நாட்டுச் சிற்பிகளும் ஸ்தபதிகளும் அனுசரிக்கும் சம்பிரதாயமாக வந்த கலைத் திறமையின் மாயம் என்னலாம்.

மேலை நாடுகளில் நம் அளவு இயற்கையினின்றும் மாறுபாட்டைக் கலையில் ஒப்பாவிட்டாலும், நம்

4980. XVI D 35



கொள்கைகளின் சமீபம் வரக்கூடிய கருத்துக்களை உபதேசித்த சில அறிவாளிகளும் அவர்கள் மத்தியில் இருந்தார்கள் என்பது தெரிய வருகிறது. ப்ரௌனிங் என்ற புகழ்பெற்ற கவிஞர் ஒரு பாட்டில் இந்த விஷயத்தை ஒட்டிச் சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். மொழிபெயர்ப்பில் அழகு குன்றுவது நிச்சயமானாலும், உள்ளடங்கிய கருத்து மனத்தில் படக்கூடிய விதம் இருப்பதால் இங்கே அதைக் குறிப்பிடுவது பொருத்தம் * "ஆ, அந்தக் கை சரியாக வரையப் படவில்லை—அதோ, அந்தக் கோடுகளிலும் பிசகு தெரிகிறது; அது அப்படி ஒன்றும் பிரமாதமில்லை; அதுவும் புறத்தில் தான் காண்கின்றது. உள்ளம் என்னவோ சரியாக இருப்பதால், சிறு குழந்தைகூட உணர்ந்துகொள்ளும். இருந்தாலும், எப்பேர்ப்பட்ட கை! நான்கூட அதைத் திருத்தி அமைத்துவிட முடியும்; ஆனால், அதிலுள்ள வசீகரமும் உள்நோக்கிய நிலையும், கற்பனையின் வீச்சும் தான் என்னே!—இவை என்னால் சிறிதும் சாத்தியமில்லை."

ஆம், உள்நோக்கும் நுண்ணறிவும், கற்பனையின் வீச்சும் அமைவதுதான் சிரமம். ஆனால், நம் நாட்டுச் சிற்பிகள் செய்திருக்கும் சொப்பன உலகமோ என்னும் கோயில்களில் இவைகளைக் காண்பதும் கஷ்டமல்ல. தென்னிந்தியக் கோயில்களில் அனேக இடங்களில் கர்ப்பக்கிரகங்களின் வாயிலில் துவாரபாலகர்கள் இருவர் நிற்பதைப் பார்த்திருக்கலாம். சில இடங்களில் அவர்களுடைய கைகளில் கதைகளை இரண்டே விரல்களால் மட்டும்

* That arm is wrongly put—and there again
A fault to pardon in the drawing's lines,
Its body so to speak : its soul is right,
He means right—that, a child may understand.
Still what an arm! and I could alter it.
But all the play, the insight and the stretch—
Out of me! out of me!

ANDREA DEL SARTO
—*Robert Browning.*

தாங்கி நிற்கிற கோலத்தையும் கவனிக்கலாம். இரண்டு விரல்களால் ஒரு மனிதனும் தூக்கமுடியாத கதையை ஏந்துவது சாத்தியமில்லை; என்றாலும், அவ்வுருவங்களைப் பார்க்கும்போது இம்மானிட உலகின் ஞாபகம் அறவே நம்மைவிட்டு அகன்றுவிடும். ஆஜானுபாகுவாய் நிற்கும் சிலைகள் திடீரென்று உயிர்பெற்றுவிடும். இரண்டு விரல்களினால் தாங்கும் கதையைப் பார்க்கையில், எவ்வளவு லேசாகப் பெரிய ஆயுதங்களையும் கைகளில் தூக்குகிறார்கள் என்னும் எண்ணம்தான் மேலெழுந்து நிற்கும். அடுத்த கணம் நாமிருப்பது கயிலையங்கிரி தானோ, அல்லது வைகுண்ட நாதனின் அரண்மனை வாயில்தானோ என்ற மயக்கமும் வராமலிராது. உண்மையில், வேறு எவ்விதமாக ஆயுதங்களைத் தரிப்பதாகக் காட்டியிருந்தாலும்,மிகவும் ஆயாசமில்லாத வீரர்கள் என்ற எண்ணம் நம் மனத்தில் இவ்வளவு அழுத்தமாகப் பதியாது.

எவ்வளவு எடுத்துச் சொல்லியும், பாவ வெளியீடு ஒன்றுதான் கலைகளில்நம்மை ஆட்கொள்ள வேண்டும் என்னும்அபிப்பிராயத்தைத் தழுவியே தான் மற்றவற்றைப்பற்றிப் பேசவேண்டி வரும். பாவம் என்றதுமே, நம் நாட்டுத் தனிப்பட்ட தெய்வ வழிபாட்டின் உணர்ச்சியே முதன்மையாக நம் மனத்தில் தோன்றும். எக்கலையாயினும், பரம்பொருளை நமக்கு மெய்ப்பிக்கும் குறியையே அது வைத்திருக்கும். உண்மையும் அதுவே. மனித அறிவுக்கு எட்டக் கூடிய மனோவிசாரணைகளில் கடவுளைச் சார்ந்தவையே முக்கியமென்று, கிரேக்கர்களில் சிறந்த அறிஞரான பிளேடோ என்பவர் ஒருசமயம் எடுத்துரைத்தார். இதை நாமும் ஏற்றுக்கொண்டுதான் இருக்கிறோம். கலைச் சிருஷ்டிகளில் இதையேகூட விரதமாகக் கொண்டுள்ளோம். நம் நாட்டு அறிஞர்களில் சிறந்தவரான ஆனந்த கிருஷ்ண குமாரசுவாமி, இன்னும் இந்தக் கட்சியைச் சற்றுப் பலப்படுத்தும் முறையில் சொல்லுவார்: "மேலே குறித்த இம்முக்கிய விஷயத்தில் பிளேடோவோடு நமக்கும் ஒற்றுமை இருப்பின், நம் நாட்டுக் கலைகளான சங்கீதம், நாட்டியம் முதலியவைகளைப் புதிய நோக்கங்

களுடன் சீர்திருத்தங்கள் செய்வது சரியல்ல. விஷய சுகத்தின்பொருட்டு மட்டும், கலைகளின் அடிப்படையான கட்டுப்பாடுகளையும் சம்பிரதாயங்களையும் மாற்றுவது என்பது, கேவலம் விஷய சுகத்தையே நாம் மேலாக எண்ணி, மேல்நோக்கும் கலைகளையும் நமக்கு அடிமைகள் ஆக்குவதாகும்'' என்றார்.

சீர்திருத்தங்களின் ஆரவாரமே இன்று எங்கும் பெரிதாயிருக்கிறது. இந்தக் கொந்தளிப்புகள் அடங்கி, நிலைத்த ஆழ்ந்த கலை யம்சங்கள் மறுபடியும் விளங்க வேண்டும் என்பதே கலைஞர்கள் ஒவ்வொருவரும் விரும்புவது. இரண்டொருவராவது கலையின் நுட்பங்களில் ஆசையைச் செலுத்தினாலும், அதுவே போதும். எல்லோரும் உண்மையின் வரம்பற்ற சுகத்தை அடைவது எளிதன்று என்பதை, நம் நாட்டில் பிறந்த நாம் அறியாமல் வேறு யார்தாம் அறிவார்கள்?

## கலையும், வாழ்க்கையும்

"சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்று சிறுவயதில் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் சித்திரத்திற்கும் செந்தமிழுக்கும் என்ன சம்பந்தம் என்று தோன்றும். வேறொன்றுமில்லை; கலைக்கும் கல்விக்கும் பொதுவாக நல்ல பயிற்சி அவசியம் என்பதைத் தான் அது எடுத்துக்காட்டுகிறது. ஏனென்றால் வீணை வாசிப்பதற்கு மாத்திரம் அவ்வளவு கைப்பழக்கம் வேண்டியதில்லை என்று யாராவது சொல்ல முடியுமா? அல்லது ஸம்ஸ்கிருதம் உச்சரிக்கத்தான் நாபபழக்கம் கொஞ்சம் குறைவாகவே யிருந்தால் போதுமென்று சொல்லுவார்களா? இரண்டுமில்லை. மேற்சொன்ன வசனத்தில் மற்றோர் அபிப்பிராயமும் உள்ளடங்கி யிருக்கவேண்டும். அதாவது, கலைஞனுக்கும் கல்விமானுக்கும் நல்ல பழக்கம் அவரவர்களின் துறைகளில் இருக்க வேண்டுமென்பதுடன், கலைப் பயிற்சி கல்விப் பயிற்சியைவிடச் சுலபமென்று

நினைப்பதற்கில்லை என்றுகூடத் தோனி இருப்பதாகவும் கொள்ள முடிகின்றது.

அது போகட்டும். அந்த வசனத்தை இங்கு ஞாபகப் படுத்தியதற்கு ஒரு காரணமுண்டு. நம் தேசத்தில், இந்தியச் சித்திரம் என்று குறிப்பதற்கும், அறிந்து அனுபவிப் பதற்கும் கொஞ்சங்கூட இயலாத தற்காலத் தமிழ் மக்களின் முன்னோர்கள் சித்திரம் என்னும் உயர்ந்த கலையை எவ்வளவு நன்றாக அறிந்திருந்தார்களென்று காண பிக்கவே, இதை ஞாபகப்படுத்த வேண்டிவந்தது. மேலை நாட்டுச் சித்திரத்திற்கும், இந்தியச் சித்திரக் கலைக்கும் வேறுபாடுகள் அதிகம். சங்கீதத்தில் நமக்கும் அவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசமுண்டோ அதைவிட அதிகம் இதில் உண்டு. முதலில் இவ்விரண்டு வகையினருடைய கொள்கையும் லக்ஷயமுமே வேறு. ஆனால் சங்கீதத்தில் மாத்திரம், வெகுநாளாகத் தொடர்ந்துவந்த சம்பந்தம் இருப்பதால் அதை அனுபவிக்கும் சக்தி தொட்டிலிலிருந்தே நம்முடன் வளர்ந்து வந்திருக்கிறது. சித்திரத்தில் அவ்விதத் தொடர்பு இல்லாத காரணமாகவே, நம் முன்னோர்களின் ஓவியப் பயிற்சியும், அதை அறிந்து அனுபவிக்கும் சக்தியும் நம்மிடம் குறைந்துபோய் விட்டன.

சமீப காலத்தில் எல்லாத் துறைகளிலும் ஏற்பட்டிருக்கும் தேசாபிமான இயக்கத்தின் பயனாகப் பரத நாட்டியமும் இந்தியச் சித்திரக் கலையும் புத்துயிர் பெற எத்தனிக்கின்றன. சென்ற பத்து வருஷங்களுக்குள்ளாகப் பரத நாட்டியம் ஸ்திரீ புமான்களின் மனத்தைக் கவர ஆரம்பித்துவிட்டது. சாமானிய மனிதர்கள்கூடக் கொஞ்சங் கொஞ்சமாய நாட்டியமாடுவதைப் பார்த்து, அந்தப் பழக்கத்தினாலேயே முதலில் அனுபவித்ததைவிட எவ்வளவோ அதிக ரஸமாய இப்பொழுது அதை அனுபவிக்கின்றார்கள். பரதநாட்டியம் ஆடுகிறவர்கள் அவ்வப் போது செய்யும் அங்க அபிநயங்களினாலும், ஹஸ்த முத்திரைகளினாலும் தெரிவிக்கும் பாவங்கள் முதலில் அர்த்தமாவதில்லை. ஆனாலும் மொத்தத்தில் சங்கீதம்,

சாகித்தியம், லயம் இம்மூன்றின் சிகரத்தை எட்டிப் பிடிப்பதாகவே பரத நாட்டியத்தை நாம் கருதத் தொடங்கிவிட்டோம். மேலும், நன்ருக கவனித்தோமானுல் நம் தேசத்தில் சிற்பத்திலும் சித்திரத்திலும் அமைந்திருக்கிற அரிய பாவங்கள் நாட்டிய அபிநயங்களிலும் தாமே வெளியாகும். நாட்டியம் முதலா, சிற்பம் முதலா, எதிலிருந்து எது பாவத்தை உபயோகப் படுத்திக்கொண்டது, என்பதை அறிவது சாத்தியமில்லை. ஏனென்ருல் இரண்டிலும் ஒருவிதமான பாவங்களை அதிகமாக உபயோகப்படுத்தி யிருப்பதை மாத்திரம் மறக்கலாகாது.

வேறு எந்தத் தேசத்திலும் காணப்படாத மற்ெறாரு பெரிய அம்சத்தையும் நம் தேசத்துக் கலைனில்தான் காணலாம் சங்கீதம், நாட்டியம், சிற்பம், சித்திரம் எல்லாம் ஒன்றுசேர்ந்து தெய்வத்தின் வழிபாடு என்னும் ஒரே நோக்கத்தைப் போஷிக்கின்றன பாட்டுக்கள் அநேகமாகத் தெய்வத்தையே புகழும் நாட்டியமும் அப்படியே சிற்பத்தைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. கோவில்களின் கோபுரங்களிலும் தூண்களிலும், மற்றும் எல்லா இடங்களிலுமே கிரீடம் தரித்து ஆபரணங்கள் அணிந்த கணக்கில்லாத உருவச் சிலைகளைக் காண்கின்ேறாம். மனிதனுடைய வாழ்க்கைக் காட்சியாக ஒன்றுமே இராது. நான்கு கைகளுடன் கதை ஏந்திய துவாரபாலகர்களின் கம்பீரமான உருவங்களையும், குறைந்தது மூன்று நான்கு தலைகளைத் தாங்கிய தேவர்களின் ரூபங்களையும் பார்க்கிேறாம். அவைகளைக் கண்டு எப்பொழுதாவது நம் மனதில் வெறுப்பும் அலட்சிய புத்தியும் உண்டாகின்றனவா? இல்லை. ஏன்? மனிதனைப் போலல்லாது ஈசுவராதிகளும தேவர்களும் வித்தியாசமாய் இருந்தார்களென்று புராணங்கள் சொல்லக் கேட்டிருப்பதால், இம்மாதிரிச் சிலைகளைப் பார்த்து எவ்வித அவநம்பிக்கையும் நமக்கு ஏற்படுவதில்லை. மயிர்சிலிர்க்கும் உணர்ச்சியுடன் சில சமயங்களில் அவ்விதத் தோற்றங்களைக் கண்டு வியக்கிேறாம். கீழே சாய்ந்த

இமைகளுடன் கூடிய அவ்வுருவங்களும் தம் பார்வை யாகிற கருணைக் கடலில் நம்மைச் சேர்த்துவிடு கின்றன!

அவ்விதமே சித்திரத்திலும் பாவத்தையே முக்கிய மாகக் கருதி, இயற்கைக்குக் கூடச் சற்று விரோதமான தோற்றங்களை ஓவிய மணிகள் சிருஷ்டித்திருக்கிறார்கள். அஜந்தா குகையின் சுவர்களிலும், சிற்றன்னவாசல் மேற் கூரைகளிலும், கைலாஸநாதர் கோவில் உட்புறங்களிலும் இந்தியச் சித்திரங்களைப் பார்த்தவர்களுக்கு இவ்விஷயம் புலனாகும். நீண்ட கைகளையும், கூர்மையான விரல்களையும், அதிகமாக நீண்ட கண்களையும் பெற்றிருக்கிற உருவங் களைப் பார்த்து, 'இவை ஏன் சதைப்பற்றில்லாத ரூபங்க ளாக இருக்கின்றன? நம் தேசத்தவர்கள் ஒருகால் ஓவியக்கலையையே நன்கு கற்கவில்லையோ" என்று கூட நம் கண்கள் சந்தேகிக்கும். மேலை நாட்டுப் படங்களில் மனிதனுடைய சரீர செளஷ்டவத்தைக் காட்டும் சிருஷ்டி களை நாம் பார்க்கிறோம். இயற்கையின் சிருஷ்டியைக் காட்டிலும் எல்லா விதத்திலும் குறைந்த மனித சிருஷ்டி, இயற்கையின் தோற்றங்களை அவ்விதமே சரியாக வரைந்து காட்டுவது அசாத்தியம் ஆகையினால் அந்த முயற்சியை விட்டு ஹிருதய பாவங்களை முக்கியமாகக் கருதிக் கற்பனையினாலேயே நம் புராதன சித்திர காரர்கள் படம் வரைந்திருக்கிறார்கள். அவர்கள், கை கால், விரல், முகம் முதலிய அவயவங்களின் பரி மாணங்களையும், தூரம் சமீபம் இவைகளைக் காட்ட வேண்டிய அளவுகளையும் அதிகம் பொருட்படுத்தாது, பார்த்த மாத்திரத்தில் பாவங்கள் மட்டுமே மனத்தில் படவேண்டும் என்னும் ஒரே அபிப்பிராயத்தோடு சித் திரங்களை அமைத்திருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு அங்க பரிமாணங்கள் தெரியாவென்று கொள்ளக்கூடாது. ஏனெனில், புகைப்படம் மாதிரி கண்ணில் பட்டதைத் தெரிந்த விதமே வரைவதற்கு வித்தம் என்று பெயர் கொடுத்து, கலைத்திறமையில் அதைச் சற்று இரண்டாம் பட்சமாகவே கருதியும் வந்துள்ளார்கள்.

ஒருவேளை இவை முழுவதுமே மிகுந்த கற்பனையாகத் தோன்றலாம். ஏனென்றால், சங்கீதம், சித்திரம் இவைகளைப்பற்றி நிதர்சனமாகக் காட்டாமல் வாய்ச் சொல்லினால் தெரிவிப்பது பிரயோஜனமில்லை. இந்தியச் சித்திரக் கலையின் விஷயங்கள் முழுவதையும் தெரிந்து கொள்ளாமல், எப்படிப் படங்களைப் பார்த்து அனுபவிக்க முடியும் என்றுதான் கேள்வி பிறக்கும் எப்படிப் பரத நாட்டியத்தின் விஷயங்களை முற்றும் உணராவிட்டாலும் குறைந்தது மூன்றுமணி நேரமாவது நாட்டியத்தை அனுபவிக்க வேண்டிய அளவு தேர்ச்சி இப்பொழுது பெற்று விட்டோமோ, அம்மாதிரியே இந்தியச் சித்திரங்களை அடிக்கடி பார்ப்பதினால் அவைகளை அறிந்து அனுபவிக்கும் சக்தியும் நமக்கு வாய்க்கலாம்.

அநேக வருஷங்களுக்கு முன் டாக்டர் கஸின்ஸ், இந்தியச் சித்திரத்தைப் பற்றி அழகான பிரசங்கங்கள் சில செய்தார். அப்பொழுது அநேக புராதனப் படங்களை எதிரே திரையொன்றில் லாந்தேர்ன் ஸ்லைட் மூலம் காண்பித்தார். அவைகளில் ஒரு படம் அஜந்தா குகையில் வரையப்பட்டிருக்கும் உருவத்தின் பிரதி. இரண்டு கைகள் வளைகள் அணிந்து கோலாட்டக் கழிகளை ஏந்தித் தாளத்துடன் அடிக்கும் பாவம் அதில் காணப் பட்டது ஆனால் படத்தில் முழங்கைவரையில் கூடக் கைகள் காணப்படவில்லை. உருவத்தின் மற்றப் பாகமெல்லாம் அழிந்துபோயிருந்தது. டாக்டர் கஸின்ஸ் அப்படத்தைத் தம் முன்னிருந்த கூட்டத்திற்குக் காட்டி, 'இக் கைகளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்டார். எல்லோரும் சும்மா இருக்க, ஒருவர் மாத்திரம் எழுந்து, 'அக்கைகளையுடைய கட்டழகியைப் பற்றித் தான் நினைக்கிறேன்' என்று பதில் சொன்னார். உடனே ஆனந்த பரவசத்தினால் முகமலர்ந்த அந்த மேலைநாட்டு அறிஞரும், 'ஆம், இக்கைகளின் சொந்தக்காரி அழகு வாய்ந்தவளாகவே இருக்கவேண்டும். இப் படத்தின் உயர்விற்கு இதைவிட வேறு அத்தாட்சியும் வேண்டுமா?' என்று கூறினார். நம் விரல்களைப்போல் சரியாக எலும்

பின் கணுக்களுடன் இல்லாவிட்டாலும், பாவம் பூர்ணமாயிருந்ததால் எங்கிருந்தோ அழகு பெற்றிருந்தன அக்கைகள். இந்த மாயமே இந்தியச் சித்திரத்தின் சிறப்பு. இதுவே அதனுடைய உயர்ந்த நோக்கமும் ஆகும். கைவிரல்கள் நமக்கிருப்பதுபோல் சரியாகவே இருந்திருந்தால்கூட நமக்குத் தெரியாததுபோலவே அக் கைகளுக்கும் கோலாட்டமடிப்பதின் லயசுகம் தெரிந்திருக்காது போலும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

கலையின் உணர்ச்சி மனிதசமூகத்தின் சுகவாழ்க்கையின் ஒவ்வொரு காரியாம்சத்திலும் பிரதிபலிப்பதே சிறந்த நாகரிகத்தின் அறிகுறியாகும். மேலைநாட்டு நாகரிகம் நம்மை இவ்வளவு மாற்றிய பிறகும், நாள்தோறும் பொழுது புலர்ந்ததும் ஜலத்தினால் மெழுகிய வாசலில் வெள்ளை மாவினால் இடப்படும் கோலங்களை இன்னும் நம்முடைய கிரகங்களில் காண்பது மிக ஆச்சரியமே. ஸ்நானம் செய்து சுத்தமான வெள்ளை வேஷ்டியைத் உடுப்பது மடி என்று நினைத்துவந்த தேசத்தில், நாளடைவில் மடி என்றால் பார்ப்பதற்கு அழுக்காயிருந்தாலும் பாதகமில்லையென்று எவ்விதம் கருதுகின்றார்களோ, அம்மாதிரியே வாசலில் கோலம்போடுவது அழகாக இல்லாவிட்டாலும் சரி, மாக்குழாய்களால் இழுத்தாலும் தவறில்லை, கோலம் இடாமல் மாத்திரம் இருக்கக்கூடாது, அது அமங்களத்தைக் காட்டும் என்ற அச்சானியத்தை மட்டும் வைத்திருப்பதை நாம் பார்க்கிறோம். மாவிலையும் பசுமஞ்சளும் சகல சுபகாரியங்களிலும் உபயோகிப்பது அழகிற்காக அல்ல, வேறு எதற்காகவோ என்று எண்ணமிட ஆரம்பித்துவிட்டோம். வீட்டின் கூடத்தைச் சுத்தமாகத் துலக்கி விசித்திர கோலங்கள் இழைத்து, அவைகளின் நடுவில் பால்போல் தேய்த்து வைத்த குத்துவிளக்கில் தேன்போன்ற எண்ணெயின் நடுவிலிருந்து கிளம்பும் சுடர் நம் மனத்தை வசீகரிப்பதை ஏனோ நாம் மறந்து விட்டோம்?

தினந்தோறும் நாம் கையாளும் சாமான்களில் எதுவாயிருந்தாலென்ன, குத்துவிளக்கானாலென்ன, பஞ்ச

பாத்திரமானாலென்ன, உட்காரும் பீடமானாலென்ன, புத்தகம் வைக்கும் சிக்குப் பலகையானாலென்ன, எல்லாவற்றிலும் அழகிய பதுமைகளைச் செதுக்கியும் சித்திரங்களை வரைந்தும் இருப்பதை நம் பழம்பெருந் தேசத்தில் இன்னும் காணலாம். அன்னமும் தாமரையும் கணக்கில்லாமல் அவைகளில் நிறைந்திருக்கும். நம் தேசத்து மாதர்களின் சேலையைக் காட்டிலும் அரிய வர்ண நிர்மாணங்களை எங்காயினும் பார்க்க முடியுமா? அயல்நாடுகளில் காகிதத்திலும் கான்வாஸிலும் வரையும் இயற்கைக் காட்சியின் விதம் விதமான வர்ணங்களை நம்முடைய ஸ்திரீகளின் ஆடைகளில் சாதாரணமாயப் பார்க்கிறோம். தலைப்பில் ஜரிகைவேலை யென்றால் என்ன சாமானியமா? யானையும் கிளியும் செடியும் கொடியுமான வேலைப்பாடுகள் கண்ணைப் பறிக்கின்றன. சித்திர மென்றும், அவைகளைத் தனிப்பட ஓர் இடத்தில் வரிசையாய வைத்துப் பார்க்க வேண்டுமென்றும் நமக்குப் பழக்கமில்லை. அதனால் ஏற்படும் சில குறைவுகளும் உண்டு. ஆனால் உபயோகிக்கும் ஒவ்வொரு வஸ்துவிலும் கலையின் விசித்திரத்தை வெகு விமரிசையாகக் கையாண்டவர்கள் நாமே என்று சொல்வதில் மிகை யொன்றுமில்லை. இவ்விதக் கலையுதஸவத்தில் ஈடுபட்டவர்களின் உள்ளங்கள். இந்திய சித்திரமென்று கருதப்படும் படங்களை இப்பொழுது அனுபவிக்க முடியாமலிருப்பது நம் துரதிர்ஷ்டமே. கவனியாத குற்றம் நம்முடையது. காலையிலும் மாலையிலும் சூரியோதய சூரியாஸ்தமனங்களினால் ஆகாசத்திலுண்டாகும் வர்ண பேதங்கள் எல்லோருக்குமே தெரிகின்றனவா? பார்த்தாலல்லவோ தெரியும் அவைகளின் விநோதம்! நம் வாழ்க்கையில் இயற்கையின் அற்புதத்தைக் கண்டு களிக்க நேரமெங்கே நமக்கு? அறிவுக் கண்ணுக்குப் புலப்படும் வர்ணங்கள் சாமானியமான பார்வையில் தென்படா.

"மலரினில், நீல வானில், மாதரார் முகத்தில் எல்லாம்,
இலகிய அழகை ஈசன் இயற்றினான். ..........
அலகிலா அறிவுக் கண்ணால் அனைத்தையும் நுகரு மாறே."

—இது பாரதியின் வாக்கு. அறிவுக்கணணல் பார்த்தால், இயற்கையின் அற்புதங்கள் தென்படும். படக்காட்சி வரைபவன் இயற்கையின் வர்ணங்களைக் காண்பதும், அவைகளை மனத்திலே நிறுத்துவதும் பிறகு அவைகளைக் காகிதத்தின்மேல் வர்ணங்களினுல் பார்த்த விதமே காட்சியாகச் சிருஷ்டிப்பதும்,அவனுடைய ஞாபக சக்தியை விருத்தி செயயும் முறையாகும். மாந்தர் உள்ளத்தில் எழும் எண்ணங்களைக் கவி சொல்லில் எடுத்துக்காட்டுவது போல், கண்ணில் படும் அழகிய தோற்றத்தின் வர்ணங்களைப் படம் எழுதுபவன், எந்த வர்ணங்கள் சேர்ந்து அக்காட்சியை நமக்கு அளிக்கின்றன என்று நிர்மாணித்தே விளக்குகிருன். அவன் அறிவுக்கணணுக்குப் புலப்படும் வர்ணச் சேர்க்கைகளும் வித்தியாசங்களும் நம் கண்களுக்கு உடனே படாத காரணம், நாம் நம் பார்வையில் அறிவை உபயோகப்படுத்தாதது தான.

முக்கியமாக, மிகுந்த நீர்வள நிலவளம் பொருந்திய நம் நாட்டில் யாத்திரை செயகிறவாகள் அறிவுக் கண்ணை மாத்திரம் உபயோகித்தால் எத்துணை அழகிய காட்சிகளை விடாமல் அறிந்து கொள்ளலாம்! அதனுடன் நில்லாமல் சித்திரப் பயிற்சி கொஞ்சம் செயதவர்கள் ஒரு வர்ணப் பெட்டியையும் காகிதத்தையும் கருவிகளையும் உடன எடுத்துச் சென்ருல், படம் எழுதுவதைவிட உயர்ந்த பொழுதுபோக்காக வேறெதைச் செய்துகொள்ள முடியும்? ஆம், சித்திரக்கலையை உத்தேசித்தே நாம் தேசாபிமானத்தை மேற்கொள்வது அதிகமில்லைதான். மேகமண்டலங்களையும் தாண்டிச் சூரிய கிரணங்கள் பட்டுத் தங்கமயமாய ஜ்வலிக்கும் ஹிமய மலையையும், 'நீலக்கடலின் அலைகள் அடித்து அடித்து வெண்ணுரைகளை வாரி எறிந்து பாரதத்தாயின் பாதத்தை அலம்புவதுபோல் காட்சியளிக்கும் கன்யாகுமரியையும், இவைகளுக்கு நடுவில் அநேக நதிகளையும் குன்றுகளையும் காடுகளையும் பசுமையான வயல்களையும் பெற்ற பாரத பூமியைக்காட்டிலும் அழகிய ஒருதேசத்தை நம்மால் பார்க்கமுடியுமா?

சித்திரம் சாமானியமான கலையல்ல என்று அறிந்த நாம் பிறரிடமிருந்து இப்பொழுது இந்தியச் சித்திரக் கலையின் உயர்வை அறியவேண்டிய நிலைக்கு வந்திருக்கிறோம்! போகட்டும் ஒருபொழுதும் அறியாமலிருப்பதைவிட இப்பொழுதாவது அறிவதற்கு ஆசைப்படுவது மேல். நம் வீடுகளில் பழைய நாகரிகத்துடன் கோலமும், குத்துவிளக்கும் மறைந்துபோயக் கொண்டிருக்கின்றன கேவலம் மங்கள சின்னங்களாகத்தான் அவைகளை வைத்திருக்கிறோம். அமெரிக்கா தேசத்திலிருந்துவந்த பிரொபெஸர் வாட் என்னும் ஒரு சிறந்த அறிவாளி ஒருசமயம் கோகலே மண்டபத்தில் சொன்ன வார்த்தைகளை இச்சந்தர்ப்பத்திலும் மறக்க நம்மால் முடியாது. அவர், "உங்களுடைய காரியங்களையும், பழக்க வழக்கங்கள் அனைத்தையும் மாற்றிக் கொண்டாலும், எனக்கு அதில் அதிருப்தி இல்லை. ஆனால் சொப்பன உலகமோ என்று அதிசயிக்கும்படி விசித்திர விசித்திரமான வர்ணங்களை அழகாக எடுத்துக்காட்டும் உங்கள் பெண்களின் ஆடைகளை மாத்திரம் மாற்றவேண்டாம் என்றுதான் நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார். அவர் சொன்ன மொழிகள் உபசாரத்திற்காக அல்ல என்பதை மட்டும் நினைவூட்டிக்கொண்டால் அதுவே போதுமானது.

## கலையும், சம்பிரதாயமும்

பெண்ணொருத்தி பரதநாட்டியம் ஆடுகிறாள். காம்போதி ராகத்தில் க்ஷேத்திரக்ஞர் பதமொன்றைப் பாடி அபிநயம் பிடிக்கின்றாள் "வினவே கோபாலு நீ" என்னும் பல்லவி ஆரம்பமாகிறது. கோபாலன் என்ற பெயர் கண்ணனைத்தான் குறிக்கின்றதென்பதை எல்லோரும் அறிவார்கள். இருந்தாலும், அப்பெண் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப்போல், தன் கீழ் உதட்டில் புல்லாங்குழலை வைத்துத் தன் இரண்டு கைகளின் விரல்களால் குழலின் துவாரங்களை, நாதத்தைக் கிளப்பும் பொருட்டு, திறந்து மூடும் பாவனையுடன், தலையைக் குழலின் பக்கம் சாய்க்

தும், வலது புருவத்தை மேலே தூக்கியும், வலது காலை முழங்காலுக்குக் கீழ் இடது காலின் பின்னால் கொண்டு போய் நிறுத்தியும் அபிநயம் செய்கிறாள். பிறகு பசுவைக் கறந்து பாலை எடுப்பதுபோலவும், பிறகு தயிரை மத்தைக் கொண்டு கடைவது போலவும், பிறகு வெண்ணெயைக் கடைந்த மோரிலிருந்து திரட்டுவது போலவும், இன்னும் இம்மாதிரி கிருஷ்ணன் சம்பந்தமான பல அழகிய பாவங்களையும் ஒன்றுவிடாமல் பல்லவியின் முதல் இரண்டு வார்த்தைகளைப் பின்னணி - சங்கீதம் திரும்பத் திரும்பப் பாட, அப்பெண் நமக்குக் காண்பிக்கிறாள். செவிக்கு இன்பமளிப்பதுடன் அபிநயத்தின் தொடர்ச்சி கலைஞர்களுக்குப் பொருத்தமாகவே தோன்றுகிறது.

நாட்டியம் பார்த்துக்கொண்டிருப்பவர்களில் யாராவது ஒருவர் கேட்கலாம், 'ஏனையா, இம்மாதிரி கண்ணன் பெயரைச் சொன்னதும் ஒன்றைக் கூட விடாமல் அநேக பாவங்களை ஒரே சமயத்தில் அடுக்கவேண்டும்? ஒன்றிரண்டை விட்டால் தவறு? அப்படிச் செய்யாததினால் சலிப்பும் காலதாமதமுமல்லவா ஏற்படும் பார்க்கின்றவர்களுக்கு" என்று.

'தங்களுக்கு ஏதாவது வேறு ஞாபகமோ அல்லது ரயிலுக்கு அவசரமோ?" என்றுதான் நமக்கும் ஆத்திரத்துடன் பதிலுக்கு அவரைக் கேட்கத் தோன்றும்.

நாட்டியக் கலையை அறிந்து அனுபவிக்கிறவர்களுக்குக் கிருஷ்ணனைப் பற்றிய அபிநயங்களிலெல்லாம் ஒரே பிரமையும் உதஸாகமும்தான். பாஷை கருத்தை விளக்குவதுபோல, அபிநயமும் கோவையாகக் கண்ணனைத் தங்களுக்கு அறிவிப்பதாக நினைக்கும் மாந்தர் உள்ளங்களுக்குக் கண்ணன் சம்பந்தமான பாவங்களை முழுவதும் காட்டுவதில் சலிப்பு எங்கிருந்து வரும்? மேலும், அபிநயம் லயத்தை ஆதாரமாகக் கொண்டது, பால்கறப்பது, மத்துக் கடைவது,வெண்ணெய் திரட்டுவது முதலான செய்கைகள் தாளத்திற்கு மிகவும் ஒத்தவை. அழகிய கரங்கள் லயத்துடன் இழைந்து இவைகளை அபிநயிக்கையில் பார்ப்பவர்

உள்ளங்கள் தனி உலகில் சஞ்சரிக்கும் என்பதில் ஐய மில்லை. கலை உணர்ச்சியும் சமய உணர்ச்சியும் உள்ளத்தில் கலப்பதில் ஸஹிருதயர்கள் அடையும் தேர்ச்சியை உணர்ச்சியற்றவர்களால் அறிய முடிவதும் கொஞ்சம் சிரமம் என்றுதான் சொல்லவேண்டும்.

மேலே குறிப்பிட்ட கேள்வியும் வெறும் கற்பனை யல்ல. ஏனென்றால் நம்மில் சிலர், பரத நாட்டியமாடும் பொழுது, ஒன்றுமே விளங்காமல் தங்களுடைய மனச் சலிப்பைத் தீர்த்துக்கொள்ள பக்கத்திலிருப்பவர்களை வருத்துவதை நாம் கவனிக்கின்றோம். அவர்கள்மேலும் புகார் சொல்வதற்கில்லை கேள்வி என்னவோ சுலபம் தான். ஆனால் பதில் சொல்வது மாத்திரம் கஷ்டம். அப்படி ஒருவாறு சொன்னாலும், எல்லோரும் கேட்ட மாத்திரத்தில் ஒப்புக்கொள்வதையும் எதிர்பார்ப்பது சாத்தியமில்லை. ஏனெனில், உணர்ச்சியையே முழுவதும் நம்புகிறவர்களுக்குக் கூட, கலைப் பரிசயத்தையும் சிறிதுகாலம் அடையவேண்டி யிருப்பதை நாம் உணர வேண்டும்.

நாட்டியமாடுகிறவர்களையோ, அல்லது நட்டுவனார் களையோ 'இது ஏன், அது ஏன்?' என்று விசாரிக்கப் புகுந்தால், ஒரே பதிலைத்தான் அவர்களிடம் எதிர்பார்க்க லாம்; அதாவது "இதுதான் சம்பிரதாயம்" என்று. உடனே நம்மில் சிலருக்கு மனத்தளர்ச்சி உண்டாகிவிடும். எக்கலை யானாலும் இந்த ஒரு தேசத்தில்தான் சம்பிரதாயம் வந்து கூத்தாடுகிறது என்று புகார் செய்வார்கள் கோபத்தினால் வெளிவரும் வார்த்தைகள்தாம் இவை. ஏனென்றால், எல்லாவற்றையும் புத்தியினால் தீர்மானிக்கும் மேலை நாட்டார்களும், அவர்களுடைய பழக்கங்களில் மோகம் கொண்ட நம்மவர்களும்கூட, கலைத்துறையில் மாத்திர மென்ன, இதர சர்வ காரியங்களிலும் சம்பிரதாயப் பற்று தலை எவ்விதம் விலக்கமுடியும்?

சம்பிரதாயம் அர்த்தமற்றதா என்றால், இல்லை. அதுவே சிற்சில சமயங்களில் ஒரு தேசத்தின் தனியான பண்பாட்டைத் தெளிவாக நமக்கு விவரிக்கிறது என்று

ருஜூப் படுத்தலாம். அதிலும் கலையின் அடிப்படை யான விஷயங்களுக்கு மரபுகள் எவ்வளவோ உதவி யாகின்றன. காலத்தின் போக்கைப் பிரதிபலிக்கும் சிற்சில மாறுபாடுகளைக் கலையின் உயிர்த் தத்துவங்களாக யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். உதாரணமாக, நாட்டி யத்தை எடுத்துக் கொள்வோம். காலோடு ஒட்டிய சராயை அணிந்து கொண்டு, அதன்மேல் ஜரிகைச் சேலையைக் கச்ச மாகக் கட்டிக்கொண்டு தோற்றமளிக்கும் பெண் உரு வத்தை நாம் அவ்வளவாக அனுபவிப்பதில்லை. கவனித் தால் நம் கண் சொல்வதிலும் அவ்வளவு பிசகில்லை என்று தெரியவரும். அங்க ஸௌஷ்டவமென்பது நாட்டி யத்திற்கு அடிப்படையான ஓர் அம்சம். அழகை எடுத்துக் காட்டும் அணிகளையும் ஆடையையும் தரித்துக் கொள்ளா மல், பின் இரும்பும்பொழுது விகாரப்படுத்தி எடுத்துக் காட்டும் கச்சமும், காலை வேண்டிய அளவுக்கு மேல் மறைக்கும் சராயும் அவசியமில்லைதான். இந்த வேஷம் தொன்றுதொட்டு வந்ததுமல்ல. ஏதோ சில கார ணங்களால் நடுவே நம் நாட்டில் தோன்றி, நாட்டியக் கலையில் க்ஷீண தசையையே குறிப்பிடுகின்றது என்பது அறிந்தவர்களின் கட்சி. எந்தக் கலையானாலும் ஒவ் வொன்றிற்கும் ஏற்பட்ட உத்திகள் போன்ற சில மரபு களைக் காரணமில்லாமல் கைவிடுவது அந்தக் கலையின் வளர்ச்சிக்கு மிகுந்த கேட்டை விளைவிக்கும்.

மரபுகள் கேவலம் பழக்க வழக்கங்கள் அல்ல என்ப தையும் உடனே நாமறியவேண்டும். உதாரணமாக, சங்கீதக் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டை ராக ஆலாபனத் திற்கு முன்னோ பின்னோ பாடுவதைச் சௌகரியத்தை முன் னிட்டதாகவே நாம அறியவேணடும். சங்கீதக் கலையில் தோன்றிய அடிப்படையான சம்பிரதாயமல்ல அது. 'அப்படியானால் தமிழ்ப் பாட்டைப் பாடகர்கள் சாதா ரணமாக ஏன் பின்னால் தள்ளிவிடுகிறார்கள்?" என்று தமி ழபிமானிகள் கட்சி செய்து வாதாடுவார்கள். கீர்த்தன அம்சங்கள் பூரணமாயுள்ள உருப்படிகளையே கச்சேரி களைக் கட்டுவதின்பொருட்டு முதலில் கையாள வேண்டி

யிருக்கிற தென்று சங்கீதக் கலையில் உழலும் எவரும் ஒப்புக்கொள்வார்கள். எல்லாப் பொருத்தங்களுடன் கூடிய தமிழ்க் கீர்த்தனத்தை அவசியம் ராக ஆலாபனத்திற்கு முன்னால் பாடுவதில் ஒருவருக்கும் ஆக்ஷேபணை இருக்கமுடியாது. ஆனால் அதற்காக எவ்வளவு சாகித்ய ருசியும் பாவமும் கலந்து ஒரு பாட்டு இருப்பினும், சங்கீதக் கலையின் அடிப்படையான கலை அம்சங்கள் பூர்ணமாக இல்லாவிட்டால், பாஷையின் காரணத்தைக் கொண்டுபட்டும் அதை ராக ஆலாபனத்திற்கு முன் பாடுவது, ரஸிகர்களுக்குக் கச்சேரியின் வளத்தைக் கொஞ்சம் குறைப்பதாகவே தோன்றும்.

சௌகரியம் வேறு, மரபு அல்லது சம்பிரதாயம் வேறு, என்று அறிந்த பிற்பாடு கவனிக்க வேண்டிய விஷயம், மரபுகள் கலைக்கு அவசியம்தானா என்பது. அபிநயத்தை முதலில் பார்ப்போம். கடக ஹஸ்த மென்றும், லோல ஹஸ்தமென்றும், திரிபதாகமென்றும், அஞ்சலி ஹஸ்தமென்றும் குறிக்கும் அநேக முத்திரைகளை நாட்டிய சாஸ்திரம் அறிந்தவர்கள் கவனித்து அனுபவிப்பார்கள். அம்மாதிரியான சங்கேதங்களின் அபிப்பிராயத்தை உணர்ந்தவர்களுக்கு, கபித்த ஹஸ்தமென்று கைவிரல்களின் முதல் மூன்றையும் சேர்த்து மடக்கி ஆள்காட்டியையும் கட்டை விரலையும் பிரித்து விளாங்காயளவு இடம்விட்டுக் காட்டும்பொழுது, ஆயுதங்களைத் தரிக்கும் அவசரம் மனத்தில் பதிய யுத்த கோலத்தை மனக்கண்ணில் பார்ப்பார்கள். இதே மாதிரி அபய ஹஸ்தத்தைக் கண்டவுடன், அருளுடன் வரமளிக்கும் மங்கள மூர்த்தியைத் தியானம் செய்வார்கள். பரிசயம் கொஞ்சம் கூட இல்லாதவர்களுக்கு இம்மாதிரி முத்திரைகளைக் காண்பதில் என்ன திருப்தி இருக்கக் கூடும்! சங்கீதத்தில் ஸ்வரங்களை நிரவல் செய்யும் பொழுது பிடிக்காமல் முகத்தைச் சுளிக்கும் சில கலை அபிமானிகளைப் போலவேதான் இவர்களும் ஆவார்கள். சங்கீதத்தின் அழகிற்கு ஸ்வரங்களின் அமைப்பு எவ்

வளவு முக்கியமோ, அவ்வளவு அவசியமாகவே நாட்டிய முத்திரைகளும உண்டாக்கப் பட்டிருப்பதை நாம புரிந்து கொள்ளவேண்டும.

இலக்கியத்தைச் சற்று நிதானித்துப் பார்த்தோமானால், அங்கும தொனிப் பொருத்தங்களுடன் மரபுகள் இணைபிரியாமல் கலந்து காணப்படுகின்றன. சாதாரணமாகக் கண்ணைத் தாமரை இதழுக்கும், முகத்தைச் சந்திரனுக்கும, கரு விழியை நீலோத்பலத்திற்கும, திருஷ்டியை மானின் மிரண்ட பார்வைக்கும சமானமாக உவமை கூறியே ஸமஸ்கிருதம, தமிழ், தெலுங்கு முதலிய நம பாஷைகளில் கவிகள வர்ணிப்பார்கள் மேலை நாட்டுப் பாஷைகளில் இல்லையா இம்மாதிரி உவமைகள் என்றால், உண்டு, ஆனால் நமக்கிருப்பதுபோல் அவை சமபிரதாயமாக அவர்களிடம காணப்படவில்லை என்று ஏற்படும. ஆனால் சம்பிரதாயமாக ஆவதில் பிசகு ஏதேனும் உண்டா என்றால், இல்லை என்று நாம் காட்டி விடலாம நேற்றுப் பார்த்ததால் இன்று தாமரையும, சந்திரனும, மானும, மயிலும கலை கசியும உள்ளத்தில் பழையதெனத் தோன்றுகின்றனவா? அல்லது குறைவான உணர்ச்சியைத்தான் எழச் செய்கின்றனவா? ஒருகாலுமில்லை. ஒருகால் தாமரையையே கண்டால் பிடிக்காத சிலருக்கு மறுபடியும மறுபடியும தாமரையை உபமானமாகக் கொள்வதில் சலிப்பு ஏற்படுவது நியாயமாயிருக்கலாம.

சந்திரன் தன் பதினாறு கலைகளுடனும் வானத்தில் பிரகாசிக்கும்பொழுது அந்நிலவின் சுகத்தை உணராத மனிதனுக்கு, பூர்ண சந்திரனுக்கு ஒப்பிட்ட முகத்தைப் பற்றித்தான் தெரியுமா? அவனுக்குப் புரியவில்லையே என்று சந்திரனையும் தாமரையையும் உவமைக்கு இலக்கான விஷயங்களாக ஆக்காமல் விடுவதும் கவியினுடைய பொறுப்பல்ல. ஓரளவு முதலில் உணரப்படாத ரஸானுபவங்கள்கூடப் பழக்கத்தினால் ஒருவனுக்குப் பிற்பாடு ஏற்படலாம். ஆனால் எதற்கும் ஸஹிருதயனுடைய தன்மை முதலில் அவனிட மிருக்கவேண்டும்.

அப்படி இல்லாவிட்டால் கற்பனையின் வாயிலாக ரஸா நுபவத்தைப் பெறும் பாக்கியம் ஒருகாலும் அவனுக்குக் கிட்டாது என்பதை ஜாதக ரீதியாய்க்கூட ஜோசியம் சொல்லிவிடலாம்.

ஸம்ஸ்கிருத நாடகங்களை எடுத்துக்கொண்டு சற்றுப் பார்ப்போம். ஷேக்ஸ்பியரைப் போன்ற மேலைநாட்டுக் கவி களின் நாடகங்களைப் வாசித்தநுபவித்தவர்களுக்கு நம் தேசத்து நாடகங்களைப் பார்த்ததும் முதலில் ஒரேமாதிரி பாவங்களையும், விஷயங்களையும் அதிக வித்தியாசங் கூட இல்லாமல் சொல்லுவதாகத் தோன்றும். சாவும் சண்டையும் நாடக மேடையில் தோன்றக்கூடாதென்பது நம் இலக்கியத்தில் ஒரு சம்பிரதாயம். இதிலிருந்து நாட கத்தை உயர்ந்த ஸ்தானத்திற்கே கொண்டுபோகாமல் செய்வது இம்மாதிரி மரபுகள்தாம் என்று தற்கால அறிஞர்கள் தீர்மானித்து விடுவார்கள். நாடகத்தில் கண் ணெதிரே ரத்தம் சிந்துவதையும், உயிர் துறப்பதையும், காண்பதில் மனசு படும் ஆயாசம்தான் எவ்வளவு? கலையை அனுபவிக்கும்பொழுது மனசு அடையவேண்டி யது ரஸானுபவம். அதன் மூலம் மன அமைதி என் பதை நம்மவர்கள் வற்புறுத்துகின்றார்கள். சாகுந்தல நாடகத்தை அனுபவித்த யாவரும், இந்த விஷயத்தினுள் நன்கு சென்றிருப்பார்கள். கடலலைகளை யொத்த மனப் போராட்டங்களை மறந்து, மலைமேல் தெளிந்துகாணும் ஏரி ஜலத்தில் பிரதிபலிக்கும் நிலவின் அமைதியை அல்லவா தேடத் தூண்டும் கலை? நாடகத்தின் உயர் நோக்கமும் வாழ்க்கையை அப்படியே முழுவதும் பிரதிபலிப்பதல்ல. இந்தத் தாத்பரியத்தைச் சித்திரம், சிற்பம் முதலிய எல் லாக் கலைகளிலுமே நம்மவர்கள் அநுசரித்திருந்தார்கள். கண்ணில் தென்பட்டதை அவ்விதமே படத்தில் எழுது வதும், கல்லில் செதுக்குவதும் கலையின் உயர்ந்த கொள் கையாகவே கருதப்படவில்லை.

இன்னும் கவனித்தால், நம்மிடம் நாடக பாத்திரங் களே புதியவைகளாக இருப்பதில்லை. நாடகமியற்றியவர், கதாநாயகர்களின் பெயரைக்கூட மாற்றுவதில்லை.

அனேகமாக ராமனையும் கிருஷ்ணனையும், இன்னும் இதர புராணத்தில் தோன்றும் நாயக நாயகி களையும் வைத்தே நாடகங்களும் நாட்டிய பதங்களும் ஏற் பட்டிருக்கின்றன. இம்மாதிரி பழைய கதைகளை விஷய மாக எடுப்பதால், சொந்தக் கற்பனைக்கு வழி இல்லாமல் போய்விடுமென்றுதான் தற்காலத்தில் யாரும் பயப்படு வார்கள். நம்மவர்களுக்கு இந்த விஷயத்தில் சிறிதளவு கூடப் பயமிருந்ததாகத் தெரியவில்லை. பழையது புதிய தென்பதே ரஸானுபவத்திற்குக் காரணமாகாதென்பது அவர்கள் கருத்து. இப்பொழுதும் பார்க்கலாம்: ஒரு சிறு குழந்தைக்கு மஞ்சள்-பட்டாடை உடுத்திக் கொண்டை யில் மயிலிறகும் சொருகிக், கையில் புல்லாங்குழலைக் கொடுத்து, நம்மெதிரே மேடையில் ஏற்றிவிட்டால், ஜனங்கள் எப்படி அந்த உருவத்தைப் பார்த்து ஆனந்திக்கி றார்களென்பதை பிறதேசத்தவர்களானாலும்கூட அதைக் கண்டு திருப்தியடைவார்கள். காரணம்,மனத்தைக்கவரும் கிருஷ்ண வேஷம்தான் மஞ்சள்-பட்டாடையும், மயில் தோகையும், புல்லாங்குழலும்தான் அக்கலைச் சிருஷ்டியை அழிவற்றதாகச் செய்கின்றன. இளம் பாலனிடம் இவ் வேஷத்தைப் பொருத்துவது கலை ஈடுபாட்டில் மனத்தை லயிக்கச் செய்கிறது. கிருஷ்ணனுக்கு வேறு வேஷம் போட்டுப் பார்ப்பதாக வைத்துக்கொள்வோம். நிச்சய மாய நம்மனத்தில் இவ்வளவு கலை உணர்ச்சியும் சமயவழி பாடும் உண்டாகுமோ என்னவோ, சந்தேகம்தான்.


நம் தேசத்துக் கலைகளில் இன்னுமொரு விசேஷங்கூட உண்டு. எல்லாக் கலைகளும் கடவுளையே வழிபடும். சிருங்காரமான பாட்டுக்களும் அபிநயங்களும்கூட, ஜீவாத் மா பரமாத்மாவைத் தேடி இணைவதையே குறிக்கும். மேலே நாம் காண்பது ஸ்திரீ புமான்களின் காதலைப் போஷிக்கும் சிருங்கார வெள்ளம். ஆனால் உள்ளே நாம் பெறுவது யோகியர் உள்ளம்தான், 'கிளியே' என்றும், 'அக் கச்சி' என்றும், 'கண்ணம்மா' என்றும அவை, பரமனைத் தியானித்திருக்கும் உள்ளங்கள் கூவி அழைக்கும் இனிய பாஷையேயாகும்.

கலையைச் சுயேச்சையாய் விடாமல் கட்டுக்குள்ளே சதா வைப்பது சம்பிரதாயந்தான், என்று சீர்திருத்தம் செய்ய முன்வரும் அறிவாளிகள் வாதாடுவார்கள். நதியின் அழகும், பிரவாகத்தின் வேகமும் கரைகளின் தொடர்பினுல்தான் என்பதேபோல், கற்பனையின் சக்தி முழுவதும் வெளிப்படுவது மரபுகள் அமைவதினுல்தான். சிருங்காரம், கருணை, வீரம், ரௌத்திரம், பயானகம், ஹாஸ்யம், பீபத்ஸம், அற்புதம், சாந்தம் என்றெல்லாம் நவரஸங்களை வகுத்துக் கணக்கிடுவதிலிருந்து சிலருக்குக் கலையின் சுயேச்சைக்கு அவை தடையாக ஆவதாய்க்கூட நினைப்பு. அதேமாதிரி விப்ரலம்ப சிருங்காரம், அதாவது காதலர்களின் பிரிவு என்றதும், இதுதானு நாடகத்திலும் காவியத்திலும் திரும்பத் திரும்ப வரவேண்டுமென்று சலிப்படைவார்கள். சலிப்பின் காரணம் நாம் இப்பொழுது அடைந்திருக்கும் மாறுதல்தான். நமக்கு இப்பொழுது கற்பனையின் சிகரங்களாகத் தென்படுவது, வாழ்க்கையையே முழுவதும் ஆதாரமாய்க்கொண்டு எழுதும் மேலைநாட்டு நாடகங்களும் நாவல்களுமே. வாஸ்தவத்தில் அவைகளில் அளவற்ற உலகானுபவங்களையும், வியக்கவேண்டிய கருத்துக்களின் விசித்திரங்களையும் பெறும்பொழுது, இவைகளையெல்லாம் இலக்கியத்தில் காட்ட முடியாமல் நாசமாக்கியது நாம் விடாமல் பூஜித்து வந்த சம்பிரதாயக் கட்டுப்பாடும், கலை மரபுகளும்தான் என்று சாதாரணமாக எல்லோருக்கும் படும். வாழ்க்கையில் தென்படுவதையெல்லாம் அப்படி அப்படியே எழுதப் புகும் எண்ணம் ஒருகாலும் முழுவதும்பலியாது. வாழ்க்கையின் சம்பவங்கள் மனித சக்திக்கும் மேலே போய்ப் புதிய விதமாகவே காணப்படும். மனிதனுக்கு மனிதன் வித்தியாசமாயிருப்பான். இந்த இயற்கைத் தத்துவத்தையே அடிப்படையாகக்கொண்டு கலைச் சிருஷ்டிகளைச் செய்யப் புகுவது வீண்வேலை என்றே தள்ளியவர்கள் நம்மவர்கள். வாழ்க்கையில் அகப்பட்டு நம்மை மறந்து இன்பம் பெறுவது முடிவதில்லையே, கலையிலாவது நம்மை மறந்து வேறு அழகிய உலகிற்குச் செல்வது சாத்தியமாகலாம் என்றுதான்

அவர்கள் கற்பனைச் சிருஷ்டிகளைச் செய்து காட்டினார்கள். சாமானியப் பெண்ணொருத்திக்கும் ஆடவனுக்கும் ஏற்படும் காதலை வைத்துச் சிருஷ்டிப்பதைவிட, கிருஷ்ணனையும் ராதையையும் பிணைத்துச் சிருங்கார லீலைகளை விதவிதமாகச் சொல்வதில் அதிசயமான ரஸாநுபவம் இருப்பதை அறிந்தது இத்தேசத்தின் ஒரு தனிப்பட்ட பண்பாடென்றே நாம் கருதவேண்டும்.

மதுர கலைகள் ஒவ்வொன்றும் நம்தேசத்தில் மற்றொன்றைத் தழுவி யிருப்பதாகக்கூட, கவனித்தால் தென்படும். ஒன்றோடொன்று பிணைந்து சம்பந்தப்பட்டு இருப்பதும் ஒரு காரணம், ஒன்றிலுள்ளதுபோல் மற்றொன்றிலும் சிற்சில அடிப்படையான மரபுகள் வெளியாவதற்கு. நாட்டிய அனுபவத்திலிருந்தே சிற்பத்தில் சிற்சில பாவங்கள் காணபிக்கப் படுவதாகத் தோன்றும். ஒருசால் சிற்பத்திலிருந்தும் நாட்டியத்தில் எடுத்துக்கொண்டிருக்கலாம். அதேவிதம் லயத்தின் சிற்சில கதிகளை நாட்டியத்திலிருந்து சங்கீதத்திலும், சங்கீதத்திலிருந்து நாட்டியத்திலுமாய் உபயோகித்திருக்கலாம்.

எல்லாம் எதைக் குறிக்கின்றன என்ற கேள்விக்கு ஒரே பதிலை நாமும் கொடுக்கத் தயாராகின்றோம். ரஸாநுபவம் ஒன்றே கலைக்கு ஆதாரம். அவ்வித ரஸாநுபவம் குறையாமல் வழிந்தோடுவதும், ஊற்றுக்காலாக வாய்ந்த கலை மரபுகளால்தான். இதை உணர்ந்தவர்களுக்கு ஒன்றையும் புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை. கலையும் சம்பிரதாயமும் ஒன்றை ஒன்று அணுகாமலிருப்பதினால் கலைக்கு க்ஷேமம் உண்டாகுமா என்னும் பிரச்னைக்கு விடையும் இதுதான்.



# சிற்ப சித்திரங்களின் உறுப்புகள்

"சிவன் பேரைச் சொல்லடா, சந்நிதியில் நில்லடா என்பான், சொல்லியே தொலைக்க வேணும்" என்று சேரியிலுள்ளவர்கள் தங்களுக்கு முற்றும் பழக்கமில்லாத தெய்வ வழிபாட்டை வற்புறுத்திய நந்தனரைப் பற்றிப் புகார் செய்ததாகக் கதையில் கேட்டிருக்கிறோம். வீரனை யும் இருளனையும், காட்டேரியையும் குல தெய்வங்களாகப் பாவித்துப் பூசை போட்டவர்களுக்கு, அந்தரத்திலும் மனித அந்தரங்கத்திலும் ஒரு காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமொன்று ஒளிர்வதை அறிய இயலாததில் ஆச்சரியம் இல்லை. முண்டாசு கட்டிவரும் வீரப்பப் பிரபுவைத் தொழுதவர்களுக்கு அண்டங்கள் பதினென்கிற்கு அப்பாலும் இப்பாலும் நின்றார்க்கு முண்டாசு நிலையாது என்ற ரகசியத்தை உணர எவ்வாறு முடியும்? எல்லாம் தொன்றுதொட்டு வந்த பழக்கம் செய்யும் வித்தியாசந் தான்.

அவ்விதமேதான் கலை நுகர்ச்சியிலும் மனவேறுபாடுகளைக் காண்கிறோம். பளிச்சென்று காணும் வர்ணப் பதிப்புமயமான 'காலெண்டர்'களைக் கணக்கில்லாமல் பார்த்த கண்களுக்கு, வேறு எதையும் சித்திரமாக நினைக்க இடம் ஏற்படுவதில்லை. விளம்பரப் பகட்டுடன் அவ்வர்ண மேற்பூச்சுகள் உள்ளன என்பதை அறியாதவர்களே பலரும். அப்படிப்பட்டவர்களிடம் 'சித்திரக் கலை என்பது இதல்ல, உயர்ந்த லக்ஷ்யங்கள் கொண்டவை தாம் கலை என்ற சொல்லுக்கு இலக்கியமாகும்' என்றெல்லாம் உரைப்பது வீண் முயற்சி. இந்தியச் சித்திரமும் சிற்பமும் தனி நோக்கங்களைப் பெற்றுள்ளன; அவைகளை ஊடுருவிப் பார்த்துப் பரமானந்தமடையவே சதா கருத்துக்களை வைக்கின்றார்கள்; 'வாருங்கள், பார்த்து அனுபவியுங்கள்!' என்று பாமர ஜனங்களை அழைத்துக் காட்டுவது அவர்களுக்கு விளங்காத விஷயங்களைப் புகட்ட முயலுவதாகும். ஒருகால் இரண்டொருவர் அனுபவிப்பதாக எண்ணினாலும், காலப்போக்கை ஒட்டி

பாஷன்' என்ற முறையில்தான் அவைகளை அனுபவித்துத் தொலைப்பார்கள். சேரிப் புலையர்கள் சிவன் பெயரைச் சொன்ன கணக்குத்தான் அதுவும்.

இந்தியச் சித்திரமும் சிற்பமும் ஆகாயத்திலிருந்து குதித்தவைகளா, அல்லது அவைகளின் குணவிசேஷங்கள் சாமானிய மனிதர்களுக்கு எட்டாத விதந்தான் இருக்கின்றனவா என்று கேட்பவர்களுக்குப் பயமின்றி 'இரண்டும் இல்லை' என்று விடை கூறிவிடலாம். இந்தியக் கலைகளை அறிவதற்கு உதவியாக எப்பொழுதும் உரையாசிரியரையும் கூடவே அழைத்துச் செல்லவேண்டியிருப்பது பின் எதனால் என்று மேற்கேள்வியும் பிறப்பது சகஜம். ஆம், நம்முடைய துரதிஷ்ட காலமே இவ்வளவுக்கும் முக்கிய காரணம். தேசத்தில் வெகுநாட்களாய் ஏற்பட்டுள்ள பெரிய மாறுதல்களே புராதனக் கலைகளை வேருடன் வெட்டிச் சாய்த்துவிட்டன. கலைகளைப் போற்றும் அறிவாளிகளின் தொடர்ச்சியும் வரவரக் குறைந்து விட்டது. ஒரு சிலர் மட்டும் ஆசையையும் அறிவையும் வளர்க்கின்றார்கள். அவர்களால் செய்யக் கூடியதோ கொஞ்சந்தான். கலைகளுக்கு வேண்டிய மரபின் தொடர்பு நாட்டில் குன்றிவிட்டால், எல்லாம் அர்த்தமில்லாமல் தோன்றுவதை எதிர்பார்க்க வேண்டியதே

இந்நாட்டுச் சித்திரமும் சிற்பமும் பார்த்தவுடனே மனத்தை அள்ளும் வகையில் இயற்கையை ஒட்டிய வனப்புடன் இல்லை; அத்தன்மையும் சேர்ந்தே அவைகளின் உண்மை விசேஷத்தைப் புறக்கணிக்கச் செய்கின்றது. மேலும் புகைப்படங்களைச் சதா பார்த்துப் பார்த்துப் பழகிய கண்களுக்கு, அங்க அளவுகளில் மாறுபாடும், உடற்கூற்றிலுள்ள வித்தியாசங்களும் வெறுப்பையே அளிக்கின்றன. இன்னும், சம்பிரதாயக் கட்டுப்பாடுகள் வேறு. இந்தியக் கலைகளில் ஒன்றைப் பார்த்தால் மற்றொன்றைப் பார்க்க அவசியம் இல்லாமலும் செய்வதாகத் தோற்றும். உண்மையில் இவ்வித எண்ணங்களுக்கு ஆதாரம் இருக்கிறதா என விசாரிக்கும் தைரியசாலிகளும் சற்றுக் குறைவுதான். போதாததற்கு

இந்தியக் கலை அதிசயங்களில் பலவற்றை இதர நாட்டைச் சேர்ந்த பேராசைக்காரர்கள் தங்கள் பொருட்காட்சி நிலயங்களில் வைத்து விநோதமாகவும் கொண்டாடத் தொடங்கிவிட்டார்கள். அவைகள் போகப் பாக்கி இங்கே தங்கியுள்ள கலைக் குவியல்களிலும் எத்தனையோ உயர்தர இனத்தைச் சேர்ந்தவையாக இருந்தும், அவைகளைப் பார்த்து அனுபவிக்கத் தகுந்த கலைஞர்கள் குறைந்த எண்ணிக்கையில்தான் உள்ளார்கள்.

சம்பிரதாயத்தை முன்னிட்டு உருவாக்கப்படும் கலைச் சிருஷ்டிகளில் புதிதுபுதிதாக எதையும் எதிர்பார்க்க முடியாதென நம்புவதற்கு இடம் உண்டு. ஆயினும் கற்பனை என்பதும் கட்டுப்பாடுகளின்றி எழுவதை மற்ற நாட்டினர்களும் ஒப்பமாட்டார்கள். மேலை நாடுகளிலுங் கூட, சிற்சில அம்சங்களை மனத்தில் வைத்துத்தான் சிலை, சித்திரம் முதலியவைகளை நிர்மாணம் செய்கிறார்கள். அவர்களைவிடக் கலைத் தத்துவங்களை ஆழ்ந்தே பார்த்திருக்கிறார்கள் நம்நாட்டுப் புராதனக் கலைஞர்கள் கலை-நேர்மைக்கென சில வரம்புகளையும் கற்பனை உலகில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவைகள்தாம் இன்று பலருக்குப் புரிவதில்லை.

ஓவியர்மணி அவனீந்திரநாத டாகுர் உயர்தரக் கட்டுரையொன்றில் சித்திரக்கலையின் அவயவங்கள் எவை என்பதைக் குறித்துள்ளார்.* அவர் விளக்கிய தத்துவங்கள் யாவும் ஒரே சுலோகத்தில் அடங்கியுள்ளன. வாத்ஸ்யாயன காமஸூத்திரத்தின் 'ஜயமங்களா' என்னும் உரையொன்றில் அச்சுலோகம் பின்வருமாறு காணப்படுகிறது.

“உருவ வித்தியாசங்கள், பிரமாணங்கள் அல்லது அளவுகள், பாவம், லாவண்யப் பொருத்தம், ஸாதிருச்யம், வர்ணக் கருவி செய்யும் வேற்றுமை - இவை ஆறும் சித்திரக் கலையின் அவயவங்கள்.”

* “சித்திரக்கலையின் ஷடங்கம்” என்ற அவனீந்திரரின் கட்டுரை விச்வபாரதி பத்திரிகையில் 1942-மே மாதம் வந்துள்ளது.

வர்ணங்களை விட்டுவிட்டால் சிற்பக் கலைக்கும் மேலே குறித்த மற்ற ஐந்து அவயவங்கள் இன்றியமை யாதவையே.

(1) ரூபம் அல்லது உருவம் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஆனால் ரூபபேதம் அல்லது உருவ வித்தி யாசம் என்றதும அறியவேண்டிய கருத்து, அழகும் உயிரோட்டமும் கொண்ட வடிவத்திற்கும், அவை இரண் டும் இல்லாத உருவத்திற்கும் உள்ள வித்தியாசந்தான். இவ்விதப் பகுத்தறிவு ஐம்புலன்களின் உதவியினால் ஏற்படுவதல்ல. அவைகளையும் தாணடி உள்ளே நோக்கும் சக்தியைப் பெற்றுள்ள அகக் கண்ணே மட்டுமே பொறுத் தது. இவ்விதம் சொன்னால் போதாது; உதாரண மொன்றைக் காட்டினால் தெளிவு ஏற்படும்.

பெண் ஒருத்தியின் வடிவம் நம் எதிரில் நிற்பதாக வைத்துக்கொள்வோம். அவளுடைய பெண் தன் மை எல்லோருடைய பார்வையிலும் ஒரே விதமாகத்தான் தெரியும். அவளைச் சித்திரத்திலோ அல்லது சிலையிலோ அமைப்பதாகக் கற்பனை செய்து கொள்வோம். அப் பொழுது ஓவியன் தன் பாவத்தையும் அச்சித்திரத்தில் வைத்து அமைப்பான். மூன்று விதங்களில் அவன் வடி வங்களைத் தயார் செய்கிறான் என்று கொள்வோம். ஒரு படத்தில் விலைமாது ஒருத்தியையும், மற்றொன்றில் இளங் காதலி ஒருத்தியையும், மூன்றாவதில் குடும்ப ஸ்திரீ ஒருத்தியையும் சிருஷ்டிக்கிறான் படங்களைப் பார்க்கிற வர்களுக்கு ஓரளவுக்குமேல் அம்மூன்று உருவங்களில் தோன்றும் பாவங்களை ஒன்றுக்கொன்று வித்தியாசமாக அறிய முடிவதில்லை. வேசியை அங்க எழிலுடன், அதற் குத் தகுந்த செயற்கை அழகையும் வைத்து அமைத்துக் காட்டலாம். அவள் கூந்தலை வாரி ஜடையாகப் பின்னி அலங்கரிக்கும் விதத்திலும், காதுகளில் அணியும் தொங் கட்டங்களின் விசித்திரத்திலும், அவளுடைய ஒய்யாரத்தி லுங்கூட அவளைத் தனிப்பட்டவளாக வரையலாம். அதே மாதிரி மற்ற இரு படங்களிலுள்ள பெண்மணிகளுக்கும்

அவரவர் இனத்தைக் குறிக்கும் ஆடை அலங்காரங்களை யெல்லாம் செய்துவிடலாம். ஆனால், வெளி வேஷங்களால் மட்டும் அவர்களை நிர்ணயிப்ப தென்பது சாத்தியமா?

தற்காலத்தில் எத்தனையோ உயர் குடும்பப் பெண் மணிகள் வெளியில் செல்லுகையில் நாட கக்காரிகளின் மேற்பூச்சையும் அலங்காரங்களையும் அணிந்து கொள்கி றார்கள். அதனால் அவர்களையும் தாசிகளுட ன் சேர்ப்பது எவ்வளவு தவறாக மதிக்கப்படுமோ, அவ்வளவு பிசகான காரியம், மேலே குறித்த மூன்று சித்திரங்களிலுள்ளவர் களும் ஆடை அலங்காரங்களால் மட்டும் மாறிய தோற் றத்தைப் பெறுவதாக வாதம் செய்வது வெளிவேஷங்க ளைக் கொண்டு மதிப்பிடும் உலகம் இறுதியில் ஏமாற்றம் அடைவதேபோல், சித்திரத்திலும் கூர்ந்து உணர்வதற்கு இலக்கான உட்க ருத்து இல்லாவிட்டால் மாறான அபிப் பிராயமே தோன்றும். இதை உணர்ந்தே இந்தியச் சிற்பிகளும் ஓவிய ரத்தினங்களும் தங்கள் மனக்கண் முன் நிர்த்தாரணம் செய்த வடிவத்தின் பிரதியையே படத்தில் காட்டுகிறார்கள். மேலெழுந்த வாரியாய்ப் படத்தைப் பார்த்தால் எல்லாம் ஒன்று போலவே தோற்றினும், உட்கருத்தை வெளிப்படுத்தும விதம் வடிவ அமைப்பிலேயே ஒரு தனி வித்தியாசமாய்க் காணப்படும். அதற்குத் தியானமும், பல முகமாய் மனம் செல்லாமல் அடக்கி ஆளும் திறனும் ஓவியனிடம் இருப்பது அவசியம். ஆழ்ந்த தியானம் ஒன்றே நேருக்கு நேராகப் பார்ப்பதைக் காட்டிலும் தெளிவாய் உருவத்தை அவன் மனக்கண் முன் நிறுத்திக்காட்டும்.

"வேறு எவ்வித வழியிலும் இல்லை ; திருஷ்டியில் நேருக்கு நேர் பார்ப்பதிலுங்கூட இல்லை"—சுக்கிர நீதிஸாரம்.

(2) உருவம் சிறப்பாகத் தோன்றுவதற்குப் பரி மாணங்களும் அவசியமல்லவா? இதை உத்தேசித்தே அளவுகளை ஓவியனும் சிற்பியும் நன்கு கற்கின்றார்கள். பார்த்தால் எல்லாம் ஒரு பெருத்த ஆச்சரியத்தை உண் டாக்குவதாகவே தோன்றும். அகண்டாகாரமான கடலை

யும், உயர்ந்தோங்கிய மலையையும் சில அங்குலங்கள் அகல முள்ள காகிதத் துண்டின்மேல் வரைவதைப் பார்த்துப் பெருங்கடலையும், ஆகாயத்தை அளாவும் கிரியையும் நம் மனம் அப்படியே காண்பதாகச் சந்தோஷிக்கிறது. மேலும், அலைகளின் சலனத்தையும், மேகங்களின் ஓட்டத்தையுங்கூடப் படத்தில் காட்ட முடிகிறது. எல்லாம் சித்திரகாரனுடைய பரிமாண சக்தியின் விளைவு என நிச்சயமாய் அறியலாம். இந்த அளவு தேர்ச்சி பெறும் அறிவு ஒழுங்கு படுவது முதிர்ந்த பயிற்சியையும் பொறுத்தது.

இயற்கையிலேயே ஜீவராசிகளிடமெல்லாம் அளவு-உணர்ச்சி ஒன்று இருப்பதைப் பார்க்கிறோம். சாதாரணமாய், சிறு பெண் ஒருத்தி சங்கீதம் கற்பதாக வைத்துக் கொள்வோம். முதலில் அவள் குரல் அளவு தெரியாமல் மேலும் கீழும் பாய்வதையும், பிற்பாடு வரவர அளவு-ஞானம் ஏற்படவும் அவள் சாரீரம் சரியானபடி வெளி வருவதையும் அறிய முடிகிறது.

நாய், பூனை, பட்சிகளிடமும் இந்த அளவு-உணர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. அணிலொன்று மரக்கிளையில் பழத்தைத் தன் முன் கால்களில் இடுக்கிக்கொண்டு தின்கிறது. ஆனால் கீழே உட்கார்ந்து, இமை கொட்டாமல் பூனையொன்று அதையே உற்றுப் பார்க்கிறது. பூனைக்குத் தெரியும், எவ்வளவு சமீபம் அணில் இருந்தால் தன்னால் தாவி அதைக் கவ்வ இயலும் என்று. அணிலும் அறியும், தான் தப்பிக்கொள்ள எவ்வளவு இடைவெளி தனக்கும் பூனைக்கும் இருக்கவேண்டும் என்பதை.

ஆனால் கலை என்றதும், இதே அளவு முக்கியமான அம்சங்களில் ஒன்றாகப் பரிணமிக்கிறது அல்லவா? இல்லாவிட்டால், சிற்ப அதிசயங்களில் ஒன்றான தஞ்சை பிருகதீசுவர சுவாமி ஆலயத்தின் கோபுரம் சிற்பியினால் இவ்வளவு அழகாகக் கட்டப்பட்டிருக்குமா? சிறிது அதன் அளவில் குறைத்துப் பார்த்தாலும் முழுக் காம்பீர்யமும் குலைந்துவிடும். எனவே சந்தேகம் உதிக்கிறது கலைஞர்களின் உள்ளங்களில்.

பரிமாண சக்தி சாமானியமானதல்ல. அதை விருத்தி செய்யும் பழக்கம் கலைஞர்களிடம் சுபாவமாகவே எழுகிறது. ஏனென்றால், அவர்கள் ஒரு வஸ்துவைப் பார்க்கையிலேயே அதுவாகத் தாங்களும் ஆகிவிடுகிறார்கள். கேவலம் அடியிலும், அங்குலத்திலும் அளக்கப்படுவது வெளித்தோற்றமே அதைவிடச் சூக்ஷ்மமானதொன்றை அளப்பதற்கும் ஒரு சக்தி பிறக்கிறது அவர்களிடம். உள்ளும் புறமும் நன்கு பரிமாண சக்தியில் வசப்படவுந்தான், சரியான கலைச் சிருஷ்டிக்கு அங்குரார்ப்பணம் ஏற்படுவதாக நினைக்கவேண்டும்.

(3) ஆனால் எவ்வளவு ரூபபேதமும், பரிமாணமும் சிருஷ்டியை மேன்மைப் படுத்துவனவாயினும், பாவம் இல்லாவிட்டால் கலை வடிவம் வாடிவிடும். பாவம் இருப்பது ஒன்றே படத்தை மனத்தில் பதியவைக்கிறது பாவம என்பது மனத்தடத்தே எழும் சலனங்களுக்கெல்லாம் பொதுவான பெயர். பாவம் இல்லாத மனம் காற்றினால் அசைக்கப்படாத ஜலராசியைப் போன்றது. பாவம் வரையப்பட்ட படத்திலுள்ள முகத்திலோ அல்லது அங்கங்களிலோ தோன்றும் பாவம் ஒன்றே ஓவியன் மனத்தினுள் தோன்றுவதை வெளிக்காட்டவல்லது வசந்த கால வரவை இளந் தளிர்களும், மழைகால ஆரம்பத்தை மேகங்களும் குறிப்பதேபோல், உள்ளே தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத்துவன பாவங்கள் தாம். அவைகளுக்கென ஒரு தனி லயமும் இயற்கையிலேயே இருக்கிறது. இலைகளின் பசுமை நிறத்திலும், காற்றினால் தணியவைக்கப்பட்ட மரஙகளின் ஆட்டத்திலும் சமுத்திர அலைகளின் கொந்தளிப்பிலும் நீர்வீழ்ச்சியின் கும்மாளத்திலும், அங்கங்களின் சாயப்பிலும், புருவங்களின் விலாஸங்களிலும், உதட்டின் துடிப்பிலும், கண்ணிலிருந்து முத்துப்போல் கிளம்பும் நீர்த்துளியிலும், முகத்தைச் சட்டென மறைக்கும் முன்தானையிலும் எவ்வளவோ விதமான பாவங்களின் வெளியீடு தெரிகிறது.

பாவங்களிலும் விசேஷமான அமைப்பு வியஞ்சனை வியாபாரத்தினால்தான் ஏற்படும். மறை பொருளாகக்

காட்டுவதன் உபயோகம், கலை உள்ளங்களுக்குத் தெவிட்டாத தேனின் ருசியை ஒத்ததெனலாம். சாதாரணமாய் ஒரே இயற்கைக் காட்சியை இரண்டு உள்ளங்கள் வெவ்வேருக அனுபவிப்பதையும், அல்லது ஒரே மனசு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தன் நிலைமையை ஒட்டி வெவ்வேருக ஒரே காட்சியைக் கருதுவதையும் பார்க்கிறோம். இவைகளைக் குறிப்பதும் கஷ்டமல்ல. துயரக் கடலில் அழுந்திய மனம், மழை பெய்யும் காட்சியை உலகமே துக்கமயமாய்த் தோன்றுவதாக எண்ணத் தலைப்படும். அதே மனம், ஆனந்த வெள்ளத்தில் மூழ்கும்பொழுது, மழைத் தாரையைச் சுவர்க்கத்தில் ஸ்திரீ புமான்களின் விளையாட்டினுல் கழுத்திலிருந்து அறுந்து நழுவிய முத்து ஆரங்களாக உத்பிரேக்ஷை செய்வதையும் பார்க்கிறோம். உயர்ந்த சித்திரகாரன படத்தில் வியங்கியமாகவே கருத்தைக் காட்ட முயல்வான்.

ஓவியர்மணி அவனீந்திரநாதர் வியங்கிய பாவம் படத்திற்கு அளிக்கும் சிறப்பை ஓர் உதாரணத்தினுல் எடுத்துரைப்பார். அதாவது, மிகுந்த ஏழைமையைக் குறிப்பதற்குப் பிச்சை ஓடு ஒன்றைச் சித்திரத்தில் காட்ட வேண்டும் என்பதாக வைத்துக்கொள்வோம். பிச்சைப் பாத்திரத்தைச் சித்திரத்தில் போட்டுவிடுவதுதான் சகஜமாயிற்றே, அதில் என்ன அதிசயம்! வறுமைப் பிணியை நன்குகாட்ட வியங்கிய பாவத்தைத்தான் கையாள வேண்டும் என்பது அவர் துணிபு. பிச்சைக்காரனைப் பாத்திரத்தைக் கையில் ஏந்துவதாகப் போடுவது போதாது. ஏனெனில் பணக்காரனும் பிச்சைக்கார வேஷம் போடலாம் அல்லவா? அல்லது பிச்சைக் கலயத்தில் இரண்டு காசுகளைப் போடுவதோ, அல்லது பக்கத்தில் கந்தைத் துணியை விரித்துக் காட்டுவதோ பாவத்தை வெளியிடும் வழிகளில் சுமார்தான். ஆனுல் பிச்சை ஓட்டைப் போட்ட ஓவியர், அதன் அருகில் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட மாளிகையின் வாசற்படிகளை வரைவதால் எவ்வளவோ அருமையாக வறுமையின் கொடுமையை மனத்தில் உணர்த்திவிடுவார் அல்லவா?

(4) உட்கருத்தைக் காட்டுவதிலும் அழகுத் தேவதை நடனம் புரியவேண்டும். பெண்மைக்கு அங்கங்களின் நேர்மையும், மூக்கு, கண் முதலிய அவயவங்களின் லக்ஷணமும் மட்டும் போதா. எல்லாவற்றையும் தோற் கடிக்கும் லாவண்யமென்று சொல்லக் கூடியதொன்று மற்ற எழிலுடன்கூடவே சோபிக்கவேண்டும். அதே போல் சித்திரம் சிற்பம் முதலியவைகளிலும் லாவண்ய மும் சேருவது அவசியம். தாய் ஒருத்தியே குழந்தையைத் தன் வசம் அன்பினால் அடிமையாக வைப்பதுபோல், மற்ற அவயங்களையும் அணைத்துக்கொண்டு உதவிபுரிவது லாவண்யம் ஒன்றுதான.

(5) அழகு இருந்தால் போதாது; பார்த்தவைகளை நினைப்பூட்டும் ஒற்றுமையும் கண் எதிரே சித்திர வடிவங்களில் இருப்பது அவசியமல்லவா என்பார்கள் ஸஹிருதயர்கள். ஆம், வாஸ்தவமே. ஆனால், கவிஞ னும் குழந்தையும் தனிக் கற்பனை உலகில் உலாவி வரு வதையே இலக்கியமெனக் கொண்டாடுகிறோம். குழந்தை மரப்பாச்சியின் கல்யாண விளையாட்டில் வேறு உலகிற்கே சென்றுவிடுகிறது. கவிஞனும் மற்றவர்களுக்குத் தெரி யாத கற்பனைக் காட்சிகளில் தன்னை மறக்கிறான். சித் திரத்திலும் சிற்பத்திலும் இதற்கு மாறான விதியை வைப்பானேன்? கவிஞன்,வதனத்தைப் பூர்ணசந்திரனுக்கு ஒப்பிடலாம்போல் இருக்கிறது; சித்திரகாரன் மட்டும் பாத பத்மத்தை வரைவது பிசகாகுமா? முகம் பூர்ண சந்திரனைப்போல் தட்டையாக இருப்பதாக அல்ல அவ் விடத்தில் பாவம்; சந்திரன் ஒளி மேலே பட்டதும் பூரிக்கும் உள்ளம், முகத்தைக் கண்டதும் அதே அளவில் சந்தோ ஷிப்பது ஒன்று மட்டுந்தான் இவ்வித உவமையின் வாயி லாக வெளியாகிறது. சித்திரத்தில் பாத கமலங்களைக் காட்டுவது எப்படி என்று கேள்வி பிறப்பது நியாயம். பாதங்களையும் அவைகளின் அருகில் மலர்ந்த தாமரை களையும் வரைவதனால் அவைகளை ஒன்றாகப் பாவிக்கும்

இதயங்களுக்கு ஒற்றுமை தோன்றும். ஆனால் பாதங்களைத் தாமரை இதழ்களாக விரித்துக் காட்டினால் முற்றும் இயற்கைக்கு முரணாகவே அவை தோன்றும்.

(6) கோடுகளால் சித்திரம் எழுதிவிடலாம். அதில் ஓரளவே அழகு நிறைந்திருக்கும் ஆனால் வர்ணங்களையும் அவைகளில் அமைப்பது நம்மை எங்கோ புதிய உலகிற்குக் கொண்டுசெல்லும். பதம்பட்ட கையே வர்ணக்கருவியினால் வேற்றுமைகளைச் சரியான அளவில் படத்தில் அமைக்கவல்லது. வெள்ளைக் காகிதத்தில் படம் வரைவதற்கு முன்பே ஓவியருக்குக் காகிதத்தின்மேல் தாம் பார்க்கும் சித்திரம் உருவாகி இருப்பது கண்ணுக்குத் தெரியும். கற்பாறையைக் காண்பதிலும் எல்லோரும் சிற்பியாகமாட்டார்கள். சிலருக்கே அவைகளில் செதுக்கி எடுக்கவேண்டிய வடிவங்கள் கண்களுக்குப் புலனாகும். அதனால்தான் வெகு ஜாக்கிரதையாய ஓவியன் தன் வர்ணக் கருவியை உபயோகிப்பான். அதற்காகக் கைநடுக்கம் கொள்ளலாகாது. சிறந்த ஓவியனுடைய கரம் வர்ணக் கருவியைப் பிடிப்பதிலிருந்தே, அவன் எவ்வளவு நிச்சய புத்தி பெற்றவன் என்பதையும் உணரலாம்.

வர்ண வித்தியாசம் என்றதும் ஒன்றுக்கொன்று உள்ள வேறுபாடுகளை அறிவது மட்டுமல்ல, வர்ணம் தீட்டுவதிலும் பெரிய கலைஞானம் இருப்பதை உணர வேண்டும். எப்படித் தீட்டினால் சித்திரகாரனுடைய கருத்தை வர்ணச் சேர்க்கை தனி முறையில் வெளியாக்கும் என்பது முக்கியக் கருத்து. உதாரணமாக, தசரத ராஜன் மரணத் தறுவாயில் இருக்கும் ஒரு படம் எழுதப் படுவதாக நினைத்துக் கொள்வோம். படத்தில் தசரதருடைய மெலிந்த உடலையும், முகத்தில் களைகுன்றிய தோற்றத்தையும் காட்டுவதும், அவைகளுக்கு உகந்த வர்ணங்களை இடுவதும் பெரிதல்ல. எல்லோரும் அமைத்து விடுவார்கள் அவ்விதச் சித்திரத்தை. ஆனால் படத்தில் காணும் எல்லா வஸ்துக்களிலும் ஒளி இழந்த 'தோற்றம் தெரிவது ஒன்றே படத்தை மனத்தை விட்டகலாதபடி

செய்யக்கூடும். படத்தில் காணும் விளக்கின் மங்கிய ஒளியும், நிழல்போன்ற வர்ண வேற்றுமை யொன்று படம் முழுவதும் வியாபித்திருப்பதுமே துயரமயமாய் அந்தச் சித்திரத்தைப் பிறர் மனக்கண்ணில் பதியவைக்கும். இவ்வித அற்புதங்களே அவநீந்திரரின் சித்திரங்களை விலை மதிக்க முடியாமல் செய்துள்ளன.

மேலும், சித்திரத்திலும் சிற்பத்திலும் ஒரே இடத்தில் ஜீவராசிகளின் சேர்க்கையை வைத்துக் காட்டுவது, இந்தியக் கலைகளின் தனிமரபு எனலாம். மனிதனும், தெய்வமும், ஜந்துவும், மற்றப் புல்பூண்டு முதலியவைகளும் சேர்ந்து வாழ்வது ஒன்றே இவ்வுலகின் கண் வேற்றுமையை ஒழிப்பதாகும். மேலை நாடுகளில் சித்திரங்களில் வேண்டிய அளவு இடைவெளிகளை வைப்பதும், இந்நாட்டில் பலவித வடிவங்களை இடைவெளியின்றிக் கலைச்சிருஷ்டி செய்பவர்கள் நிருமித்துப் புகுத்துவதும், அவரவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைத் தத்துவங்களையே புகட்டுகின்றன. இதர நாடுகளில் மனிதன் மற்ற ஜீவராசிகளை அடக்கி ஆள்கிறான். நிலைக்களமாக இடைவெளியைப் படத்தில் காட்டுவது, இம்மாதிரிக் கருத்தை அடிப்படையாகக் கொண்டதே. உயிருள்ள எல்லோரும் ஓர் இனம், ஒரு குடி என்னும் கருத்தைத் தொன்றுதொட்டு மதக்கொள்கையாக நம் நாட்டில்தான் வைத்துள்ளோம். மனித வர்க்கம் மட்டுமில்லாமல் மற்றப் புல்பூண்டு மிருகராசிகளும், ஒன்றாய் வாழும் நிலையை லக்ஷ்யமாக வைத்து, பெருங் கூட்டங்களான பதுமைகளைக் கோபுரங்களில் ஏற்றிக் காட்டுகின்றன கலைச்சிருஷ்டிகள். தேவதைகளும், மனித வர்க்கமும், இதர ஜீவராசிகளும் கோபுரத்தின் உச்சியிலுள்ள கற்பாறையைத் தாங்கும் கோலத்தை, அற்புதச் சிற்ப வடிவமாகப் பாவித்து வருகிறோம். அவை எல்லாம் ஒன்றாயச் சமைந்த பரம்பொருளை வழிபடும் பாவத்தையே நினைப்பூட்டுகின்றன.

நேர்மையை நாடும் மனம், கலையிலும் காவியத்திலும் சிலவற்றையே உயர்த்திப் பேசும். அதற்கு எல்லாம் கற்பனையாகாது. புள்ளினங்கள் எதற்காக இடைவிடாமல்

பாடுகின்றன என்றும், தாமரை சூரிய கிரணம் ஸ்பரிசித்ததும் தன் இதழ்களை விரிப்பதேன் என்றும், கேள்விகளைக் கேட்கும் உள்ளங்கள் எதைப் பெரிதாகத் தேடுகின்றன என்பதை ஐம்புலன்களும் நமக்கு அறிவிப்பதில்லை. ஆனால் காது, கண் சொல்லாதவைகளை ஏதோ ஒன்று உள்ளே இருந்துகொண்டு சதா ஞாபகப் படுத்துவதையும் அறிகிறோம் அல்லவா? ஆம், அந்த ஞான ஒளியேதான் சித்திரத்தையும் சிற்பத்தையும் வெறும் காகிதமாகவும் கல்லாகவும் நினையாதபடி நிலைத்த பொருளாகச் செய்கிறது.

## வாழ்க்கைச் சரித்திரம்

"நீங்கள் வாழ்க்கை வரலாற்றை ஏன் தாங்கள் எழுதலாகாது? தங்களுடைய உண்மை அனுபவங்களை அறிவதில் பலருக்கு ஆவல் இருக்கிறது" என்று ஒருபெரியாரிடம் ஒரு சமயம் கூறினேன் அதற்கு உடனே அவர்,

"உண்மையில் ஒருவன் உலகத்துக்குப் பயனற்றவனாக ஆகிவிட்ட பிற்பாடே, பிறர் கேட்காமல் தன்னைப்பற்றிச் சொல்வதிலும், சிறு பிராயம் முதல் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஆராயவதிலும், அவைகளை ஆராயவதிலிருந்து எழும் கருத்துக்களை உலகத்துக்குத் தாராளமாய் வழங்குவதிலும் ஆற்றலைப் பெறுகிறான். அவனால் உலகத்துக்கு இன்னும் உபயோகமிருந்தால், வேண்டாத இம்மாதிரிப் பழைய நினைவுகள் அவனுக்கு உண்டாவது ஒருகாலும் சாத்தியமில்லை" என்று பதிலளித்தார்.

அப்பெரியார் தம்மைப் பற்றிப் பெருமை அடித்துக் கொண்டாரா, அல்லது அவருடைய மொழிகளில் சிறிதளவேனும் நியாயம் இருந்ததா? ஒன்றுமட்டும் நிச்சயம். உலகமெல்லாம் ஒன்றாய்ப் போற்றும் காந்தியடிகளும், மற்றும் சுதந்திர தாகத்தினால் தம் இளமையையும், சுக போகங்களையும் நாட்டுக்கு ஊழியம் செய்வதற்காகத் தியாகம் செய்த ஜவஹர்லால் நேருவும், தங்கள் சுய சரித்திர வரலாறுகளை எழுதியவர்களே. சிறையில் அடை

பட்ட காலம் போக, மற்ற நாட்களில் அவ்விருவரும் கண நேரங்கூடத் தேசத்திற்காகச் செயலில் ஈடுபடுவதில் தவறியவர்களல்ல. அவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை அவர்களே எழுத்தில் அமைக்க முயன்றதை வீண் பொழுது போக்காக நினைக்க முடியுமா ?

பெரியவர்கள் தங்கள் அனுபவங்களை எழுதிவைப்பதில் ஒரு சிறந்த கருத்து இருக்கிறது நாட்டில் எத்தனையோ தொண்டர்கள் தேச சேவையில் தங்கள் ஆவியையும் உடலையும் அர்ப்பணம் செய்து வருகிறார்கள். காந்தியடிகளைப் போலவும், மற்றப் பிரபல அரசியல்வாதிகளைப் போலவும், சரியான அவகாசமும், தங்கள் ஆண்மையை விளக்கத் தகுந்த சந்தர்ப்பங்களும் எல்லோருக்குமே கிட்டுகின்றனவா ? அப்படியே அவை கிட்டினாலும், தங்களுக்குக் கிடைத்த தருணத்தை உபயோகிக்கத் தகுந்த உத்ஸாகமும், ஊக்கமும் எவ்வளவு பேரிடம் நிலைக்கின்றன? ஆகையால், மனமுடைந்தவர்களுக்கு, பெரியோர் வாழ்க்கையின் நோக்கங்களை அவர்கள் சொற்களிலிருந்தே அறிவதில் சிறந்த ஆறுதல் ஏற்படும்

வாழ்க்கைச் சரித்திரங்களில் மற்றொரு வகையுமுண்டு. சுய சரித்திரங்களைத் தவிர, பிறர் வாழ்க்கையை நன்கு உணர்ந்தவர்கள், அவைகளைத் தங்கள் எழுத்து-வன்மையுடன் சொல்லுகையில் எதிர்பாராததொரு உவகை வாசகர்களின் இதயத்தில் பிறக்கும். அவ்விதம் வாழ்க்கை வரலாற்றை வாசித்து இன்புறுவது சாமானிய அனுபவமல்ல. உயர்ந்த லக்ஷ்யங்களை மனமாரப் போற்றும் பேரறிவாளிதான் இதர வாழ்க்கையின் நிகழ்ச்சிகளிலும், அற்ப இன்பத்துக்கு மேலான ஆனந்தத்தைப் பெறுவான். அவனே மனப் பற்றுதலை விட்டு, அடிப்படையான ஆன்ம தத்துவங்களை அந் நிகழ்ச்சிகளில் காண்பான்.

இராமனுடைய அதிசயமான குணங்களை ஏற்கெனவே வால்மீகி முனிவர் அறிந்திருந்தார். அவைகளில் அவர் சதா திளைத்த காரணத்தால்தான், திடீரெனத் தோன்

றியது போன்ற ஒரு நிகழ்ச்சியின் வாயிலாக, உலகிற்கு முதல் காவியமாகிய தம் இராமாயணத்தை வழங்கினார். முன்னதாகவே அவருடைய இதயம், இராமனுடைய அரிய குணப்பெருக்கில் பெரும் ஈடுபாடுடையதாய் விட்டது. கொஞ்சங் கொஞ்சமாய் அவர் தாமே இராமனாக மாறியிருக்கவேண்டும். இல்லாவிட்டால், கவிதை புனையும் ஆற்றல் வந்ததும் மடை திறந்தவாறு இராமாயணக் கதை முழுவதையும், கேவலம் ஒரு சிறு சம்பாஷணையைக் கூடமறக்காமல், ஒருவரால் எழுத முடியுமா? எழுதவேண்டும், எழுதவேண்டும் என்ற அவா வளரவுமே, சிறந்தவகையில் இராம கதையை உருவாக்க வேண்டிய வற்றாத கவிதை அவரிடம் ஊற்றெடுத்தது. ஆகையால் வாழ்க்கை வரலாற்றைத் தொடங்குபவனுக்கு, முதலில் உயர்ந்த வாழ்க்கையின் உள்ளடங்கிய கருத்துக்களில் மனம் ஊன்றவேண்டும்; பிற்பாடு அவைகளை உருவாக்க வேண்டிய சக்தி தானாக வெளியாகும்.

சிலருக்கு, உண்மை வாழ்க்கை வரலாறுகளே கற்பனைச் சித்திரங்களைக் காட்டிலும் இன்பம் தருவன. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உயிர் வாழ்ந்தவரின் கதையாயினும், வால்மீகி முனிவரின் சொல்வன்மையினால் நேற்று நடந்த கதையாகவோ, அல்லது இன்றே நடக்கக் கூடிய நிகழ்ச்சியாகவோ தோன்றுகிறது இராமனுடைய கதை. இதில் பெருத்த ஆச்சரியம் இருக்கத்தான் செய்கிறது. இது போகட்டும். இதில் கூடச் சிலருக்கு அவநம்பிக்கை உண்டாகிறது. ஏனெனில், அவர்கள் கண்முன் இராமனைத் தசைநரம்புகளுடன் காணவில்லையே! ஆனால், காந்தியடிகளைப்போன்ற சிறந்த மனிதரை நேருக்கு நேர் இப்போது காண்பதாலேயே இவருடைய வாழ்க்கை வரலாறுகளில் பலருக்கு நம்பிக்கை உண்டாகிறதா என்றால், அதிலும் சந்தேகந்தான்! அவரிடமும் சில வாழ்க்கை நிகழ்ச்சிகளை அறியும்போது, வாசகருடைய புத்தி கலக்கமடைகின்றது. தென் ஆப்பிரிக்காவில் ஒரு நாள் ஒரு முகம்மதியன் இவரை எதிர்த்துக் கத்தியினால் குத்த வரவும், இவர் 'சரி' யென்று உயிரைவிடத் தயா

ரானுர் என்ற சம்பவத்தை வாசிக்கையில், இப்படியும் ஒரு தைரியம் உண்டா மனிதனிடம் என்று தான் நம்பாமல் இருப்போம்!

இவர் சரித்திரத்தில் வேறு சில ரகசியங்களை வாசிக்கையில், உள்ளம் திகிலடையும். தம் தந்தையார் உயிர் நீக்கும் தறுவாயில் கிடக்க, காந்தியடிகள் தம் மனைவியின் சயனத்தைத் தாம் நாடிய வெட்கக்கேட்டை அப்படியே மறைவில்லாமல் உரைக்கிருர். இதை உணருவதற்குத் தகுந்த மனப்பக்குவம் படைப்பதும் அரிது. எவ்வளவு மன வலிமை ஒருவரிடமிருந்தால் இம்மாதிரிக் கூசாமல் தம்முடைய ரகசியச் செயல்களைப் பிறருக்கு எடுத்துக் காட்டத் தோன்றும்! வாசகர்கள் இதில் கவனிக்க வேண்டிய அம்சம், நியாயமாயும் பகிரங்கமாயும் மனத்தை வளர்த்தால் தாங்களும் பெரியோராவது சாத்தியம் என்பதே. நம்மிடம் குறைகள் எவ்வளவோ இருப்பினும் அவை இருப்பதாகவே நமக்குப் படுவதில்லை. அப்படிப் பட்டாலும், பிறரறிய அவற்றைச் சொல்லத் தைரியமும் வருவதில்லை. காந்தியடிகளின் 'சத்திய சோதனை'யைப் பக்கம் பக்கமாய்ப் புரட்டுவதினுல் இத்தகைய தைரியம் பெறலாம் என்று உறுதிவளரவேண்டும். நேர்மை நெறியை உணர்த்த மகாத்மா தேடிய பலவழிகளில், சுய சரித்திரம் எழுதுவதும் ஒன்று என்பதை உணர்ந்தபின், வாழ்க்கை வரலாறு பயனுடையது என்பதில் சந்தேகத்துக்கு இடமுண்டா?

தம்மைப்பற்றி எழுதுவது ஒருவித முயற்சி. தம்மைப் பற்றித் தெரிந்து கொள்வது எவ்வளவு கடினமோ, அவ்வளவு கடினந்தான் பிறரை நிர்ணயிப்பதும். தன்னை அறிந்தவன் உலகையே அறிவான் என்ற பண்டைய சொல் தவறல்ல.

இதை நினைத்துத் தாஞே என்னவோ, இராமயணக் கதையை வால்மீகி எழுத முயலுகையில், தியானத்தை மேற்கொண்டாராம். அதன் கருத்து என்ன? முழுவதும் மற்ெருருவனை அறிந்ததாகச் சாமானியமான எந்த மனித

னும் நினைக்க இடமில்லைதான். சுய நினைவுகள் திரை போல் அவன் கண்களை மறைக்கக் கூடும் அல்லவா? தன்னையே நினையாதிருக்கவும், பிறரைச் சரியாக உணரவும் எவ்வளவோ பக்குவமடைந்த பார்வை வேண்டும் என்பார்கள். அதற்காகவே வால்மீகி தவங் கிடந்தார் போலும்! அவருக்கெதிரே இராமனுடைய சரித்திரம் நாடகம் ஆடுவதற்கொப்ப, காட்சிகளாக வந்து நின்றதாம். ஒவ்வொரு பாத்திரமும் பேசத் தொடங்கியது. பாத்திரங்களுடைய சிரிப்பு முதலிய சிறிய சேஷ்டைகள் முதல் பெரிய செயல்கள் வரையில், எல்லாம் அப்படி அப்படியே அவர் கண் எதிரே தெரிந்தனவாம். முனிவர் செய்தது பிற்பாடு ஒன்றுமே இல்லை என்பர் பெரியோர். இராமகதை அவ்வளவையும் அவர் இப்படிக் கண்கொண்டு கவனித்து, உடனுக்குடனே பாட்டில் உருவாக்கிவிட்டார்.

எதற்காகப் பிறரைப் பற்றி எண்ண வேண்டும் என்றுரைக்கும் அறிவாளிகளும் உலகில் உள்ளனர். அவர்கள் சொல்லும் கருத்து, உலகில் எவனும் மற்றவனை விடக் குறைந்தவனல்ல; வேண்டாதபடி யெல்லாம் மற்றொருவனைத் தூக்கி வைத்துக் கூத்தாடும் இயல்பு போற்றத்தக்கதல்ல என்பதே. இம்மாதிரி நினைப்பவர்களின் எண்ணிக்கை குறைவுதான். சாமானியமாய் உயர்ந்த குணங்களைக் கண்டதும் பலருக்குப் பாராட்டத்தான் தோன்றும். ஆனால் நீடித்து அவைகளைப் பாராட்டித் தம்முடைய தனிப் பொக்கிஷமாகவும் கருதி உலகிற்கு அளிப்பதை எல்லோரும் விரதமாக வைத்துக் கொள்வதில்லை. சிற்சிலரே அதற்கு வேண்டிய அறிவையும் ஆற்றலையும் பிறவியிலிருந்து பெறுகிறார்கள். வால்மீகிகள் இல்லாவிட்டால், இராமர்கள் உலகில் தோன்றியும் பயனென்ன?

சிறந்தவர் ஒருவரைப்பற்றி அறிந்த செய்திகளையும், அவருடைய நெருங்கிய உறவினர் சொல்லும் விவரங்களையும், இன்னும் அவ்வப்போது அவருடைய வாழ்க்கைச் சம்பவங்களில் குறித்திருப்பவைகளையும் தொகுத்து

உருவாக்கி எழுதப்படும் படத்தை, கேவலம் இல்லாததையும் சொல்லாததையும் வைத்து எழுதிய சித்திரம் என்று குறை கூறுவது சரியல்ல. ஒருகால் நடந்த சில சாமானிய சம்பவங்கள், எழுத்தாளருடைய சொல்வன்மையினால், உயர்தரமான நோக்கங்களைக் கற்பிப்பதாகத் தோன்றலாம். இதனால் எழுத்தாளன் சொந்தத் திறமையை அதிகம் கையாளுவது கூட வாழ்க்கை வரலாற்றை அதற்குரிய இயல்பைவிடத் தனிப்பட்ட விதத்தில் உயர்த்தி வைப்பதாகவும் தோன்றும். ஆகையால், அவன் கடைப்பிடிக்க வேண்டிய நேர்மை மார்க்கம், நடந்தவைகளை அவ்வாறே பிழையின்றிச் சொல்வதும், சந்தேகங்களை எழுப்பக் கூடிய சம்பவங்களைத் தனக்குப் பட்ட வகையில் விளக்கிப் பட்சபாதங்களுக்கு இடம் தராமல் நிகழ்ச்சிகளின் பலன்களைக் காட்டுவதும்தான். இலக்கிய ருசியைக் குலைக்காமல் பாதுகாக்க அவன் செய்யக் கூடியது, ஒரே குணத்தை விவரிக்கத் தகுந்த பல செய்திகள் வாழ்க்கையில் இருப்பினும், எல்லாவற்றையும் அடுக்கிக்கொண்டு போகாமல் வேண்டியவைகளை மட்டும் உபயோகித்து இலக்கிய அழகைப் போஷிக்கும் வரலாற்றை உண்டாக்குவதாகும்.

உயர்ந்த வாழ்க்கையாயினும், எல்லாச் செய்திகளும் ஒரே மாதிரியாய் உயர்ந்தனவாக இல்லாதிருந்துவிட்டால் அவைகளைக் குறிப்பது அவசியமா? அப்படிக் குறிப்பதால் தீங்கு ஏதேனும் நேரிடலாமல்லவா? இம் மாதிரிச் சந்தேகங்களுக்குத் திருப்தியாகப் பதில் கொடுப்பது சாத்தியமில்லை. இம் மாதிரி வாழ்க்கை வரலாற்றில் இலக்கியச் சுவையையே முக்கியமாய்க் காண்பதாயின், அதற்கு இன்றியமையாததாயுள்ளவை ஒளியும் நிழலும்; இவைகளால் சித்திரத்தைச் சோபையுடன் கூடியதாக ஆக்குவதில்தான் எழுத்தாளனின் முழுச்சிறப்பும் வெளியாகும். மேலும் அவன் பொறுக்கி யெடுக்கும் விவரங்கள், உண்மையை விடாமல், உவகையை வாசகர்களிடம் ஊட்டவேண்டும். வேண்டாத விவரங்களை யெல்லாம் வரிசைக் கிரமத்தில்

தொகுப்பது, ஒருவனுடைய சவப்பல்லக்கை ஊர்வலமாய்த் தூக்கிச் செல்வதற்குச் சமானமாகும் என்பார்கள், வாழ்க்கைச் சரித்திரத்தை மதிப்பிடுகிறவர்கள்.

சுயசரிதையை எழுதுவதாயினும், பிறர் வாழ்க்கை வரலாறுகளைத் தொகுப்பதாயினும், சமீபகாலம் வரையில் மேலை நாட்டார் இலக்கிய லக்ஷ்யத்தை முக்கிய நோக்கமாய்க் கொள்ளவில்லை. கனத்த புஸ்தகங்களில் ஒருவனுடைய வாழ்க்கைச் சம்பவங்களைப் பதிப்பித்தும், அவன் எழுதிய கடிதங்களையும் அவைகளுக்குள்ள பதில்களையும் சேகரித்து வைத்தும் வந்தார்கள். இவற்றில் என்ன சுவாரஸ்யம் இருக்கக் கூடும்? சிறிது காலமாயத்தான் மேலை நாடுகளில் சிலர் தோன்றி, வாழ்க்கை வரலாறுகளை எழுதும் முறையைச் செப்பனிட்டுப் புதிய பாதையென்றே தோன்றும்படி அதைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் கையாளும் விவரங்களில் உண்மை ஒரு நாளும் மறைவதில்லை; அனுவசியமான செய்திகள் காண்பதில்லை; நீண்ட கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டு வாசிப்பவருக்குச் சோர்வை உண்டாக்குவதுமில்லை.

எதிலும் பயமும் சந்தேகமும் சிலருக்கு உண்டாகின்றன. எழுதுகையில், வேண்டியதற்கு மேல் யாரையாவது பெரியவனாகத் தோன்றவைத்து விட்டால் என்ன செய்வது என்பது அவர்கள் கவலை. இது வேண்டாத கவலைதான். ஒருவன் தன்னையே மறந்து மற்றொருவனுடைய குணாதிசயங்களில் மனம் லயித்துச் சிறந்ததொரு வரலாற்றை எழுதிவிட்டாலும், அதனால் ஒன்றும் குடிமுழுகிப் போகாது. அவனிடம் பண்பாடு பொருந்தியிருப்பது ஒன்றே, அவனைப் பிறர் வாழ்க்கையில் உயர்ந்த அம்சங்களைக் காண வைத்து, அளவு கடந்த அவாவையும் பெற வைக்கிறது. தன்னை மறந்து அவ்விதம் ஒருவன் எழுதுவானேயானால், அவனுடைய முயற்சி சிறந்த இலக்கிய வகையைச் சேரும் என்பதிலும் ஐயமில்லை. ஏனெனில், கலைஞன் உண்மையில் அர்ப்பணம் செய்ய வேண்டியதும் தன் சுய ஞாபகத்தையன்றோ?

# பண்பட்ட உள்ளம்

ஒரு சிறு சம்பவம் என் ஞாபகத்திற்கு இப்பொழுது வருகிறது. ஒரு நண்பர்வீட்டில் ஒரு விசேஷத்திற்கு எனக்கு அழைப்பு வந்து நான் போயிருந்தேன். அங்கே ஹரிகதா காலக்ஷேபத்தைப் பாகவதர் ஒருவர் வெகு அட்டஹாஸத்துடன் செய்துகொண்டிருந்தார். பட்டணத்திலுள்ள பிரமுகர்கள் பலர் முன்னால் உட்கார்ந்து கொண்டு கதையைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த நண்பருடைய பேரக் குழந்தை ஒன்று, மூன்று வயதிருக்கலாம்; அழகிய முகம், சிவந்த மேனி, கிருஷ்ண விக்ரஹம் போன்ற உருவம், மெல்லிய பட்டாடையுடுத்திக் கொண்டு நடுவில் வந்து நின்றது. பாகவதர் கையை உயரத் தூக்கிக் கூப்பாடு போடுவதைக் கேட்டுக்கொண்டே பின்னால் நகர்ந்தது குழந்தை. சற்று நகர்ந்ததும் கீழே சப்பணம் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த ஒரு பெரிய மனிதரின் தொடையால் தடைப்பட்டு, குழந்தை அவருடைய மடியில் அப்படியே உட்கார்ந்துவிட்டது. அவ்வளவுதான் என்ன நடந்தென்று நினைக்கின்றீர்கள்? உங்களில் அநேகருக்கு எனக்கு இருந்தது போன்ற எண்ணம் உண்டாயிருக்கக் கூடும்; அதாவது, அப்படியே குழந்தையைக் கட்டியணைக்கத்தான் ஆசை ஏற்பட்டிருக்கும். ஆனால் நடந்தது என்னவெனில், கூப்பிடாமல் குழந்தை தம் மடியில் திடீரென்று உட்கார்ந்ததைச் சற்றும் அங்கீகரிக்காத அப்பெரியவர் ஏதோ தவளையோ தேரையோ மடியில் 'பொத்'தென்று விழுந்தால் ஏற்படக்கூடிய மனோ வேதனையுடன் விழித்தார். குழந்தையும் நொடிப்பொழுதில் அவருடைய கவலையை அறிந்த மாதிரி அவரை ஏற இறங்கப் பார்த்து விட்டு எழுந்து ஓடிவிட்டது.

அந்தப் பிரமுகர் படித்தவரல்ல என்பதற்கில்லை. புத்திசாலி, மிக்க அனுபவங்கூடப் பெற்றவர். ஆனால் குழந்தையைக் கண்டுகளிக்கும் மனப்பாங்கில்லாதவர். நமக்குத் தெரிவதற்குமுன் அச்சிறு குழந்தைக்கே தெரிந்துவிட்டது அவ்விஷயம். ஆம், நாகரிகம் பட்ட

ணத்தில் இல்லாததா, அதிலும் அந்தப் பிரமுகருக்கு இல்லாததா என்று எண்ணும் பொழுதுதான் அவருக்கு இருந்த குறை என்னவென்பதைக் கவனிக்க நம்மைத் தூண்டுகிறது. அதைத்தான் 'கல்சர்' போதாதென்று சொல்லவேண்டி யிருக்கிறது. கல்வியறிவும் கேள்வி-ஞானமும் அவரை என்ன செய்யமுடியும்? காளிதாஸன் சாகுந்தலத்தில் சொல்லியிருப்பதை அறிந்துங்கூட அப் பெரியாருக்குக் குழந்தையைத் தம் மடியில் ஒரு கண மாவது வைத்திருக்க அவா இல்லை யென்றால், படிப்பில் என்ன இருக்கிறது? அனுபவத்தில்தான் என்ன இருக்கிறது?

ஆனால், இதிலிருந்து 'கல்சர்' என்னும் ஆங்கிலப் பதத்தின் அர்த்தம் முழுவதும் தெரிந்து கொண்ட தாகக் கருதவேண்டாம். ஏனென்றால் அப்பதத்தின் அபிப்பிராயத்தைத் தமிழ்ச்சொல் ஒன்றினால் சுருக்க மாக எடுத்துக்காட்ட இயலாது. தமிழர்களிடம் 'கல்சர்' அதிகம் இருக்கின்றதே யொழிய அந்த வார்த்தையை மொழிபெயர்த்துச் சொல்வதற்குத் தகுந்த வார்த்தை இல்லை. ஒருவிதமாக அதன் பொருளைப் 'பண்பட்ட உள்ளம்' என்று சொன்னால் சரியாயிருக்கும். ஸம்ஸ் கிருதத்தில் உட் கருத்துக்கள் அநேகம் அடங்கிய வார்த்தை யொன்று இந்த அபிப்பிராயத்தைச் சிறிதளவு காட்டுகிறது. அதுதான் 'ஸம்ஸ்காரம்' என்னும் மொழி. இப்பொழுது எதை நாம் குறிக்கின்றோம் என்பதை அறிந்துகொள்ள முடிந்தால், தமிழிலோ அல்லது ஸம்ஸ் கிருதத்திலோ அதற்குச் சரியான மொழி இல்லாவிட்டால் என்ன? ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. ஆங் கிலத்தையே இப்பொழுது உபயோகித்துக்கொண்டு நாம் விரும்பும் விஷயத்தைக் கவனிக்க முயலுவோம்.

"இலைகளின் இடையே உண்டாகிய புஷ்பத்திற்கும் அவ்விலைகளுக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம் தான் புஸ்தகத்திற்கும் 'கல்சர்' என்பதற்கும்" என்று, தமிழ்நாட்டில் பேர்பெற்ற ஆசிரியரான ஸ்ரீ. கா. சி. வேங்கடரமணி ஒரு புஸ்தகத்தில் வெளியிட்டிருக்கிறார்.

வாஸ்தவம், என்னதான் இலைகளின் நடுவில் புஷ்பத்தைப் பகவான் சிருஷ்டித்திருந்தாலும், இலைக்கும் பூவுக்கும் அதிக வித்தியாசமில்லையா ? அதுபோல், ஒருவன் படிப்பி ஞல் எவ்வளவு அறிவைப் பெற்றிருந்தாலும் அவன் உள் ளத்தில் ஸம்ஸ்காரம் ஏற்படவேண்டுமானுல், கேவலம் படிப்பின் மிகுதியால் மாத்திரம் அது அவனுக்குக் கிட்டாது. வேறு என்னவெல்லாமோ இருந்து, படிப்பின் ஸாராம்சமும் அனுபவங்களின் பலனும் கலந்து சரியான பண்பட்ட உள்ளம் அவனுக்கு உண்டாக வேண்டும். அவ்விதம் இலலாத காரணத்தினுல் தான் துர்க்கதியினுல் பீடிக்கப்பட்டவன்போல் அநேக சமயங்களில் மனிதன் தோன்றுகிருன். வாடிய முகத்துடன், பண்பாடு என்னும் கருவி கையில் இல்லாததால், படிப்பும் புகழும் செல்வ மும் செல்வாக்கும் அவனை எங்கேயோ பாறையின்மேல் மோதுண்ட மரக் கலம்போல் தனியே விட்டுவிடுகின்றன.

அகராதியை எடுத்துப் புரட்டினுல் ‘ கல்சர் ’ என்னும் ஆங்கிலப் பதத்திற்கு, புத்தியைக் கல்வி கலைஞானம் முதலிய சகாயங்களாலும், இன்னும் உயர்ந்த அபிருசி களாலும் பண்படுத்திக்கொள்ளுதல் என்றுதான் புலப் படும். உடனே அநேகருக்கு, ‘ஏன், நாம் கலாசாலையில் பி. ஏ., பட்டம் பெற்றவராயிற்றே, நம்மிடம் நிச்சயம் ‘ கல்சர் ’ இருக்கத்தான் செய்யும் ’ என்ற எண்ணம் தோன்றக்கூடும். ஆனுல், படிப்பும் பாட்டும், இன்னும் மற்றக் கலைப்பயிற்சியும் எல்லோரையுமே பண்பட்டவ ராகச் செய்துவிடுகின்றனவா ? இல்லை ; தேடித் தேடி அலைந்து நூறுபேரில் ஒருவரைத்தான் நாமும் பண்பட்ட உள்ளம் பெற்றவராக ஒப்புக்கொள்கிருேம். அவ்விதம் காணும் மனிதனுடைய சிறிய செய்கையிலும், பேசும் அற்ப வார்த்தையிலுங்கூட அப்பண்பாட்டின் சின்னங்கள் பிரதிபலிப்பதை நாம் உணரலாம். உலகத்தில் பெரிய காரியங்களைச் செய்யும் மஹான்களைப் பார்த்தால் இந்த விஷயம் நன்கு தெளிவுபடும்.

நாட்டில் பெருங் கிளர்ச்சி; எந்த நிமிஷம் எங்கே அடி தடி நடக்குமோ என்று பயம் அதிகமாக இருப்பதாய்

வைத்துக்கொள்வோம். அப்பொழுது ராஜீய காரியங்கள் எல்லாவற்றையும் தாங்கிச் சீர்குலையாமல் பாதுகாக்கும் ஒரு முதல் மந்திரியையோ அல்லது கவர்னரையோ நினைத்துப் பாருங்கள். அவர் எவ்விதமிருந்தால் நமக்கு க்ஷேம முண்டாகும்? அவர் விஷயங்களை நன்கு பரிசோதித்துப் பார்க்கும் புத்தியுடையவராகவும், அதனுடன் தைரியத்தைக் கைவிடாதவராகவும், எதையும் அமர்க்களப்படுத்தாதவராகவும், தாம் முயன்று சாதிக்க வேண்டிய காரியத்தில் மனம் தளராதவராகவும் இருக்க வேண்டும். பிறகு ஊரில் அமைதி ஏற்பட்டவுடன் இவ்விதம் நடந்து கொண்டவருடைய உள்ளம் எவ்விதமிருந்தால் நாம் மேலே சொல்லிய விதம் பண்பட்டவராக அவரைக் கருதுவோமென்று கவனிப்போம். கோபமில்லாமல் பாடுபட்டிருந்தால்தான் அவரைத் தூஷித்த சத்துருக்களும் ஒருவாறு சாந்தமடைவார்கள். தம் ஜயத்தையே கருதிப் பிறருடைய சந்தோஷத்தை அதிகம் பாராட்டாமல் அவர் உழைத்திருந்தால், நெருங்கிய சிநேகிதர்களுக்கும் அவரிடம் மனச்சலிப்பு ஏற்படும். ஆனால் வெற்றியில் மார்தட்டாமல், தம்மைச் சேர்ந்தவர்களுக்கும் விரோதிகளுக்கும் நலத்தை உண்டாக்க வேறொருவராலும் இயலாது என்று நினையாமல், மேலே செய்யவேண்டிய காரியத்தில் புத்தியைச் செலுத்தினால், அதைவிட உயர்ந்த பண்பட்ட மனத்தை எங்கு நாம் காணமுடியும்?

மேலும், பண்பட்ட உள்ளத்தின் அடையாளம் எதையும் எளிய வகையில் காட்டுவதே. பெரிய தத்துவத்தைச் சிறிய வார்த்தையில் எடுத்துக் காட்டுவதுதான் பண்பட்டவனுடைய இயல்பு. பண்பட்டவன் ஓர் அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு அதோடு மன்றாடி விழுவதில்லை. அபிப்பிராயத்தின் வலையில் சிக்காமல் அதற்கு மேல் நின்று, சுலபமாக அதை எடுத்துப் பேசுவதே அவனுடைய திறமையைக் காட்டும். பண்டிதன் என்றால் ஒருவரும் அறியாவண்ணம் பெரிய பெரிய வார்த்தைகளை வாரி இறைப்பதுதான் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் நிஜமான பண்டிதனாயிருந்தால், அவன் அறிந்த

ஞானம் அவனை எளிய பாஷையில்தான் எதையும் பேசச் செய்யும். பண்பட்டவன் இந்த விஷயத்தைத் தான் முதலில் அறிந்துகொள்ளுகிறான்.

பண்பட்ட மனம் என்னும்பொழுது புண்பட்டமனம் என்று கொள்ளவேண்டாம். ஆனால் இந்த இரண்டு பதங்களிலும் ஓசைப் பொருத்தம் மாத்திரம் அன்று, ஓர் அளவு விஷயப் பொருத்தமும் இருப்பதாகத் தோற்றுகிறது. ஏனென்றால், வாழ்க்கையில் சிரமங்களையும் கஷ்ட நஷ்டங்களையும் அனுபவித்தவரே பிறரிடம் அனுதாபம், தயை, தாக்ஷிண்யம், முதலியவைகளைக் காட்டுவதைக் காண்கின்றோம். பிறருடைய நல்ல குணத்தில் நம்பிக்கையும் அபிமானத்தையும் காட்டுவது போற்றத்தக்க விஷயமல்லவென்று யார்தாம் சொல்லுவார்கள் ?

ஆனால், கஷ்டங்கள்தாம் மனத்திற்குப் பண்பாட்டை அளிக்கவல்ல சாதனங்களென்று சாதிப்பதும் அவ்வளவு சரியல்ல. பெரும்பாலும் சிரமமும் தோல்வியும் மனிதனை ஒழுங்குபடுத்துவதை மெய்ஞ்ஞானியர்கள் அறிந்து சொல்வார்கள். சரித்திரத்தில் நாமறிந்த பேர்பெற்ற தீரர்களெல்லாம் தாமாகவே கஷ்டங்களையும் சிரமங்களையும் மேற்கொண்டிருப்பதை வாசித்தறிந்தும், இந்த விஷயத்தைப்பற்றிச் சந்தேகிக்க ஹேது எதுவுமில்லை. ஆனால் அதற்காக மனம் புண்ணாகி, எப்பொழுதும் முகம் வேதனையைப் பூண்டிருப்பதும் பண்பட்டவனுடைய அடையாளமாக ஆகமாட்டாது. ஒன்றுக்கொன்று சற்று விரோதமாய்த் தோன்றக்கூடிய குணங்களே சரியான அளவில் தோன்றி மனிதனிடத்தில் காலத்திற்கேற்றவாறு பரிணமிக்க வேண்டும். அதுவே அவன் பெறும் பண்பாடு. அதற்காகத்தான் வால்மீகி மஹரிஷி ராமனுடைய குண விசேஷங்களைக் குறிக்குங்கால், அவனுக்கு மிருதுவான சுபாவம் இருந்தும் மனவுறுதியைக் கைவிடவில்லை என்றும், பிறருக்குப் பிரியமானவற்றையே பேசும் இயல்பிருந்தும் அசத்தியத்தை ஒருபொழுதும்

சொன்னவனல்லன் என்றும் வருணித்திருக்கிறார் போலும். ஒன்றுக்கொன்று ஒவ்வாதவைகளாகத் தோன்றும் குணங்களையே சேர்த்து வைத்துக்கொண்டு அளவுகடக்காமல் காப்பாற்றி, ஒழுக்கத்தாலும் மற்றும் தயை தாக்ஷிண்யங்களாலும் அரிய ஸம்ஸ்காரத்தை மனிதன் பெறுகிறான்.

ஒருவனுக்கு அதிக சிரமங்கள் உண்டாகாமல் அதிர்ஷ்டம் அவன் விரும்பும் எல்லாவற்றையும் கொடுப்பதாக வைத்துக்கொள்வோம். அவனுடைய செயல்களில் எல்லாம் சுய நம்பிக்கையையும் தைரியத்தையும் நிச்சயம் பார்க்கலாம். இவை நல்ல குணங்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவன் வாழ்க்கை முழுவதையும் ஊன்றிக் கவனித்தோமானால், தன் போன்ற அதிர்ஷ்டசாலிகளாக இல்லாதவர்களிடத்திலும், தோல்வி அடைந்தவர்களிடத்திலும், அனுதாபம் அவனுக்கு ஏற்பட்டதாக நாம் அறியவகை இராது. புத்திக் கூர்மை மாத்திரம் ஒருவனுக்கு உலகில் இருந்தால் போதுமா? யுக்திவாதங்களைக் கொண்டு எல்லோரையும் வென்று தன் சாதுரியத்தைக் காட்டும் திறமை அவனுக்கு இருந்தால் மாத்திரம் நாம் ஒப்புக்கொண்டு அவனை உயர்ந்தவனாக நினைக்கின்றோமா? தங்கம் ஜொலிக்கிறதென்று அதைச் சாப்பிட முடியுமா? மின்னலைக் கண்டு மயங்குமளவுதான் அவனுடைய புத்தி வேகத்தைக் கண்டும் நாம் ஆச்சரியப்படுவோம். ஆனால் எவ்விதம் மின்னலினூடே மின்சார சக்தியைக் கண்டு பிடித்து அதன் கொடுமையைச் சிறிதாக்கி, வேண்டிய அளவையே உபயோகித்து வீடுகளையும் கட்டிடங்களையும் வெளிச்சத்தால் அலங்கரிக்கின்றோமோ, அம்மாதிரியே புத்தியின் தீட்சண்யம் இருதயத்தைக் கொளுத்தி வாட்டவிடாமல் அதன் வேகத்தைக் குறைத்து, இருதயத்தின் மார்க்கமாகவே வழிகாட்டி அழைத்துச் செல்வது எவ்வளவு உயர்ந்ததாக ஆகும்!

இருதயத்தை அதிகம் வளரவிட்டால் புத்தியைக்கூட மங்கச் செய்துவிடுமென்று சிலர் கருதுவதையும் நாம் கவனிக்கவேண்டியதுதான். புத்தி நுட்பமும் காரிய வேகமும் உடையவர்கள் அநேக காரியங்களைச் சீக்கிரத்தில்

செய்து முடித்துக் கொள்வதைப் பார்க்கின்றோம். அதி லிருந்து எப்பொழுதும் அவர்கள் செய்வது சரியென்று எண்ணு[illegible]தற்கில்லை. யோசிக்கும் குணத்தைக் கைவிடா மல், பிறருடைய வார்த்தைகளுக்கும் காதுகொடுத்துப் பிறகே சொந்தமாயும் தீர்மானித்துக் காரியங்களைச் செய் யும் மஹான்களையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின் றோம். நதியின் பிரவாகத்தை அணைத்துக்கொண்டுபோகும் கரைபோல், செயலின் வேகத்தை யோசனைதான் காப் பாற்றுகிறது. மலையுச்சியை நாடும் கால்கள் கவனியாமல் அதலபாதாளத்தில் விழுவதேபோல், யோசிக்காதவர்கள் ஆபத்துக்களை அடைவார்கள். நின்று நிதானித்து, அக்கம் பக்கங்களைப் பார்த்துவிட்டு, எந்த வழி ஆபத்துக்கள் இல் லாமல் மலைச்சிகரத்துக்குக் கொண்டுபோய்விடும் என்று யோசனை செய்வது அதைவிட எவ்வளவு மேல்!

நம்முடைய பல்கலைக் கழகங்களும் கலாசாலைகளும் மாணவர்களுக்குச் செயயக்கூடிய உபகாரம் ஒன்று உண்டென்பது நிச்சயம். ஆயிரத்தில் நூறுபேர்கள் தாம் வாழ்க்கையில் தாங்கள் செய்யவேண்டிய தொழில் முறை யின் ஞானத்தைக் கலாசாலையில் அடைகிறார்கள். பாக்கித் தொள்ளாயிரம் பேர்கள் பரிக்ஷை தேறிப் பட்டம் பெறுவதையே லட்சியமாக நினைக்கின்றார்கள். சமூக வாழ்க்கை, கலையுணர்ச்சி, இல்லறம் நடத்தல் முதலிய காரியங்களில் பிற்காலத்தில் நல்ல அறிவு உண்டாவ தற்கு ஏற்ற மனப்பக்குவம் அவசியம்; அதனை அடைவ தற்குக் கல்லூரியிலும் விச்வ வித்தியாலயங்களிலும் எதைப் பெறவேண்டுமென்பதை ஊன்றிக் கவனித்தால், அதுதான் விஷய பரிசோதனை செய்யும் ஆற்றல் என்று புலப்படும். எந்தக் காரியத்தையும், எந்த விஷயத்தை யும் பகுத்தறிவுடன் கவனித்துப் பார்க்கும் சக்தி. அதற் காகவே ஊசி முனையில் வைத்துப் படிப்பை இள வயசி லிருந்தே நமக்கு ஏற்றுகிறார்கள் போலும். சிலருக்கு மருந்து பலிக்கின்றது; சிலருக்கு மருந்துக்குமேல் வியாதி பெரிதாக இருப்பதால், ஊசிமுனையின் ஞாபகம் மாத்திரம் அவர்களை விட்டு அகலுவதில்லை.

பாட்டும் பேச்சும் இலக்கியப் பற்றும் நல்ல விஷயங்கள் என்றும், மனம் பண்படுவதற்குத் தூண்டுகோல்கள் என்றும் உலகம் அறியும். ஆனால் அவைகளிருந்தும் மனிதன் சந்தோஷத்தை அடையாமலிருப்பது அவைகளை நல்ல வழியில் உபயோகிக்காததனால்தான். அவைகளை ஊதியத்திற்கென்று வைத்துக்கொள்ளாமல் இருந்தால், அவை பிறருக்கு எப்பொழுதும் சந்தோஷமளிப்பதுடன், கடைசியில் அவன் பெறும் பயன்களில் சிறந்தனவாகவும் மாறிவிடும். சந்தோஷம் என்பது என்னவென்று யோசித்துப் பார்த்தால், அது மனத்திற்கு மேலும் மேலும் உத்ஸாகத்தை ஊட்டும் கருவி என்று தெரியவரும். அவ்விதச் சந்தோஷத்தை அழிவில்லாமல் பெறவேண்டுமானால், அதற்கு ஒரே உபாயந்தான் உண்டு. செய்கையில் ஈடுபட்டுத் தன் நினைவை யொழித்துப் பிறரிடம் அன்பு வைப்பது ஒன்றே அதனைக் கிட்டவைக்கும்.

இவ்விதம் சந்தோஷத்தைப் பூர்ணமாக அடைவதற்காகத்தான், வீணையையும் புஸ்தகத்தையும் ஜபமாலையையும் கையிலேந்தித் தாமரையில் வீற்றிருக்கும் வாணி தேவியை நம் தேசத்தில் இவ்வளவு காலமாக நாம் போற்றி வந்திருக்கிறோம். பண்பட்ட உள்ளத்தின் அடையாளங்களான கலையும் கல்வியும் பக்தியும் அவளுடைய வீணையாகவும் புஸ்தமாகவும் ஜபமாலையாகவும் காட்டப்படுகின்றன. நாம் கற்ற படிப்பு நம்மை அமுக்கி மனோவியாதியாக மாறாமலிருப்பதற்கே, மலர்ந்த தூய வெண் தாமரையில் தேவியை வீற்றிருக்கச் செய்துள்ளனர். மேலும், இயற்கை, அனுபவம். இவைகளையொட்டியே ஞானோதயமாக வேண்டுமென்ற கருத்தை எடுத்துக் காட்டியபடி பலவர்ணங்களின் பொலிவு பெற்ற மயிலின் உருவம் தேவியை அணுகி நிற்கின்றது. இதைவிட வேறு சிறந்த சிருஷ்டி நம் பண்பட்ட உள்ளத்தின் உயர்விற்கு என்ன வேண்டும்! தன்னலத்தை மறந்து பிறரிடம் அன்பு பூணும் வழிதான் நமக்கு இயற்கையாக வேண்டும்; அவ்விதம் அடைந்த ஞானத்தைக்கொண்டு தன்னையே அறிந்தவன்தான் பண்பட்டவன் என்று சொல்லவும் வேண்டுமா?

மஹாமஹோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
சென்னை - 600090.

# பாராட்டு

தென்னாட்டுப் பிரமுகர்களில் மிகவும் பெரியாரான ஒருவர் பேசுகையில் தம் சொந்த அபிப்பிராயத்தைப் பின் வருமாறு வெளியிட்டார்: "வங்காளிகளுக்கு மட்டும் சொந்த ஊரபிமானம் அதிகம் என்பதில் சந்தேகமில்லை. மற்ற மாகாணங்களிலுள்ளவர்களிடம் என்றைக்கும் அவர்களுக்கு மதிப்பு ஏற்படுவதில்லை. ஆனால் தென்னாட்டில் அதற்கு முற்றும் விரோதமான பழக்கம் இருக்கிறது. நம்மவர்களிடம் உள்ள உயர்வைக் காட்டிலும் பிறரிடம் உள்ளவற்றில்தான் நமக்குப் பிரமை. மேலும் நம்மைப்பற்றி இழிவான எண்ணங்கூட நமக்கு உண்டு."

இவ்விதக் கருத்திலுள்ள உண்மையை அளந்து பார்ப்பது எளிதல்ல. ஏனென்றால் பல நாடுகளை அறிந்த ஒருவர் இவ்விதம் சொல்லுவாரானால், அதில் அடங்கிய உண்மையில் கொஞ்சமாவது சொந்த அனுபவத்தின் விளைவும் இல்லாமலிருப்பது சாத்தியம் அல்ல. மற்றப்படி, மனித இயல்புகளை நன்கு உணரக்கூடிய பகுத்தறிவு படைத்தவராயும் அவர் இருந்தமையே, இவ்வித நம்பிக்கையை அவர்பால் அதிகப்படுத்தியது என்றுகூடக் கூறலாம்.

உலகெங்கும் மனித சுபாவம் ஒரே விதமாகத்தான் இருக்கமுடியும் என்ற எண்ணத்தை நம்மிடம் உணர்த்துபவர்களும் அநேகர் உண்டு. அக்காரணம்பற்றி வங்காளிகள் மட்டுமே வித்தியாசமான மனப்பாங்கை உடையவர்களா என்பதில் அவர்களுக்குச் சந்தேகம் ஏற்படுவதும் நியாயம். பட்சபாதிகள் உலகெங்குந்தான் இருக்கிறார்கள் என்பதால், ஒரு மாகாணத்தைக் குறித்துத் தனியாகக் குறை கூறுவது தவறு என்பது அவர்கள் கட்சியாகும்.

ஆயினும் எதனால் இவ்விதம் தோன்றக் காரணம் ஏற்பட்டது என்பதையும் கவனிக்கவேண்டாமா? ஆம், நாம்கூட நன்கு உணரமுடியாத விதம் நம்மிடமே வேற்றுமை - எண்ணங்கள் பதுங்கிக் கிடக்கிறபடியால்,

மஹாமஹோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

பிறரிடமே அவைகளைக் காண்பதாக முதலில் தோன்ற லாம். சிற்சில சந்தர்ப்பங்களில் இம்மாதிரி அனுபவங்களே நம்மிடம் ஆத்ம சோதனைக்கும் இடம்தரும். மனத்தை ஏமாற்றிக்கொள்ளாமல் நாம் பரீக்ஷை செய்து பார்க்கை யில் நுட்பமான விஷயம் ஒன்று புலனாகும். அதாவது, பிறரைப் பாராட்டுவதும் ஒரு தனிப்பட்ட குணந் தான்; தேசகாலங்களைப் பொறுத்ததல்ல அது. நம் முடைய பிறந்த நக்ஷத்திரத்தை வேண்டுமானாலும் பொறுத்ததாகச் சொல்லலாமே தவிர, வேறு ஒன்றையும் குறிப்பது நம்மால் இயலாது. எதுவாயினும், பிறரிடம் சற்றேனும் கௌரவம் செலுத்தும் மனப்பாங்கு அவ்வள வாக அளவு கடந்த சுய அபிமானத்தைக் காட்டுவதில்லை என்பதை யாரும் உணர்வார்கள். ஓரளவு பிறரைப் பாராட்டாத குணம் தனக்கே தீங்கிழைத்துக் கொள்ள வும் நேரிடும் என்றுகூடக் காட்டிவிடலாம்.

பாராட்டும் 'பழக்கத்தை அறியாதவர்கள் தாம் நம்மில் அதிகம். மேலும், மனம் பாராட்ட இடம் கொடுத்தாலும், வாய் அதைச் சொல்லாத கடும் பழக்கத்தை வைத்திருக்கும் படிப்பாளிகளே நம்மில் அதிகம். கல்வியில் ஒருவர் மேம்பட மேம்பட, மனத்தினுள் அவரிடம் சதா வேதனைகளே அதிகரிப்பதை எங்கும் காணலாம். தம்மைக் குறித்து எல்லா நேரமும் அவருக்கு நினைவு வளர்வதால், தம்மை ஏன் மற்றவர்கள் தகுந்த படி பாராட்டவில்லை என்ற ஞாபகமே அவர் நெஞ்சை அறுத்துக்கொண்டிருக்கும். எங்காவது தம்மை விட்டு விட்டு மற்றவரைப்பற்றிய பாராட்டு - மொழிகளைக் கேட் டாலும், தம்மால் இயன்ற அளவு, புகழ்கிறவரின் உத் ஸாகத்தைக் குறைக்கவே வழி தேடுவார். காரணம் சொல்லவேண்டியதில்லை. தம்மை அறியாமல் அசூயையின் வலையில் சிக்கியதுதான் அவரிடம் உள்ள கோளாறு என்று ஊகித்துவிடலாம்.

வாஸ்தவத்தில் பாராட்டும் சுபாவம் வேண்டாத வேற் றுமைகளை ஒருபோதும் நினையாது. இன்னும் பிறர் தங்க ளிடம் வைக்கும் நன்மதிப்புக்காகவே பதில் செய்வதாகப்

4 (ருப) XVI.D.35

பாராட்டுதலை எண்ணுவது குணம் ஆகாது. தன்னை மறந்து, விஷயத்தை மட்டும் எண்ணி, இதர சுயாலங்களையும் தள்ளி, தனக்குப் பட்ட அளவில் அனுபவித்துப் பாராட்டை வெளியிடும் பழக்கமே பொன் செய்யும் மருந்து எனலாம். ஆனால் சில சமயங்களில் பிறரைப் பாராட்டுவதனால் அவர்களுக்குத் தீங்கு இழைக்கவும் நேரிடும். ஏற்கெனவே அகம்பாவம் அதிகம்கொண்டவரை நாமும் சற்றுப் பாராட்டிவிட்டால், கேட்கவேண்டியதில்லை; தலை விரித்தாடத் தொடங்கி விடுவார். ஆனால் அதற்கு நாம் கவலைப்படவேண்டியதுமில்லை. ஏனென்றால் அப்பேர்ப்பட்டவர்களே சீக்கிரத்தில் பாராட்டுக்கு அவகாசம் கொடாமல் செயயத் தலைப்படுவார்கள். ஒவ்வொருவரும் அவரவர்கள் கர்ம பலனை அனுபவிக்கக் காத்திருக்கையில், நாம் எதற்காக அவ்வளவு பொறுப்பையும் நம்மிடமே உணரவேண்டும் என்ற வேதாந்தமும் சுலபமாக அப்போது விளங்கும்.

இவ்வளவு தூரம் யோசித்துப் பார்த்தல்ல ஒருவன் பிறருடைய உயர்வில் தனக்கு ஏற்பட்ட உணர்ச்சியை வெளியிடுவது. அதிக யோசனை செய்து சொல்லும் வார்த்தை நியாயத்தீர்ப்பு மாதிரியே ஆகும். சிரத்தையுடன் சீர்தூக்கிப் பார்த்து, தராதரங்களையும் உணர்ந்து, தராசில் வைத்து நிறுத்துப் பிறகே அபிப்பிராயங்களைப் பகர்வதன் நோக்கமே வேறு. சாமானியமாக நல்லதென்று தோன்றியதும் பாராட்டிப் பேசும் பழக்கம் வேறுதான். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று சமீபம் வரக் கூடியவையாக இருப்பினும், வெவ்வேறாகவே இரண்டையும் அறியவேண்டும். பள்ளி மாணவனொருவன் பாடத்தை உபாத்தியாயர் ஒப்பிக்கச் சொன்னவுடன், தான் பாடத்தை வீட்டில் வாசிக்காத உண்மையை ஒப்புக்கொண்டால், அவனுடைய சுபாவத்தின் ருஜுத் தன்மையைப் பாராட்டவேணடியதுதான். அதற்காகத் தினமும் பாடத்தைப் படியாதவனை மெச்சும்படி ஒருவரும் எதிர்பார்க்க மாட்டார்கள். எந்தச் சமயத்தில் எதைப் பாராட்ட வேண்டுமோ அதைச் செய்ய மறக்கலாகாது.

ஏனெனில் பாராட்டாமல் சும்மா இருப்பதன் முடிவு சிற்சில இடங்களில் ஒழுக்கத்திற்கு மாருன எண்ணத்தையே கிளப்பவும் காரணமாகலாம். முக்கியமாக, சிறுவர்களிடம் பாராட்ட வேண்டியவைகளை அலட்சியம் செய்வது இத்தகைய ஆபத்தை உண்டாக்கிவிடும். நல்லொழுக்கத்தை வளரவைப்பதுங் கூடச் சிறு பிராயத்தில் சுலபமானதால், ஓரளவு பாராட்டும் குணத்தை வேரூன்ற வைப்பது இளைஞர்கள் விஷயத்தில் மிக அவசியம எனலாம். உயர் லட்சியங்களில் பற்றுதல் சிறு வயசிலுள்ளதுபோல் முதிர்ந்த பிறகு உண்டாகாது என்பதை நினைத்தே இம்மருந்தை ஏற்ற காலத்தில் கொடுக்க வேண்டும் என்று ஏற்படுகிறது.

இளமைப் பழக்கம் முதுமையிலும் பயனளிக்கும் என்று நம்புகிறவர்கள், பாராட்டும் குணத்தைச் சிறுவயசிலிருந்தே விதைத்து, நீர்பாய்ச்சி, களைபிடுங்கிக் காப்பாற்றுவார்கள். பாராட்டுதல் ஒன்றே மேம்பட்ட உள்ளங்களுக்குத் தங்களையும் தங்களைச் சேர்ந்தவர்களையும் தெய்விகப் பிரகிருதிகளாகச் செய்ய ஒரு கருவியாகும்.

ராமாயணத்தை வாசித்து அனுபவிக்கிறவர்களுக்கு ஸ்ரீராமனுடைய அரிய தியாகத்தைவிடப் பரதனுடையது உயர்ந்ததாகவே விளங்கும். ராமன் செய்த தியாகம் தந்தையின் வார்த்தையைக் காப்பாற்ற எண்ணியே. இளையோனை பரதனுடைய தீரச் செயலோவெனில், தன்னை அணுகிய ராஜ்யத்தை ஒருவிதமான கட்டுப்பாடுமின்றித் தானே வெறுத்ததுதான். கவனித்துப் பார்க்கையில், பரதனுடைய இருதயம் ராமனுடைய குணத்தை மிகவும் பாராட்டியதாலேயே, அவனைவிடவும் உயரச் செல்வதற்கு வேண்டிய சக்தியைச் சம்பாதித்துக் கொண்டது என்னும் சூட்சுமம் புலப்படும்.

எவ்வளவு விதமான கலைஞானங்கள் பெற்ற உள்ளமும் புறக்கணிக்கத் தகாதது பாராட்டும் குணமொன்றுதான். மற்றவை இருப்பினும், பிறரிடம் பாராட்ட

வேண்டியதை உணர இயலாத மனத்தை, எவ்வளவோ விரிந்து வண்ணப் பொலிவு பெற்றும் வாசனையற்ற மலே ரோஜாவுக்குச் சமானமாய்க் கூறத்தான் தோன்றும். கவி ரவீந்திரருடைய சிறு வயசின் வரலாறு ஒன்றை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பது முறையாகும். பள்ளியில் வாசிக்கும் நாட்களில் குழந்தை ரவிக்கு அதில் அதிக ஊக்கமில்லை. கல்வி பயிலும் மார்க்கத்தைப் பகைக்கவும் மனம் நாடியது. சிறிது சிறிதாக, பள்ளி செல்லும் ஆசையும் குறைந்துகொண்டு வந்தது. ஒருநாள் ரவியின் நண்பன் ஒருவன் வகுப்பில் தனக்குக் கொடுக்கப்பெற்ற பரிசுகளுடன் வீடு திரும்பினன். அவன் கைகளில் கண்ட பரிசுப் புத்தகங்களை அவனிடமிருந்து மிகுந்த குதூகலத்துடன் இருகைகளாலும் பற்றிக்கொண்டு, இளைஞரான ரவி ஆனந்தக் கூத்தாடினர் இதை உற்று நோக்கிய அவருடைய உறவினர் ஒருவர், கொஞ்சமும் அசூயை இல்லாமல் பிறர் உயர்வில் இவ்வளவு பாராட்டுதலை வெளிக்காட்டிய குழந்தையின் களங்கமில்லாத சுபாவத்தைக் கண்டு பாராட்டியே, எவ்விதப் பரிசுகளாலும் அளவிட முடியாத சிறுவனுடைய குணவிசேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டினர். கவி ரவீந்திரர் இச்சிறு சம்பவத்தை மறக்காமல் எழுதி வைத்திருக்கிருர். அவரிடமுள்ள கவிப் பண்புகள் எவ்வளவு உயர்ந்தவையானுலும், அவர் இருதயம் நினைந்து பெருமை அடைந்த விஷயம், அவரை அவர் உறவினர் இளம் வயசிலேயே பாராட்டுதலுக்காகக் கொண்டாடியதுதான்.

இன்று மகாத்மா காந்தி மேற்கொண்டிருக்கும் உண்மை - விரதம், சிறுவயசில் ஹரிச்சந்திர நாடகத்தைப் பார்த்து, மனத்தில் அதன் உயர்ந்த லட்சியத்தை பாராட்டியதன் பயனேயன்ருே ? உலகம் ஹரிச்சந்திரனைக் கேவலம் புராணத்தில் வரும் பாத்திரமாக மட்டும் போதிக்காமல், நிஜமான மகானுகக் கருதவும் தொடங்கிவிட்ட காரணம் மஹாத்மாவின் சரிதையினுல் அல்லவா ? மற்றவர்களைப் போல ஹரிச்சந்திர நாடகத்துக்காகக் கண்ணீரை மட்டும் தாராளமாக உதிர்த்துவிட்டு, உண்மையான பாராட்டு

தலைக் கொள்ளாத விதம் காந்தியடிகள் வீடு திரும்பியவர் அல்லர். "ஏன் ஹரிச்சந்திரனைப்போல் மற்றவர்களும் ஆகக்கூடாது?" என்று தம்மையே சதா இவர் கேட்டுக் கொண்டார். இவரை விடவும் அந்தக் கதையை ஒருவர் இருதய பூர்ணமாய் நம்பிப் பாராட்டவும் கூடுமோ?

மகாத்மாஜியைப் போன்றவர்களுக்கு மட்டுந்தான் பாராட்டுதல் சாத்தியமென்பதல்ல. சாமானிய ஜனங்களும் தங்களைச் சிறிது பரிசுத்தமாக்கிக் கொள்வதற்குப் பாராட்டுதலே முக்கியமான மூலிகை. அதிலும் கலையபிமானம், இலக்கிய ருசி முதலியவைகளை உடையவர்களுக்குப் பாராட்டிப் பேசும் மொழிகளே தாதில் தேனாக வந்து பாயும். நுனிநாக்கினாலும், மரியாதை வாசகமாகவும் பலர் முன்னிலையில் பாராட்டிச் சொல்வது ஒருபுறமிருக்க, அந்தரங்க சுத்தியுடன் சுபாவமான வேகத்துடன் வெளி வரும் பாராட்டுதலே கேட்டவர்கள் மூச்சில் புதிய சக்தியைப் பிறக்கச் செய்யும்.

சிலர், "எதற்காகப் பாராட்டை எதிர்பார்க்க வேண்டும்? குற்றங் குறைகளைப் பிறர் சொல்லாவிடில் அதைப் பாராட்டுதலாகக் கொள்ளலாகாதா?" என்று கவடு சூதில்லாமல் கேட்பார்கள். வாஸ்தவம். அவர்கள் கேள்வி பிறக்கும் இடம் இருதயமல்ல. உணர்ச்சிக்கும் அவர்களுக்கும் வெகு தூரம். அதேபோல்தான் இலக்கியம், கலை, கவிதை முதலியவைகளுக்கும், அவர்களுக்கும் நடுவே காதங்கள் உள்ளன. ஏனென்றால் கவியும் கலையும், ரஸிகர்களின் பாராட்டையே நம்பி வாழ்கின்றன. ஒரு சிறு பொற்கிரணம் பட்டதும் விகசிக்கும் தாமரையை ஒத்தது, ஓர் உண்மையான பாராட்டுதலின் கனிவைப் பெற்று மலரும்-கவி இருதயமும். தோஷங்களை ஆராய்ந்து கணக்கெடுக்கும் மூளைகளைக் கண்டு ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆயினும், பிறரிடம் எந்த விதமான உயர்வின் அம்சத்தையும் தேடிக் கண்டுபிடித்து மனமாரப் பாராட்டும் யோக்கியதை சாமானியமல்ல. அற்பனிடமும் வேண்டியதை அள்ளிக் கொடுப்பவனையே கொடையாளி என்று

உலகம் கூறும். பாராட்டாத வாழ்வைப் பாலைவன மாய்க் கருதும் நெஞ்சம், அவ்விதமே பாத்திரனைத் தேடி அலையும்.

பெரியவர் பெரியவராவதும் இவ்வரிய குணத்தாலே தான். மற்ற எல்லாப் பிரசாதங்களைக் காட்டிலும் அருளொடு பெருவரமாக மதிக்கப்படுவதும் இவ்வித இருதயப் பண்பு ஒன்றுதான். உலகனைத்தையுங்கூட ஒன்றாக நினைக்கவே வழி செய்யும் உயர் தத்துவமும் இதில் அடங்கியது என்று அறியவும் கூடும் பாராட்டும் பழக்கம் பிறவிக்குணமாயின், பிறந்த நாடென்றும் பிறக்காத நாடென்றுங்கூட அதற்கு வித்தியாசங்கள் தோன்றுமா?

## ஸத் ஸங்கம்

உலகம் இன்று உருத்தெரியாமல் புரண்டு கிடக்கின்றது. எங்கு பார்க்கினும் எவ்வளவோ வித மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன இன்னும் எவ்வகையில் மாறப்போகிறோமோ என்பதையே நினைத்து வியக்கும் தறுவாயில் தான், உலக மக்களும் காலம் கடத்துகிறார்கள். புதுமையின் மோகம் அறிவாளியையும் பிரமிக்கச் செய்து வருகிறது இன்று உண்டான காரணத்தினாலேயே சில விஷயங்கள் முன்னேற்றத்தின் சின்னங்களைப் பெற்றுள்ளனவாகச் சிலருக்குத் தோன்றுகின்றன. எங்கோ ஒரு இடத்தில் யாராவது ஒரு சிறந்த ஞானிமட்டும், 'கேவலம் காலத்தை மட்டும் அளவுகோலாகக் கொண்டு முன்னேற்றத்தை ருஜுப்படுத்துவது சரியன்று;வளர்ச்சிக்கு ஆதாரமாயுள்ளது உண்மை - அம்சம் பெற்றிருப்பது தான்' என்பதைப்போதிக்கின்றார்.மற்ற மாந்தர்கள் தங்கள் அலுவல்களில் சிக்கிக்கொண்டும், தீராத நோய்களுக்கு இரையாகியும், வேற்றுமைப் பிணிகளை விலைக்கு வாங்கியும் தவிக்கின்றனர் ஆனால் மொத்தத்தில் யாரைக் கேட்டாலும் வரவர எல்லாத் துறைகளிலும் விருத்தியின் அறிகுறிகளே தென்படுவதாக உரைப்பார்கள்.

கவனித்தால் ஒன்று தெளிவுபடும். உலகம் மாறி வருகிறது பொய்யன்று. ஆனால் முன்னேற்றம் அடைந்து வருகிறதா என்றால், உடனே அபிப்பிராய பேதங்கள் தோன்றத் தொடங்கிவிடும். ஒருசாரார், பண்டைக் காலம் தொட்டுச் சிற்றின்ப சுகங்களைப் பெருக்கும் முயற்சியை முன்னேற்றத்தின் சிறந்த விளைவாக நினைக்க மறுப்பார்கள். மற்றொரு இனத்தவர், இயற்கையின் தர்மமே வளர்ச்சியை நாடுவதாம் என்று விஞ்ஞான அறிவு முதலியவைகளைக் கொண்டு நிரூபித்துக் காட்ட முற்படுவார்கள். ஒரு புறம், கல்வியைப் பொருள் சேகரிக்கும் உபயோகத்திற்கே அர்ப்பணம் செய்வதை வாழ்க்கையின் இன்றியமையாத நெறியென்று கொண்டாடும் மனிதர்களையும் பார்க்கிறோம். மற்றொரு புறம் மனிதன் அடையும் கல்வித்திறனெல்லாம் இவ்வாழ்க்கையின் சிக்கல்களினின்றும் தன்னைக் கடத்தேற வைக்கவே பயனபட வேண்டும் என்று ஓதுவாரும் உண்டு.

மற்ற நாடுகளைக் காட்டிலும் புராதனப் பண்பா' டுடைய பாரத பூமியே மேலே குறித்த இரண்டாம் வகை-லட்சியத்தை வற்புறுத்தியுள்ளது. உயர்ந்த அறிவு யாதெனில்,இவ்வுலகை விட்டு என்றும் அகல்வது ஒன்றே, என்பது சான்றோர் அனுபவித்து நமக்கு உரைத்த உபதேசம். இப்பெரிய மரபில் தோன்றிய பலர், பல துறைப் பட்ட ஞானம் தம்மிடம் செழித்திருப்பினும், அறிவுக்கும் அறிவான அழிவற்ற தத்துவத்துடன் ஒன்றிய நிலையைப் பெரிதும் புகழ்ந்து பாடினர். புதிய உலக ஞானங்கள் ஏற்பட்ட பின்னரும், சிறந்தவர்கள் இப்பழைய அனுபவத்தின் நோக்கத்தையே வழிபட்டுப் பற்பல உயர்ந்த செயல்களில் ஈடுபட்டு, பற்றற்ற நிலையை மனத்தடத்தே எழுப்பிப் பிறவாமையையும் தம்பால் கவர்வதைக் கேட்டிருக்கின்றோம்.

ஆனால், மேலைநாட்டு நவநாகரிக வெள்ளம் கரைபுரண்டோடுகையில், கற்பாறை இங்கொன்றும் அங்கொன்றுமாய்ப் பிரவாகத்தை வழிமறித்துப் பிரயோஜனமென்ன ? சுவாமி விவேகாநந்தரைப் போலவும், மகாகவி ரவீந்திரநாதரைப் - போலவும், மகாத்மா காந்தி அடிகளைப்

போலவும், அழியாத தத்துவ ஞானிகளின் வரிசையை இந்நாடு பெற்றும், தடைப்பட்ட நீர்வீழ்ச்சி முன்னிலும் வேகத்துடன் கீழ்நோக்கி ஓடுவதை ஒப்ப, இவர்களுடைய உபதேசங்களை யெல்லாம் புறக்கணித்துவிட்டு, இந்திரிய சுகங்களுக்கு மிகவும் உதவியான நவ நாகரிகம் இந்நாட்டிலும் தடைகளை விலக்கிக் கொண்டு பெருகத் தொடங்குவதைக் காண்கின்றோம். விவேகாநந்தர் இறந்து வருஷங்கள் ஐம்பதாவதற்குள் அவருடைய நன்மொழிகளின் ஞாபகமே அற்றவர்களாய் நாம் ஆகிவிட்டோம். கவி ரவீந்திரர் நேற்று வரை நம் மத்தியில் கவிதை-வடிவில் அத்வைத சுகத்தைப் பொழிந்திருந்த போதிலும், 'நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்!' என்று கூறுவதை விட்டுச் சதா வேற்றுமைப் பேயைத் தழுவித் துன்பக் கனவு காண்கின்றோம். காந்தி மஹாத்மா இன்னும் உயிருடன் இருக்கிறார். நம் மத்தியில் இடைவிடாமல் தியாகத்தின் தீவிர விரதத்தை ஆசரித்துக் காட்டுகிறார். ஆனால் இப்பெரும் பாக்கியம் கிடைப்பதற்காகத் தவங் கிடப்பது போக, கிடைத்த பொருளையும் கைநழுவ விட்டுக் கொண்டிருக்கிறோம்.

இவ்வித இன்னல்களுக்கு மருந்து வேண்டுமே என்று ஏங்குபவர்களும் இருக்கிறார்கள். அவர்கள், இருளில் ஒளியின் கிரணத்தைத் தேடுபவர்கள் தாம். ஒளி ஒன்று உளதாயின், அது காரிருளிலும் கண்ணுக்குப் புலனுகும். சாவின் மத்தியில்தான் இறவாமை செழிக்கும். நிஜமற்ற வாழ்க்கையின் நடுவில்தான் சத்தியமும் தலைகாக்கும்.

'சொல்லில் மட்டும் அழகாய் இருந்தால் போதுமா? சொந்த அனுபவம் ஆகவேண்டாமா?' என்று யாவரும் கேட்க முன்வருவார்கள். ஆம், எதையும் ஊன்றி அறிய ஆசைப்படுகின்றவனே முழுவதையும் உணரத் தக்கவனுக ஆகிறான். 'நாம் ஒன்றை அடைய நம இருதயத்தை அதற்கு அர்ப்பணம் செய்தோமானல், தானுகவே அவ்வஸ்துவும் தன் இதயத்தைத் நமக்குத் திறந்து காட்டும்' என்பர் கவி டாகுர். இதில் எவ்வளவோ அருமையான கருத்து குடிகொண்டுள்ளது. நல்வழியைத் தேடப் பாடு

பட்டால் ஒரு நாள் அழிவற்ற நிலையை அடையவே வழி பிறக்கும். அதற்கு முதலில் நல்லாருடன் இணங்க வேண்டும். இதனையே ஸத் ஸங்கம் என்பர் நம் நாட்டில்.

ஸத்துக்கள் என்றால் பகுத்தறிவு படைத்தவர்கள், ரஸிகர்கள், உதார சீலர்கள் என்றெல்லாம் பொருள். காளிதாஸர் தம் யோக்கியதையைப் பரீட்சித்துப் பாராட்டச் சத்துக்களையே வேண்டினார். அவர்களே தம்முடைய நாடகமும் காவியமும் சிறந்த இலக்கியமெனக் கொள்ள வேண்டுமென்று அவர் விரும்பினார். இன்றுள்ளது போல், பத்திரிகையில் வெளியாகும் விமர்சனக்காரர்களின் மதிப்பில் அல்லவே உயர்ந்த கவிஞர் தமக்குக் கிடைக்க வேண்டிய பாராட்டை எதிர்பார்த்தார்! விளம்பரங்களால் மட்டுமே உலகத்தை வசமாக்கும் நம் புதிய நாகரிகச் சாதனங்கள் எங்கே? ஆத்மசக்தியின் கிரணங்களால் மட்டுமே பாதாளக் குகைகளையும் ஊடுருவிப் பாய்ந்து இருட்டை அகற்றிய பேரறிவு எங்கே? மேலை நாட்டில் பிறந்து பல ஆண்டுகள் வளர்ந்து, இந்தியப் பண்பாட்டின் திவலையைக் கூட ருசிக்காத ஜெர்மானியரான 'கேடே' போன்ற சிறந்த அறிவாளிகளும் காளிதாஸர் இயற்றிய சாகுந்தல நாடகத்தை அனுபவித்தார்கள் என்றால், இந்திய நாட்டுக் கவிதையின் வலிவு எவ்வளவு மேம்பட்டது என்று கூறிவிடலாம். ஆயிர ஆண்டுகள் நடுவே நின்று ஸத்துக்களைப் பிரித்த ஒரே சமயத்தில் ஒன்று கூடி வாழ வைத்ததை மெய்ப்பிக்க உதவுவது, கடல் கடந்த தேசங்களில் பிறந்தவர்களும், வெவ்வேறு பண்பாடு,மரபு முதலியனவற்றைப் பெற்றவர்களும், ஒன்றுபட்ட உள்ளங்களுடன் கற்பனை யுலகில் சஞ்சரித்த பெருமை. கவி டாகுரும் கேடேயின் 'பாஸ்ட்' என்ற அரிய நூலை நுகர்வதற்காகவே ஜெர்மானிய பாஷையைக் கற்ற வரலாறு மேலே குறித்த ஸத்ஸங்கத்தையே ருசுப்படுத்தும்.

'கவைக்கு உதவாத விஷயங்களாகவே சொல்லி என்ன லாபம்! இன்று ஸத்ஸங்கத்தை ஏற்படுத்த வழியைக் காட்டவேண்டாமா?' என்போருக்குப் பதிலும்

தவக்கமின்றித் தரலாம். அகங்காரத்தைத் தள்ளி அன்பு பூணும் ஆற்றலே சிறந்த ஸத் ஸங்கத்திற்கு ஒருவரைப் பாத்திரமாக்குகிறது. தம்மைப் பிறர் பாராட்ட வேண்டும் என்னும் அவா கிளம்புவதற்கு முன், தன்னை மறந்து பிறர் செய்யும் அரிய செயல்களை மனமாரப் புகழும் பழக்கம் நாளடைவில் சிறந்தவர்களைத் தம்பால் அணுக வைக்கும். சிந்தனையைக் கிளப்பி, அதன் வாயிலாக உண்மைகளை ஆராய்வதற்குதவி செய்வது ஸத்துக்களின் பரிசயமும் பழக்கமுமேயாம்.

வெளி வேஷமாகப் புன்சிரிப்பைக் காட்டி, சற்றும் நற்குணத்தை உள்ளே வாங்கிச் சொந்தமாக்கிக்கொள்ளாத இயல்பை, சமூக வாழ்க்கையின் சமரஸத்திற்கு இன்றியமையாத தருமமாக நினைக்கத் தலைப்பட்டுள்ளோம்! உள்ளக் கிளர்ச்சியையே நம்பி உவகையுடன் பிறர் சிந்தனையைக் கவரும் குணசாலிகளன்றோ என்றுமே நிலைகொள்ளக்கூடிய ஸத்துக்கள்!

பூமியைச் செம்மையாகப் பண்படுத்தும் உழவுத் தொழிலைப் போலுள்ளது ஸத்ஸங்கத்தின் உபயோகம். மண்ணையும் மலர வைக்கக்கூடியது வேறு எக்கருவியும் அல்ல. அவரவர் யோக்கியதைக்கு உவந்த உத்தமச் செயல்களைச் செய்ய எவ்வகைத் திறனும் பிறரிடமிருந்து வேண்டுவதில்லை. ஆனால் ஸத்ஸங்கமொன்றுமட்டும், புவியின்கண் சதா ஊற்றுப் பெருக்கெடுக்கும் வளமையின் உயிரோட்டம் போல், அணுகியவரையெல்லாம் மனஞ் செழிக்கச் செய்யும்.

ஸத்ஸங்கம் பெற்றவனுக்கே உலக வாழ்க்கையில் சுய பலத்தினால் பிறவாமையையும் அடையச் சக்தி ஏற்படுகிறது. ஈசுவரனுடைய படைப்பில் மற்ற ஜீவராசிகள் மனிதனைவிடக்கூடச் சுலபமாய் இன்பம் பெறக்கூடிய சக்திகளைப் பெற்றிருப்பினும், மனிதனைப்போல் பேரின்ப சுகத்துக்கு வழி செய்து கொள்ள முடியாமல் இருக்கின்றன. இவ்வித உயர்ந்த சிந்தனைக் கருவியைத் தன்னிடம் வைத்துக்கொண்டிருக்கும் மனிதனுக்கு ஸத்ஸங்கமும் ஏற்பட்டால், அவன் செய்தற்கரிய காரியமும் உண்டோ?

டாகுரின் ஒரு பாட்டைக் கவனிப்போம். ஈசனைப் பார்த்து ஒரு பக்தன் சொல்லுவதாகவே கருத்து பாட்டில் அமைந்துள்ளது. மிகவும் கவர்ச்சியுடன் உருவாகி யிருக்கிறது உள்ளடங்கிய விஷயம்.

"புள்ளினங்களுக்கு இனிய கீதங்களைத் தந்துள்ளாய; அவை இன்னிசைகளைத் தருகின்றன.

எனக்கு நீ அளித்திருப்பது குரல் ஒன்று மட்டுமே. ஆயினும், நீ என்னிடமிருந்து வேண்டுவது அதைவிட அதிகமே. ஆகையால் சங்கீதத்தைத் தொடங்குகிறேன்.

காற்றை லேசாகச் செய்த பெருமை உனக்கே உரியது. அக்காரணமே அதுவும் பணி செய்வதில் மிகவும் உத்ஸாக மும் வேகமும் கொண்டுள்ளது.

ஆனால், என் கைகளைச் சுமை தாங்கவே செயதிருக் கிருய். என் சுயமுயற்சியால் எனது கைகளை அழுத்தும் கனத்தைக் குறைத்துக்கொண்டு, உன் திருப்பணியில் ஈடுபடவேண்டியே என்னை ஏவுகிருய்.

இவ்வுலகனைத்தையும் படைதது, நிழல்களின் இடையே தொடர்ந்து ஒளியை ஆங்காங்கே சிதறுண்டு கிடக்கவே செயதுள்ளாய.

அவ்வளவுடன் அவ்வேலையை நிறுத்திக்கொண்டாய. என்னை மட்டும் என்றுமே வறுமையில் வாட வைத்து உனக்கு வசிக்கத் தகுதியான விண்ணையும் மண்ணில் சிருஷடிக்கவே உத்தரவு இடுகிருய.

மற்ற ஜீவராசிகளுக்கெல்லாம் வேண்டியதை அள்ளி வழங்குவாய. என்னிடமிருந்து மட்டும் சதா உனக்கு வேண்டியதை விரும்புவாய்.

அறுவடைக்காலம் நெருங்குகையில், விதைத்ததற்கு அதிகமே என்னிடமிருந்து அறுவடை செயய விரும்பு வாய், ஏ செம்பொன் மணியே!"*

---

* பழக்குவியல் (Fruit Gathering) 78-ம் பாட்டு மாக் மில்லன் பதிப்பு.

இது ஓர் அருமையான பாட்டு என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். முதலில், பறவைகளின் பாட்டை டாகுர் ஈசனுடைய சொந்த சாதித்தியமாகக் குறிக்கின்றார். ஆனால் மனிதன் வரையில், அவனுடைய சொந்த யோக்கியதையைக் கொண்டே சங்கீதத்தை உருவாக்க வேண்டிய நிலைமையில் அவன் இருப்பதை உணர்த்துகிறார்.

சற்றுக் கருத்தை உயர்த்துகிறது பாட்டின் அடுத்த அடியின் தாத்பரியம். அதாவது, காற்றை லேசாகப் படைத்த காரணமே அது உபயோகமான பணியைச் சீக்கிரம் செய்கிறதாம். மனிதனும் தியாகத்தை மேற்கொண்டு தன் கைகளைச் சுமைபோல் அழுத்தும் பொருளையெல்லாம் பிறருக்குக் கொடுத்துதவினால், செயதற்கரிய தொண்டுகளை யெல்லாம் கவலையின்றி ஆற்றலாம் என்பது உள் அபிப்பிராயம்.

பாட்டின் மூன்றாவது அடி இன்னும் மேலே தூக்குகிறது கருத்தை. உலகை ஈசன் சந்தோஷமும் துக்கமும் உள்ளதாய்ப் படைத்திருக்கிறான். ஆனால் மனிதனை மட்டும் தாம் வந்து நிலைக்கத் தகுந்த ஒரு சொர்க்கத்தை இம் மண்ணில் எழுப்பக் கோருகிறார். அவ்வித சொர்க்கம் பற்றற்ற நிலையைத்தான் குறிக்கிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? மற்ற எவ்வித பந்தமும் மனத்தை நிம்மதி பெறவைக்காது. சாந்தி நிலை ஒன்றே யாவரும் தேடக்கூடிய அழியாச் சுகம்.

கடைசி அடியில், நம் நாட்டின் பெரும் பண்பாட்டை ஞாபகப்படுத்தும் உயர்ந்த கருத்தையே வைத்திருக்கிறார். அதாவது, பிறவியை ஈசன் தருகிறான் நமக்கு. ஆனால் பிறவாமை என்னும் உயர்நிலையை மனிதன் தன் சொந்த முயற்சியினாலேயே அடையக்கூடும். மிக்க அழகான தொனியுடன் கூடிய மொழிகள் தாம், விதைத்ததற்கும் அதிகமாகவே அறுவடைக்காலத்தில் நம்மிடம் எதிர் பார்க்கிறார் ஈசன் என்பவை.

ஜீவனுக்கு முக்தியை அளிக்கும் மூலஸ்தானம் ஸத் ஸங்கமென்றால்கூட மிகை ஆகாது. ஏனெனில், மனிதன்

ஒருவனால் மட்டுமே ஸத்ஸங்கம் செய்யமுடியும். ஸத்ஸங்கமே ஆத்ம ஞானமென்னும் விளையும் பயிருக்கு உரிய பண்பட்ட நிலமாகிறது. அதுவே, உணவுப் பொருளாகவும், உயிர் நிலையாகவும், இதய வளர்ச்சி மலராகவும், முதிர்ந்த ஞானக் கனியாகவும் நாளடைவில் தோன்றுகின்றது. இதனையே நாமும் இன்று தேடித் திரிவோமாக!

# நாகரிகமும் நாமும்

பிஞ்ஞகன் தன் கூத்தை வருணிக்கும் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நடனமாடினார் வெகு நாகரிகமாகவே கனக சபையில்' என்று பாடினார். அவ்விடத்தில் 'நாகரிகமாகவே என்ற சொல் குறிப்பது எதனை என்ற கேள்வி கவனிப்போர் உள்ளங்களில் ஞாயமாய எழலாம் சிவபிரான் அப்பியசித்த நர்த்தன வகை 108 என்பர் நாட்டியக் கலை விற்பன்னர். பயங்கரமான ஊர்த்வ தாண்டவம் முதலியவைகளையும் பரமனார் பயின்றிருக்கிறார். அண்டங்கள் கிடுகிடுக்கக் குதித்திருக்கிறார். அக்காரணமே போலும் பொற்சபையில் ஆடும்பொழுது தேவர்களும் மனிதர்களும் பார்த்துப் பரமானந்தம் அடையக்கூடிய ரீதியில் குஞ்சிதபாதத்தைத் தூக்கிச் செஞ்சிலம்பசைய நர்த்தனம் செய்திருக்கவேண்டும். நாகரிகமாய் ஆடினார் என்பதன் பொருள் அதுவாகவே இருக்கலாம்.

மற்றச் சமயங்களில் கேவலம் காட்டுமிராண்டியைப் போல் தலைவிரி கோலமாய் லயசுத்தமில்லாமலேயே ஆடியதாக வைத்து, நாகரிகமாய்' என்று குறிப்பதன மூலம் 'அவலட்சணங்களில்லாமல்' என்பதாய்க் கொள்வது சரியல்ல. ஒருகால் ஆனந்தத்தாண்டவத்தின் உட்கருத்தை மறை பொருளாக வைத்துக் கலைத்தத்துவ திருஷ்டியில் ஆடினார் என்பதே இவ்விடத்தில் 'பொருத்தமான விளக்கமாகலாம். ஏனெனில் பிரம்மாவின் இரவில் இயற்கை சலனமற்று நின்றிருப்பதைச் சிவனார் தமது தாண்டவத்தினால் கிளப்பிச் சைதன்யம் பெறச்செய்கிறார்.

உடனே ஜடமாய் நின்றவைகளெல்லாம் உயிர்பெற்று எங்குப் பார்க்கினும் அணுவும் பரமாணுவாய் அப்பெரும் லயத்தில் கலக்கின்றன. இவ்விதமாடிய கடவுள் பிரகிருதியைத் தாங்கி நிற்கின்றார் என்பது ஒரு ரகசியம். இதனை அறிவார் பிரம்ம சாக்ஷாத்காரம் பெற்ற ஞானிகள். ஆனால் அறிவுக்கண் படைக்காத மூவாயிரம் தில்லைத் தீக்ஷிதர்கள் முன்னிலையில் ஆடுவதாயின் அழகிய வடிவில் தோன்றியே நடராஜன் சித்சபையில் ஆடி இருப்பது சாத்தியம். அவ்விதத் தோற்றத்தையே 'நாகரிகமாய்' என்ற சொல்லினால் புரிய வைக்கின்றார் போலும் பாரதியார். இதயரங்கத்தில் ஆடும் ஜோதி வடிவே பொன்னம்பலத்தில் நடராஜமூர்த்தியாய் ஆடுவதாக ஐதிகம் அல்லவா ?

இதிலிருந்து நாகரிகத்தின் தன்மை, ஒன்றை நேருக்கு நேர் தோன்றவைக்காமல் மறைத்துக் காட்டுவதெனக் கொள்ள இடமுண்டாகிறது. காளிதாஸன் சாகுந்தல நாடகத்தில் ஒரு அழகிய சம்பவத்தை அமைத்துள்ளான். ஹம்ஸபதிகை என்னும் அந்தப்புரத்துப் பெண் ஒருத்தி துஷ்யந்தனைக் காதலித்து நீடித்து அவனுடன் சுகம் பெறாத குறையைப் பாட்டொன்றால் தெரிவிக்கின்றாள். "புதிய தேனை விரும்பும் ஏ வண்டே! தாமரை மலரில் குடி யிருப்பதால் மாம்பூவை நுகர்ந்ததை மறந்தனையா ?" என்று பாட்டின் பொருள் துலங்குகிறது. அரசனே அப் பாட்டைக்கேட்டு அதன் உட்கருத்தை அறிந்து, தான் வஸுமதி என்ற அரசியுடன் சதா இருப்பதால் ஹம்ஸபதிகையை அறவே மறந்ததை நினைந்து கடிந்து சொன்ன மொழிகளாகவே அவைகளை உணர்கிறான். மேலும் தன் சகாவான மாடவ்யனிடம் பாட்டின் தாத்பரியத்தை விளக்கி, 'போய், நான் அவள் கோபத்தைஅறிந்ததாக அவளிடம் சொல்லிவா. ஆனால் நாகரிக விருத்தியினால் தெரிவி' என்பான் அரசன். நாகரிக விருத்தி என்பது அவ்விடத்தில் பட்டவர்த்தனமாய்ச் சொல்லாமல் விஷயத்தைமட்டும் அறியுமாறு நாசுக்காய்ச் சொல்வது என்று ஏற்படுகிறது. பட்டணத்தில், அதிலும், அரண்மனையில்

சேவகம் செய்பவர்களின் நாசுக்கான பேச்சுக்குக் கேட்பானேன்!

'நகர' என்ற பதத்திலிருந்தே 'நாகரிக' என்ற சொல்லும் உண்டாகி இருக்கவேண்டும். பட்டணவாசியின் இயல்பில் காணும் விசேஷங்களே நாகரிகத்தின் அறிகுறிகளெனத் தோன்றவும் தொடங்கி யிருக்கவேண்டும். நகரசம்பந்தமான பழக்கங்களில் தென்படுபவை நாகரிகமாயின், அவை உண்மையில் சிறந்தவையா என்ற விஷயத்தையும் நிர்ணயிக்கவேண்டிவரும். ஆகையால் இக் கருத்தை இன்னும் சற்றுக்கூர்ந்து கவனிப்போம்

ஒரு காலத்தில் காட்டுப் பிரதேசங்களில் சஞ்சரித்த மனிதர்களே பிற்பாடு பட்டணங்களை நிர்மாணித்து, அவ் விடத்து வாழ்க்கைக்கு உகந்த புதிய கருத்துக்களைப் பழக்கத்தில் கொண்டு வந்திருக்கவேண்டுமென்பது தற்காலச் சரித்திர ஆராயச்சியாளர்களின் ஓர் ஊகம். எக்காலம் தொட்டுப் பட்டணம் உயர்ந்தது,பட்டிக்காடு மட்டமானது என்ற வித்தியாசங்கள் உண்டாயின என்பவை ஒருகால் சரித்திர நூலாசிரியர்களுக்கே தெரியாதிருந்திருக்கலாம்• நமக்குத் தெரிந்த அளவில் நம்முடைய நாட்டிற்கும், பிற நாடுகளுக்கும், நாகரிகத்தில் வித்தியாசம் இருந்தே வந்திருக்கிறது. ஒன்றுமட்டும் நிச்சயம். சரித்திர ஆராய்ச்சி கண்டுபிடித்துள்ள காட்டுமிறுண்டி நிலை நம்மக்களுக்கும் இருந்ததாயுள்ள வரலாறுகள் எவ்வளவு தேடியும் அகப்படவில்லை. பரிணும ரீதியில் மாக்கடத்திலிருந்தே மனிதன் முளைத்ததாக மேலைநாட்டு அறிவாளிகள் தீர்மானம் செயதுள்ளார்கள். மேலும் முதலில் காட்டுமிறுண்டியாக அலைந்து திரிந்த மனிதனே காலக்கிரமத்தில் உடையால் உடலை மூடி, சமையல் செயத உணவைக்கொணடு தேகம் வளர்த்து, நாகரிகப் பட்டத்தை அடைந்ததாக அவர்கள் குறிப்பார்கள். நம்மவர்களோவெனில், என்றும் உலகம் இவவிதமே இருந்ததாகவும், ஏற்றத் தாழ்வுகளும் உயர்வு இழிவுகளும் இப்படியேதான் எக்காலத்திலும் உள்ளதாகவும் கூறுவார்கள். பட்டணவாசத்தை மிகவும் குறைவாகவும் விலக்கி

யுள்ளார்கள், நம்முடைய புராதன நாகரிகத்தில் தோய்ந்தவர்கள். இல்லாவிட்டால் காளிதாஸன் துஷ்யந்த ராஜனுடைய நகரத்தைக் கண்ட ரிஷிகுமாரன் வாயில் வெறுப்பைக் கக்கும் மொழிகளைப் புகுத்தி யிருப்பானா? "நீராடியவன் தலை முழுகாதவனைப் பார்ப்பதுபோலும், தூய்மையுள்ளவன் அழுக்கு மிகுந்தவனைக் காண்பது போலும், விழித்தவன் முன்னால் தூங்குமூஞ்சி எதிர்ப்பட்டதுபோலும், விடுதலை அடைந்தவன் தளைகளை அறுக்கெரியாதவனை நோக்கிப் பரிதபிப்பது போலும்" என்றல்லவா அரசனுடைய பிரதானப் பட்டணத்தைப் பார்த்து சாரத்வதன் பகர்கிறான்? மேலும் அரசனோ ஏனைமாய்ப் பெண்களுக்கு உரிய வஞ்சகங்களைச் சகுந்தலை வெளிப்படுத்தியதாகக் கூறவும், கௌதமி சொல்லும் பதிலில், பிறந்தது முதல் காட்டில் வளர்ந்த சகுந்தலைக்குப் பொய் புனைவதே தெரியாது என்று குத்திக் காட்டுகிறாள். நகரத்தைச் சார்ந்தவைகளிடம் மட்டுமே நய வஞ்சகங்கள் நிறைந்திருக்கும் என்பது அம் மகாகவியின் கருத்துப்போலும்.

அதுபோகட்டும்; பார்த்தால், நகர வாசிகளே கிராமவாசிகளைக் காட்டிலும் பகட்டான வாழ்க்கை நடத்துவதை ஒப்பவேண்டித் தோன்றும். நகர வாசியான மனிதனுக்குச் சௌகரியங்கள் வளர வளரச் சுக வாழ்க்கைப் பற்றுதல்கள் அதிகரிக்கின்றன. போகங்களைப் பெருக்குவதிலிருந்து பட்டணத்தானுல் சொந்த ஞாபகத்தைத் தவிர வேறு ஒன்றையும் நினைக்க இயலுவதில்லை. நகரங்களில் காணப்படும் பற்பல விநோதங்களில் ஆசையைக் காட்டாத இருதயங்களும் இரா. இக்காரணங்களாலே போலும் ஒரு காலத்தில் நம் நாட்டு வேந்தர்களும் வயசு காலத்தில் நகர வாழ்க்கையை ஒழித்து, அரண்யங்களை அடைந்து நற்கதி பெறும் மார்க்கங்களைக் கடைப்பிடித்தனர்.

ஆம், உடல் விரும்பும் சுகங்களையெல்லாம் பெருக்கினுல் மட்டும் போதுமா? உள்ளம் நாடுவதையுமல்லவா கவனிக்கவேண்டும்? புறத்தில் நாகரிகத்தின் சின்னங்கள்

நிறைய இருப்பினும் போதா. அகத்திலும் சரியானதொரு அறிவு வளர்ச்சியை விரும்புவர் பேரறிஞர். ஆனால் மனத்தில் உள்ளதுதானே வெளியிலும் காணப்படும்; நாகரிகத்தின் மேல் விருப்பம் விழுவதற்கும் சிறிதாகிலும் உள்ளக் கிளர்ச்சி யில்லாமல் இருப்பது சாத்தியமா? இவைபோன்ற சந்தேகங்களும் நம்மைப் பாதிக்கும்

ஆயினும் ஊன்றி நோக்குமிடத்து, இவ்விஷயத்தில் தான் முரண்பாடுகளை அதிகம் காண்கிறோம். வீடு, வாசல், உடை, உணவு, வாகனங்கள போன்ற நாகரிகத்தின் அடிப்படையான சௌகரியங்களில் திளைக்கும் மனிதனிடமே வேண்டியதற்கு மேற்பட்ட ஆசைகளையும், பிறருக்குக் கொடாத லோபித்தனத்தையும் பார்க்கிறோம். உணவின்றி, உடையின்றி, தங்க இடமின்றி வருந்தும் மாந்தர்களிடம் சற்றேனும் ஈவு இரக்கமின்றி நடந்து கொள்ளும் நாகரிகப் பட்டமடைந்த பட்டணப் பிரமுகர்களே எங்குப் பார்க்கினும் அதிகம். அதுவும் தொழிற்சாலைகளை வைத்துப் பொருளை உண்டாக்கும் பணச்செருக்குப் படைத்த முதலாளிகளின் அந்தஸ்திற்கும், ஆயிரக்கணக்காயச் சாலைகளில் வேலைசெயயும் தொழிலாளர்களின் கதிக்கும் அஜகஜாந்தரமிருப்பதைப் பார்க்கிறோம். பொருள்களை உண்டாக்குவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றான தொழிலாளிகளின் உழைப்பைத் தங்களுக்கு வரும் லாபததில் ஒரு பங்கு கொடுத்து அல்லவா முதலாளிகள் கௌரவிப்பது முறையாகும்? மேலும் அவ்விதம் செய்யாவிட்டால் பிறர் சொத்தைக் கொள்ளை அடிப்பதாயும் கருதவேண்டுமல்லவா? அநாகரிகமும் அதுவேயன்றோ?

விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட ஏறபட, நாம் வசிக்கும் நாட்களை எந்திரயுகம் என்றுகூட கூறத் தோன்றுகிறது. சார்லி சாப்லின் என்ற சிறந்த நடிகர் இந்த எந்திர சகாப்தம் செய்யும் கெடுதல்களைப்புகட்டவே புதியதொரு படம் தயாரித்துச் சில வருஷங்களுக்குமுன் உலகத்தைச் சிரிக்க அடித்தார். உணவு கொள்வதில்கூட மனிதன் கரங்களுக்குப் பதிலாக எந்திரம் ஒன்று அவ்வேலையைச் செய்வதாகப்

படத்தில் சம்பவமொன்று காண்பித்தது. மனிதனை உணர்ச்சியற்ற எந்திரம்போல் வெகு சீக்கிரம் மாறக் கூடும் என்பதையும் அப்படம் உணர்த்தியது. தேக வலிவுக்கும் மனத்தின் ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிக்கும் புதிய புதிய எந்திரக் கருவிகள் ஒவ்வொருநாளும் சிருஷ்டி செய்யப்படுவதைக் கவனித்தும், இன்றுள்ள உயர்ந்த நாகரிகத்தைப் பற்றிப் புகழாதார் இல்லையே!

காரணம் என்ன என்று விசாரிக்கப்புகும் மனத்திற்கு இவைகளினுள் அடங்கிய ரகசியமொன்று விளங்கத் தான் செய்கிறது. அதுதான் வெளித்தோற்றம் எனப் படுவது. வடமொழியில் 'லோக' அல்லது உலகம் என்ற சொல் உற்பத்தியான தாது 'லோக்' என்பதே. 'லோக்' என்பதன் பொருள் 'தோற்றம்' என்று அறியும் பொழுதுதான், இவ்வுலகம் ஒருதோற்றமே என்பதும், இதைத் தாண்டிப் பார்க்கின் பெரிய தத்துவம் ஒன்று இருக்கவல்லது என்பதும் விளங்கும் தத்துவங்களை ஆராய்ந்தறிந்ததின் பயனாகவே வடமொழியில் பதங்களை உண்டாக்கியவர்கள் ஆதியில் அர்த்தம் புதைந்த சொற்களைப் பாஷையில் சேர்த்திருக்கிறார்கள். உயர்ந்த நாகரிகத்தை மெய்ப்பிப்பது பாஷையின் உயர்வுமல்லவா? ஆகையால் எல்லாவற்றிற்கும் உள்ளே நிலையுள்ள வஸ்து ஒன்று இருக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. அதனைத் தேட வழியில்லாமல் செய்யும் காரியங்களே வாழ்க்கைச் சுழலில் நம்மை ஆட்கொள்ளுகின்றன. நாமும் சகஜமாய் மேலே காணப்படும் தோற்றங்களையே நிலைக்கக்கூடிய விஷயங்களாகக் கருதித் திருப்தி பெறுகிறோம். ஆனால் என்றுமே பேராசிரியர்கள் மேலெழுந்தவாரியானவைகளைத் தள்ளி உள்ளே மறைந்துள்ள உண்மையையே எடுத்து நம்மிடம் போதிப்பார்கள். ஆங்கில ஆசிரியர் ஒருவர் சாதுரியமாய் இதனையே 'என் மனைவி நீடித்து உபயோகிக்கத் தகுந்த மண ஆடையை எவ்விதம் பொறுக்கினளோ, அவ்வாறே நானும் வெளிப்பார்வைக்குப் பகட்டாய்ப் படாவிடினும், இல்லற வாழ்க்கைக்கு நன்கு பயன் படக் கூடிய ஒருத்தியையே வரித்தேன்' என்பவைபோன்ற பொருள் பொருந்திய வாக்கியங்களை எழுதியுள்ளார்.

இத்தகைய கருத்தையே ஒவ்வொரு துறையிலும், லட்சியமாய் நம்மவர்கள் வைத்திருந்தார்கள். உடலை வளர்த்ததன் முக்கியக் குறிகூட அழிவில்லாச் சுகத்தை அடையச் சாதனங்களில் ஒன்றாக அதனைப் பாவித்ததே யாம். ஆகவே நாகரிகமென்றதும் உடை உடுப்பது, உணவு கொள்வது தொடங்கி எல்லாவிதச் செயல்களி லும் ஒரே லட்சியத்தை முன்னிட்டு நம் தேசத்தில் ஒழுங் குடன் ஆசாரங்களை வகுத்திருப்பது வெட்ட வெளிச்ச மாகும். இன்று மாறியிருக்கும் வாழ்க்கை லக்ஷியங்களை நினைக்கையில், அவைகளெல்லாம் அர்த்தமற்றவை, அநாகரிகமானவை என்று தோன்றுவதில் ஆச்சரியமில்லை.

இன்றைய நாகரிகம் எவ்வளவோ வகையில் மேம்பட் டிருப்பதாக அல்லவா நம் செவிகள் செவிடுபடும்படி ஒலி பரப்பிகள் அலறுகின்றன? ஆம் ஊன்றிப் பாராதவர்கள் எதையும் சட்டென ஒப்பத்தான் செயவாரகள். உதாரண மாய், உலகில் ஒரு கொள்கை உலவி வருவது எல்லோரும் அறிந்ததே. அதாவது, சமயப்பற்று ஏற்பட்டபின்பே காட்டுமிராண்டி மனிதன் பழிபாவங்களுக்கு அஞ்சுவதை யும், மனச்சாட்சி வடிவில் காணும் கடவுளைச் சதா வழிபடு வதையும், மேற்கொள்ளுகிறான் என்பதாம். ஆனால் இச் சமயப்பற்றே நாகரிகம் அதிகம் ஏறிய மனிதனைக்கூட மதச் சண்டைகளில் இழுத்து, நாகரிகமற்றவனைப்போல் அடாத செயல்களைச் செய்ய வைப்பதையும் நாம் காண வில்லையா? நாகரிகம் மனிதனைச் சீர்பெற வைப்பதாயின் முன்னேறிய ஒருவனிடம இவ்விதக் கீழ்ப்பட்ட காரி யங்கள் ஏன் வெளியாக வேண்டும்?

உண்மையான நாகரிகம் இருதயத்தில் குடிகொண்டி ருந்தால் மட்டுமே பணமும், செல்வாக்கும் ஒருவனை ஒன் றும் செய்யா. அகத்தில் வளர்க்கப்படும் பண்பாடே உலகனைத்தையும் ஒன்றாய் நினைக்கும் நாகரிகச் சின்ன மாக வெளியாகும். மற்றப்படி எத்தனையோ வகை ஜன சமூகங்கள் நிறைந்த இப்பெரிய அண்டத்தில், பல்வேறு பாஷைகளும் பழக்க வழக்கங்களும் மக்களை வெவ்வே றாகத் தோற்றவைக்கும் இப்பூவுலகில், வர்ண வித்தி

யாசங்களே சம உரிமைகளுக்குத் தடையாக மக்களைக் கீழ் வகுப்பினர், மேல் வகுப்பினர் என்ற பாகுபாடுகளில் ஏமாறவைக்கும் இப்புவனத்தில், எப்படியோ சிற்சில உண்மை அபிப்பிராயங்களாவது ஒரேவிதமாய் எல்லோரையும் ஆட்கொண்டிருப்பதுதான் பெருத்த ஆச்சரியம். மனவிகாசம் உள்ள இடத்தில் நாகரிக மணம் கமழ்வதை இன்று அறியாரும் உளரோ? எல்லாரும் ஓர் இனம், எல்லாம் ஓர் உயிர் என்ற அறிவின் தெளிவே நாகரிக மகுடத்தின் நடுநாயகமாய்ப் பிரகாசிக்கும் வைரக்கல்.

ஆகையால் ஒன்று சொல்லக்கூடும். அன்றைய நாகரிகம் இன்றைய நாகரிகம் என்று பிரித்துச் சொல்லுகிறவர்கள், கீழேயுள்ள ஆழமான ஜலராசியை மறந்து, மேலே காணும் கடலலைகளின் கொந்தளிப்பையே அதன் உண்மைத் தன்மையாகக் கூறுபவர்கள் ஆவார்கள். இயற்கையின் சீதோஷ்ண ஸ்திதியினாலும், வேறுபட்ட சரித்திர ஆரம்பங்களினாலும், உலகில் தோன்றிய யாவரும் ஒரே விதப் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளாதிருப்பதை நாகரிக ஏற்றத்தாழ்வுகளென்று பொதுப்படையாகக் கூறுவது சரியல்ல. தென் ஆப்பிரிக்காவில் குடியேறிய இந்தியர்களுக்குச் சம உரிமைப் பாத்தியதை அளிக்கப்படாததன் காரணங்களை எடுத்துரைக்கையில், ஒருவர், மேலை நாட்டு வாழ்க்கைத்தரங்களைப் பெருத காரணமே நம்மை அங்குள்ள அரசாட்சி செயபவர்கள் சரிசமமாக நினைக்க மறுக்கின்றனர் என்று சொன்னார். அதைக் கேட்டிருந்த விஷமக்காரர் ஒருவர், 'மேலை நாட்டு வாழ்க்கைத் தரங்கள் என்றால் புரியவில்லையே?' என்று கேள்வி போட்டார். உடனே முதலில் பேசியவர் சற்றுச் சினம் கொண்டு 'ஐயா, இதோ பாரும், தொடைவரையில் துணியை ஒதுக்கிக்கொண்டு உட்கார்ந்து வாசல் திண்ணைகளில் வம்படிக்கின்றனரே உங்கள் நாட்டில், அதை வெள்ளையர்கள் ஒருகாலும் வாழ்க்கைத்தரம் பெற்ற செயலாகக் கருதார்கள்; புரிந்ததா?' என்று சூடாய்ப் பதில் கொடுத்தார். அதற்குப் பதிலும் பின்வருமாறு அந்த அதிகப் பிரசங்கியிடமிருந்து கிளம்பியது: 'ஓகோ இதுதானா? இப்பொழுது நன்கு

விளங்குகிறது. நம் ஊர்க் கடற்கரை அருகில், ஜனங்கள் நடமாடும் பாதை சமீபத்தில், வண்டிகளில் உட்கார்ந்து, தோள் பட்டையிலிருந்து கை நுனி வரையில் உடம்பை உடையால் சற்றும் மூடாமல், போதாதற்கு அக்கைகளை யும் மேலே தூக்கி விடுகிறார்களே வெள்ளையர்கள், அந்தச்செய்கை தான் வாழ்க்கைத்தரத்தை ருசுப்படுத்து வதாக்கும், எனக்கு இது தெரியாமற் போயிற்றே இத்தனை நாள்!'

பெரியவர்கள் இருவரும் மறந்தது எதுவென்றால், மேற் கூறியவைபோன்ற பழக்கங்கள் நாகரிகத்தைக் குறைக்கவோ அல்லது மேம்படுத்தவோ உள்ள அத்தாட்சி கள் ஆகா என்பதாம். தினம் ஸ்நானம் செய்பவனுக்கு வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறையே குளிப் பவர்களைக் கண்டால் 'சுத்த அநாகரிகம்' என்று படு கிறது. அதேபோல் ஏதாவது சிறிது உதவியைப் பெற்றாலும் ஒரு 'தாங்க்ஸ்' சொல்லாவிட்டால் 'என்ன அநாகரிகம்!' என்று வியக்கும் மனிதர்களும் இருக் கிறார்கள். இவைகள் தாமா உண்மையில் நாகரிகத்தைப் பிறருக்கு எடுத்துக் காட்டுகின்றன என்றால், இல்லை என்று உடனே பதிலும் சொல்லிவிடலாம் எவனொருவன் விரும்பக்கூடியதை வேண்டாமெனத் தள்ளத் துணிகின் றானோ, அவனே நாகரிகத்தின் சிகரத்தை எட்டிப் பிடித் துள்ளான். எந்தத் தேசத்தில் ஜனங்கள் ஆசையை யொழிக்கும் அறிவைத் தருமமாக நினைக்கின்றனரோ அவர்களே உலகில் நாகரிகம் என்ற பட்டத்திற்கு உரியவர்.

மகாகவி ரவீந்திரர் இதனை மெய்ப்பிக்கும் வரலாறு ஒன்றை ஞாபகப்படுத்தி யிருக்கிறார். ஒரு சமயம் கல் கத்தாவைவிட்டு வெகுதூரம் கிராமாந்தரங்களில் சுற்றி வரச் சில நண்பர்களுடன் மோட்டார் ஒன்றில் அவர் பிர யாணமானார். நல்ல கோடைக்காலம். சரியான பொட்டல் பிரதேசத்தில் அதிகச் சூடு தாங்காமல் மோட்டார் யந்திரம் நின்றது. உடனே தண்ணீரின் தேவை ஏற் பட்டது. எங்குப் பார்க்கினும் ஜலத்தின் இருப்பிடமே தெரியவில்லை. அச்சங்கடத்தில் ஒரு கிராமவாசி அவ்

வழியே வந்தவன், அவர்களுக்குத் தன்னால் செய்யக் கூடிய உதவி தண்ணீர் தருவது என்றறிந்து ஓடோடியும் சென்று எங்கிருந்தோ ஜலம் கொண்டு வந்தான். ஜலம் அகப்பட்ட ஆனந்தத்தில் வண்டியிலுள்ளவர்களில் ஒருவர் அந்த ஆளிடம் சில்லறைக் காசை நீட்டினார். அவன் அதை வாங்க மறுத்தான். மறுபடியும் அவர்கள் அவனை வற்புறுத்த, அவன் பின்வருமாறு சொல்லி அவ்விடம் விட்டு நகர்ந்தான் :—' ஐயன்மார்களே! தண்ணிக்குக் கிரயம் வாங்கினால் பாவமாச்சே! நீங்கள் கொடுப்பது தருமமா?'

வாஸ்தவத்தில் பொருளாதார சாஸ்திரப்படி யோசிக்கையில் தண்ணீர் இல்லாத இடத்தில் விலைக்கு ஜலம் விற்பது தவறல்ல. அமெரிக்கா முதலிய தேசங்களாயின் இம்மாதிரி சந்தர்ப்பத்தில் பணம் பண்ணத் தெரியாதவனை முழு முட்டாள் என்றே கருதவும் செய்வார்கள். ஆனால் நம்முள்ளே ஏதோ ஒன்று இடைவிடாமல் கூவுகின்றது ' 'ஆசை ஏற்படக்கூடிய சமயத்தில் எவன் ஒன்றை வேண்டாமெனத் தள்ளி, தள்ளுவதையும் தருமமெனக் கருதுகிறானோ அவனே பெரியவன்'. குக்கிராமவாசிக்கு உள்ள நாகரிகம் பட்டணத்தில் படாடோப வாழ்க்கை நடத்துகிறவர்களிடம் இல்லைதான். பின் எதற்காக நாகரிகம் என்று பெயருக்கும் நகரத்திற்கும் சம்பந்தமோ. ஈசுவரனுக்குத்தான் வெளிச்சம்.

## நாேேனாடு உடன் பிறந்தவள்

கவி ரவீந்திரர் பெண்மையைப் பற்றிப் பாடும்பொழுது பின்வருமாறு கூறியுள்ளார் :

“கடல் நல்முத்தையும், நிலம் செம்பொன்னையும், மரம் நறுமலரையும் உன்னிடம் அர்ப்பணம் செய்து, உன்னை அலங்கரித்து, விலை மதிக்கத்தகாதவளாயும் உன்னைச் செய்கின்றன.”

“உன்பால் ஆடவன் வைத்த அன்பே உனது இளமையையும் உனக்கு ஒரு புகழுடலாகச் செய்கின்றது.”

"ஆம், ஒரு பாதிக் கன்னி வடிவமும், மற்றொரு பாதிக் கற்பனை எழிலும் சேர்ந்தவளன்றோ நீ!"

பாட்டின் பொருள் மிகவும் பாவப் பொருத்தமுள்ளதாய் அமைந்திருக்கிறது. ஆனால் பெண்ணுக்குப் பிறர் தருவது எவ்வளவாயினும், அவளிடம் இருப்பதை அபகரிக்கின்ற விரோதிகளும் இருக்கிறார்கள்.

உண்மையில், வேண்டியவர்களினுடைய உதவியும், வேண்டாதவர்களின் அருகையும் அவளைக் குறித்து எழுகின்றனவா என்றால், எல்லாம் கவிஞர்கள் செய்யும் வேலைகள்தாமோ என்றுகூடச் சந்தேகிக்கத் தோன்றும். ஏனெனில் கவிஞர் கூறும் வருணனைகளே பெண்களை வெட்கப்படும்படியும் சிலவேளைகளில் செய்யும்; சிறிது தலைநிமிர்ந்து நடக்கவும் தூண்டும்.

ஆனால், கவிஞனாலும் ஒன்றும் செய்ய முடியாத விதமாக, உடன் பிறந்த குணங்கள் சில அவளிடம் இருக்கின்றன. அவைகளைக் கவிகளும் மறக்காமல் குறிக்கின்றார்கள். இவ்விதம் குறிப்பதில் தமிழ் நாட்டுக்குத் தனிமரபு, வடமொழியில் வேறு சம்பிரதாயம், அல்லது, அன்று ஒருவிதம் இன்று வேறுவிதம் என்றெல்லாம் நினைப்பதற்கில்லை. பாரதபூமியில் இலக்கிய உணர்ச்சியும் சமய வழிபாடும் நாடெங்கும் உத்தம மக்களின் மனத்தடத்தே ஒன்றுபோலவே உதயமாகின்றன.

காதல் நிலையைப்பற்றி எழுதாத கவிஞர்களே இல்லை எனலாம். ஆனால், உண்மைக் கவிஞர் என்ற கணக்கில் சிலர் மட்டும்தான் சரியான அளவிலே எதையும் மனங்குழைய உரைப்பார்கள்.

முத்தொள்ளாயிரத் தொகுதியில் ஒரு பாட்டைப் பார்ப்போம். பெண்மைக்குத் தகுந்த அச்சம், மடம், நாணம், இம்மூன்று அரிய குணங்களில் நாணத்தைக் கவிஞர் எத்தனை நயம்படக் காணபிக்கின்றார் என்பதையும கவனிப்போம். பொன்னையும், மணியையும், மலரையும் விட அவள் சிரத்தை அலங்கரிக்கும் சூடாமணி நாணம் தான். பாட்டில் சந்தர்ப்பம் ரசமானது. பெண்ணொருத்தி

4780. XVI.D.35



பாண்டிய மன்னனைக் காதலிக்கின்றாள். ஆனால் தான் சதா விரும்பிய கட்டழகன் தன்னிடம் வரவும், அவள் வெட்கத்தால் ஒன்றும் சொல்லமுடியாமல் நின்று விடுகிறாள். இயற்கையை ஒட்டிய அனுபவம் தான் இது. செய்யுள் நம் கண்முன் நாடகமொன்றை அமைத்துக் காட்டுகிறது:

மாறார்க் கடந்த மறவெய்போர் மாறனைக்
காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன் - கண்டக்கால்
பூணாகம் தாஎன்று புல்லப் பெறுவேனோ?
நாணோ(டு) உடன்பிறந்த நான்.

[பகைவர்களைப் போரில் வென்று, வீரமாகக் கொடிய போர்களை நடத்தும் பாண்டியனை, அவன் இல்லாத இடத்தில் ரொம்பவும் பாராட்டிப் பேசுவேன். 'ரத்ன கண்டிகள் அணிந்த மார்பைக் கொடுங்கள்' என்று வினயமாய்ச் சொல்லி அணையப் பெறுவேனோ? பெறவாவது ஒன்றாவது! பிறந்த போதே நோய் போல் உடன் பிறந்த நாணந்தான் வந்து தடுத்து விடுகிறதே!]

தலைவி காதலனைக் காணவும் தன் கொஞ்சல்களைக் கொட்டி விடுவதென்றுதான் மனக்கோட்டை கட்டினாள். ஆனால் பாவம்! ஏனோ அவனை எதிரில் பார்க்கவும் நாணம் மேலிட்டுச் சும்மா இருந்து விட்டாள்! கவிஞர் இப்பெண்ணோடு உடன் பிறந்தவளை எங்கிருந்தோ தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார். இவ்வளவு பொறாமை உடன் பிறந்தவளிடம் எதற்கு என்று தான் நாமும் கரைந்துருகுவோம்.

செய்யுளில் மற்ற அழகுகள் இருக்கட்டும். கடைசி அடியில் உள்ள சொல்லும் பொருளும் பெண் மனத்தினுள் கிடந்து வெதும்பிய துயரத்தை உரையாசிரியரைப் போல் விளக்குகின்றன. ஆனால் இனங்கெட்ட உரையாசிரியரைப் போல் அதிக வார்த்தைகளிலும் விளக்கிக் கெடுக்கவில்லை. மறை பொருளாக பாவத்தை வைப்பதில் தான் காவியத்தில் ரஸாநுபவம் பெருகுகின்றது.

[டி. கே. சி. யின் பதிப்பிற்கண்ட குறிப்புரை]

இவ்வித நயங்களெல்லாம் நம் நாட்டுக்குச் சொந்தமான பொருள்கள். கவிகளில் சிறந்த காளிதாஸனுடைய சகுந்தலையும் இதேமாதிரிச் சங்கடமொன்றில் மாட்டிக் கொண்டு தவிக்கின்றாள். தன் காதலனை துஷ்யந்த மன்னனைக் "காணுக்கால் ஆயிரமும் சொல்லுவாள்" சகுந்தலை. "உன்னை நான் அறிய முடியவில்லை! ஆனால் பாழும் மன்மதன் இரவும் பகலும் என்னை வதைக்கின்றான். கடின மனம் படைத்த உன்னிடம் அவனுடைய யோக்கியதைக்கு வழி இல்லாத காரணமாக, என்னிடம் தன் கைவரிசையைக் காட்டி, அங்கங்கள் தோறும் வதைக்கின்றான்" என்று கூறிவிடுவதாகத் தைரியம் செய்து கொண்டவள், தன்னைக் காதலன் அணைய வந்ததும் வெட்கப்பட்டு விட்டாள். தான் நினைத்திருந்ததை யெல்லாம் சொல்ல மறந்தும் விட்டாள் அவள் வாயே பிற்பாடு பச்சாத்தாபத்தில் பிதற்றுகிறது

'நெஞ்சே! விரும்பிய சுகம் கிடைக்கும் தறுவாயில் வெட்கத்தை விடமாட்டேனை என்றாயே! இப்பொழுது எதற்காக விசனபபடுகிறாய்!'

[சாகுந்தலம் : அங்கம் 3]

வடமொழியின் வாசனையை அறியாத அறிவாளிகளும் இந்த வாக்கியத்திலடங்கிய கருத்து முத்தொள்ளாயிரப் பாட்டிற்கு ஒரு நகல் எடுத்தபடி இருப்பதாகவே கருதுவார்கள். ஒரு பாஷையிலிருந்துதான் மற்றொன்றில் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்ற வீண் சர்ச்சைகளைக் கிளப்பி, இலக்கிய உலகில் சஞ்சரிக்கும் சுயேச்சைச் சுகத்தைக் கெடுத்துக் கொள்ளவேண்டாம்.

காளிதாஸரும் முத்தொள்ளாயிர ஆசிரியரும் பண்டைக்காலப் புலவர்கள். காதல் வருணனையில் சில கட்டுப்பாடுகளை வைத்திருக்கலாம். ஆனால் கவி ரவீந்திரர் இதே விதம் ஒரு சந்தர்ப்பத்தை அமைத்திருக்கிறார். நேற்றுவரையில் உயிருடன் இருந்தவர் அவர். ஏன் பழைய வழியே அவரும் செல்லவேண்டும்? அதுதான் விளங்கவில்லை. ஒருகால் முற்போக்கு எழுத்துத் திறமை அவ

ருக்கு ஏற்படாத காரணமே காதலை விஷயமாக எடுத்துக் கொண்டார் போலும். மேலும், எடுத்துக் கொள்ளவே செய்யட்டும், புதிய விதமாய்க் கற்பனைகளைச் செய்ய லாகாதா? அதுவும் இல்லை. அப்படி என்ன, கவனிப்போம்.

சித்திரா என்றும் அரசிளங் குமரி அர்ச்சுனனைப் பாராமலே, அவன் புகழை மட்டும் கேட்டு அவனைக் காதலித்திருக்கிறாள். தந்தைக்கு ஒரே புதல்வி யென்ற காரணத்தால் அவள் அதிக சுயேச்சையை நாடியவள். ஆண்மைக்கு உரிய ஆடை, வித்தை முதலியவை களையும் பூண்டவள். ஒருநாள் காட்டின் நடுவில், அர்ச்சுன னைக் கண்டு அவனை இன்னான் என்று அறியவும், தன்னை மறந்து மரம்போல் வாய்ப்பேச்சற்று நின்றுவிடுகிறாள். இதுவரையும் தெரிந்திராத நாணம் எங்கிருந்தோ அவளை வந்து அடைந்து விட்டது. அர்ச்சுனன் அவ்விடம் விட்டு நீங்கியதும் அவள் வாய் சும்மா இருக்கவில்லை:

> 'மூட நெஞ்சமே, உன் தைரியமெல்லாம் எங்கே பறந்தோடியது? அறிவில்லாத பேதையே! வந்தவரை ஒருமுறை வாயாற அழைத்து உபசரித்தாயா? இல்லை. அவ்விதம் செய்யாததற்கு மன்னிப்பை யாவது யாசித்தாயா? அதுவும் இல்லை. எதற்காக ஜடம்போல் அவர் முன்பு நின்றாய்?'
>
> [சித்திரா—காட்சி 2]

இயற்கையான மனித இயல்பும் இவ்விதமே தான் இருக்கும். பெண்ணைப் பிறக்காதவர்களிடமும், தாங்கள் விரும்பிய வரன் ஒன்று கிட்டுவதானால், இதே விதம் தான் திகைப்பு உண்டாகும். ஆனால், பெண்மைக்கு நாணம் செய்யும் தனி அழகு ஒன்று உண்மையாய் இருப்பதால், கவிஞர்களுக்கு அன்றும் இன்றும் ஒரு தடவை அதை எடுத்துக் காட்டி விட்டுத்தான் மேலே செல்லப் பிடிக்கின்றது. கவி இதயத்திற்கு இதில் வெகு உத்ஸாகம்; ஸஹ்ருதய உள்ளங்களுக்கும் அதைவிடப் பெரிய கொண்டாட்டம்.

Printed at Indian Exprss, Brh. Press, Madras.

மகாமகோபாத்தியாய

தினமணி வெளியீடு 9

# முன்னிலா

தமிழுக்கே ஒரு புது முறை இச்சிறு கதைத் தொகுதி. ஸ்ரீ. அ. மாதவையாவின் இரண்டு புதல்வர்களும், நான்கு புதல்வியரும் எழுதிய இக்கதைக் கூட்டம் புதுமைத் தமிழ் இலக்கியத்திலும் ஒரு புதுக் குடும்பம்தான் என்று சொல்லலாம்.

குரங்கையும் ராக்ஷஸனையும் யம தூதர்களையும் கொண்டு மனிதர்களின் குண குணங்களை மெல்லப் பரிகசிக்கிறார், ஸ்ரீ. அனந்தநாராயணன் ஐ. ஸி. எஸ். சில கதைகளிலே, கதையின் நோக்கம் கதைச் சுவையின் ஆழத்திலே புதைந்து கலைச் சுவையைப் பெருக்கிக் காட்டுகிறது.

**விலை அணா 12**

(தபால் செலவு தனி, வி. பி. பி. கிடையாது.)

எல்லாத் "தினமணி" "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஏஜெண்டுகளிடமும், "ஹிக்கின்பாதம்ஸ்" "சுதேசமித்திரன்" ஸ்டால்களிலும் கிடைக்கும்.